JL
V2IIM, N70 in
08.39.7
228770.

விலை ரூ.10/-

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு






# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038-2039
மார்கழி - தை ஜனவரி 2008
மலர் : 39 இதழ் : 7

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க.இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்

**தி.பெரியார் சாக்ரடீசு**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழை திருத்துபவர்

**ஜி. சந்தானம்**

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in


**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு.**

ஒழுக்கத்தில் உறுதியான துறவிகளின் பெருமை, சான்றோர் நூலில் விருப்பமுடனும், உயர்வாகவும் இடம் பெறும்.

- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


❖ சிறந்த நூல் எழுதியவருக்கு ரூ.20 ஆயிரமும் பதிப்பகத்திற்கு ரூ.5 ஆயிரமும் உயர்த்தி வழங்கிட ஆணை ........ 2

❖ திருப்பூர் மாநகராட்சிக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.5 கோடி மானியம் ........ 10

❖ ஒன்றரை ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 995 விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 671 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது ........ 21

❖ 112 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சத்து 22 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் கடனுதவியில் 209 சிறுபான்மைச் சமுதாய இளைஞர்களுக்கு ஆட்டோக்கள் ........ 31

❖ தாய்த் தமிழும், தமிழகமும் இந்தியத் திருநாடும் உங்களால் புகழ் பெற வேண்டும் ........ 33

❖ புத்துணர்வோடு கொண்டாடுவோம் பொங்கல் விழாவை ........ 46

❖ தமிழகத்தின் புகழை இந்தியாவின் கீர்த்தியை நிலைநாட்ட ஊக்கப்படுத்துகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது ........ 49

❖ சென்னை சங்கமம் நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைஞர்களை சந்தித்து புகழாரம் ........ 54

❖ விபத்தே இல்லாமல் பேருந்துகளை இயக்கும் ஓட்டுநர் - நடத்துநர்களுக்கு பரிசு வழங்கப்படும் ........ 58


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


□ ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிக விரைவில் நிறைவேற்றப்படும் ........ 67

□ ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி நிருவாக வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது ........ 69

□ சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு 16 மருத்துவர்கள், 20 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணைகள் .... 72

□ கிராம ஊராட்சிகளில் நிதிச் சுமையின்றி வளர்ச்சிப் பணிகள் வேகமாக நடைபெற ஏதுவாக மின் கட்டணங்களைக் குறைத்து அரசு நடவடிக்கை ........ 74

□ சட்டமன்றத்தில் வினாக்களும், விடைகளும் ........ 76


**அட்டைப் பட விளக்கம்**

முதலாம் பக்க அட்டை : புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார். (18.12.2007)

இரண்டாம் பக்க அட்டை : சென்னையில் 1,094 புதிய பேருந்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இயக்கி வைத்தார். (3.1.2008)

நான்காம் பக்க அட்டை : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பங்கேற்ற கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழா (1.1.2008)



# சிறந்த நூல் எழுதியவருக்கு ரூ.20 ஆயிரமும் பதிப்பகத்திற்கு ரூ.5 ஆயிரமும் உயர்த்தி வழங்கிட ஆணை

## விருதுகள் வழங்கிய விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

**2007**ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான 'தந்தை பெரியார் விருது' கவிதைப்பித்தன் அவர்களுக்கும், 'பேரறிஞர் அண்ணா விருது' பேராசிரியர் சாரதா நம்பி ஆரூரன் அவர்களுக்கும், 'பெருந்தலைவர் காமராசர் விருது' தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினர் பட்டுக்கோட்டை ஏ.ஆர். மாரிமுத்து அவர்களுக்கும், 'மகாகவி பாரதியார் விருது' கவிஞர் சௌந்தரா கைலாசம் அவர்களுக்கும், 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது' முனைவர் த.பெரியாண்டவன் அவர்களுக்கும், 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' திருச்சி திரு.எம்.எஸ்.வெங்கடாசலம் அவர்களுக்கும், 'முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது' கவிஞர் கா. வேழவேந்தன் அவர்களுக்கும் 'அண்ணல் அம்பேத்கர் விருது' திரு. ஆர். நல்லகண்ணு அவர்களுக்கும், 2008ஆம் ஆண்டுக்கான 'அய்யன் திருவள்ளுவர் விருது' தவத்திரு.குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, திருவள்ளுவர் திருநாளன்று, இவ்விருதுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால், 16.1.2008 அன்று மாலை சென்னை – வள்ளுவர் கோட்டத்தில் நடந்த விழாவில் வழங்கப்பட்டது. விழாவிற்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை வகித்தார். விழாவில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், அய்யன் திருவள்ளுவர் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது, முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது ஆகிய விருதுகளை வழங்கியும், சிறந்த நூலாசிரியர்களுக்கும், சிறந்த பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகைகள் வழங்கியும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு

228 770





நிதியுதவி ஆணைகள் வழங்கியும், செந்தமிழ்ச்சொற் பிறப்பியல் அகர முதலி நூல்களை வெளியிட்டும் சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

“வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற வேண்டிய ஒரு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த விழாவிற்கு யார் யாரை அழைப்பது, யார் யாருக்கு விருது வழங்குவது என்பதையெல்லாம் முடிவு செய்தவர், முதலமைச்சர் என்று இனமானப் பேராசிரியர் குறிப்பிட்டார். அதை விட இந்த விழாவை எங்கே நடத்துவது என்ற வினா எழுந்த போது, அதற்கு விடையாகக் கிடைத்தது தான் வள்ளுவர் கோட்டத்திலே நடத்தலாம் என்பது. நம்முடைய அடிகளார் பேசும்போது, வள்ளுவர்கோட்டத்திற்கும் எனக்கும் உள்ள தொடர்புகளையெல்லாம் எடுத்துரைத்தார். இந்த வள்ளுவர்கோட்டத்தின் அடிக்கல் நாட்டியதிலிருந்து, ஒவ்வொரு அங்குலமாக வள்ளுவர்கோட்டத்தின் சுவர்களும், கட்டடமும் வளர்ந்த நேரத்தில் எல்லாம் இங்கே ஒரு குடிசை போட்டுக் கொண்டு அதிலே அமர்ந்து பணிகளை விரைவாக நடத்துவதற்கு வேகப்படுத்திக் கொண்டிருந்தவன் நான். ஆனால் அவரே இங்கே குறிப்பிட்டதைப் போல பெற்ற மகவு வளர்ந்து, மணவிழா நேரத்திலே, அதைக் காண முடியாத ஒரு தாய் விழாவைக் காண முடியாமல், தவித்த தவிப்பை அவர் இங்கே எடுத்துரைத்தார். கோட்டம் இங்கே திறக்கப்பட்ட போது, நாடு எந்த நிலையிலே இருந்தது என்பதும், நாமெல்லாம் எந்த நிலையிலே இருந்தோம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அவற்றையெல்லாம் நான் இங்கே விழாவின் அருமை கருதியும், அரசியல் நாகரிகத்திலே கொண்டுள்ள அக்கறையின் காரணமாக சொல்ல விரும்பவில்லை.

### அய்யன் திருவள்ளுவர்

அடிகளார் இங்கே கூறியதின் காரணமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். இருபதாண்டு காலம், 133 அடி உயர வள்ளுவர் சிலையை அமைப்பதற்காகத் திட்டமிட்டு, அது நிறைவேற முடியாமல், பல தடைகள், பல தயக்கங்கள், குறுக்கிட்ட தாமதங்கள் இவைகளையெல்லாம் கடந்து குமரிமுனையிலே மறைந்த நம்முடைய அய்யா மூப்பனார் போன்றவர்கள் எல்லாம் வருகை தந்து நடைபெற்ற அந்த விழாவில், நான் வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து பேச முடியாதவனானேன். காரணம் அந்த அளவிற்கு உணர்ச்சிவயப்பட்டேன். அப்போது தான் முதன் முதலாக அய்யன் வள்ளுவர் என்று சொன்னேன். அது இன்றளவும் எல்லோராலும் புழக்கத்திற்கு வந்த சொல்லாக ஆகி, யாராக இருந்தாலும் அய்யரே கூட, அய்யன் வள்ளுவர் என்று சொல்லுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறிவீர்கள்.

புத்தகமாக – கட்டடமாக – ஓவியமாக படமாக அந்த வள்ளுவருடைய படத்தை இன்றைக்கு நாம் பயன்படுத்திக் கொண்டிருப்பதற்குக் காரணம், வள்ளுவருக்கு ஒரு புகழை உண்டாக்க வேண்டுமென்பதற்காக அல்ல. நாம் ஒழுங்காக வாழ வேண்டும், நம்முடைய சமுதாயம் செம்மையாக நடைபெற வேண்டும், வீரமாக, விவேகமாக அறநெறியோடு வாழ வேண்டும், ஒரு குடும்பம் என்றால் எப்படியிருக்க வேண்டும், வாழ்க்கை என்றால் எப்படி அமைய வேண்டும் என்ற இவைகளையெல்லாம் கற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட, இன்றைக்கு நாம் அய்யன் வள்ளுவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறோம் என்றால், என்ன அர்த்தம் ? அது தான் உண்மையே தவிர, வள்ளுவருக்கு நாம் கோட்டம் கட்டியதால் புகழ் வந்து விடப் போவதில்லை. அவருக்குப் புகழைச் சேர்த்து நாம் நம்மைப் புதுப்பித்துக் கொள்கிறோம். அவருக்கு உருவத்தை உருவாக்கி, நாம் நம்மை உருவாக்கிக் கொள்கிறோம். அதற்காகத் தான் நம்முடைய தன்னலத்திற்காகத் தான் – தன்னலம் என்றால் வேறு எந்தவிதமான விபரீதப் பொருளும் இல்லை, நம்முடைய சமுதாயம் வாழ, இனம் வாழ, மக்கள் வாழ, வாழ்க்கையை வகைப்படுத்திக் கொள்ள – வாழ்க்கை என்றால் என்ன என்ற தத்துவத்தை உணர வள்ளுவரை நினைக்கிறோம். வள்ளுவருடைய அறிவுரையை மேற்கோள் காட்டுகிறோம். அதைத் தான் இங்கே நம்முடைய அடிகளார் அவர்கள் உணர்த்தினார்கள்.



நம்முடைய பேராசிரியர் அவர்கள் உரையாற்றும்போது, வள்ளுவர் தொட்டு இந்த விருது யார் யார் பெயரால் வழங்கப்படுகிறதோ, அவர்களுடைய பெயர்களையெல்லாம் சுட்டி, ஒவ்வொருவருடைய பெருமைகளையும் – அந்த விருதுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தகர்களுடைய ஆற்றலையும், அருந்திறனையும் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய பொன்னம்பல அடிகளார் அவர்கள், இன்று நேற்றல்ல, நீண்ட காலமாக இந்த இயக்கத்தோடு பழகிய நண்பராக இருக்கின்ற ஒரு மடாலயத்தின் நண்பர் குன்றக்குடி அடிகளார் வாழ்ந்த போது, ஒருமுறை நான் அந்த வட்டாரத்துக்குப் பேசச் சென்ற நேரத்தில், இயக்கத் தோழர்கள் எல்லாம் நான் காரிலே சாலையிலே செல்லும்போது, காரை மறித்து இதற்கு மேல் நீங்கள் போக வேண்டாம், ஏனென்றால் அங்கே குன்றக்குடி அடிகளாருடைய கூட்டம் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். ஏன் அது நடந்தால் என்ன, நான் போனால் என்ன என்று கேட்ட போது, அவர் நம்முடைய இயக்கத்தை மிகவும் தாக்கிப் பேசுகிறார் என்றார்கள். மறுநாள் நான் ஒரு அரசினர் விருந்தினர் மண்டபத்திலே தங்கியிருந்தேன். அடிகளார் பக்கத்து அறையிலே தங்கியிருந்தார். இருவரும் சந்தித்துக் கொண்டோம். யார் யாரைப் பார்க்க – முதலில் வி ரு ம் பி னே ா ம் என்றெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. இருவருமே விரும்பினோம். யார் முதலிலே சொல்வது என்பதிலே தான் சற்றுத் தயங்கினோம். இருவரும் சந்தித்து ஒரு மணி நேரம் அந்த விருந்தினர் மாளிகையிலே பேசிக் கொண்டிருந்தோம். அதற்குப் பிறகு அவருக்கும் பெரியாருக்கும் உள்ள தொடர்புகளை பற்றியும், அவருக்கும் அண்ணாவிற்கும் உள்ள தொடர்புகளை பற்றியும் விவரித்தார். அது எங்கே போய் முடிந்தது என்றால், அவரையே மேலவையிலே ஒரு உறுப்பினராக உட்கார வைத்து அவரை நானே வாழ்த்துகின்ற ஒரு நிலைமை தி.மு. கழக ஆட்சியிலே ஏற்படுகிற அளவிற்குப் போய் முடிந்தது.



**நான்காயிரம் ஆண்டுகாலப் பண்பாடு**

அப்போது அவர் எழுதிய ஒரு வாழ்த்துக் கவிதை – நெஞ்சுக்கு நீதி – புத்தகத்திலே நான் வெளியிட்டிருக்கிறேன். இன்றைக்கும் படித்தால் பழைய நினைவுகள் என்னுடைய நெஞ்சில் பசுமையாக நிழலாடும். அப்படிப்பட்ட ஒரு உறவு ஆன்மீகத்திற்கும், அறிவியக்கத்திற்கும் இடையிலே ஏற்பட்ட ஒரு உறவு – அந்த உறவு இன்றளவும் நிலைத்து, இந்த இரண்டு தத்துவங்களும் சேர்ந்து நாட்டு மக்களை வாழ வைக்க முடியும் என்ற அளவிலே அமைந்திருக்கின்றது. நேற்று காலை வரையிலே அவர், அந்தத் துறவி ஒரு விஷயத்திற்காக என்னை என்ன பாடுபடுத்தினார் என்பது எனக்குத் தான் தெரியும். வேறொன்றுமில்லை. ஜல்லிக்கட்டு அனுமதிக்கப்படுமா, அனுமதிக்கப்படாவிட்டால் நம்முடைய பழந்தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம் இவைகள் அழிந்து விட்டது என்ற





குமுறல், இந்த வட்டாரத்து மக்களுக்கு அதிகமாகி யிருக்கின்றது, அதைக் கவனியுங்கள், நீங்களே டெல்லிக்குச் சென்றாவது, ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துங்கள் என்று அவர் கேட்டுக் கொண்டது இருக்கிறதே, அது அவருக்கு நம்முடைய பழைய கலாச்சாரங்களின்பால், நம்முடைய பண்பாட்டின்பால், நம்முடைய வீர வரலாற்றின்பால் எந்த அளவிற்கு பிடிப்பும் பற்றும் இருக்கிறது என்பதற்கு அடையாளம் ஆகும்.

ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுக் காலப் பண்பாடு அது. இரண்டு நாட்களுக்கு முன்பு இந்துப் பத்திரிகையில் இத்தகைய செய்திகளை, வரலாற்றிலிருந்து எடுத்து எழுதுகின்ற நண்பர் மகாதேவன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையிலேயே இந்த ஜல்லிக்கட்டு என்பது ஏறு தழுவுதல் என்ற இந்த விளையாட்டு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களால், திராவிடர்களால் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்று என்று, அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அதை எடுத்துச் சொல்ல எதிர்த்தவர்களுக்கு மனம் இல்லை. ஆனால் ஆளுகின்றவர்களுக்கு அந்தச்செய்தி உடனடியாகக் கிடைத்தது, அதை எடுத்துச் சொன்னார்கள், சொல்ல வேண்டிய இடத்திலே சொன்னால், புரியவேண்டியவர்களுக்குப் புரிந்தால் நல்லது நடக்கும் என்பதற்கும் நேற்றைய தீர்ப்பு ஒரு நல்ல உதாரணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்.

**எல்லோரையும் சமமாக மதித்த அம்பேத்கர்**

அருமைத் தோழர் நல்லக்கண்ணு அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் நடத்திய புரட்சிகள், பொது உடைமைக் கட்சியிலேயிருந்து அவர் ஆற்றிய பணிகள் ஆற்றி வருகின்ற அந்தத் தியாகச் செயல்கள் – நேற்றைக்குக் கூட நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் என்னைச் சந்தித்து – மாரிமுத்து அவர்களுக்கு இந்த விருது வழங்கியதற்காக நன்றி தெரிவித்த நேரத்தில், நல்லக்கண்ணு அவர்களுக்கும் விருது வழங்குகிறீர்கள், மிகப் பொருத்தம் என்று சொன்னார். இப்படி சொன்னதை நல்லக்கண்ணு அவர்கள் கவனிப்பார் என்று நம்புகிறேன். ஏனென்றால் இந்தக் கவனத்தை ஊட்டுவதின் மூலம் காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலே ஒரு நல்லுறவு ஏற்படவேண்டும், எந்த அரசியல் லாபமும் கருதி அல்ல, எந்தக் கட்சியிலே யார் இருந்தாலும் அவர்கள் நல்லவைகளை மதிப்பார்கள், தியாகத்தைப் போற்றுவார்கள், அப்படி நாமும் போற்ற வேண்டும் என்ற பாடத்தைப் பெற வேண்டும் என்பதற்காக – எல்லோரும், நான் உட்பட அந்தப் பாடத்தைப் பெறவேண்டுமென்பதற்காக நான் அதைக் கவனித்தேன்.

அவர்கள் சொன்னார்கள், ஒரு வகுப்புக் கலவரம் – சமுதாயங்களுக்கிடையே சண்டை. இந்தப் பக்கத்திலும், அந்தப் பக்கத்திலும் சில பேர் மாண்டார்கள், மடிந்தார்கள், வீடுகள் எரிந்தன. அப்போது அந்தச் சாதி கலவரத்தை, வகுப்புக் கலவரத்தை அந்தத் தீயை அணைப்பதற்காக அந்தக் கொடுமையை நிறுத்துவதற்காக அந்தப் பகுதியிலே நான்கைந்து பேர், எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு அங்கே சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்படி சுற்றுப்பயணம் செய்த குழுவிலே நல்லக்கண்ணு அவர்களும் ஒருவராக இருந்தார். அப்படி சுற்றுப்பயணம் நடத்திய போது, அவருடைய இல்லத்தில் ஒரு பெரிய இழவு – அந்த இழவு அவருடைய மாமனார் மறைந்து விட்டார் திடீரென என்ற செய்தியாகும். பரவாயில்லை, ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்கள் என்று சொல்லி விட்டு, சாதித் தீயினால் அங்கே எரிந்து கொண்டிருந்த மக்களுடைய வீடுகளை அணைப்பதற்காக நல்லக்கண்ணு ஓடினாரே அல்லாமல், தன்னுடைய வீட்டிலே ஏற்பட்ட சோகத்திற்காக வீட்டிலே உள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமே என்ற அக்கறையோடு நல்லக்கண்ணு அங்கே இருக்கவில்லை என்ற செய்தியை அவர் சொன்ன போது, நான் சொன்னேன் – அதுதான் நல்லக்கண்ணு என்று நான் பீட்டர் அவர்களிடத்திலே சொன்னேன்.

அப்படிப்பட்ட தியாக உள்ளம் படைத்த ஒருவருக்கு அம்பேத்கர் விருது கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு நண்பர்

எழுதியிருக்கிறார் – அவர் வேறு கட்சியிலே சில நாட்கள் பழகிய தோஷம், பத்திரிகையிலே அவர் எழுதியிருக்கிறார். அதை நான் படித்தேன். அம்பேத்கர் விருது ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு அல்லவா தர வேண்டும், நல்லக்கண்ணு தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வரல்ல – அவர் நல்லவராக இருக்கலாம், ஆனால் அவருக்கு எப்படி கொடுக்கலாம் என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பி யிருக்கிறார். நான் இதிலே அம்பேத்கரை ஒரு சாதிக்குள்ளே புகுத்த விரும்பவில்லை, ஒரு சமூகத்திற்குள்ளே புகுத்த விரும்பவில்லை. அந்தச் சமூகத்திற்காக பாடுபடக்கூடியவர், அந்தச் சமூகத்தினுடைய விழிப்புணர்வுக்காக புரட்சிக் கொடி தூக்கியவர் அம்பேத்கர் என்பதிலே யாருக்கும் எள்ளளவு சந்தேகமும் இல்லை. அதே நேரத்தில் எல்லோரையும் சமமாக மதித்தவர் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் என்பதை யாரும் மறந்து விட முடியாது.



**எல்லோருக்கும் பொதுவானவர்**

நாங்கள் விருது கொடுத்திருக்கின்ற பட்டியலைப் பார்த்தால்கூட, நாங்கள் யாரும் தலித்துகளை – அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த யாருக்கும் விருது கிடையாது என்று அழித்து விட்டு, நல்லக்கண்ணு அவர்களுக்கு மாத்திரம் விருது கொடுக்க வில்லை. நல்லக்கண்ணு அவர்களுக்கு அம்பேத்கர் விருது, அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கவிதைப்பித்தனுக்கு பெரியார் விருது – என்பதை இந்தப் பட்டியலிலே பார்த்தாலே நாங்கள் யாரையும் புறக்கணிக் கவில்லை, அலட்சியப் படுத்தவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

நல்லக்கண்ணு அவர்கள் ஆதிதிராவிட மக்களும், அல்லாத மக்களும், பிற்படுத்தப்பட்ட



மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் ஒன்றாக இருக்க வேண்டும், எல்லோரும் ஒன்றுபட்டு சமுதாயப் பணியாற்ற வேண்டும், நாட்டு முன்னேற்றத் திற்காகப் போராட வேண்டும், உழைக்க வேண்டும் என்று கருதுகிற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. எனவே தான் அவர் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் – எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்பட்டாலும் – சொல்லப்பட்டாலும் என்று தான் சொல்லுகிறேன், சேர்ந்தவர் என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் அதை சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் ஒத்துக் கொள்வதில்லை. எப்படிச் சொல்லப்பட்டாலும் அவர் எல்லோருக்கும் பொதுவானவர், இன்னும் சொல்லப்போனால் ஒரு நண்பரால் என்ன குறை அந்தப் பத்திரிகையிலே எடுத்துச் சொல்லப்பட்டதோ, அந்தக் குறைக்கும் அவருக்கும் சம்மந்தம் உண்டா என்றால் இல்லை.

நான் எடுத்தவுடனே தஞ்சை மாவட்டம் என்று ஆரம்பித்தேன் அல்லவா அந்த மாவட்டத்திலே தான் விவசாயப் பிரச்சினை அதிகம். அந்த






விவசாயப் பிரச்சினை தஞ்சை மாவட்டத்திலே பெருகியிருந்த காரணத்தினால் தான் சீனிவாசராவ் என்ற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர், அங்கே தேவைப்பட்டார். அவருடைய தலைமையிலே அங்கே விவசாயிகளின் போராட்டம் நடைபெற்றது. தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகள் என்று சொல்லப்படுகிற, அதிலும் குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் மீது எப்படிப்பட்ட தண்டனைகள் – தாக்குதல்கள் நடைபெறும் என்பதை கண்ணால் கண்டவன் நான், காதால் கேட்டவன் மாத்திரமல்ல. ஏனென்றால் நானும் தஞ்சை மாவட்டத்துக்காரன் என்ற முறையில் என் வீட்டருகிலே உள்ள வயல்களில், வரப்புகளில் அந்த விவசாயத் தொழிலாளர்கள் அடிபடுகின்ற பரிதாபக் காட்சிகளைக் கண்டு பதறியிருக்கிறேன், அழுதிருக்கிறேன், கண்கலங்கியிருக்கிறேன், இரத்தக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது அந்தக் காட்சிகளையெல்லாம் கண்டு !

"சாணிப்பால்'' என்று ஒரு தண்டனை. சாணிப்பாலை, ஆதிதிராவிடத் தோழர்கள் மீது ஊற்றி, விவசாயத் தொழிலாளர்கள் மீது ஊற்றி – அந்தச் சாணிப்பாலை கொதிக்க கொதிக்க ஊற்றி, அதன் மீது சவுக்கு கொண்டு அடிக்கின்ற காட்சிகள் எல்லாம் நடந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். நான் தி.மு.கழகத்தின் தலைவனாக இன்றைக்கிருந்தாலும் – ஒரு கம்யூனிஸ்ட் கட்சி தொண்டனுடைய உள்ளத்தோடு தான் இருக்கிறேன் என்றால் அந்தச் சாணிப்பால் அபிஷேகத்தையெல்லாம் பார்த்து, சாட்டையடி உற்சவத்தையெல்லாம் கண்டு, என்னுடைய உள்ளத்தை அங்கிருந்து இங்கே நிலைக்க வைத்தவன், அதற்காக உழைக்கத் தொடங்கியவன். அதனால் தான் நல்லக்கண்ணு அவர்களை நினைக்கும் போது, அவரைப் போன்ற – அவர்கள் மார்க்சிஸ்ட் கட்சித் தோழர் களாக இருந்தாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழராக இருந்தாலும் – இவர்கள் எல்லாம் தியாகத்திற்கு சளைக்காதவர்கள் என்ற உண்மையை நான் உணர்ந்தவன். எங்களுடைய உறவுக்கும், ஒற்றுமைக்கும், அன்புக்கும், பண்புக்கும் – உங்களுக்கெல்லாம் காரணம் புரியுமென்று நம்புகிறேன். இவ்வளவு சொன்ன பிறகும் அதிலே உங்களுக்குச் சந்தேகமே தேவையில்லை என்பதை நான் இங்கே விளக்க விரும்புகிறேன்.

பெரியார் விருது பெற்ற கவிதைப்பித்தன் சூடாக, சுவையாக அழுத்தந்திருத்தமாக ஈட்டி போன்ற சொற்கள் கொண்டு கவிதையை பின்னுபவராக, தைப்பவராக இந்த இயக்கத்திற்கு வாய்த்தவர். எவ்வளவு சூடாக எவ்வளவு வேகமாக அவர் கவிதை எழுதக் கூடியவர் என்பதை கவியரங்குகளிலே பலரும் கண்டிருக்கிறார்கள். அவர் பாடி முடித்த பிறகு, நானும் பேராசிரியரும் அவரைக் கூப்பிட்டு, இன்னும் கொஞ்சம் நிதானமாகப் பாடியிருக்கலாம் என்று நாங்கள் சொல்லுகின்ற அளவிற்கு அவ்வளவு வேகத்தை அவருடைய கவிதைகளிலே காட்டக் கூடியவர்.

சாரதா நம்பி ஆரூரன் அண்ணா விருது பெற்றிருக்கிறார். ஆனால் சில நேரங்களில் அண்ணா மேடைகளில் அவர் நீண்ட நேரம் பேசுவார் என்று எதிர்பார்த்திருக்கும்போது சுருக்கமாகப் பேசி முடித்து விடுவார். என்ன அண்ணா சீக்கிரம் பேசி முடித்து விட்டீர்கள் என்று கேட்டால், அய்யோ அதற்குள் முடித்து விட்டாரே என்று கேட்கின்ற அளவிற்கு பேச்சு இருந்தால் தான் அது பேச்சு என்பார் அண்ணா. அதைப் போல சாரதா நம்பி ஆரூரன், என்ன அதற்குள் பேச்சை முடித்து விட்டீர்கள் என்று கேட்ட போது, அண்ணா சொன்னதைப் போல, அதற்குள் முடித்து விட்டீர்களே என்று கேட்பது தான் என் பேச்சு நன்றாக இருந்தது என்பதற்கு அர்த்தம் என்பது போல பேசினார்.

ஏ.ஆர். மாரிமுத்து அவர்கள் பேராசிரியர் இங்கே குறிப்பிட்டாரே, நல்ல சட்டமன்ற உறுப்பினராக அவையிலே பணியாற்றியவர் என்று அப்படி பணியாற்றியது மாத்திரமல்ல, நானும் அவரும் – நான் எதிர்க்கட்சியாக இருந்து அவர் ஆளுங்கட்சியாக இருந்து எங்களோடு சண்டை போட்டதும் – நாங்கள் ஆளுங்கட்சியாக ஆன பிறகு, அவர் எதிர்க்கட்சியிலே இருந்து எங்களைப் பார்த்து கேள்விகளை அடுக்கியதும் எனக்கு நினைவில்லாமல் இல்லை. எப்படி என்னை



நினைத்துக் கொண்டீர்கள் என்று அவர் கேட்டார், அவருக்கு விருது வழங்கப்படும் என்று அறிவித்தவுடன். இவ்வளவிற்கும் பிறகு நான் எப்படி நினைக்காமல் இருக்க முடியும், அதுவும் பட்டுக்கோட்டை – பட்டுக்கோட்டை என்றாலே எனக்கு எங்கள் தலைவர் பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் நினைவுதான் வரும். இப்போது பட்டுக்கோட்டை என்றால் – காங்கிரசுடன் சேர்த்து நினைத்தால் மாரிமுத்து அவர்களின் பெயரை விட்டு விட்டு பட்டுக்கோட்டையை நாங்கள் நினைக்க முடியாது. அதனால் பட்டுக்கோட்டை மாரிமுத்து அவர்களுக்கு இந்த விருது வழங்கப் பட்டிருக்கின்றது.

அவர் மிகவும் மென்மையானவர். மெல்லிய மல்லிகைப் பூவின் இதழ் போன்ற உள்ளம் படைத்தவர். அவருக்கு சுடுசொல் வாயிலே வராது. மற்றவர்களைப் பார்த்து கோபமாகப் பேச மாரிமுத்து அவர்களுக்குத் தெரியாது. மாரிமுத்து காங்கிரஸ் இயக்கத்திலே – ஏன் பொது வாழ்க்கையிலே என்றைக்கும் மாறாத முத்தாக இருக்கின்ற காரணத்தினாலே தான், அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. சவுந்தரா கைலாசம் அவர்கள் வருவார்கள் என்று இருந்தார்கள். ஆனால் உடல் நலிவின் காரணமாக அவர்கள் வர முடியவில்லை.

எம்.எஸ். வெங்கடாசலம் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களுக்கு செல்லப்பிள்ளைகளிலே ஒருவராகத் தொடங்கி, அண்ணா அவர்களுக்கு ஆங்கிலப் பத்திரிகை நடத்துவதற்கு அரும் துணையாக இருந்து என் போன்றவர்களின் நூல்களையெல்லாம் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து, நாட்டிற்கு விளம்பரப்படுத்திய பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திய அருமையான தோழர் அவர். அவருக்கு நாங்கள் இன்றைக்குத் தந்திருக்கின்ற மரியாதை, காலம் தாழ்ந்து தரப்பட்ட மரியாதை என்றாலுங்கூட, அது இந்த நேரத்தில் தேவைப்படுகின்ற மரியாதை என்ற முறையில் அந்த மரியாதையை வழங்கி யிருக்கிறோம்.

முனைவர் பெரியாண்டவனைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர்



இன்றைக்கும் – எந்த இடத்திலே இருந்தாலும் தமிழைப் பெருமைப்படுத்த வேண்டும், வளர்க்க வேண்டும், தமிழுக்கு உரிய சிங்காதனம் என்றும் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்டவர்.

முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அவர்களுடைய பெயரால் விருது பெற்ற என் அருமைத் தம்பி, அன்புத் தம்பி கவிஞர் வேழவேந்தன் அவர்கள் இந்த இயக்கத்தின் பாரம்பரியமிக்க ஒரு குடும்பத்தின் வழி வந்தவர். இந்தச் சென்னை மாநகரில் மாவட்டத்தின் செயலாளராக இருந்த கண்ணபிரானை – அடிக்கொரு தடவை அண்ணா அவர்கள் – கண்ணபிரான், கண்ணபிரான் என்றழைப்பார். அந்தக் கண்ண பிரான் வீட்டுப்பிள்ளை கவிஞர் வேழவேந்தன். அவர் அமைச்சராக இருந்து அரும்பணியாற்றினார். கவிஞராக இருந்து கழகக் கொள்கைகளை வளர்த்தார். கடல் கடந்து சென்று மலேசியா, சிங்கப்பூர், லண்டன், அமெரிக்கா போன்ற இடங்களில் எல்லாம் தமிழ் வளர்க்கின்ற பணியினை – கழகத்தின் எண்ணங்களை வெளியிடுகின்ற பணியினை அவர் ஆற்றியிருக்கிறார். அவருக்கு இந்த விழாவிலே நாம் நம்முடைய மரியாதையைச் செலுத்தியிருக்கிறோம்.

இவ்வளவும் நடைபெற்ற இந்த விழாவில் ஒரு குறை எனக்குண்டு. நம்முடைய பேராசிரியர் அவர்கள் நிதியமைச்சர் என்ற காரணத்தினால், அவருக்கு பக்கத்திலே நான் அமர்ந்து அந்தக் குறையை அவரிடம் வெளிப்படுத்தி – அதை நிறைவாகச் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து செய்ய விரும்புகிறேன்.

ஒன்பது பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஒன்பது இலட்சம் ரூபாய் இன்றைக்கு விருதுத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் புத்தகங்களை எழுதியவர்கள் 29 பேருக்கு – தலா பத்தாயிரம் ரூபாய் தான் வழங்கப்பட்டது. அந்த வகையில் 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தரப்பட்டது. பத்தாயிரம் ரூபாய்





என்பதை ஒரு அரசு கொடுக்கிறதே, முதலமைச்சர் கொடுக்கிறாரே என்ற அந்த மரியாதைக்காக அவர்கள் வந்து வாங்கியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அது பத்தாத பணம் தான் அவர்களுக்கு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே அடுத்த ஆண்டு முதல் அல்ல – இந்த ஆண்டே கூட இன்னொரு பத்தாயிரம் ரூபாய் வீதம் அவர்களுக்கு சேர்த்து வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை நூலாசிரியர்களுக்கு மாத்திரமல்லாமல், பதிப்பகங்களுக்கு தற்போது ஒரு புத்தகத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதையும் ஒரு புத்தகத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம் இந்த ஆண்டு முதலே வழங்கப்படும். இந்த வாரத்திற்குள்ளாக இந்தக் கூடுதல் தொகையும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த நல்ல செய்திகளோடு இந்த நல்ல விழா நிறைவு பெறுகிறது என்பதை எடுத்துச் சொல்லி விடைபெறுகிறேன்".

தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார். விழாவில் பொதுத்துறைச் செயலாளர் திரு. டி.ஜோதி ஜெகராசன், இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. ஜி.சந்தானம், இ.ஆ.ப., செய்தி– மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர், முனைவர் ஆ.சி.மோகன்தாஸ்,இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ம. ராசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖



# நூலாசிரியர்–பதிப்பகத்தாருக்கு கூடுதல் தொகை

திருவள்ளுவர் திருநாளன்று நடைபெற்ற அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் பங்கேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும், அந்நூலினை பதிப்பித்தவர்களுக்கு ரூ.2 ஆயிரத்திலிருந்து ரூ.5 ஆயிரமாகவும் உயர்த்தி இந்த ஆண்டு முதலே வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினையொட்டி இதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.1.2008 அன்று வள்ளுவர்கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள், அரசின் விருதுகள் வழங்கும் விழாவின்போது செய்யப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் மேலே படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட விதிமுறைகளின் இனம் 14 இல் சிறந்த நூல் ஒவ்வொன்றுக்கும் இந்த ஆண்டு முதல் ரூ.10,000 வழங்கப்பெறும் என்பதை மாற்றி ரூ.20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப்பெறும் எனவும், அந்நூல்களின் பதிப்பகத்தினருக்கு ஒவ்வொரு நூலுக்கும் பரிசுத் தொகையாக ரூ.2,000 வழங்கப்பெறும் என்பதனை மாற்றி ரூ.5,000 (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும் என ஆணையிடப்படுகிறது.


இந்த ஆணை 2006ஆம் ஆண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூலாசிரியர்கள், பதிப்பகத்தாருக்கு வழங்கப்பெறும் பரிசுத் தொகை வழங்குதல் முதல் நடைமுறைக்கு வருகிறது என்றும் அரசாணையில் தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் 2006 ஆம் ஆண்டு பரிசு பெற தெரிவு செய்யப்பட்ட 29 வகைப்பாடுகளுக்குரிய சிறந்த நூல்களுக்கும் நூலாசிரியர்களுக்கும், பரிசுத் தொகை வழங்கும் பொருட்டும் பரிசு பெறும் நூலாசிரியர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் சான்றிதழ் வழங்குதல் பயணப்படி இன்னபிற செலவினங்களுக்கு ரூ.3,60,000 மட்டும் ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.


அரசாணையில் பரிசுத் தொகை நூலாசிரியர்களுக்கு ரூ.20,000 எனவும், பதிப்பகத்தாருக்கு ரூ.5,000 எனவும் உயர்வு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் 2006 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நூலாசிரியர்கள், பதிப்பகத்தாருக்கு பரிசு வழங்குவதற்காக ரூ.3,77,000 (ரூபாய் மூன்று இலட்சத்து எழுத்தேழாயிரம் மட்டும்) (நூலாசிரியர்களுக்குப் பரிசுத் தொகை வகையில் கூடுதல் செலவினம் ரூ.2,90,000, பதிப்பகத்தாருக்கு பரிசுத்தொகை வகையில் கூடுதல் செலவினம் ரூ.87,000 மட்டும்) அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கு மேல்கூடுதல் செலவினமாக அரசு ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டன.

# திருப்பூர் மாநகராட்சிக்கு தமிழக அரசின் சார்பில் ரூ. 5 கோடி மானியம்


# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் அறிவிப்பு





"விழாக்கோலம் பூண்டிருக்கின்ற திருப்பூரில் மீண்டும் ஒரு திருநெல்வேலியைக் காணுகின்ற வாய்ப்பு பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். தம்பி ஸ்டாலின் கடந்த சில நாட்களுக்கு முன்பு நெல்லையிலே ஒரு மாநில மாநாட்டைக்கூட்டி "எங்களின் திறமையைப் பார், இளைஞர்களின் வலிவைப் பார், வனப்பைப் பார்" என்று எங்களுக்கெல்லாம் நிரூபித்துக் காட்டி, "ஒரு முறை உன்னால் இதைக் காட்டமுடியும், மறுமுறை முடியுமா ?" என்ற எங்களுடைய ஆதங்கத்திற்கு விடையாக இன்றைக்கு திருப்பூர் வட்டாரத்திலே உள்ள தோழர்களையெல்லாம் இணைத்துக் கொண்டு, இந்த மாபெரும் மாநாடு போன்ற மகத்தான விழாவை இங்கே நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார். அவருக்கும், அவருடைய தலைமையிலே இயங்குகின்ற இந்தத் துறையிலே உள்ள நண்பர்களுக்கும் குறிப்பாக, திருப்பூர் நகர வட்டாரத்திலே உள்ள தோழர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளை, வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். திருப்பூர் நகரம் "மாநகரம்" என்ற பெருமையைப் பெறுகிறது. வீட்டிலே பருவமடைந்த பெண்ணைப் பார்த்து, உற்றார் உறவினர் சுற்றத்தார் மகிழ்ச்சியடைவதைப்போல நாம் அனைவரும் மகிழ்ச்சியடைகின்றோம் – திருப்பூரைப் பார்த்து! ஆனால் பருவமடைந்த பெண், பருவமடைந்த நாளில் கண்ணீர் விடுவாள். அந்தக் கண்ணீரையும் திரு.செல்வராஜின் கண்களிலே இன்றைக்கு நான் கண்டேன். "பருவமடைந்தாயே, சரி. அடுத்தது திருமணம்தானே" என்று உங்கள் ஊரிலே பேச்சு ஆரம்பித்துவிடுவார்கள். அதைப்போல – திருப்பூர் மாநகரம் சரி, "மாவட்டம் எப்போது" என்று மணவிழா பேச்சை ஆரம்பிப்பதைப் போல சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்றைக்கு அந்தப் பேச்சையும் தொடங்கியிருக்கிறார்கள். மேயராக இன்றைக்கு நம் முன்னால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றவர் யார்? நான் உங்களுக்கு உணர்வோடு குறிப்பிட விரும்புகின்றேன். திருப்பூர் இன்று நேற்றல்ல எனக்கு பல ஆண்டு காலமாகப் பழக்கப்பட்ட ஊர். நம்முடைய அருமை நண்பர் சுப்பராயன் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல், சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி இங்கே எடுத்துச் சொன்னதைப்போல் தொழிலாளர்களுடைய பிரச்சினை பலவற்றை திருப்பூரிலே பேசி முடிவு செய்திருக்கின்றோம்.






இங்கு நம்முடைய நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் திருப்பூருக்கு திராவிட இயக்க வரலாற்றில் ஒரு முக்கியமான பெருமை உண்டு. இந்த திருநகரத்திலேதான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் முதன் முதலாகச் சந்தித்தார்கள்.

அந்த சந்திப்பிற்குப் பிறகு திராவிட இயக்கம் வலுப்பெற்றது, விரிவடைந்தது. திராவிட இயக்கத்தினுடைய பிரச்சாரத்திலே மேலும் மேலும் உற்சாகம் கொண்டு வாலிபர்கள், மாணவர்கள், படித்தவர்கள், பாட்டாளி மக்கள் அனைவரும் தங்களை ஒப்படைத்துக் கொண்டார்கள் என்ற வரலாற்றுக்கு திருப்பூர் ஒரு திருப்பு ஊராக இருந்தது என்பதை நான் மறந்துவிடவில்லை.

தொழிலாளர்கள் நிறைந்த ஊர். தொழிலாளர்களுடைய வலிமை மிகுந்த ஊர்களில் ஒன்று திருப்பூர் பகுதி. தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னால், திருப்பூர் நினைவிற்கு வராமல் இருக்காது. அப்படிப்பட்ட இந்த திருப்பூரில் மேயராக பொறுப்பேற்பவர் யார்? திருப்பூர் வட்டாரத்திலே உள்ள ஜமீன்தாரா? திருப்பூரிலே உள்ள செல்வச் சீமானா? திருப்பூரிலே உள்ள ஒரு பெரும் பணக்காரரா? அது திராவிட இயக்கத்தினுடைய ஆரம்பகால வரலாற்றில் மிச்சமா? அல்ல. அதனுடைய தொடர்ச்சியா, அல்ல அல்ல. ஏனென்றால் சென்னைக்கு திராவிட இயக்கத்தின் முதல் மேயர் 1959ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அந்தத் தேர்தலில் யாரை மேயராக கொண்டு வருவது என்ற விவாதம் நடைபெற்றபோது அண்ணா அவர்கள் கோபாலபுரத்தில் என்னுடைய இல்லத்தின் தாழ்வாரத்தில் அமர்ந்து நண்பர்களையெல்லாம் அழைத்து வைத்து நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர்



அன்பழகன், மதியழகன் போன்றவர்களையெல்லாம் அழைத்துவைத்து பேசியபோது, யாரை முதல் மேயராக இந்த வெற்றிக்கு அடையாளமாக யாரை மேயராக கொண்டுவருவது, தேர்வு செய்வது, யாரை வேட்பாளராக நிறுத்துவது என்றபோது, முனுசாமியா ? அ.பொ.அரசுவா ? என்று இந்த கேள்வி எழுந்தது. அப்பொழுது அண்ணா அவர்கள் வேடிக்கையாக பக்கத்தில் இருந்த என்னுடைய தாயார் அஞ்சுகத்தம்மையாரைப் பார்த்து, “அம்மா நீங்கள்தான் சொல்லுங்களேன், யாரை மேயராக ஆக்கலாம்” என்று வேடிக்கையாகக் கேட்டார். அம்மா சொன்னார்கள், “அரசை கொண்டு வாருங்கள். அப்பொழுதுதான் நம்முடைய அரசே வரும்'' என்று 1959 ஆம் ஆண்டு என் தாயார் அஞ்சுகத்தம்மையார் அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே சொன்னார்கள். யார் அந்த அரசு. பெயர்தான் அரசே தவிர, அரசுக்குரிய இலக்கணங்கள், செல்வாக்கு என்று எதுவுமில்லாத ஒரு சாதாரண தொழிலாளி. அச்சுக்கூடத் தொழிலாளி. அந்த அச்சுக்கூடத் தொழிலாளிதான், சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு சிறிய அச்சகத்தை வைத்திருந்த அந்த தொழிலாளிதான் சென்னை மாநகரத்தினுடைய முதல் மேயராக ஆனார். அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சரித்திரம்.

இன்றைக்கு ‘இந்து’ பத்திரிகையில் முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். Former hosiery worker to become First Mayor of Tiruppur (முன்னாள் பனியன் தொழிலாளி திருப்பூரின் முதல் மேயர்) என்று. Hosiery worker என்றால் பனியன் தொழிலாளி, அதற்கு முன்பு காய்கறி வியாபாரம் செய்து பின்னர் பனியன் தொழிலாளியான ஒருவர் தான் இங்கே முதல் மேயராக ஆகிறார். இந்து பத்திரிகைக்கு பல ஆண்டு காலத்திற்கு பிறகு நாம் ஒரு சாதாரண தொழிலாளியை, பனியன் தொழிலாளியை மேயராக ஆக்குவது இன்றைக்கு இந்து பத்திரிகைக்கு ஆச்சரியமாக அதை வெளியிட்டிருக்கிறது என்றால் இது ஆச்சரியமான விஷயமல்ல. எங்கள் வழக்கமே இதுதான். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் நாங்கள் பதவி அளிப்போம். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் பொறுப்பு





வழங்குவோம். அப்படிப்பட்ட ஒருவரைத்தான் Former hosiery worker to become First Mayor என்று இன்றைக்கு இந்து பத்திரிகையிலே முதல் பக்கத்திலே தலைப்பு செய்தியாக நம்முடைய செல்வராஜுடைய படமும் போட்டு, அவர் இன்று மேயராகிறார் என்று வெளியிடப்பட்டிருக்கிறது என்றால் இதுதான் தி.மு.கழகத்தினுடைய வரலாறு, திராவிட இயக்கத்தினுடைய வரலாறு என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப் பட்டிருக்கின்றேன். அவர் ஒரு சாதாரண தொழிலாளி.

காய்கறி விற்றவர் என்றாலும் பனியன் தொழிற்கூடத்தில் வேலை பார்த்தவர்கள் என்றாலும் கூட இன்றையதினம் ஒரு மாநகரத்தை பரிபாலிக்கக்கூடிய அளவிற்கு மேயர் பொறுப்பை ஏற்கிறார்.

இந்த மேயருக்கு தங்கச் சங்கிலி பூட்டப்பட்டது. அது நன்கொடையாக பலரால், பல அமைப்புகளால் வசூலிக்கப்பட்டு அந்தச் சங்கிலி பூட்டப்பட்டது. அவர் மேயர் செங்கோலை கையிலே ஏந்தினார், அதுவும் நன்கொடையாகத் தரப்பட்டது. இவைகளெல்லாம் நன்கொடையாகத் தரப்பட்டது. அதைப்போல மேயர் பதவியும் தி.மு.கழகத்தால் அவருக்கு நன்கொடையாகத் தரப்பட்டது தான். இந்த இயக்கத்தினுடைய முன்னோடும் பிள்ளைகளில் ஒருவராக என்னுடைய அருமைத் தம்பிமார்களில் ஒருவராக எதற்கும் அஞ்சாத சிங்கமாக, எந்த அடக்கு முறைகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அப்படிப்பட்ட தியாகத் தழும்புகளை உடலிலே பெற்றவராக, சித்ரவதைகளை எதிர்பார்க்கக்கூடியவராக இன்றைக்கு இந்தப்

***திருப்பூருக்கு திராவிட இயக்க வரலாற்றில்***
***ஒரு முக்கியமான பெருமை உண்டு.***
***இந்த திருநகரத்திலேதான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் முதன் முதலாகச் சந்தித்தார்கள்.***

பதவி – நாளை பதவி இல்லை, அடக்குமுறை, சித்ரவதை என்று சொன்னாலும் அதையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய திடசித்தம் உள்ள ஒரு வாலிபரைத்தான் திருப்பூர் நகரம் மேயராக ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த மேயரை உங்களோடு சேர்ந்து நானும் வாழ்த்துகின்றேன்.

அ.பொ.அரசு முதல் மேயராக ஆனபோது சுற்றி இருந்தவர்களைப் பார்த்து அறிஞர் அண்ணா கேட்டார், மேயராக அரசு ஆகிவிட்டார். துணை மேயர் யார்? என்ற போது அண்ணாவின் கண்கள் ஒரு நண்பரைத்தான் தேடியது. ஒரு ஆதிதிராவிட தோழரைத் தான் தேடியது. அவர்தான் சென்னை மாநகரத்தினுடைய துணை மேயராக வரவேண்டும். எங்கே அவர் என்று அண்ணா தேடினார். ஒருவரைச் சொல்லி அழைத்து வாருங்கள் என்று சொன்னார். அவர் பெயர் சிவசங்கரன். சிவசங்கரன் அண்ணா அவர்களுடைய இல்லத்திற்கு பக்கத்திலே ஒரு வீட்டிலே இருந்தார். மன்னிக்கவேண்டும், ஒரு குடிசையிலே இருந்தார். அந்தக் குடிசைக்குள்ளே நுழைய முடியாது, நுழைந்தால் தலை இடிக்கும். அப்படிப்பட்ட குடிசைக்குள்ளே அவர் இருந்தார். அவரை அழைத்து வந்து அண்ணாவிடம் நிறுத்தினார்கள். சிவசங்கரன், இனி நீங்கள்தான் துணை மேயர் என்று அண்ணா சொன்னார். அவர் அதை தலைகுனிந்தவாறு ஏற்றுக் கொண்டார். மறுநாள் சிவசங்கரன் அவர்கள் என்னை அழைத்து சொன்னார், ''ஐயா என்னை துணை மேயராக ஆக்கிவிட்டார்கள், என்னுடைய வீட்டில் அவசரத்திற்கு யாராவது எனக்கு அழைப்பு விடுத்தால் அவர்களோடு பேச ஒரு டெலிபோன்கூட இல்லை'' என்று சொன்னார். இதை நான் அண்ணா அவர்களிடத்திலே சொன்னேன். அண்ணா ''கட்சியின் மூலமாக அதை கவனியுங்கள்'' என்று சொன்னார். அதன்பேரில் மாதந்தோறும் ஆகிற டெலிபோன் செலவை கட்சி ஏற்றுக் கொண்டு சிவசங்கரன் அவர்களை துணை மேயராக இருக்க ஒப்புதலை அவரிடத்திலே பெற்றோம். இதைச் சொல்வதற்கு காரணம் சாதாரண சாமானிய மக்களுடைய இயக்கம் இந்த இயக்கம். எனவே ஒரு காய்கறி கடை வைத்திருந்தவர், பனியன் தொழிலாளி என்பது எல்லாம் இழிவானதல்ல. எனவேதான் இந்த இயக்கத்தினுடைய சார்பாக, அத்தகைய ஒரு தோழர், ஒரு நண்பர், ஒரு உடன்பிறப்பு இன்றையதினம் மேயராக ஆகியிருக்கிறார் என்றால், நானே மேயரானதைப்போல் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருப்பூர் நகரத்திலே உள்ள மக்கள் இன்றைக்கு எவ்வளவு மகிழ்ச்சியிலே திளைத்திருக்கிறார்கள் என்பதை என்னால் உணர முடிந்தது. நெல்லையிலே பேரணி நடந்தபோது அங்கே பொங்கி வழிந்த அந்தப் பூரிப்பும், புன்னகையும் அந்த நல்வாழ்த்துகளும் இன்றைய தினம் நாங்கள் இந்த நகரத்தினுடைய தெருக்களில் காரிலே அமர்ந்து செல்கிறபோது அத்தகைய களிப்பை, பேரானந்தத்தை – பூரிப்பை – புளகாங்கிதத்தை எங்களால் காணமுடிந்தது. அந்தளவிற்கு இதயம் திறந்த மகிழ்ச்சியோடு மக்கள் இந்த நாளை வரவேற்று இருக்கின்றீர்கள். இந்த மகிழ்ச்சி எந்நாளும் உங்களுடைய உள்ளத்திலே தங்கியிருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நாங்கள் அந்த மகிழ்ச்சிக்கு இடையூறாக ஒரு சிறு துரும்பையும் அசைக்க மாட்டோம். உங்களுக்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம், நீங்கள் வைத்திருக்கின்ற கோரிக்கை களையெல்லாம் நிறைவேற்றுவோம்.

இன்றைக்கு இந்த விழாவிலேகூட அறிவிப்பதற்காக நானும், நமது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் மற்றும் உள்ள அதிகாரிகளும் கலந்து பேசி உள்ளாட்சித் துறையின் மூலமாக இந்த நாளில் திருப்பூருக்கென்று சில அறிவிப்புகளை இந்த நாளில் பரிசாகத் தர நான் விரும்புகிறேன்.



***பனியன் தொழிலாளி என்பது எல்லாம் இழிவானதல்ல. எனவேதான் இந்த இயக்கத்தினுடைய சார்பாக, அத்தகைய ஒரு தோழர், ஒரு நண்பர், ஒரு உடன்பிறப்பு இன்றையதினம் மேயராக ஆகியிருக்கிறார் என்றால், நானே மேயரானதைப்போல் மகிழ்ச்சியடைகின்றேன்.***

பெரிய அறிவிப்பைகூட நீங்கள் எதிர்பார்க்கக்கூடும். அதுவும் உண்டு. ஆனால் சற்று தாமதமாக. எதற்கும் நாள் நட்சத்திரம் பார்க்கவேண்டும் என்று சிலர் சொல்வார்கள் அல்லவா? முதலிலே சொன்னேனே, இப்பொழுதுதான் பெண் பருவம் அடைந்திருப்பதாக, அதற்குப் பிறகு பஞ்சாங்கம் எல்லாம் புரோகிதர் வீடாக இருந்தால், வைதீக நம்பிக்கையுடையவர்களாக இருந்தால், பார்ப்பார்கள். நமக்கு வைதீகத்திலும் நம்பிக்கை கிடையாது, பஞ்சாங்கத்திலும் நம்பிக்கை கிடையாது, புரோகிதத்திலும் நம்பிக்கை கிடையாது. வாய்ப்பான நாள் எது என்பதிலே நாம் நம்பிக்கை உள்ளவர்கள். அந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ளக் கூடியவர்கள். அப்படிப்பட்ட நாம் அந்த வாய்ப்பை விரைவிலேயே பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று அந்தக் கோரிக்கைக்கு பதிலை சூசகமாக சொல்ல நான் விரும்புகின்றேன்.

இப்போது முதல் அறிவிப்பாக திருப்பூர் மாநகராட்சியின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக மாநகராட்சிக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய அலுவலக கட்டடம் கட்டுவதற்கும் – உடனடியாக சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்கு தேவையான இடங்களில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைப்பதற்கும், பூங்காக்களை சீரமைப்பதற்காகவும் திருப்பூர் மாநகராட்சிக்கு 5 கோடி ரூபாய் தமிழக அரசின் சார்பில் மானியமாக வழங்கப்படுகிறது.

திருப்பூர் மாநகரில் **40** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. தற்போது திருப்பூர் நகரில் அமைக்கப்பட்டுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டம், திருப்பூர் மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து தனி மாவட்டம் பற்றி இங்கே கோரிக்கை வைக்கப்பட்டது. – விரைவில் நிதிநிலை அறிக்கை – ஆளுநர் உரை எல்லாம் வரவுள்ளது. இரண்டு மாதங்களுக்குள்ளாக ஜனவரி, பிப்ரவரியில் அந்த அறிக்கைகள் வரவுள்ளன. இப்போது தேதியை சொல்லக்கூடாது. ஏனென்றால் ஆளுநர் உரை – நிதிநிலை அறிக்கை இவைகள் வரும் நாள் எந்த நாள் என்பதை முன்கூட்டி இது போன்ற கூட்டங்களிலே சொல்லிப் பழக்கமில்லை.


ஆகவே அதிகாரபூர்வமாக அவைகள் வெளியிடப்படும். அப்படி வெளியிடப்பட்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சுக்குள்ளாக அந்த அறிக்கைகள் வெளிவரும். புதிய மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்றால் அதற்காக வருவாய் நிருவாக ஆணையருடைய அறிக்கையை பெறவேண்டும். சட்டமன்றம் தொடங்குவதற்கு முன்பாக அந்த அறிக்கையை கோரிப்பெற்று சட்டமன்றம் கூடும்போது – நடக்கும்போது நல்லமுடிவு அறிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு மாநகரம் பெற்றீர்கள். மாவட்டத்தை பெறுவதற்கும் கைகளை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளுங்கள்''.

– **29.12.2007** அன்று திருப்பூரில் நடைபெற்ற திருப்பூர் மாநகராட்சித் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை

# உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் விரைவில் வழங்கப்படும்

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**



திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் திருப்பூர் மாநகராட்சி தொடக்க விழா 29.12.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ரூ.9 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.7 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று விழாப் பேருரையாற்றும் போது,**

"திருப்பூர் நகரம் இந்தியத் திருநாட்டிலேயே தொழில் சிறப்புமிக்க நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பது அனைவரும் அறிந்திருக்கக் கூடிய உண்மையாகும். தென்னிந்தியாவினுடைய மான்செஸ்டர் என்று அழைக்கக் கூடிய ஒரு சிறப்புக்குரிய மாநகரமாக இந்தத் திருப்பூர் நகரம் விளங்கிக் கொண்டிருக்கிறது.



பருத்தி பின்னலாடையைப் பொறுத்தவரையில், நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புவது, நமது இந்தியாவிலேயே 90 சதவிகிதத்திற்கு மேல் இந்த நகரத்தில்தான் உற்பத்தி ஆகிறது என்ற அந்தப் பெருமையை இந்த நகரம் பெற்றிருக்கிறது. அது மட்டுமல்ல; ஏறத்தாழ 100 கோடி டாலர் மதிப்பில் அந்நியச் செலவாணி ஈட்டித் தரக்கூடிய நகரமாக இந்த மாநகரம் விளங்கிக் கொண்டிருக்கிறது. நான் இன்னொன்றை பெருமையோடு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது தன்னுடைய உயிரையே தியாகம் செய்த குமரன் பிறந்த ஊரும் இந்தத் திருப்பூர் நகரம் என்பதை எண்ணிப் பார்க்கின்ற போது நாம் பெருமைப்படுகிறோம்.

எனவே அப்படிப்பட்ட பெருமைகளைப் பெற்றிருக்கக் கூடிய ஒரு சிறப்புக்குரிய, வரலாற்றிலே இடம் பெற்றிருக்கக் கூடிய இந்தத் திருப்பூர் நகரத்தை மாநகராட்சியாக உருவாக்கிட வேண்டும், மாநகராட்சிக்குரிய அந்தத் தகுதியைப் பெற்றிட வேண்டும் என்று நீண்ட காலமாக இந்தக் கோரிக்கை தொடர்ந்து எடுத்து வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் சட்டமன்றத்தில் இந்தக் கோரிக்கையை அவர் தொடர்ந்து எடுத்துச் சொல்லியிருந்தாலும், அண்மையில் நாம் சந்தித்த பொதுத் தேர்தல் மூலமாக நம்முடைய கூட்டணி சிறப்பான முறையில் வெற்றி பெற்று உங்கள் அன்போடும், ஆதரவோடும் 2006ஆம் ஆண்டு தமிழகத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே நம்முடைய ஆட்சி அமைந்ததற்குப் பின்னால் சட்டமன்றம் கூடுகின்ற நேரத்தில் முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரில் இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய தோழமைக் கட்சியைச் சார்ந்த திரு. கோவிந்தசாமி, சட்டமன்றத்தில் இந்தக் கோரிக்கையை மீண்டும் எடுத்துச் சொல்லியிருக்கக் கூடிய அந்த கோரிக்கைக்கு வலுவூட்டக் கூடிய வகையில் அவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

இப்படி எடுத்துச் சொன்ன நேரத்தில் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அதற்கு பதில் சொன்னபோது தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இப்போது தொகுதி சீரமைப்புப் பணிகள் நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. எனவே அந்தப் பணிகள் எல்லாம் முழுமைபெற்றதற்குப் பிறகு நிச்சயமாக உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட இருக்கிறது என்ற உறுதியை அன்றைக்குக் குறிப்பிட்டு எடுத்துச் சொன்னார்கள்.

அந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு இந்தத் திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக மாற்றப்பட்டு வருகிறது. வருகிற ஜனவரி மாதம் 1ஆம் தேதியிலிருந்து இது மாநகராட்சியாக செயல்படவிருக்கிறது. அதனுடைய தொடக்க விழாவாக அதைச் சிறப்போடு இந்த விழாவை நடத்திட வேண்டும் என்ற அடிப்படையிலே இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விழாவிலே நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் பங்கேற்று இந்த மாநகராட்சிக்குப் பெருமை சேர்த்து தந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே முதன்முதலில் சென்னைதான் மாநகராட்சியாக விளங்கி கொண்டு வந்தது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையிலே 1688ஆம் ஆண்டு, முதல் முதலாக சென்னை மாநகராட்சி தான் தொடங்கப்பட்டிருக்கிறது.

அதற்கு அடுத்து 2ஆவது மாநகராட்சியாக 1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி உருவாகியிருக்கிறது. அதற்குப் பின்னர் கோவை மாநகராட்சி, அதைத் தொடர்ந்து சேலம், திருச்சி, திருநெல்வேலி, இந்த 3 மாநகராட்சிகள், அதற்குப் பிறகு சேர்ந்து இதுவரையில் 6 மாநகராட்சியைத்தான் தமிழ்நாடு பெற்றிருந்தது.

ஆனால் வருகிற ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து இந்தத் திருப்பூரும், மாலையில் நடைபெற இருக்கக் கூடிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கக் கூடிய ஈரோடும், ஆக இந்த இரண்டும் 1ஆம் தேதியிலிருந்து மாநகராட்சியாக உயர்ந்து, ஆக தமிழ்நாட்டில் 8 மாநகராட்சிகள் உருவாகி இருக்கக்கூடிய சாதனையை நாம் உருவாக்கி தந்திருக்கிறோம்.

எனவே இன்றைக்கு இந்த நகராட்சி மாநகராட்சியாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் இதன் மூலமாக இந்த மாநகராட்சிக்கு இந்த நகரத்தில் இருக்கக் கூடிய இந்த மக்களுக்கு, குறிப்பாக இந்த நகரத்திற்கு என்னென்ன பெருமைகள் எல்லாம், என்னென்ன வளர்ச்சிகள் எல்லாம் வந்து சேரவிருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இங்கு உரையாற்றி இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினரும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினரும், குறிப்பாக நம்முடைய திரு. செல்வராஜ் உரையாற்றுகின்ற போது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்தத் திருப்பூர் நகராட்சியைப் பொறுத்த வரையிலே திராவிட முன்னேற்ற கழகம் எப்பொழுது எல்லாம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறதோ, எப்பொழுது எல்லாம் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்களோ, அப்பொழுது எல்லாம் இந்தத் திருப்பூருக்கு பல சாதனைகள், திட்டங்கள் வந்து சேர்ந்திருக்கிறது



என்பதை புள்ளி விவரத்தோடு, ஆதாரத்தோடு இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது சொன்னார், நாங்கள் இதுவரைக்கும் தொடர்ந்து கோரிக்கைகளை கேட்டுக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து கோரிக்கைகளை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி எடுத்து வைக்கின்ற காரணம் நாங்கள் கேட்டதை நீங்கள் கொடுக்கிற காரணத்தினால்தான், அதை நாங்கள் தொடர்ந்து எடுத்து வைக்கிறோம் என்ற உணர்வோடு இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

ஏசுபிரான் கூட தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற அந்த முறையை வகுத்து தந்திருந்தாலும், ஆனால் இன்றைக்கு இருக்கக் கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கேட்காமலேயே, தட்டாமலேயே திட்டங்களை குறிப்பாக இந்தத் திருப்பூருக்கு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையிலே தான் இன்றைக்கு இந்தத் திருப்பூர் நகரம் மாநகராட்சியாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் ஏராளமான வளர்ச்சிப் பணிகள் வந்து சேரவிருக்கிறது. பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலமாக கடன்களை பெற்று பல திட்டங்கள் நாம் உருவாக்கி இருக்கிறோம்.

அது மட்டுமல்ல நகராட்சியாக இருந்த இந்தத் திருப்பூர் மாநகராட்சியாக மாறுகின்ற காரணத்தால் பணியாளருடைய எண்ணிக்கையும் உயர்கிறது. பணியாளருடைய எண்ணிக்கை உயர்கின்ற காரணத்தால் பல பணிகளை மக்களுக்கு நாம் தொடர்ந்து ஆற்றிட முடியும். எனவே மாநகர மக்களுடைய தரமும் உயரும், இந்த மாநகரத்தினுடைய பெருமையும் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே இருக்கப்போகிறது.

அது மட்டுமல்ல நான் பலவற்றைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என்று சொன்னாலும் நேரத்தின் நிலைமையைக் கருதி ஒன்றை மட்டும் நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த மாநகரத்தைப் பொறுத்தவரையிலே இந்தியாவிலேயே மிக அதிக அளவில் மாணவிகள் படித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு பள்ளி இந்தத் திருப்பூர் மாநகரத்தில் தான் அமைந்திருக்கிறது. 7,104 பேர் இந்தத் திருப்பூரில் இருக்கக் கூடிய பெண்கள் நகராட்சியினுடைய பள்ளியில் படித்து கொண்டிருக் கிறார்கள்.

இந்தப் பள்ளிக்கு பல சிறப்புகள் உண்டு. இந்திய அளவிலே தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் 10 முறை தேசிய விருது பெற்ற ஒரே நகராட்சிப் பள்ளி திருப்பூரில் இருக்கக் கூடிய இந்த நகராட்சிப் பள்ளிதான் என்பதையும் நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல மத்திய அரசின் அரசு நகராட்சிப் பள்ளிகளில் சிறந்த கணினி கல்விக்கான விருதை முன்னாள் பாரத குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்களுடைய விருது 2004 ஆம் ஆண்டில் இந்த விருதினையும் பெற்றிருக்கக் கூடிய பள்ளியாக இந்த நகராட்சிப் பள்ளி விளங்கி கொண்டிருக்கிறது.

இதையெல்லாம் அடிப்படையில் வைத்துத் தான் இன்றைக்கு இந்த நகராட்சி மாநகராட்சியாக உயருகின்ற காரணத்தால் அந்தப் பள்ளியினுடைய மேம்பாட்டிற்காக மேலும் ரூபாய் 2 கோடியே 40 இலட்சம் அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்காக 33 கூடுதல்



வகுப்பறைகள் கட்டுவதற்கு அரசினுடைய ஆணை 2 நாட்களுக்கு முன்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே பெருமையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இப்படி பல பணிகள் இந்தத் திருப்பூர் நகரத்திற்கு வந்து சேரப்போகிறது என்பதையும் குறிப்பிட்டுக் காட்டி, அதே நேரத்தில் இந்த விழாவையொட்டி அடிக்கல் நாட்டு விழா, நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படவிருக்கிறது. ரூபாய் 9 கோடியே 8 இலட்சம் மதிப்பில் 7 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது. 30 பயனாளிகளுக்கு ரூபாய் 7 இலட்சத்து 74 ஆயிரம் மதிப்பிலே மானிய உதவிகளும் இந்த விழாவிலே வழங்கப்படவிருக்கிறது.

ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய குடியிருப்பு முழுமையாகக் கட்டிமுடித்த 3 பேர்களுக்கு ரூ.72 ஆயிரம் வீதம் ரூ.2 இலட்சத்து 16 ஆயிரம் மானியமாகவும், 75 சதவிகித பணி முடித்தமைக்காக 2 பயனாளிகளுக்கு ரூ.54 ஆயிரம் வீதம் ரூ.1 இலட்சத்து 7 ஆயிரம் மானியமாகவும், முதற்கட்டப் பணி முடித்தமைக்காக 25 பயனாளிகளுக்கு ரூ.18 ஆயிரம் வீதம் ரூ.4 இலட்சத்து 50 ஆயிரம் தவணை முறையாகவும் மானியமாகவும் ஆக மொத்தம் ரூ.7 இலட்சத்து 74 ஆயிரம் மானியமாக இவ்விழாவிலே வழங்கப்படவிருக்கிறது.

ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் மூலமாக எத்தனையோ திட்டங்களை எத்தனையோ சாதனைகளை நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தொடர்ந்து உருவாக்கித் தந்திருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். நான் அவற்றை எல்லாம் பட்டியல்போட்டு எடுத்துச் சொல்வேன் என்று சொன்னால் நேரமாகிவிடும்.

எனவே காலத்தின் நிலைமையைக் கருதி நான் தலைப்புச் செய்திகளாக சொல்ல விரும்புவது மாவட்ட தலைநகரங்களில் அதேபோல பல நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்ட வசதிகள் இல்லாத இடமே இல்லை என்ற நிலையை உருவாக்க ரூ.3,280 கோடி மதிப்பீட்டிலே அரசு அதற்காக அனுமதி தந்து அதனுடைய பணிகள் எல்லாம் இப்பொழுது வேகவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதேபோல் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.3,816 கோடியே 17 இலட்சம் மதிப்பீட்டிலே 167 பெரிய திட்டங்களுக்கு நம்முடைய மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்று கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகளிலும் பல்வேறு நகராட்சிகளிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல பேருந்து நிலையங்களாக இருந்தாலும் சரி, பாதாளச் சாக்கடைத் திட்டங்களாக இருந்தாலும் சரி, அதற்கெல்லாம் ஒப்புதல் வழங்கி இன்று பணிகள் எல்லாம் வேகவேகமாக நடைபெற்று வருகிறது.


அதேபோல் நகர்ப்புறப் பகுதிகளில் இருக்கக் கூடிய அனைத்துச் சாலைகளும் சிமெண்ட் மற்றும் தார்ச்சாலைகளாக மாற்ற அதனுடைய பணிகளும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நகர்ப்புறப் பகுதிகளில் நவீன வசதிகளோடு கூடிய இறைச்சிக் கூடங்களும், எரிவாயு தகனமேடைகளும் இன்றைக்குத் தொடர்ந்து அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் பணியாளர்கள் நலனைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் கடந்த கால ஆட்சியிலே பணியாளர்கள் நியமிக்க தடைகள் போட்டிருந்தது உங்கள் எல்லோருக்கும் தெரியும். நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு அந்தத் தடைகளை எல்லாம் நீக்கி காலியாக இருக்கக் கூடிய இடங்கள் எல்லாம் உடனடியாக நிரப்பிட வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக் கிறார்கள்.

அந்த உத்தரவின் அடிப்படையிலே நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் நான் தெரிவிக்க விரும்புவது இந்த ஊரக, உள்ளாட்சி துறைகளில் காலியாக இருந்த 17,819 பணியாளர்களில் இதுவரையிலே நாம் 14,727 பணியாளர்களை நியமித்திருக்கிறோம் என்பதையும் நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி பலத்திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருந்தாலும், இப்படி பல சாதனைகளை இன்றைக்கு இந்த அரசு செய்து கொண்டிருந்தாலும், இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய அந்த அதிகாரங்களை கூடுதல் அதிகாரங்களை கூட வழங்க வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அந்த உத்தரவின் அடிப்படையிலே நம்முடைய முதல்வர் அவர்களே பங்கேற்கக் கூடிய வகையில் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அதனுடைய தலைவர்களை எல்லாம் அழைத்து சென்னையிலே கூட்டத்தைக் கூட்டி



கலந்துரையாடல் நடத்தி அதன் மூலமாக அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் அறிந்து அந்தக் கூட்டத்திலே பங்கேற்ற, நம்முடைய முதல்வர் அவர்கள் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இருக்க கூடிய ஊராட்சித் தலைவர்களையும் அழைத்து நீங்கள் கலந்து பேசிட வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள்.

அதன் அடிப்படையிலே தமிழகத்தில் இருக்கக் கூடிய ஏறக்குறைய 12,618 கிராம ஊராட்சித் தலைவர்களையும் நாங்கள் அழைத்து 4 மண்டலங்களாகப் பிரித்து தமிழ்நாடு முழுவதும் அந்த சுற்றுப்பயணத்தை நாங்கள் நடத்தி அவர்களிடமும் கருத்துக்களை கேட்டு இன்றைக்கு அந்தப்பரிந்துரைகளை எல்லாம் நாங்கள் பரிசீலித்து 10 நாட்களுக்கு முன்பு நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே அந்தப் பரிந்துரையினுடைய தொகுப்பை நாங்கள் வழங்கியிருக்கிறோம்.

விரைவில் நம்முடைய முதல்வர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்து பேசி அந்த அதிகாரங்களை எல்லாம் நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரைவிலே வழங்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியினை நான் இந்த நேரத்திலே உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொண்டு, இந்த மாநகராட்சியிலே பொறுப்பேற்கக் கூடிய நம்முடைய மேயர் அவர்களை, மாநகராட்சியின் உறுப்பினர்களாக பொறுப்பேற்க கூடிய நண்பர்களை சகோதர சகோதரிகளை எல்லாம் நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது எந்த உணர்வோடு, எந்த லட்சியத்தோடு இந்த நகராட்சியை மாநகராட்சியாக நம்முடைய முதல்வர் அவர்கள் உயர்த்தி தந்திருக்கிறாரோ அதை உணர்ந்து உங்கள் கடமையை நீங்கள் முழுமையாக நிறைவேற்றித் தர வேண்டும்.

இந்த அரசுக்கும் குறிப்பாக நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு பெருமையை சேர்த்துத் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டு, புதிதாக இன்றைக்கு உருவாகியிருக்கக் கூடிய இந்த மாநகராட்சியில் பொறுப்பேற்க இருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று உரையாற்றினார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா.பழனிசாமி முன்னிலை வகித்தார். விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கோவை தங்கம், திரு. சி.கோவிந்தசாமி, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசுச் செயலாளர் திரு. கே.தீனபந்து, இ.ஆ.ப., திருப்பூர் மாநகராட்சியின் மேயராகப் பொறுப்பேற்ற திரு. க.செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நகராட்சிகளின் நிருவாக ஆணையர் திரு. நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., வரவேற்றுப் பேசினார். முடிவில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் நீரஜ் மித்தல், இ.ஆ.ப., நன்றி கூறினார். ✶



# ஒன்றரை ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 995 விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 671 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் உரை



"பல ஆண்டுகளுக்குப் பிறகு குருகுலத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்னும் சொல்லப் போனால் உணர்ச்சிவயப்படுகின்றேன். அறுபது ஆண்டுகளுக்கு முன்பு எந்தக் குருகுலத்தில் அறிவு தீட்சண்யம் பெற ஐயா அவர்களுடைய முன்னிலையில் உறுதி மேற்கொண்டு அவர் வழியில் நடைபயிலத் தொடங்கினேனோ, அந்தக் குருகுலத்தில் கோலாகலமாக நடைபெறுகின்ற இந்த இனிய விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு ஐயா அவர்களுக்கு நான், ஆற்ற வேண்டிய கடமையை, ஆற்றி வருகின்ற தொடர் பணியை தொடருகின்ற வாய்ப்பைப் பெற்று, உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றேன்.

இந்த ஈரோடு குருகுலத்திலே நான் இருந்தபோது எனக்கு அறிவை வளர்க்கவும், பகுத்தறிவை மேலோங்கச் செய்யவும் எழுத்து ஆர்வத்தை வழங்கிடவும், என்னுடைய முதல் குருவாக இருந்து என்னை வழிநடத்திய, இன்றைக்கும் உயிரோடு இல்லாவிட்டாலும் உணர்வாக இருந்து, வழி நடத்திக் கொண்டிருக்கின்ற தந்தை பெரியார் அவர்களின் பெயரை என் ரத்தச் சுவடுகளிலே உச்சரிக்கின்ற ஒரு பெயராக ஆக்கிக் கொண்டு உங்கள் முன்னால் இன்றைய நிகழ்ச்சி குறித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த ஈரோடு நகரத்தில் நான் பயின்றபோது இந்தப் பாசறையிலே ஒரு மாணவனாக இருந்தபோது, பெரியாரின் கரம் பிடித்து வளர்ந்தபோது, என்னுடைய அருமைத் தோழர்களாக இருந்து என்னோடு அளவளாவி, எனக்கு ஊக்கமும், உணர்வும் வழங்கிய அந்த உடன்பிறப்புக்களையெல்லாம் இந்த நேரத்திலே நினைவு கூர்ந்து நன்றி கூற கடமைப் பட்டிருக்கின்றேன்.

இந்த நகரத்தில் அன்றைக்கு நான் இளம் பிராயத்திலே பள்ளியிலே இருந்து வெளிவந்த மாணவனாக இந்த பகுத்தறிவுப் பள்ளியிலே சேர்ந்த அந்தக் காலத்தில் என்னோடு ஒவ்வொரு நாளும் அளவளாவிய சண்முகவேலாயுதம், எஸ்.ஆர்.சந்தானம், ஆர்.டி.முத்து, சங்கரய்யா, செல்வன், புத்தக வெளியீட்டாளர் கிறித்தவ நண்பர், உத்தம நண்பர் லூர்துசாமி, பார்பர் ஷாப் வைத்திருந்தாலும் அங்கே பகுத்தறிவு முழக்கம்தான் கேட்கும் என்று அன்றாடம் அந்தப் பணியை செய்து வந்த என் அருமை நண்பன் அப்பாவு, இப்படிப்பட்டவர்களையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன்.

குருகுலத்தில் 'குடியரசு' அலுவலகத்தில் என்னோடு தோளோடு தோள் நின்று பணியாற்றிய மறைந்த மாணிக்கங்கள் தவமணிராஜன், ஏ.பி.ஜனார்த்தனம், மாயவரம் கருணானந்தம் இவர்களையெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன். அவர்களும் இருந்து இன்றைய விழா நடைபெற்றிருக்குமேயானால் எந்தளவிற்கு மகிழ்ச்சிக் கடலில் நான் அமர்ந்திருப்பேன் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அப்படிப்பட்ட ஒரு உணர்ச்சி மயமான நிலையில் உங்கள் முன்னால் நான் அமர்ந்திருக்கிறேன்.

இங்கே நம்முடைய கார்வேந்தன் உரையாற்றினார். தம்பி இளங்கோவன் உரையாற்றினார். இருவரும் நம்முடைய தோழமைக்கட்சி உறுப்பினர்கள்! தோழமைக் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் அவர்கள் இருவரும் இங்கே நமக்குத் துணையாக இருக்கின்ற கட்சிகளுடைய தளகர்த்தர்கள். அதிலும் கார்வேந்தன் தமிழகத்திலே எப்படி தொழில் வளர்கிறது என்பதைச் சொல்லும்போது, கார் தொழில் உலகத்திலே பல நாடுகளுக்கு இணையாக வளர்கிறது என்று சொன்னார்கள். பெயரே கார்வேந்தன். அதனால் "கார்"தொழிலின் சிறப்பைப் பற்றி அவர் இங்கே சொன்னார் என்று கருதுகின்றேன்.

தம்பி இளங்கோவனும் இங்கே அமையவிருக்கின்ற மாநகராட்சி மன்றக் கட்டடத்திற்கு கலைஞர் பெயர் வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அப்படி அவர் குறிப்பிட்ட போது, என்னுடைய நினைவு சில ஆண்டுகளுக்கு முன் சென்றது. பெரியார் திடலில் பெரியார் இருந்தபோது நான் ஒரு விழாவில் கலந்துகொண்டு பேசினேன். அப்போது நான் சொன்னேன், நான் அடிக்கடி அமைச்சராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் பெரியார் திடலில் இருந்து அழைப்பு வந்தால் ஏன் ஓடி வருகிறேன் தெரியுமா? நான் வெளியில்படுகின்ற வேதனைகளை தீர்த்துக்கொள்ள, அதற்கு மருந்து தடவ, எனக்கு ஏற்படுகின்ற புண்களை ஆற்றிக்கொள்ள, அதற்கு பெரியார் திடலை நாடி வருகிறேன் என்று சொன்னேன். அந்த மருந்து என்னுடைய பெரியாரிடத்திலே தான் இருக்கிறது. அதனால்தான் இங்கே ஓடோடி வருகிறேன் என்று குறிப்பிட்டேன். அதற்கு ஒரு எடுத்துக்காட்டையும் குறிப்பிட்டுச் சொன்னேன்.





ஒரு பாம்பும், கீரியும் சண்டை போட்டுக் கொள்ளும். அப்படி சண்டை போட்டுக் கொள்ளும் போது கீரியினுடைய உடல் முழுவதும் பாம்பின் பல் குத்தி அதனுடைய விஷம் பரவியிருக்கும். இறுதியாக கீரிதான் வெற்றி பெறும் என்றாலும்கூட, பாம்பின் விஷம் தன்னுடைய உடலெல்லாம் தாக்கியிருக்கிறது என்கின்ற அய்யப்பாட்டின் காரணமாக அந்த கீரி சண்டை முடிந்து வெற்றிபெற்ற பிறகு ஓடோடி வந்து யாருக்கும் தெரியாத ஒரு பச்சிலையில் விழுந்து புரளும். அப்படி பச்சிலை பட்டக் காரணத்தால் அந்த விஷம் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை அந்த கீரிக்கு உண்டு. உள்ளபடியே தீர்ந்துவிடும் என்று பெரியவர்கள் சொல்லக் கேள்வி.

எப்படி பாம்பின் விஷம் தன் உடலிலே பட்டிருக்கும், அதை அகற்ற வேண்டும் என்பதற்காக கீரிப்பிள்ளை தான் விரும்புகின்ற, தான் கருதியிருக்கின்ற, நம்புகின்ற ஒரு மூலிகையில் விழுந்து புரளுகிறதோ அதைப்போல நான் வெளியிலே நடத்துகின்ற போராட்டத்தில் என்னை அறியாமல் என்மீதுபட்டுள்ள விஷத்தையெல்லாம் போக்கிக்கொள்ள எனக்கு மூலிகையாக இருப்பது இந்த பெரியார் திடல்தான். அதனால் நான் இங்கே அடிக்கடி வருகின்றேன் என்று குறிப்பிட்டேன்.

அந்த விழாவில் குன்றக்குடி அடிகளாரும் இருந்தார். தந்தை பெரியார் அவர்கள், கருணாநிதிக்கு ஒரு சிலை வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு தன்னுடைய நன்கொடையாக ஆயிரம் ரூபாயை அந்த சிலை வைக்கின்ற நிகழ்ச்சிக்காக, சிலை செய்கின்ற செலவுகளுக்காக அன்றைக்கு வீரமணியிடத்திலே கொடுத்து, இதை என் கணக்கிலே சேர்த்துக்கொள். கருணாநிதிக்கு சிலை வைக்க வேண்டிய பொறுப்பு, உன் பொறுப்பு மணியம்மை பொறுப்பு என்று ஒப்படைத்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு பெரியார் மறைந்து விட்டார். நான் சிலை வைக்கின்ற விவகாரத்தை மெல்ல தவிர்த்து, தவிர்த்து எனக்கு சிலை வேண்டாம் என்று தவிர்த்துப் பார்த்தேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால், அன்றைக்கு பெரியார் சொன்னார் எனக்கு சிலை வைக்க வேண்டும் என்று. இன்று பேரன் (ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்) சொல்கிறார் இங்கே கட்டுகின்ற கட்டடத்திற்கு கலைஞர் அவர்கள் பெயர் வைக்க வேண்டும் என்று. ஆக இந்த குடும்பத்தின்பால் எனக்கு உள்ள அன்பு வெறும் கட்சி சார்புடையது அல்ல. அரசியல் சார்புடையது மாத்திரமல்ல, தம்பி இளங்கோவன் சுட்டிக்காட்டியதைப் போல குடும்ப

சார்பானது. குடும்பம் என்று ஒரு அரசியல்வாதி பேசுவது, தவறும் அல்ல.

**பெரியாரின் பொதுநலப் பற்று**

1973 ஆம் ஆண்டு ஈரோடு நகராட்சி மன்றத்திற்கு நூற்றாண்டு விழா. அந்த நூற்றாண்டு விழாவிற்கு பெரியாரிடத்திலே கட்டுரை கேட்டார்கள். பெரியார் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார், இந்த முனிசிபாலிட்டி என்னுடைய குடும்ப முனிசிபாலிட்டி, அதாவது பெரியார் தலைவராக இருந்த காரணத்தால் பெரியாருடைய இல்லத்துப் பெண்மணிகள், நண்பர்கள் அந்த நகராட்சி மன்றத்திலே உறுப்பினர்களாக இருந்த காரணத்தால், தொடர்புடையவர்களாக இருந்த காரணத்தால் நான் இதை சொல்கிறேன் என்று அழுத்தம் திருத்தமாக, இது எங்களது குடும்ப முனிசிபாலிட்டி என்று பெரியார் சொன்னார்.

குடும்ப முனிசிபாலிட்டி என்று சொல்லி நிலத்தை அபகரித்துக் கொள்ளவும் இல்லை. கட்டடத்தை எடுத்துக் கொள்ளவும் இல்லை. அதற்கு உரிமை கொண்டாடவும் இல்லை. அந்தளவிற்கு அந்த நகராட்சி மன்றத்தோடு தன்னுடைய உணர்வுகளை ஒருங்கிணைத்தார்கள் என்பதுதான் அதற்குப் பொருள். இது புரியாமல் இன்றைக்கு சில பிறவிகள் குடும்பக் கட்சி, குடும்பச் சொத்து என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிற காட்சியை நாம் காணுகின்றோம்.

ஆனால் என்னை வளர்த்த, என்னை ஆளாக்கிய நமக்கெல்லாம் விழி திறந்த தந்தை பெரியார் அவர்கள் மூன்றாண்டு காலம் தான் தலைவராக இருந்த ஒரு முனிசிபாலிட்டிக்கு நூற்றாண்டு விழா கட்டுரை எழுதும்போது இது எங்கள் குடும்ப முனிசிபாலிட்டி என்று சொல்கிறார் என்றால், அந்த அளவிற்கு ஒரு பொதுநல ஸ்தாபனத்தின் மீது அவர் பற்றும் பாசமும் கொண்டிருந்தார் என்பதைத்தான் அது காட்டுகிறது.

இன்றைக்கும் அந்தப் பற்று பாசத்தோடுதான், இங்கே ஈரோடு மாநகரத்து மக்கள் சுற்றிலும் இருக்கின்ற மக்கள், கிராமத்து மக்கள் இது மாநகராட்சி ஆகிற நேரத்தில் எந்தெந்தப் பகுதி இணைய இருக்கிறதோ அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களெல்லாம் இங்கே குழுமியிருக்கின்றீர்கள் என்றால் நான் நெல்லையிலே நடைபெற்ற—தம்பி ஸ்டாலின் முன்னின்று நடத்திய அந்த மாநாட்டிலே கண்ட எழுச்சியை, இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமான உணர்ச்சியை காலையில் திருப்பூரில் கண்டேன். இங்கே அதைவிட அதிகம் இருப்பதை கண்டேன். தம்பி ஸ்டாலின் வருத்தப்படக் கூடாது. ஒன்றை காட்டி அதைவிட என்று சொன்னால், அதுவே பெரிதுதான் என்ற அர்த்தம் தான் இதற்கு. எனவே சொல்கின்றேன். அதைவிட அதிக உணர்ச்சி இங்கே ஏற்பட்டதற்குக் காரணம், நெல்லையில் ஒருநாள் கூடியவர்கள் நெல்லை மாவட்டத்திலே உள்ளவர்களும், இளைஞர் அணியினரும் நடத்துகின்ற விழா, அதிலே நாம் கலந்துகொள்கின்றோம் என்று வந்தார்கள், வாழ்த்தினார்கள் முழக்கமிட்டார்கள்.

**நன்றி உணர்வோடு கூடிய மக்கள்**

ஆனால் இன்று காலையிலே திருப்பூரிலும் ஈரோட்டிலும் கூடியவர்கள், வழியெல்லாம் எங்களை கையசைத்து வாழ்த்தியவர்கள் அத்தனைபேரும் இது நாங்கள் நடத்துகின்ற விழா, எங்களுக்காக நாங்கள் நடத்துகின்ற விழா என்ற அந்த உணர்வோடு, நம்ம ஊர் மாநகரமாகிறது, நகரமாக இருந்தது, பஞ்சாயத்தாக தொடங்கியது, தந்தை பெரியாருடைய தொண்டால் அவருடைய ஆற்றலால், அறிவால், அவருடைய பொதுநல நோக்கால் பையப் பைய வளர்ந்து, படிப்படியாக வளர்ந்து இன்றைக்கு மாநகராட்சி என்ற மகத்துவத்தைப் பெறுகிறது என்ற அந்த நன்றி உணர்வோடு கூடிய மக்களைத்தான். நான் காலையிலே திருப்பூரிலே கண்டேன், மாலையிலே ஈரோடு மாநகரத்திலும் காணுகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு எழுச்சியை நாம் இன்றைக்குக் காணுகின்றோம் என்றால் அதற்கு என்ன காரணம்? இந்த இடத்திலே நான் இருந்தபோது ஈரோடு குருகுலத்திலே நான் இருந்தபோது, எழுத ஆரம்பித்தேன், அதற்கு முன்பு நான் எழுதினேன் என்றாலும் மக்களுக்காக அந்த இயக்கத்திலே



உள்ளவர்களுக்காக நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொண்டர்களுக்காக, எல்லோருக்குமாக, என் தமிழ் மக்களுக்காக, கடல் கடந்து வாழ்கின்ற தமிழ் மக்களுக்காக, அன்றைக்கு எழுதுகின்ற வாய்ப்புச் சாதனமாக எனக்கு அமைந்துவிட்டது, 'குடிஅரசு' இதழ் அந்தக் குடிஅரசு இதழில் நான் எழுதிய முதல் கட்டுரை தந்தை பெரியார் இட்ட கட்டளைப்படி எழுதிய கட்டுரை.

திருவையாறு என்ற ஒரு ஊர் ஆண்டுதோறும் அந்த ஊரில் திருவையாறு தியாகய்யர் உற்சவம் நடைபெறுவது வாடிக்கை. என்னுடைய கெழுதகை நண்பர், காங்கிரஸ் கட்சியை வழி நடத்திச் சென்றவர் மூப்பனார் அவர்கள், அந்தத் திருவையாறு தியாகராயருடைய உற்சவத்தின் அதிபராக இருந்து ஆண்டுதோறும் அவற்றை நடத்துவார். அப்படிப்பட்ட திருவையாறில் நான் குடிஅரசு அலுவலகத்தில் இருந்த காலக்கட்டத்தில் வழக்கம்போல் சங்கீத விழா நடைபெற்றது. அந்த விழாவிலே கலந்துகொண்ட ஒரு பாடகர் மேடை அருகே வந்து நான் இந்த மேடையில் பாடமாட்டேன் என்றார்.

விழா நடத்தியவர்கள் ஏன் என்று கேட்டார்கள்? அவர் சொன்னார் "நேற்றைய தினம் தண்டபாணி தேசிகர் என்ற ஒரு தமிழர், இந்த மேடையில் தொடக்கம் முதல் முடிவு வரை தமிழ் பாட்டுக்களையே பாடியிருக்கிறார். எனவே இந்த மேடை தீட்டாகிவிட்டது.



தமிழ் பாடிய காரணத்தால் மேடை தீட்டாகிவிட்டது. எனவே நான் பாடமாட்டேன்" என்று கீழே இறங்கிப் போய் விட்டார்.

**பெரியார் தந்த பழக்கம்**

அதற்கு என்ன பிராயசித்தம்? என்று கேட்டார்கள், அவரே சொன்னார், மேடையைக் கழுவுங்கள், தண்ணீர் விட்டுக் கழுவினால் போதாது. ஜலம் விட்டுக் கழுவுங்கள் என்றார். ஜலம் விட்டுக் கழுவினார்கள். பிறகு மேடை ஏறிப் பாடினார். இது பத்திரிகையிலே வந்த செய்தி. அவர் யார் என்று பெயர் சொல்ல விரும்பவில்லை. அவர் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. மறைந்தவர்களைப் பற்றி நான் எதுவும் பேசுவதில்லை. அதை ஒரு மரபாக வைத்திருப்பவன். எனவே நான் அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அந்தச் செய்தி பத்திரிகையில் வந்த பிறகு தினந்தோறும் காலையிலே ஆறு மணிக்கு முன்பு இளங்கோவன் சொன்னாரே எப்படித்தான் காலை ஐந்து மணிக்கு எழுந்திருக்கிறார் என்று. அது பெரியார் தந்த பழக்கம்.

ஆறு மணிக்கு பெரியாரிடத்திலே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். அங்கே பணியாற்றுகிற சங்கரய்யா பத்திரிகைகளை கொண்டு வந்து கொடுத்தார். அதிலே இந்த செய்தி வந்திருந்தது. மேடை தீட்டாயிடுத்து. ஆகவே இந்தப் பாடகர் பாட மறுத்துவிட்டார் என்று. பத்திரிகையை தூக்கி பெரியார்

என்னிடத்திலே எறிந்து இதற்கு ஒரு பதில் எழுது குடிஅரசு பத்திரிகையிலே துணைத் தலையங்கம் எழுது என்றார்கள். நான் எழுதினேன், அந்த தலையங்கத்தின் தலைப்பு "தீட்டாயிடுத்து" என்பதாகும்.

ஒரு பாடகர் திருவையாறு மேடை, பொது மேடை, சங்கீத மேடை, சங்கீதம் எல்லோருக்கும் பொதுவானது. இருந்தாலும் கூட தமிழை இழித்துப் பேசுகிற வகையில் தமிழில் அங்கே பலர் பாடிய காரணத்தால் நான் பாடமாட்டேன், மேடை தீட்டாகிவிட்டது என்று சொல்லி பாட மறுத்து விட்டார் என்பதைக் கண்டித்து "தீட்டாயிடுத்து" என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை எழுதினேன். அதை மறுநாள் படித்துப் பார்த்துவிட்டு என் ஆசான், பெரியார் அவர்கள் "பலே பிரமாதமாக எழுதியிருக்கிறாய் தலைப்பே பிரமாதம் "தீட்டாயிடுத்து" இந்த தலைப்பே பிரமாதம்" என்று என்னைப் பாராட்டினார்.

அந்த பெரியார் வழியில் வந்த நான், அந்த பெரியாரிடத்திலே பாடம் கற்ற நான், அந்த பெரியார் இடத்திலே பயின்ற நான், சாதி மத பேதங்களை, மொழி வெறியை அகற்றிவிட்டு பகுத்தறிவாளனாக வாழ்வதும், அந்தப் பணியை மேற்கொண்டிருப்பதும், வியப்புக்குரிய ஒன்றல்ல. ஒரு வேளை அது மீறி மாறுபாடாக இருந்தால்தான் அது இயக்கத்திற்கு வியக்கக்கூடிய ஒன்றாக இருக்கும். வியப்புக்குரிய ஒன்றல்ல. அதைத்தான் நான் செய்தேன். செய்து கொண்டிருக்கின்றேன். இப்போதும் செய்கிறேன், இனியும் சாகிற வரையில் அதையேதான் செய்து கொண்டிருப்பேன். பெரியார் வழி என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

லூர்துசாமி என்று ஒருவர் இருந்தார் என்று குறிப்பிட்டேன் அல்லவா, அவர் ஈரோடு நகரத்தில் ஒரு புத்தக வியாபாரி. ஒவ்வொரு மாநாட்டுக்கும் தலையிலே புத்தங்களை மூட்டைக் கட்டிக்கொண்டு தலையிலே சுமந்து கொண்டு வருவார். பெரியார் எழுதியது, அண்ணா எழுதியது, நான் எழுதியது என்றெல்லாம் புத்தகங்களைக் கொண்டு வந்து விற்பார். படங்களை விற்பார். முதன் முதலாக திராவிட இயக்கத்தின் படங்களை, நீதிக்கட்சியினுடைய படங்களை, தலைவர்களுடைய படங்களை அப்படிப்பட்ட மாநாடுகளிலே அவர் விற்றுத்தான் பலரும் வாங்கிப் பார்த்திருக்கிறார்கள். அடையாளம் கண்டிருக்கின்றார்கள். அவர் ஒரு கார்டு அச்சடிப்பார். அந்தக் கார்டுகளை கழகத் தோழர்கள் வாங்கிப் பயன்படுத்துவார்கள். அதில் ஒரு கார்டை பற்றிக் கூட தம்பி ஸ்டாலின் சொல்லும்போது தவறு ஏற்பட்டது. தவறை திருத்துவது தந்தையின் கடமையல்லவா?

**"பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம். ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்...**

என்று பாரதிதாசன் எழுதியதாக சொன்னார். அவர் இதைவிட அதிகமாக எழுதக்கூடியவர். மகனுக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன், அது நான் எழுதியது.

"துடுக்கு மிக கொண்டலையும் துணிவுமிக்க
ஆரியந்தான் அடுக்குச் சொல் அண்ணாவால்
அலறித்தான் சாகுதடா"

புன்னகையா, புதுக்கருத்தா, புரட்சிக்கனலா என்ன
வேண்டும் எல்லாம் உண்டு. எங்கள் கவிஞன் வாழ்க"

இப்படிப்பட்ட வரிகளை இரண்டு இரண்டு வரிகளாக எழுதி லூர்துசாமியிடத்திலே கொடுத்தேன். அதை அவர் வாங்கி அவர் விற்பனை செய்கிற ஒவ்வொரு கார்டிலும் அதை அச்சடித்து ஊர் ஊருக்கும் சென்று அதை விற்பனை செய்தார். அப்படித்தான் அன்றைக்கு நம்முடைய கருத்துக்களை கவிதைகளாக, கட்டுரைகளாக இரண்டு இரண்டு வரி குறட்பாக்கள் போல மக்களுக்குப் பரப்பிட முடிந்தது. அதை அன்றைக்குச் செய்தோம். அதனுடைய வளர்ச்சி அன்றைக்கு இரண்டு வரி எழுதி அதை இருபது பேர் வாங்கிப் படித்து, அது பரவிப் பரவித்தான் இன்றைக்கு ஈரோடு நகராட்சி மாநகராட்சியாக வளர்ந்திருக்கிறதே அதைப்போல இந்த இயக்கம், சுயமரியாதை இயக்கம், தந்தை பெரியாருடைய பகுத்தறிவு இயக்கம் இவ்வளவு பெரிய இயக்கமாக இன்றைக்கு வளர்ந்திருக்கின்றது என்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.






**மெய் மறந்தேன்**

பெரியார் அவர்கள் அவருடைய கொள்கைகளை இன்றைக்கு அவருடைய கனவை 1917 ஆம் ஆண்டு அவருடைய ஆங்கில எழுத்து – அந்த எழுத்தின் வாயிலாக குறிப்பிட்டதை நான் கண்ணுற்றபோது எப்படி மெய்மறந்தேன், எப்படி நினைவிழந்தேன் என்பதை தம்பி ஸ்டாலின் இங்கே குறிப்பிட்டார். அந்த அழைப்பிதழை என்னிடத்திலே மாவட்ட ஆட்சித்தலைவர் காட்டியதும், தம்பி ஸ்டாலின் காட்டியதும் உள்ளபடியே பெரியார் ஆங்கிலத்திலே அவர் எழுதிய அந்தக் கையெழுத்து ஏனென்றால் 'குடிஅரசு' அலுவலகத்திலும் சரி, ஜஸ்டிஸ் கட்சி அலுவலகத்திலும் சரி பெரியார் எழுதிய ஆங்கில எழுத்துக்களை, தமிழ் எழுத்துக்களை துணையாசிரியர் என்ற முறையில் பிழை திருத்துகின்ற பணியிலே இருந்தேன். அந்த எழுத்துக்கள் எனக்கு மிகுந்த பரிட்சயமுடைய, பழக்கமுடைய எழுத்துக்கள். அந்த எழுத்துக்களை நான் அந்த அழைப்பிதழிலே பார்த்தபோது மெய் சிலிர்த்தது எனக்கு எண்ணிப் பார்க்க வேண்டும் எவ்வளவு பெரிய சரித்திர சம்பவம் இது.

குடிஅரசு அலுவலகத்தில் – எங்கே எந்த அலுவலகத்தில் நான் ஒரு தொண்டனாக இருந்தேனோ, எந்த அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்களுக்கு சீடனாக இருந்தேனோ அந்த அலுவலகத்திலே நான் எழுதியது அச்சிடப்பட்டு, எங்கிருந்து வெளிக்கிளம்பியதோ அந்த அலுவலகத்தினுடைய ஆசிரியர் தமிழகத்திற்கு ஆசிரியர். இந்த தரணிக்கெல்லாம் பகுத்தறிவு ஆசிரியர் தந்தை பெரியார் அவர்கள். என்னை வளர்த்து அவருடைய தலைமையிலே என்னுடைய நிகழ்வுகள் பல நடைபெற்று அவருடைய சிலைகளை திறந்து வைக்கின்ற பல பணிகள் நடைபெற்று, அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு அவர் எழுதிய எழுத்தை நிறைவேற்றுகின்ற வீரப்பன் சத்திரம் உள்பட இந்தப் பகுதியிலுள்ள கிராமங்களெல்லாம் ஊராட்சிகள் எல்லாம் இணைக்கப்பட்டு ஈரோடு நகராட்சி, மாநகராட்சி மன்றமாக மாற்றப்பட வேண்டும் என்று அவர் அன்றைக்கு எழுதிய கையெழுத்து இன்றைக்கு கட்டளையாக ஆகியிருக்கின்றது என்றால் என்னை விட பெரும் பேறு பெற்றவன் வேறு யார் இருக்க முடியும். என்னைவிட பாக்கியசாலி யார் இருக்க முடியும். யாரிடத்திலே நான் ஐயா என அடிதொழுது அறிவைப் பெற்றேனோ அவருடைய பெயரால் நடைபெற்ற பத்திரிகையிலே வேலை பார்த்தேனோ, அவர் என்ன கட்டளையிட்டாரோ அந்தக் கட்டளையை

அவர் மறைந்த பிறகு நான் இன்னமும் வாழ்ந்து அதை நிறைவேற்றுகின்ற பாக்கியம் பெற்றிருக்கின்றேனே, இதை விட ஒருவனுடைய சரித்திரத்திலே பாக்கியம், பேறுவேறேதும் உண்டா?

**நான் பெற்ற பேறு**

அந்த பேற்றினையல்லவா நான் பெற்றிருக்கின்றேன். யாருடைய சரித்திரத்திலும் இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு ஏற்படுவது சாதாரணமான விஷயமல்ல. என்னைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கிறது என்றால் என் தாய் தந்தையர் செய்த தவமாக இருக்க வேண்டும். நான் பெற்ற பேறாக இருக்க வேண்டும்.

எனக்குக் கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பு, என் வடிவத்திலே கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பு சாதாரண வாய்ப்பல்ல. தம்பி நீ இருந்து செய்யடா என்று அறிஞர் அண்ணா என்னிடத்திலே மறைமுகமாக ஒப்படைத்து விட்டுச் சென்ற வாய்ப்பாகவே நான் கருதுகின்றேன். ஏனென்றால் அண்ணா இருந்த இடமும் இந்த ஈரோடுதான். அவர் கற்ற இடமும் இந்த ஈரோடுதான். அவர் பயின்ற இடமும், அவர் தன்னை உருவாக்கிக் கொண்ட இடமும் இந்த ஈரோடுதான். காலையிலே நான் கலந்துகொண்ட மாநகராட்சி மன்ற துவக்க விழா, திருப்பூர். அன்று திருப்பூரிலேதான் பெரியாரை சந்திக்கின்றார் அண்ணா. பெரியாரை சந்தித்த ஊரில் ஒரு மாநகராட்சி, பெரியார் தலைவராக இருந்த ஊரில் ஒரு மாநகராட்சி. இந்த இரண்டு மாநகராட்சி மன்றங்கள் மாத்திரமல்ல, பெரியாருடைய மனதிலே தோன்றிய பகுத்தறிவு எண்ணங்களெல்லாம், அந்த பூஞ்சோலைகளெல்லாம் இன்றைக்கு மணம் வீசும் சோலையாக தமிழ் மாநிலத்திலே மிளிர்கிறது என்றால் பெரியார் உருவாக்கிய தொண்டர்கள், அவர் உருவாக்கிய நம்மைப் போன்ற மாணவர்கள், அதுதான் காரணம், அதைத்தான் நாம் உருவாக்குகின்றோம்.

இங்கே சுப்புலட்சுமி ஜெகதீசன் குறிப்பிட்டதைப்போல் பெண் இயக்கம் தமிழகத்திலே இந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்றால், பெண்களுடைய முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்றால், பெரியார் சொன்னதை இன்றைக்கு நாம் சட்ட ரீதியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

**சமத்துவபுரங்கள்**

தமிழகத்திலே 113 பெரியார் சமத்துவபுரங்கள் இருக்கின்றன. சமத்துவபுரம் என்றால் ஏதோ ஒரு அழகான பெயர் என்று யாரும் கருதக்கூடாது. ஐயர், அய்யங்கார், ஆதிதிராவிடர், பஞ்சமர் இன்னும் என்னென்ன வகுப்பினர் உண்டோ அத்தனை வகுப்பினரும் ஒரே இடத்தில் அமர்ந்து குடியிருந்து, வாழ்ந்து அந்த ஒரே இடம், எல்லோரும் வாழுகின்ற இடம், சமத்துவபுரமாக வாழுகின்ற இடமாக ஆக்கியிருக்கிறோமே யார் பெயரால் ஆக்கி இருக்கிறோம், யார் பெயரால் ஆக்க எண்ணினோம். பெரியார் பெயரால்தான். நூற்றுக்கும் மேற்பட்ட சமத்துவபுரங்கள் இருக்கின்றன. எதிர்காலத்திலே இன்னும் நூறு சமத்துவபுரங்களை பெரியாருடைய பெயரால் தமிழ்நாட்டில் உருவாக்க இருக்கிறோம் என்பதை இந்த மேடையிலே நான் அறிவிக்க விரும்புகிறேன். மேலும் நூறு சமத்துவபுரங்கள் வந்தால் போதாது, ஆயிரம் சமத்துவபுரங்கள் வரவேண்டும், ஆயிரம் சமத்துவபுரங்கள் வந்தால் மட்டும் போதாது, தமிழ்நாடே சமத்துவபுரமாக மாறவேண்டும். அதுதான் பெரியாருடைய கனவு. இந்தியாவே சமத்துவபுரமாக மாற வேண்டும். அதுதான் தந்தை பெரியார் கண்ட கனவு. அந்தக் கனவை நாம் நிறைவேற்றுவோம். நிறைவேற்றப் பாடுபடுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெரியாருடைய பூமியில் பல கோரிக்கைகளை இந்த மாநகராட்சி மன்றம் உருவாகின்ற நேரத்தில் நண்பர்களெல்லாம் எடுத்து வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளிலே மிக முக்கியமானது. மேட்டூர் தண்ணீர் எங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பது. மேட்டூர் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பது பிடிவாதமல்ல, கிடைக்கிற தண்ணீர் கலங்கம் உள்ள தண்ணீராக இருக்கிறது. அந்தக் கலங்கம் களையப்பட வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம், குறிக்கோள். அந்தக் குறிக்கோள்



நிறைவேற இந்த ஆட்சி தன்னால் இயன்றவரையில் பாடுபடும், பணியாற்றும் என்ற உறுதியை உங்களுடைய ஒத்துழைப்போடு இணைந்து செயல்படும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

**இலவச நிலம்**

இந்த விழாவில் ஒரு சில உறுதிமொழிகளை உங்களுக்குத் தர விரும்புகின்றேன் இந்த மேடையிலே. ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கப்பட இருக்கிறது. இன்றைக்கு வழங்கப்படுகிற நிலம் 26 ஆயிரத்து 982 ஏக்கர். 21 ஆயிரத்து 487 பேருக்கு வழங்கப்படுகிறது. இதை தேர்தல் பிரகடனத்திலே அறிவித்த பிறகு 17.9.2006 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழகம் முழுவதும் உள்ள ஏழை விவசாயிகள் 24 ஆயிரத்து 358 பேருக்கு, 25 ஆயிரத்து 282 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றது.

அடுத்து வந்தவாசியில் தமிழ்நாடு முழுவதுமுள்ள ஏழை விவசாயிகளுக்கு 20 ஆயிரத்து 648 பேருக்கு, 26 ஆயிரத்து 30 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது.

புதுக்கோட்டையில் 24 ஆயிரத்து 932 பேருக்கு, 32 ஆயிரத்து 65 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு ஈரோட்டில் 21 ஆயிரத்து 487 பேருக்கு, 26 ஆயிரத்து 982 ஏக்கர், மொத்தம் நாங்கள் ஆட்சிக்கு வந்த ஒன்னரை ஆண்டு காலத்தில் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல எங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற வகையில் ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 671 ஏக்கர் நிலம் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 995 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இன்னமும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எங்கே நிலம் என்றெல்லாம் ஆர்ப்பரித்து எங்களுடைய வேகத்தை தணிக்கின்ற நண்பர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சற்று நிதானமாக யோசித்துப் பார்க்கும்படி இந்தப் புள்ளி விவரத்தை நான் அவர்களுக்கு வழங்குகிறேன். இவர்களில் மொத்தம் 1,37,995 பேரில் தாழ்த்தப்பட்டோர் 34 ஆயிரத்து 128 பேர், பழங்குடியினர் 2,738 பேர், பிற்படுத்தப்பட்டோர் 49, 391 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 46,310 பேர், இதரப் பிரிவினர் 5,428 பேர். இப்படிப்பட்ட மக்களுக்காகத் தான் இந்த நிலங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன.

**இலவச வீட்டுமனைப் பட்டா**

இலவச வீட்டுமனைப் பட்டா 1967 லிருந்து 1975 வரை 5 இலட்சம் ஏழைகளுக்கு வழங்கப்பட்டது. 1989 லிருந்து 1990 வரையில் 4,78,000 பேருக்கு வழங்கப்பட்டது. 1996 லிருந்து 2001 வரையில் 9,50,449 பேருக்கு வழங்கப்பட்டது. இலவச வீட்டுமனைப் பட்டா கடந்த 2001 – 2006 ஆட்சியில் மொத்தமே 3,60,000 பேருக்குத்தான் வழங்கப்பட்டது. இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 2006–2007 இல் 76,622 ஏழைகளுக்கும், 2007–2008 இல் இதுவரையில் 2,50,000 ஏழைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. குறிக்கோள் மூன்று இலட்சம். இந்த மார்ச் ஏப்ரலுக்குள் 3 இலட்சம் பேருக்கு வழங்குவோம் என்று நடைபெறவிருந்த போராட்டங்களையெல்லாம் கூட தள்ளி வையுங்கள் என்று கேட்டுக்கொண்டு அவர்களும் தள்ளி வைத்து, நாமும் துள்ளி எழுந்து 2,50,000 ஏழைகளுக்கு இந்த ஓராண்டு காலத்திலே அவர்களுக்கு இந்த வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறோம். மேலும் மேலும் வழங்குவோம். இவைகளன்னியில் ஈரோடு மாநகராட்சி உதயமாகும் நேரத்தில் ஓரிரு அறிவிப்புகள்.

**ரூ.5 கோடி மானியம்**

ஈரோடு மாநகராட்சியில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும், மாநகராட்சிக்கு அனைத்து வசதிகளோடு கூடிய புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும், தேவையான இடங்களில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைப்பதற்கும் காந்தி சாலையில் உள்ள நகராட்சி மருத்துவமனையினை 24 மணி நேரம் செயல்படும் வண்ணம் மேம்படுத்தவும், பெரியார் நகர நூலகத்தை மேம்படுத்தவும், ஈரோடு மாநகராட்சிக்கு 5 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு நகரம் மற்றும் ஈரோடு மாநகராட்சியோடு இணைக்கப்பட உள்ள வீரப்பன் சத்திரம், பெரிய சேமூர், காசிப்பாளையம், சூரப்பட்டி ஆகிய பகுதிகள் பயன்பெறும் வகையில் 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான அரசின் ஆணை 28.12.2007 அன்று வெளியிடப்பட்டுவிட்டது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஈரோடு மாநகராட்சியின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் விதமாக காவிரி ஆற்றின் பேரேஜ் எண் 4 அணைக்கட்டில் இருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் ஒன்றும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அடுத்த நிதியாண்டில் பணிகள் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அறிவிப்பையும் இந்த மாநகராட்சி மன்ற விழாவிலே வெளியிட்டு இந்த அளவில் உங்களிடம் இருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

29.12.2007 அன்று, ஈரோட்டில் நடைபெற்ற ஈரோடு மாநகராட்சித் தொடக்க விழா மற்றும் 6ஆவது கட்ட இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.


**100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்**

TNSC BANK

**TNSC வங்கி**

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண்.1664/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007

இணையதளம் : www.tnscbank.com







## 112 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சத்து 22 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள், 2 கோடியே 22 இலட்ச ரூபாய் கடனுதவியில் 209 சிறுபான்மைச் சமுதாய இளைஞர்களுக்கு ஆட்டோக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்

தமிழகத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் 11 ஆம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர், சிறுபாமையினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு நடப்பாண்டில் (2007–2008) இலவச மிதிவண்டிகள் வழங்குதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பள்ளிக் கல்வித் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மிதிவண்டிகள் அனைத்தும் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகளைப் பின்பற்றிக் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் 112 கோடி ரூபாய் செலவில் 2 இலட்சத்து 38 ஆயிரத்து 502 மாணவியரும், 2 இலட்சத்து 84 ஆயிரத்து 297 மாணவர்களும் ஆக மொத்தம் 5 இலட்சத்து 22 ஆயிரத்து 799 மாணவ, மாணவியர் இத்திட்டத்தில் பயனடைவர். இவர்களில் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 562 பேர் பிற்படுத்தப்பட்டோர்; ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 924 பேர் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/மற்றும் சீர்மரபினர்; ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 174 பேர் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்; 12 ஆயிரத்து 139 பேர் இதர வகுப்பினர் ஆவர்;

தமிழகம் முழுவதிலுமுள்ள 2,851 பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் பயிலும் இம்மாணவ, மாணவியர் அனைவருக்கும் வரும் பிப்ரவரி இறுதிக்குள் மிதிவண்டிகள் அனைத்தும் வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை 14.1.2008 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

மேலும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மதுரை, சிவகங்கை, கோவை ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறுபான்மைச் சமுதாயங்களைச் சேர்ந்த 209 இளைஞர்களுக்குக் குறைந்த வட்டியுடன்கூடிய 2 கோடியே 21 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் கடனுதவியில் ஆட்டோக்கள் வழங்கும் பணிகளையும் 14.1.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ. தமிழரசி, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் அருட்தந்தை சேவியர் அருள்ராஜ், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் செயலாளர் திரு.ந.வாசுதேவன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறைச் செயலாளர் திரு.வி.கனகராஜ், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு.ஆர்.எஸ். கண்ணா, இ.ஆ.ப., மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு.பா.அண்ணாமலை, இ.ஆ.ப.,ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் தங்க கலியபெருமாள் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ✶

---

## சென்னை மாநகர பேருந்துகளில் கூடுதல் பெண் நடத்துனர்கள் விரைவில் நியமனம்

மாநகரப் போக்குவரத்துக் கழகம் சார்பில், சென்னையில் தினசரி 3,080 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. புதிய பேருந்துகள் அதிகம் இயக்கப்படுவதால், 10 ஆண்டுகளுக்கு மேல் இயக்கப் பட்டு வந்த 500 பேருந்துகளை நிறுத்திவிட்டோம். மாசு குறைந்த மேம்படுத்தப்பட்ட பி.எஸ்.3 என்ற அதி நவீன ரக பேருந்து புதிதாக இயக்கப்பட்டு வருகிறது. இந்த வாகனங்களைப் பராமரிக்க கடைநிலை ஊழியர்கள் முதல் நிருவாக இயக்குனர் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இனி வருங்காலங்களில் மாநகரப்பேருந்து, இடையில் பிரேக்டவுன் ஆகாது.

கடந்த மாதங்களில் மாநகரப் பேருந்தில் ஒருநாள் வசூல் சராசரியாக ரூ.90 இலட்சத்தில் இருந்து ரூ.95 இலட்சமாக இருந்தது. இப்போது தினசரி ரூ.1 கோடியே 35 இலட்சம் வசூலாகிறது. 2008–2009ஆம் ஆண்டுக்குள் பேருந்தின் எண்ணிக்கை 4,000 ஆக உயர்த்தப்படும். 1,200 மின்னணுப் பயணச்சீட்டு வாங்கப்பட்டு, அடையாறு, திருவான்மியூர், மந்தைவெளி, தியாகராயர்நகர் டெப்போக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏ.சி.மற்றும் டீலக்ஸ் பேருந்துகளில் மின்னணுப் பயணச்சீட்டுக் கருவி மூலம் பயணிகளுக்குப் பயணச்சீட்டு வழங்கப்படும்.

அலுவலகம், பள்ளி நேரங்களில் நெரிசலைக் குறைக்க அதிக தொடர் பேருந்துகள் இயக்கப்படும். நடத்துனர் பற்றாக்குறை காரணமாக பேருந்து நிறுத்தம் மற்றும் பூத்களில் பயணச்சீட்டு வழங்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. விரைவில் புதிய ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். அதன்பிறகு பேருந்து நிறுத்தங்களிலேயே பயணிகள் பயணச்சீட்டு எடுத்துப் பயணம் செய்ய முடியும். ரூ.600 செலுத்தி பேருந்து பாஸ் எடுத்தவர்கள் ஏ.சி. பேருந்துகளிலும் பயணம் செய்யலாம்.

மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு சில பெண் நடத்துனர்கள் மட்டுமே உள்ளனர். விரைவில் கூடுதல் பெண் நடத்துனர்கள் நியமிக்கப்பட உள்ளனர். பேருந்து நிலையத்தில் எந்தப் பேருந்து முதலில் செல்லும் என்ற அறிவிப்பை ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. கூட்ட நெரிசல் நேரத்திலும் நடத்துனர்கள் எழுந்து சென்று பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்கவேண்டும். பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள், பயணிகளுடன் அன்பாகப் பழக பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு நிருவாக இயக்குநர் எம்.ராமசுப்பிரமணியன் கூறியுள்ளார்.





# தாய்த் தமிழும், தமிழகமும் இந்தியத் திருநாடும் உங்களால் புகழ் பெற வேண்டும்

**24.12.2007 அன்று**
**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழா உரை.**

மேதகு தமிழக ஆளுநரும்
டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின்
வேந்தருமான திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே!

பல்கலைக் கழகத்தின் இணை வேந்தரும், தமிழகப் பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சருமான தம்பி திரு. துரைமுருகன் அவர்களே!

ஆட்சி மன்ற உறுப்பினர்களே!

பேராசிரியப் பெருமக்களே!

பட்டம் பெறும் மாணவ நண்பர்களே!

என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே !

வணக்கம்.

1997ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 6 ஆம் நாளன்று, தமிழகச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் பயனாக, 20.9.1997 அன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அந்நாளைய குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர்.நாராயணன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழகத்தில் செயல்பட்டு வந்த அனைத்துச் சட்டக் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து சட்ட அறிவியல் கல்வியை விரிவுப்படுத்திடவும், மேம்படுத்திடவும் அன்று எங்களால் தொடங்கப்பட்ட இந்தியாவின் முதல் சட்டப் பல்கலைக் கழகம், தமிழகத்தின் "டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்" என்பது இப்பல்கலைக்கழகத்தின் தனிச் சிறப்பாகும்.

இத்தகைய பெருமைக்குரிய சட்டப் பல்கலைக் கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் அருமையான



வாய்ப்பினைப் பெற்று, உங்களையெல்லாம் சந்திக்கின்ற இன்பகரமான இந்த வேளையில், உங்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

சட்டக் கல்வி பயின்று – பட்டம் பெற்றுச் சிந்தனைச் சிறகுகள் விரித்து, சிட்டுகளாகப் பறந்திட முனையும் செந்தமிழ் நாட்டுச் செல்வங்களே! உங்கள் சிந்தையில் சில செய்திகள் நின்றிட வேண்டும்; நீங்கள் செயல்படும் வேளையில், அவை உங்களை வழிநடத்திட வேண்டும் என விழைகிறேன்.

எந்த நாட்டிற்கும், மாநிலத்திற்கும் இல்லாத சிறப்புகளையும், பெருமைகளையும் கொண்டுள்ளது நமது தமிழ்நாடு என்பதை நீங்கள் நெஞ்சில் நிறுத்திடல் வேண்டும்!

பழந்தமிழ்நாடு, பாருக்கு அறம் உரைத்த நாடு!
கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்து வீசி
வாணிகக் கலையிலும் வையகம் வியந்திட
அறம் வளர்த்த நாடு
நமது அருந்தமிழ்நாடு!
"ஈ" என இரத்தல் இழிந்தது;
அப்படி இரந்த பின்னும், அவனுக்கு
"ஈயேன்" என்றல் அதனினும் இழிந்தது!
இல்லாதவனிடம்,
"கொள்" எனக்கொடுத்தல் உயர்ந்தது;
அப்படிக்கொடுத்தாலும், அதைக்
"கொள்ளேன்" என மறுத்தல்
அதனினும் உயர்ந்தது என
இழிந்தது எது ? உயர்ந்தது எது ?
என்பதற்கு அரிய விளக்கம்
அளித்துள்ளது போல,
அனைத்துப் பொருள்களுக்கும்
இலக்கணம் கூறி
இணையிலாப் புகழை – உலகில்
ஈட்டியுள்ளது இன்பத் தமிழ்நாடு!
ஆராயாமல்,
கள்வன் எனக்கூறி கோவலனைக் கொன்று,
பேதை கண்ணகிக்குப் பெருந்தீங்கு புரிந்த
"யானோ அரசன்?
யானே கள்வன்" என நடுங்கி
அரசவை அதிர
அங்கேயே உயிர் தந்தானே
நெடுஞ்செழியப் பாண்டியன்
அவனைப் போல்,
நீதி காத்த அரச பரம்பரை
ஆண்ட திருநாடு – நம்
அன்னைத் தமிழ்நாடு!
"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி"
– என்றுரைத்த அய்யன் திருவள்ளுவர்
வழியில் நடுவுநிலை தவறால்
சமநீதி காத்த சான்றோர்கள்
வாழ்ந்த திருநாடு—இந்த வண்டமிழ்நாடு!

பெருமைகளும், அருமைகளும் உங்களின் வழிவழி மரபாக அமைந்து வழித்துணையாக வர, நீங்கள் நீதித் துறையில் கடமையாற்றிட அணிவகுத்திடும் இவ்வேளையில், நிறைய எதிர்பார்க்கிறது நாடு உங்களிடம்!

**கவனமும் விழிப்பும் கைவிளக்கு**

பொன்னையும் பொருளையும் ஈட்டிட வேண்டும் என்பதற்காகப் பொய்யையும் புனைசுருட்டையும் மெய்யெனக் கருதிடல் கூடாது;பொய்யை மெய்யாக்கும் புல்லர்க்குத் துணையாகித் தவறியும் தவறிழைத்திடக்கூடாது. கவனமும், விழிப்பும் உங்கள் கைவிளக்காகிட வேண்டும்!

இதைக் கூறும்போதில், இளமையில் சேலத்தில், சிறந்த கிரிமினல் வழக்கறிஞராகத் திகழ்ந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது.

இராஜாஜி அவர்கள் கொலை வழக்கு ஒன்றில், தாம் நிரபராதி எனக்கருதிய தமது கட்சிக் காரருக்காக வாதாடி, அவனுக்கு விடுதலையும் பெற்றுத் தந்தார்.

அப்படி வழக்கில் விடுதலை பெற்றவன், ஒரு நாள் இராஜாஜி அவர்களைக் கண்டு, கொலை செய்வதற்குத் தான் பயன்படுத்திய கத்தி, பரம்பரை பரம்பரையாகத் தன் குடும்பத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் பூர்வீகச் சொத்து என்று கூறி, நீதிமன்றத்தில் இருக்கும் அக்கத்தியைத் திரும்பப் பெற்றுத் தருமாறு அவரிடம் கோரினான்.

அது கேட்டு அதிர்ச்சி அடைந்த நிலையில் அவனை விரட்டிய மூதறிஞர் இராஜாஜி கொலைக் குற்றவாளிக்காகத் தாம் வாதாடி, அவனைத் தப்பிக்க வைத்த தவறுக்காகக் குற்ற உணர்வுக்கு ஆட்பட்டுப் பெரிதும் வருந்தினார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட அந்த சம்பவம் ஒரு படிப்பிணையாக உங்களுக்கு வழிகாட்டட்டும்.

**ஆப்ரகாம் லிங்கனின் பரிவு**

அமெரிக்க அதிபராகத் திகழ்ந்து, அடிமை விலங்கொடித்த அண்ணல் ஆப்ரகாம் லிங்கன், ஒரு சிறந்த வழக்கறிஞர். நீதிமன்றத்தை நாடும் தன் கட்சிக்காரர்களிடம் இரக்கம் கொண்டு, அவர்களிடம் குறைந்த கட்டணத்தையே வாங்குவார். இதற்காக அவரை அவரது மனைவி அடிக்கடி கடிந்து கொள்வார்; அவரது நண்பர்களும் குறை கூறுவார்கள். அவ்வேளைகளில்,

"பெரும்பாலான எனது கட்சிக்காரர்கள் என்னைப் போலவே ஏழைகள்; எனவே, அவர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்க என் மனம் இடம் தரவில்லை" - என்று லிங்கன் பதில் கூறுவார்.

இருபத்தைந்து டாலர்களைக் கட்டணமாகக் கொடுத்த ஒரு கட்சிக்காரருக்கு 10 டாலர்களை திருப்பிக் கொடுத்தார்; மனநோயாளிப் பெண் ஒருவரை ஏமாற்றி, அவரது 10 ஆயிரம் டாலர் மதிப்புள்ள ஒரு சொத்தைப் பறிக்க நினைத்த ஒரு ஏமாற்றுக்காரனிடமிருந்து அப்பெண்ணுக்கு





மீட்டுக்கொடுத்த லிங்கன், அதற்குரிய கட்டணமாக அவரிடமிருந்து 250 டாலர் பெற்றுவந்த தனது தோழர் லேமனைக் கடிந்துகொண்டு, அதில் பாதித் தொகையை அப்பெண்ணிடமே சேர்த்தார் ஆப்ரகாம் லிங்கன்.

மறைந்த ஒரு இராணுவ வீரரின் மனைவியான ஏழை விதவைக்கு ஓய்வூதியம் கிடைக்கச் செய்ததில் அவரை ஏமாற்றிய முகவரை எதிர்த்து வழக்காடி வெற்றி கண்ட லிங்கன், அந்த மூதாட்டியிடம் கட்டணம் வாங்காமல் அவரது செலவுக்கும் பணம் தந்து அனுப்பினார்.

ஏழைகளிடம் லிங்கன் காட்டிய பரிவு உங்களிடம் அடைக்கலம் புகுந்திடட்டும்.

**1750**–க்குப்பின் இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி காரணமாக, அங்கும், பிற ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் விவசாயம், உற்பத்தித் தொழில்கள், போக்குவரத்து வசதிகள் முதலியவற்றில் மனித சமுதாய வரலாறு அதுவரை காணாத மகத்தான மாற்றங்களைக் கண்டது.

**1789**–ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து, அங்குப் பிரபுக்கள், மதகுருமார்களின் ஆதிக்கம் தகர்க்கப்பட்டு, குடியாட்சித் தத்துவம் மலர்ச்சி பெறத் தொடங்கியது. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்னும் சிந்தனைகள் கோலோச்சத் தொடங்கின.

**1917**–ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சி, பிரபுக்களின் சுரண்டல் ஆட்சிமுறையைத் தகர்த்து, உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உன்னதத்தை உலகம் உணரச் செய்தது.

**வரலாறு படைத்துவரும் திராவிட இயக்கம்**

ஆண்டான் அடிமையெனும் கொடுமைகளை எதிர்த்து, சுதந்திரப் போராட்ட உணர்வுகளும் உலகெங்கும் உயிர் பெறத் தொடங்கின. இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியதும், இக்கால கட்டத்தில்தான்!

மற்ற நாடுகளில் இல்லாத ஒரு வித்தியாசமான சமுதாய அமைப்பு நமது நாட்டில் சாதிகளின் பெயரால், மதங்களின் பெயரால் வேரூன்றிவிட்டது. எனவே, நாட்டு விடுதலைக்கு ஒருபுறமும், சமுதாய விடுதலைக்கு மறுபுறமும் நமது நாட்டில் இயக்கங்கள் எழுந்தன.

அத்தகைய இயக்கங்களில் சமுதாய விடுதலையை மையமாகக் கொண்டு, தொடங்கப்பட்டு இன்றளவும் வரலாறு படைத்து வருவதுதான் திராவிட இயக்கம்.

டாக்டர் நடேசனார், பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் ஆகியோரால் தொடங்கப்பட்ட நீதிக்கட்சி தனது அரசு மூலம் இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் வழி வகுக்கும் இடஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்தியது.

நாடு சுதந்திரம் அடைந்தபின், இந்த இடஒதுக்கீட்டு முறைக்குப் பிரச்சினை ஏற்பட்ட பொழுது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் இரட்டைக் குழல் துப்பாக்கியாய் இணைந்து நின்று போராடியதால், பெருந்தலைவர் காமராசர், பிரதமர் பண்டிதர் நேரு ஆகியோர் தலையிட இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் செய்யப்பட்டு, இடஒதுக்கீட்டு முறை தமிழகத்தில் மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

**மனித நேய உணர்வு**

திராவிட இயக்கத்தின் இடைவிடாத முயற்சிகளால் தமிழகத்தில் இடஒதுக்கீடு 69 விழுக்காடு என உயர்ந்து, இன்றுமத்திய அரசு மூலம் இடஒதுக்கீடு குறித்த கோட்பாடு நாடு முழுவதும் பரவி, வலிமை பெற்று வருகிறது. அதுமட்டுமல்ல; மகளிர் மேம்பாட்டிற்காக அரசு வேலைவாய்ப்புகளில் 30 விழுக்காடு; தமிழக உள்ளாட்சி

அமைப்புகளில் 33 விழுக்காடு எனப் பெண்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு வழங்கிய இட ஒதுக்கீடுகள் அடிப்படையில் மத்திய அரசின் வேலைவாய்ப்புகளிலும், நாடாளுமன்ற, சட்டமன்றங் களிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டுமெனும் கோரிக்கைகள் நிறைவேறும் நிலையை எட்டியுள்ளன.

இந்நிலையில் "கிரீமிலேயர்" சொல்கொண்டு இடஒதுக்கீட்டுத் தத்துவத்திற்குச் சிலர் இடையூறு விளைவிப்பதால் அதை எதிர்கொண்டு வாதப் போர் புரிந்து வாகை சூடிட நீங்கள் இன்று பெற்றுள்ள பட்டம் உங்களுக்குத் துணைபுரிந்திட வேண்டும்!

எந்தத் தொழிலையும் செய்வதற்கும், நடத்துவதற்கும், எந்தப் பணியிலும் ஈடுபடுவதற்கும், எத்தகைய வாணிகத்தையும் செய்வதற்கும் உரிமையிருக்கிறது." என்று கூறுகிறது.

இதுபோல அரசியலமைப்புச் சட்டம் நமது நாட்டுக் குடிமக்களுக்கு வழங்கும் உரிமைகள் அனைத்தையும் அவர்கள் அனுபவிப்பதற்கு,

"சமயம், சாதி, இனம், பால், பிறப்பிடம் அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவும், எந்தக் குடிமகனிடத்திலும் அரசு பாகுபாடு செய்யக் கூடாது"

– எனவும் தெளிவாகக் கூறுகிறது.



ஐ.நா.நிறுவனத்தின் ஆய்வுகளின்படி, இன்று உலகின் பல பகுதிகளிலும் மனித உரிமை மீறல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகிறது.

சாதி, மத, இன, மொழி அடிப்படையில் ஒருவருக்கோ, ஒரு சமுதாயத்திற்கோ இழைக்கப்படும் அநீதிகளும் மனித உரிமை மீறலின் அடையாளங்கள்தான்!

எனவே, மகளிர் நலம், தொழிலாளர் நலம், குழந்தைகள் நலம் முதலியவற்றுக்கு எதிரான செயல்கள் எங்கு நிகழினும், மனிதநேய உணர்வுடன் அவற்றை எதிர்த்துப் போரிட வேண்டிய வலிமையும், வளமையும் உங்களுக்குத் தேவை என்பதை எடுத்துரைத்திட விரும்புகிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம்,

"இந்திய குடிமக்கள் யாவர்க்கும் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும், எடுத்துச் சொல்வதற்கும்;

ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுவதற்கும்;

சங்கங்களையும் அமைப்புகளையும் ஏற்படுத்துவதற்கும்;

இந்திய எல்லைக்குள் எத்தகைய தடையுமின்றி நடமாடுவதற்கும்;

சொத்துகளை வாங்கவும், விற்பனை செய்யவும், வைத்திருக்கவும்;

எனினும், அறியாமை, அச்சம், இயலாமை, ஏமாளித்தன்மை, இன்னபிற காரணங்களால் நமது அரசியலமைப்புச் சட்டம் ஏழை எளியவர்களுக்கு வழங்கும் அடிப்படை உரிமைகளைச் சமுதாயத்தில் சில சக்திகள் அவர்களுக்குக் கிடைக்கவிடாமல் தடுத்து விடுகின்றன.

**அண்ணா அவர்களின் கருத்து**

இத்தகைய தடைகளைத் தகர்த்திட வேண்டிய பொறுப்பும், கடமையும் சட்டம் படித்துப் பட்டம் பெற்றுச் செல்கின்ற இளைஞர்களாகிய உங்களுக்கு இருக்கிறது என்பதனைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்,


"சட்டம் ஓர் இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெறமுடியாது"

–என்று எழுதி, ஏழையெளியவர்களுக்கு நீதியின் ஒளி கிடைப்பதற்குச் சமுதாயத்தில் நிலவிய தடைகளைச் சுட்டிக்காட்டினார்.

அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் ஏற்றம் பெற்ற வஞ்சக நெஞ்சத்தார் சிலரால் இன்றளவும் ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு, நீதி எட்டாக் கனியாய்த் திகழ்வதையே அண்ணா அவர்களின் அந்தக் கருத்து சுட்டிக்காட்டுகிறது நமக்கு!

தொடர்ச்சி 45 ஆம் பக்கம்





# தமிழகம் அமைதியின் இருப்பிடமாகத் திகழ்கிறது

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் புதுடெல்லியில் 19.12.2007 அன்று நடைபெற்ற 54ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் வடிவம்**

மாண்புமிகு பிரதமர் அவர்களே !


தேசிய வளர்ச்சிக் குழுவின்
மாண்புமிகு உறுப்பினர்களே !

உங்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து விவாதித்து, அதனை இறுதி செய்வதற்காக நடைபெறும் இந்தத் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

எனது உரையின் பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. காலத்தின் அருமை கருதி அதில் இடம் பெற்றுள்ள சில முக்கிய பிரச்சினைகளை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

10ஆவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் வேளாண்மைத் துறையில் தமிழகம் தேக்க நிலையை அடைந்தது. ஆனால், அதனை இந்தத் திட்ட காலத்தில் சரி செய்திட உறுதி கொண்டுள்ளோம். உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடவும், வேளாண் தொழில் வருவாயைப் பெருக்கிடவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். விவசாயப் பணிகளைச் செம்மையாக மேற்கொள்ளல், அறுவடைக்குப் பிந்தைய சிறப்பான நிருவாகத்திற்குத் துணை புரிதல், சந்தைகளோடு இணைப்புகளை ஏற்படுத்தித் தருதல் போன்றவை அத்தகைய நடவடிக்கைகளில் சிலவாகும்.



புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் **டாக்டர் மன்மோகன் சிங்** அவர்களை அவரது இல்லத்தில். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் சந்தித்து, தமிழக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி பேசினார்கள். (18.12.2007)

தமிழகத்தில் விவசாயக் கூட்டுறவுக் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்துள்ளதையும், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதையும் நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நாங்கள் இதுவரை 1 இலட்சத்து 34 ஆயிரம் ஏக்கர் நிலங்களை 1 இலட்சத்து 16 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளோம். இந்த நடவடிக்கைகள் தேசியத் திட்டங்களோடு இணைந்து, குறிப்பாக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்துடனும் (National Agriculture Development Programme - NADP), உணவுப் பாதுகாப்பு இயக்கத்துடனும் (Food Security Mission) இணைந்து செயல்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில், பாசன வசதியற்ற பகுதி மற்றும் பிற வரையறைகள் அடிப்படையில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான தற்போதைய வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தேசிய வளர்ச்சிக் குழுவின் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். நிதி ஒதுக்கீட்டிற்கு ஆலோசனை கூறப்பட்டுள்ள முறை மிகவும் சிக்கலாயுள்ளது. மேலும் இதன்படி, திட்டப் பணிகளுக்குப் பொருத்தமான வகையில் நிதி ஒதுக்கீட்டினை (Probable Assistance) மாநில அரசுகள் நிர்ணயம் செய்வதிலும் சிரமம் உள்ளது. வரையறுக்கப்பட்ட செலவினத்திற்கு (baseline expenditure) கூடுதலாக மாநில அரசினால் மேற்கொள்ளப்படும் செலவினம் மானியமாக அளிக்கப்பட வேண்டும். எனவே, **மாநில வாரியான நிதி ஒதுக்கீட்டிற்குரிய நடைமுறைகளை எளிமைப்படுத்திட வேண்டுமென மைய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.** இல்லையேல், தகுந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முயற்சியின் நோக்கம் தோல்வியுற்றுவிடும்.

கடந்த முறை நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆறுகள் இணைக்கப்பட வேண்டியதன் தேவை குறித்து நான் கூறிய கருத்துகளை நினைவூட்டிட விரும்புகிறேன். ஆறுகளின் இணைப்பை ஒரு 'தேசியத் திட்டம்' என அறிவிக்க வேண்டுமென்றும், அதற்குக் காலவரையறையுடனான ஒரு செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்க மத்திய அரசு நிதி வழங்கிட வேண்டும்

ஆற்றுநீரைப் பகிர்ந்து கொள்வதில் மாநிலங்களுக்கு இடையில் உறவுகள் பாதிக்கப்



பட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். மாநிலங்களுக்கிடையில் நல்லிணக்கம் நிலவிட வேண்டுமெனும் அக்கறையுடன், இத்தகைய கருத்து வேறுபாடுகள் நாட்டிலுள்ள சட்டங்களின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பதும்; அதிகார அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் முடிவுகளுக்கு மாநில அரசுகள் மதிப்பளித்து அவைகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதும் இன்றியமையாதவையாகும்.

மாநிலத்திற்குள் பாயும் ஆறுகள் இணைக்கப் படுவதைப் பொறுத்தவரை தேசிய வளர்ச்சிக் குழுவின் 53ஆவது கூட்டத்தில் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டபடி இத்தகைய திட்டங்களுக்கு மத்தியஅரசு நிதி வழங்கிட வேண்டுமென வற்புறுத்துகிறேன்.

கூட்டுறவுக் கடன்கள் ரத்து : தொகுப்பு சலுகைகளாக கருதி மத்திய அரசு ஏற்கவேண்டும்

அடுத்தடுத்து ஏற்பட்ட வெள்ளச் சேதங்களாலும், வறட்சிகளாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளைக் காப்பதற்காக அவர்களின் விவசாயக் கூட்டுறவுக் கடன்களைத் தமிழகஅரசு ரத்து செய்தது. ரத்து செய்யப்பட்ட இந்தக் கூட்டுறவுக் கடனில் ஒரு பகுதியை, நாட்டில் குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு வழங்கப் பட்டுள்ள தொகுப்புச் சலுகைகள் (Package concessions) போல கருதி, மத்திய அரசு ஏற்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்துகிறேன்.

ஏழைகளுக்கு எரிவாயு இணைப்பு : பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கிடுவீர்

எங்கள் மாநில அரசு தன் சொந்த நிதியைக் கொண்டு ஏற்கெனவே நல்ல ஊரகக் கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ளதால், பாரத நிர்மாண் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மத்திய நிதி உதவிகளை நாங்கள் பெறமுடியவில்லை. சமையலுக்கு விறகுகளை எரிபொருளாகப் பயன்படுத்தித் துன்பங்களுக்கு ஆளாகும் ஏழைப் பெண்களின் சிரமங்களைக் குறைப்பதற்காகத் தமிழக அரசு எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகளை அவர்களுக்கு இலவசமாக வழங்குகிறது. தமிழக கிராமங்கள் அனைத்திற்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், பாரத நிர்மாண் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதியுதவியை ஏழைக் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் எரிவாயு அடுப்புகள் வழங்கும் தமிழக அரசின் இந்தத் திட்டத்திற்கு வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பெண்களின் நலமே குடும்பத்தின் நலமாகக் கருதப்படுகிறது. ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பல பெண்கள், அவர்கள் கருவுற்ற நிலையிலும் கடுமையான வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இது தாய் மற்றும் குழந்தை ஆகிய இருவர் நலன்களையும் பாதிக்கிறது. இதனைச் சீர்படுத்திட, நாங்கள் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவிடும் ஒரு முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். இத்திட்டத்தின்கீழ் ஏழை கர்ப்பிணித் தாய்மார்கள் கருவுற்ற காலத்தில் இழக்கும் வருமானத்தை ஈடுகட்டும் வகையிலும், நல்ல சத்துள்ள உணவை அவர்கள் உட்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவர்களுக்கு கர்ப்ப காலத்தில் ஆறாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது. வளரும் குழந்தைகளுக்கும் போதுமான அளவு சத்துணவு தேவை. இதன்பொருட்டு, இரண்டு முதல் 14 வயது வரையுள்ள ஏறத்தாழ 70 இலட்சம் குழந்தைகளுக்கு வாரத்திற்கு மூன்று முறை முட்டை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம். இந்த இரண்டு திட்டங்கள் குறித்தும் விவாதித்து, தேசிய அளவில் இத்திட்டங்களை மத்திய அரசு நடைமுறைப்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திரா வீட்டுவசதித் திட்டம் : பரப்பளவையும் நிதி ஒதுக்கீட்டையும் உயர்த்தி வழங்கிடுவீர்

அடுத்து, இந்திராகாந்தி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு ஆகும் செலவு தொடர்பாகக் கூற விரும்புகிறேன். 2004ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 210 சதுர அடி கொண்ட ஒரு வீடு கட்ட அனுமதிக்கப்பட்ட செலவு 25 ஆயிரம் ரூபாய்; இன்றைய விலை நிலவரங்களின்படி 60 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக அந்த வீட்டைக் கட்டுவது என்பது இயலாது. எனவே, இந்திராகாந்தி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 325 சதுர அடி கொண்ட கூடுதல் பரப்பளவுடன் ஒரு குடியிருப்பைக் கட்டுவதற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்குமாறு மத்திய அரசை நான் வலியுறுத்துகிறேன்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப் படுவதை நான் வரவேற்கிறேன். தமிழகத்தில் இந்த முத்திரைத் திட்டம் பெற்ற வெற்றிக்கு உரிய முக்கிய காரணங்களில் ஒன்று; கிராமங்களின் தன்மைகள் அடிப்படையில் தனியே நிதி ஒதுக்கீடு வழங்கிட வகை செய்ததாகும். இந்த முறையை மாநில அரசுகள்




[illegible] சந்தித்தார்கள்.[19.12.2007]

தொடர்ந்து பின்பற்றிட அனுமதிக்குமாறு மத்திய அரசை நான் வற்புறுத்துகிறேன்.

அடுத்து, மற்றொரு முக்கிய பிரச்சினையின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். விமான நிலையங்கள் மற்றும் பெரிய ரயில்வே திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் போன்ற மத்திய அரசுத் திட்டங்களின் செலவினங்களில் மாநில அரசுகள் பங்கேற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் படுகின்றன. இது, மாநில அரசுகளிடமிருந்து மத்திய அரசுக்கு நிதி மாற்றம் செய்திடும் தலைகீழான நடைமுறையாகும். **ஆகையால், மத்தியத் திட்டங்களுக்காக மாநில அரசுகள் நிதி செலுத்த வேண்டுமென வலியுறுத்தக்கூடாது என மத்திய அரசினைக் கேட்டுக் கொள்கிறேன்.**

மாநில அரசுகளின் சுகாதாரத் திட்டங்களுக்கு பெரிய அளவில் உதவிட புதிய திட்டம் தேவை !

நகர மற்றும் கிராமப்புறங்களில் வாழும் ஏழை மக்களின் சுகாதார மேம்பாட்டிற்குத் தமிழக அரசு தலையாய முன்னுரிமை அளிக்கிறது. இதற்கு அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் மிக இன்றியமையாதவையாகும். இந்த அடிப்படையில், 11ஆவது திட்டத்தில் மாநில அரசுகள் நடைமுறைப் படுத்தும் முக்கிய சுகாதாரத் திட்டங்களுக்குப் பெரிய அளவில் உதவிடும் ஒரு புதிய திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, தற்போது துண்டுதுண்டாக நிதி வழங்குவது போலல்லாமல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் பொருந்தக்கூடிய பொருத்தமான முறையில் ஒட்டு மொத்தமாக மத்திய அரசு நிதி உதவி அளித்திட வேண்டுமென்றும், இந்த 11ஆவது திட்டத்தில் இருந்து இத்தகைய மாற்றத்தை அறிமுகப்படுத்திட வேண்டுமென்றும் திட்டக் குழுவைக் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி சோனியா காந்தியின் வழிகாட்டுதல், முன்னேற்றத் திசைநோக்கி இந்தியாவை வழி நடத்துகிறது.

திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன், அது அமைதி வழியில், முன்னேற்றத் திசைநோக்கி, வளங்களைப் பெருக்கியவண்ணமாய் இந்தியாவை வழிநடத்திச் செல்கிறது.

திருமதி சோனியா காந்தி அவர்கள் நாட்டை வளப்படுத்துவதிலும், அதை நிருவகிப்பதிலும் இந்திய மகளிர் தங்கள் நியாயமான பங்கினைப் பெறுவதில் தொடர்ந்து முயற்சி மேற்கொள்வார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

மாண்புமிகு பிரதமர், திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும், சமூகநீதியுடன் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் இந்த 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கியுள்ளமைக்காக என் பாராட்டுகளைத் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!.

★



**மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில்.**
**புதுடெல்லியில் 20.12.2007 அன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்.**
**உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

# கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சார்பில்

**மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்**
**திரு.துரைமுருகன் அவர்களால் படிக்கப்பெற்ற**
**ஆங்கில உரையின் தமிழ் வடிவம்**

மாண்புமிகு பிரதமர் அவர்களே!

மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களே !

மாண்புமிகு அமைச்சர்களே !

மத்திய, மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகளே !

நமது நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிப் பதற்காக இக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் மாநில எல்லைகளுக்கு உட்பட்டவை அல்ல என்பதைக் கூற வேண்டிய அவசியமில்லை; ஆகையால், தேச விரோத சக்திகளால் நமக்கு ஏற்பட்டுள்ள சவால்களைச் சந்திப்பதற்கு மத்திய அரசுடன் ஒத்துழைத்தும், ஒருங்கிணைந்தும் பணியாற்ற வேண்டியது நம் அனைவருக்கும் அவசியமாகும்.

காவல்துறையின் அயர்வில்லா முயற்சியால் அமைதிப் பூங்காவாக திகழ்கிறது தமிழகம்

மாநில காவல்துறையின் அயர்வில்லாத முயற்சி களாலும், மத்திய புலனாய்வு முகமைகளுடனான ஒருங்கிணைந்த செயல்பாடுகளாலும் பொது ஒழுங்கு மற்றும் அமைதிக்குக் குந்தகம் இன்றிப் பாதுகாக்கப் பட்டுவரும் தமிழகம் தொடர்ந்து அமைதியின் இருப்பிடமாகத் திகழ்ந்து வருவது நீங்கள் அனைவரும் அறிந்ததாகும். கடலோரப் பாதுகாப்புப் படை மற்றும் கப்பற்படையின் ஒத்துழைப்புடன் மாவோயிசத் தீவிரவாதிகள் சிலரைக் கைது செய்ததிலும், தமிழகக் கடலோரப் பகுதிகளை விழிப்புடன் பாதுகாப்பதிலும் அண்மையில் அடைந்துள்ள வெற்றிகள் தமிழகத்தின் காவல்துறை மேலும் திறமையுடன் செயல்படுவதற்கு ஊக்கமளித்துள்ளன.

2006 மே திங்களில் எங்கள் அரசு பொறுப்பேற்றவுடன் காலியாக இருந்த 5,000 காவலர் பணியிடங்களையும், 755 உதவி ஆய்வாளர் பணியிடங்களையும் நிரப்புவதற்கு 2006–2007 இல் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர நடப்பு ஆண்டில் 5,000 காலிப் பணியிடங்களையும், அடுத்த ஆண்டில் மேலும் 4,000 காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்குத் தமிழக அரசு அனுமதித்துள்ளது. மாநில காவல்படையில் அனுமதிக்கப்பட்ட தற்போதைய பணியிடங்கள் 1 இலட்சத்திற்கும் அதிகமாகும்; மாநிலத்தில் மக்கள் தொகை மற்றும் காவலர்கள் இடையிலான விகிதம், 1 இலட்சம் மக்கள்தொகைக்கு 650 காவலர்கள் என்று உள்ளது. மேலும் மாநிலம் முழுவதிலும் காவல் நிலைய அளவில் கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலும் நாங்கள் தனிகவனம் செலுத்தி வருகிறோம்.

மக்களின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும், மேலும் திறமையுடன் செயல்படும்வகையிலும் காவல்துறை நிருவாகத்தில் தமிழக அரசு தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழக அரசு 1969, 1989, 2006 ஆகிய ஆண்டுகளில், மூன்று மாநில காவல் ஆணையங்களை அமைத்தது. அவைகளில் முதல் இரண்டு காவல் ஆணையங்கள் அளித்த பெரும்பாலான பரிந்துரைகளை எங்கள் அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது என்பதனைச் சிறப்பு வாய்ந்த இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன். மூன்றாவது காவல் ஆணையம் தனது பரிந்துரைகளை விரைவில் இறுதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில வரவு செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து பல ஆண்டுகளாக அதிகரித்துள்ளதைக் காண முடியும். 2007–2008ஆம் ஆண்டில் காவல் துறையின் செலவு மதிப்பீடு 2 ஆயிரத்து 82 கோடி ரூபாயாகும். இது மாநிலத்தில் மொத்த வருவாய்ச் செலவினமான 44 ஆயிரத்து 633 கோடியே 67 இலட்சம் ரூபாயில் 4.66 விழுக்காடாகும்.

காவலர் திறமையை மேம்படுத்த பயிற்சியளித்திட முன்வரவேண்டும்

தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகப் புலனாய்வு அமைப்பில் 'க்யூ' பிரிவைத் தனியே கொண்டுள்ள ஒரு சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். இப்பிரிவினால் மேம்படுத்தப் பட்டுள்ள தகவல்களைத் திரட்டும் திறமையான நடைமுறை, கண்காணிப்பில் உள்ள நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள், பிற அடிப்படைவாதக் குழுக்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதில் மாநில அரசுக்குப் பெரிதும் உதவுகிறது. தொடர் கண்காணிப்பு, முறையான தகவல் சேகரிப்பு மற்றும் உரிய நேரத்தில் உடனடி நடவடிக்கைகள் மூலம் 5 மாவோயிஸ்ட்

தீவிரவாதிகளைத் தமிழகக் காவல் துறையினர் நேற்று (19.12.2007) கைது செய்துள்ளனர். எங்களது தொடர் கண்காணிப்பு மூலம் தமிழகத்தில் தீவிரவாதம் முளையிலேயே கிள்ளியெறியப்படும் என்று உறுதியாக நம்புகிறோம். கடலோரப் பாதுகாப்புப் படை, கப்பல் படை, மத்திய புலனாய்வு அமைப்புகள் ஆகியவற்றுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் மாநில புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த நெருங்கிய ஒத்துழைப்புகளின் உதவியால், கடந்த ஆண்டில் இலங்கைத் தமிழர்களின் கடத்தல் நடவடிக்கைகளையும், சட்டத்திற்குப் புறம்பான பிற நடவடிக்கைகளையும் மிகவும் திறமையுடன் கட்டுப்படுத்திட முடிந்தது. சிறப்புப் பிரிவு, போதுமான வீரர்களையும் சாதனங்களையும் கொண்டு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். இதன் பொருட்டு, மத்திய அரசிடமிருந்து மாநில அரசு நிதியுதவியை எதிர்நோக்கியுள்ளது. உள்நாட்டுப் பாதுகாப்பு மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பு என்பதால், மாநிலங்களில் செயல்படும் புலனாய்வுப் பிரிவின் பணியாளர் செலவினத்தை மத்திய அரசு மாநிலங்களுக்குத் தொடர் மானியமாக வழங்கிட பரிசீலனை செய்திடவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், மத்திய அரசு, காவலர்களின் திறமையை மேம்படுத்துவதற்காகப் புதிய பயிற்சித் திட்டங்கள் வாயிலாகப் பயிற்சி அளித்திட முன்வர வேண்டும்; மத்திய புலனாய்வு முகமைகளின் பணிகளைப் பயன்படுத்தி, சிறப்புப் பிரிவுகளின் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்குப் பயிற்சிகள் அளித்திட வேண்டும்.

பொருள்களைக் கடத்துதல், ஆயுதம் தாங்கிய தீவிரவாதம், ஊடுருவல், தீவிரவாதச் செயல்கள், முக்கிய புள்ளிகளைப் பணத்துக்காகக் கடத்துதல் போன்ற பிரச்சினைகளைக் கையாண்டு, அவற்றில் வெற்றி காண்பதில் நன்கு பயிற்சி பெற்ற, முழுமையான சாதன வசதிகளைக் கொண்டுள்ள சிறப்பு அதிரடிப்படை (Special Task Force) பிரிவைத் தமிழகம் கொண்டுள்ளது.

தமிழகத்தில் காவலர் பயிற்சிக்கான கட்டமைப்புகள் மாநில அரசினால் தொடர்ந்து அதிகரிக்கப்படுகின்றன. 50 கோடி ரூபாய் செலவில் சென்னைக்கு அருகில், சிறப்பு மிகுந்த காவல் அகாடமி ஒன்று அமைக்கப் படுகிறது. காவலர்கள், சார்–ஆய்வாளர்கள் ஆகியோருக்கு, அவர்கள் அறிந்திருக்க வேண்டிய எச்.ஐ.வி. / எய்ட்ஸ் விழிப்புணர்வு சமூகச் சட்டங்கள் போன்றவை உட்பட, முழுமையாக வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டங்களைக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

அகதிகள் வருகை, எங்களால் எதிர்கொள்ளப்படும் உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரச்சினைகளில் முக்கியமான ஒன்றாக வடிவெடுத்துள்ளது. 1983ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இதுவரை 4 கட்டங்களில் தமிழகத்திற்கு அகதிகள் அலைஅலையாக வருகை புரிந்துள்ளனர். தமிழகத்தில் 25 மாவட்டங்களில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 117 அகதிகள் முகாம்களில் மொத்தம் 19 ஆயிரத்து 535 குடும்பங்களைச் சார்ந்த 73 ஆயிரத்து 216 இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கு உரிய செலவினங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது. மத்திய அரசு இந்த நிதியுதவியை அனுமதிப்பதில் கால தாமதங்கள் இருப்பினும், அத்தொகை மீளக் கிடைக்கும் என்னும் முழு நம்பிக்கையுடன் மாநில அரசு செலவினங்களை மேற்கொண்டு வருகிறது. இலங்கை அகதிகளுக்கு மாநில அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு உரிய தொகையைத் தொடர்ந்து திருப்பி வழங்க வேண்டுமென்றும், கிலோ 57 காசு என்னும் மானிய விலையில் 31.3.2007க்குப் பிறகும் தொடர்ந்து அரிசி வழங்கப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்குக் கடந்த மாதம் விரிவாகக் கடிதம் எழுதியிருந்தேன். மத்திய அரசு இது குறித்துத் தமிழகத்திற்குச் சாதகமான முடிவுகளை மேற்கொள்ளுமேயானால் அகதிகள் மறுவாழ்வுப் பணிகளை நாங்கள் தொடர்ந்து தடங்கலின்றி மேற்கொள்ள முடியும்.

தமிழக மீனவர்கள் உரிய பாதுகாப்புடன்
மீன்பிடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும்

இந்திய மீனவர்கள் தாக்கப்படும் நிகழ்வுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. நடப்பு 2007ஆம் ஆண்டில் இந்திய மீனவர்கள் மீது நடைபெற்ற 26 தாக்குதல் நிகழ்வுகளில் 8 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; 13 மீனவர்கள் காயமடைந்துள்ளனர். தெளிவாக எல்லை வரையறுக்கப்பட்ட பகுதிகளில், இலங்கை பாதுகாப்புப் படையினரின் குறுக்கீடுகள் இல்லாமல், இந்திய கப்பல் படையின் மேற்பார்வையில் உரிய பாதுகாப்புடன் தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும். இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிப்பதில் உள்ள பாரம்பரிய உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்பதைத் தமிழ்நாடு அரசு வலியுறுத்துகிறது. இதில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்வது, கடல் பகுதியில் மனிதர்களாலும், பிறபொருள்களாலும் சட்டத்திற்குப் புறம்பாக நடைபெறும் எந்த ஒரு நடவடிக்கையையும் கட்டுப்படுத்துவதற்கு உதவும்.

நாட்டின் மற்ற பகுதிகளில் நிலவும் சூழ்நிலைகளை ஒப்பிடுகையில், இடதுசாரித் தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாதிகளின் செயல்பாடுகள் தமிழகத்தில் இல்லை. இடதுசாரித் தீவிரவாதக் குழுவின் தாக்கம் அண்டை மாநிலங்களில் உணரப்பட்டாலும், தமிழக அரசு அத்தகைய நடவடிக்கைகளை இம்மாநிலத்தில் தடுத்துள்ளது.

தமிழகக் காவல்துறையின் தகுதிகள், திறமையின் அளவு, அமைந்துள்ள கட்டமைப்பு வசதிகள் முதலியவற்றை உங்கள்முன் எடுத்துரைத்துள்ள நிலையில், மத்திய அரசின் சிறப்புக் கவனத்தை ஈர்க்கும்வகையில் நான் தற்போது சில பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். அவை ஒவ்வொன்றும் மிக முக்கியமானதாகும். எனவே, அவற்றை



உடனடியாகச் செயல்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

முதலாவது, தமிழகக் கடலோரப் பகுதி முழுவதிலும் பாதுகாப்பினை உறுதி செய்வது தொடர்பானதாகும். மாநிலத்தில் 1,076 கி.மீ. நீள நீண்ட கடற்கரை அமைந்துள்ளது. இலங்கை சர்வதேச கடல் எல்லை தமிழகத்தின் கடலோரப் பாதுகாப்பில் மிகுந்த சிக்கலை ஏற்படுத்தி, ஒரு சவாலாக அமைந்துள்ளது. தமிழகத்தின் மிக நீண்ட கடற்கரை நெடுகிலும், மாநில அரசு 60 சோதனைச் சாவடிகளை நிறுவி, அவற்றைத் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் ஒரு முழு பிரிவின் மூலம் கண்காணித்து வருகிறது. இத்துடன், கடலோர மாவட்டங்களில் உள்ள அந்தந்த மாவட்டங்களின் காவல்துறையும் கடலோரப் பகுதிகளில் தொடர்ந்து விழிப்புடன் சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது. சர்வதேச எல்லையைப் பாதுகாக்கும் கடமை மத்திய அரசினுடையது என்பதால் தமிழகத்தில் கடலோரப் பாதுகாப்புக்காகத் தமிழக அரசு மேற்கொள்ளும் செலவினம் முழுவதையும் திருப்பித் தர வேண்டுமென மாநில அரசு மத்திய அரசைத் தொடர்ந்து கேட்டு வருகிறது. மத்திய அரசு, அண்மையில், கடலோரப் பகுதிகளில் 12 கடலோர காவல் நிலையங்கள், 12 புறக்காவல் நிலையங்கள், 40 சோதனைச் சாவடிகள் ஆகியவற்றை அமைப்பதற்காகக் கட்டடங்கள் கட்டும் செலவை ஏற்று ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் அவற்றிற்குரிய பணியாளர் செலவு அதிகமாகும். அச்செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்கவேண்டிய சூழ்நிலை உள்ளது. மத்திய அரசு கடலோரப் பாதுகாப்புக்கான பொறுப்பையும் ஏற்க முடியவில்லை என்றாலும், குறைந்தபட்சம் இப்பிரச்சினையில் மாநில அரசுக்கு ஏற்படும் முழு செலவினத்தையாவது மத்திய அரசு ஏற்கவேண்டும். மாநில அரசின் இந்தக் கோரிக்கை 2007 பிப்ரவரியில், ஐதராபாத் நகரில் நடைபெற்ற தென்மண்டல கவுன்சில் கூட்டத்தில் எழுப்பப்பட்டு, 2007 செப்டம்பரில் மத்திய அரசுக்கு விரிவான முன்மொழிவும் அனுப்பப்பட்டு, தொடர்ந்து கோரப்பட்டு வருகிறது.

இரண்டாவது, மத்திய நிதியுதவியுடன் காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு அளிப்பது தொடர்பானதாகும். இத்திட்டம் காவல் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு நடைமுறைப்படுத்தும் ஒரே பெரிய திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு வழங்கப்படும் நிதி 2000–2001இல் 153 கோடி ரூபாயில் இருந்து 2007–2008இல் 68 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது என்பதனை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். காவல் துறைக்கு நிதி ஒதுக்கீட்டை உயர்த்திடவேண்டுமென ஒருபுறம் மாநில அரசை வலியுறுத்தி வரும் மத்திய அரசு, மறுபுறம், காவல்துறை மேம்பாட்டிற்காக உதவும் ஒரே பெரிய திட்டமான இத்திட்டத்திற்குத் தனது நிதியை வெகுவாகக் குறைத்துள்ளது வியப்பளிக்கிறது. மத்திய அரசு இத்திட்டத்திற்குரிய நிதியை, வரும் ஆண்டில் குறைந்தது 100 கோடி ரூபாய் என உயர்த்தி தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்திட வேண்டுகிறேன்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களை 20.12.2007 அன்று புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **அர்ஜுன்சிங்** அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார்கள்.

மூன்றாவது, மகாநகர (Mega City) காவல் தொடர்பானதாகும். சென்னைப் பெருநகரம் வேகமாக வளரும் காஸ்மோபாலிடன் நகரமாகும். சென்னை காவல் ஆணையர்அலுவலகத்தின் பொறுப்பில் ஏறத்தாழ 1 கோடி மக்கள் வருகின்றனர். வளர்ந்துவரும் பொருளாதாரக் குற்றங்கள், சிக்கல் மிகுந்த போக்குவரத்துப் பிரச்சினைகள், நாகரிக மாந்தர்களின் குற்றங்கள் (white collared crimes) போன்ற அனைத்தும் நாளுக்கு நாள் பெருகி காவல்துறைக்கு மிகவும் சவாலாக வளர்ந்து வருகின்றன. ஆகையால், மகாநகர காவல் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு, மத்திய அரசு, மாநிலங்களுக்கான ஒட்டு மொத்த நிதி ஒதுக்கீட்டில் சேர்க்காமல் 'காவல்துறை நவீனமயமாக்கல்' திட்டத்தின்கீழ் தனி நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். மத்திய அரசு எனது கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மகாநகர காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு வரும் ஆண்டுகளில் முன்னுரிமை அளித்திட வேண்டு மென்றும், வரும் நிதியாண்டில் மகாநகர காவல் திட்டத்திற்குக் குறைந்தபட்சம் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களின் எல்லையோர மாவட்டங்களில் தீவிரவாதிகள் புரிந்திடும் தீயசெயல்களைத் தடுப்பதற்காக மாநில அரசுகள் இம்மாவட்டங்களில் நிலையான துயர் தணிப்பு நிருவாகங்களை (grievances redressal machinery) நிறுவி, அவற்றைப் பராமரித்தல் அவசியமான ஒன்றாகும். இம்மாவட்டங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவை ஆதலால், மாநில அரசு ஏற்கெனவே இம்மாவட்டங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பயிற்சிகளை அளிப்பதுடன், சிறப்பு வளர்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி செலவினங்களை மேற்கொண்டு வருகிறது. எனவே நக்சலைட்டுகளால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் தொகுப்பு நிதியுதவி, தமிழ்நாடு போன்ற எல்லையோர மாநிலங்களுக்குத் தீவிரவாதங்களைத் தடுப்பதற்காக வழங்கப்பட வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை நிறைவேற்றியுள்ள சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு, உயர்தர தொழில் நுட்பத்துடன் கூடியமுறையில் பயங்கரவாதத்தைத் தடுப்பதில் பயிற்சியளித்திடும், மத்திய நிதி உதவியுடன் கூடிய வட்டாரச் சிறப்பு மையம் ஒன்றை அமைக்க வேண்டும். அதுபோலவே, மத்திய அரசின் முழு நிதி உதவியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படும் கமாண்டோ படை ஒன்றை உருவாக்கி, பராமரிப்பதற்கு இதுவே சரியான தருணமாகும். இறுதியாக, திறமையான புலனாய்வு நுட்பங்களைத் தக்க தருணத்தில் பகிர்ந்து கொள்வதற்கு வசதியாக Subsidiary Multi Agency Centre கூட்டத்தினைக் காலாண்டுக்கு ஒருமுறை கூட்டுவதற்குப் பதிலாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டலாம் எனக் கருதுகிறேன்.

நிறைவாக, இந்தக் கூட்டத்தின் மூலம் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பினை வழங்கியமைக்காக மத்திய அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பினை வலுப்படுத்துவதில் மத்திய அரசுக்குத் தனது முழு ஆதரவினையும் தமிழக அரசு தொடர்ந்து நல்கும் என்றும் உறுதியளிக்கிறேன்.

நன்றி வணக்கம். ✶



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்களிடம்
27.12.2007 அன்று
தலைமைச் செயலகத்தில்
அனைத்துக் கிராம
அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்,
தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட
விவரங்களுடன் கூடிய
2008ஆம் ஆண்டுக்கான
நாட்காட்டிகளை
மாண்புமிகு ஊரக வளர்ச்சி
மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.
உடன் ஊரக வளர்ச்சித்துறைச் செயலர்
திரு.அசோக் வரதன் ஷெட்டி,இ.ஆ.ப., உள்ளார்.



36 ஆம் பக்கத் தொடர்ச்சி



இத்தகைய நிலையை நீக்கிட, ஏழையெளியவர்களுக்கு நீதி நிழல் தந்திட, நீங்கள் அனைவரும் உழைத்திட முன்வர வேண்டும். உங்களால் ஒட்டுமொத்த சமுதாயமும் பயன்பெற வேண்டும். அதற்குரிய வகையில், ஆற்றல் பெற்றவர்களாக வளர்ந்து, அறிவுலக மேதைகளாக விளங்கிப் புதிய சாதனைகளை நீங்கள் படைத்திட வேண்டும்.

வெப்ஸ்டர், வழக்கறிஞர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

"Lawyers on opposite sides of a case are like the two parts of Shears. They cut what comes between them. but not each other; Lawyers' profession is good if practiced in the spirit of it; It is damnable fraud and inequity when its true spirit is supplied by a spirit of mischief-making and money-getting."

"ஒரு வழக்கில் வாதாடும் இருதரப்பு வழக்கறிஞர்களும் கத்திரிக்கோலின் கூர்மையான இருபகுதிகளைப் போன்றவர்கள். அவை தமக்கு இடையில் வரும் எந்தப் பொருளையும் வெட்டும்; ஆனால் ஒன்றை மற்றொன்று வெட்டாது; இந்த அடிப்படையில் வழக்கறிஞர்கள் தொழில்புரிவது நல்லது; இந்த உண்மையான கோட்பாட்டிற்கு மாறாக, தீங்கு ஏற்படுத்துதல், பணம் சேர்த்தல் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு தொழில்புரிவது அருவருக்கத்தக்க மோசடி என்பதுடன் அநீதியுமாகும்."

எனக் கூறப்படுவது குறிக்கோள் வகுக்கும் பாதையில் உங்களுக்கு ஒரு படிக்கல்லாகட்டும்!

**அனைவர்க்கும் சமநீதி – சமூகநீதி**

நீதித் துறை வரலாற்றில் இடம்பெற்ற, பல வழக்குகளின் போக்குகளையும், புலமை வாய்ந்தோரின் புகழ்மிகுந்த வாதங்களின் வலிமைகளையும், வளமார்ந்த தீர்ப்புகளையும் வரிசைப்படுத்தி, வகைப்படுத்தி, தொகுத்து வைத்துச் சீர்தூக்கி, நோக்கி, நமது நாட்டின் சமுதாய அமைப்பிற்கேற்ப வருங்காலத் தலைமுறையினர்க்கு நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அளிக்கப்படும் உரிமைகள் அனைத்தும் – அனைவர்க்கும் சமநீதி, சமூகநீதியாகவே கிடைத்திட நீங்கள் உறுதி மேற்கொண்டு உழைத்துப் புகழ்கண்டு உளம் பூரித்திட வேண்டும்.

இந்திய ஜனநாயகத்தைத் தாங்கி நிறுத்தும் வலிமை வாய்ந்த நான்கு தூண்களில் நீதித்துறையும் ஒன்று என்பதை நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள். எனவே, நீதித்துறையின் பொறுப்புணர்ந்து, விமர்சனங்களுக்கு ஆட்படாத வகையில், உங்களது சொல்லும், செயலும் உங்களை அணிசெய்திட வேண்டும்!

இறுதியாக, எனினும் உறுதியாக நீங்கள் உளம் கொளவேண்டிய கருத்து ஒன்றினையும் உங்களுக்கு உரைத்திட விரும்புகிறேன்.

சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் நாட்டில் விதைக்கப்பட்டுள்ள மூடநம்பிக்கைகள் தடந்தெரியாத வகையில் நமது சமுதாயத்திலிருந்து முற்றிலும் அகற்றப்பட்டாக வேண்டும்.

ஏழ்மை அகற்றப்பட, வறுமை விரட்டப்பட, வேலைவாய்ப்புகள் குவிந்திட, நாட்டின் பொருளாதாரம் உயர்ந்திட எண்ணி எண்ணி, ஏங்கி ஏங்கி, வலியுறுத்தி வலியுறுத்தி வரமாக வார்த்தெடுத்திடும் திட்டங்களைக் கூடத் தடுத்து நிறுத்திட மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திடும் நிலைமைகளையும் நீங்கள் அறிந்து தெளிந்திட வேண்டும். அதில் மறைந்து கிடக்கும் சமுதாய மாச்சரியங்களையும் புரிந்துகொண்டு, போர்ப்பரணி பாடிடும் களப்போர் மறவர்களாக நீங்கள் திகழ்ந்திட – சட்ட நூல்களும், அவை தந்த அறிவாயுதமும் பிறவும் உங்கள் கைகளில் வாள்களாகவும், வேல்களாகவும் விளங்கி உங்களுக்கு வெற்றிகளைத் தந்திட வேண்டும்.

தாய்த் தமிழும், தமிழகமும், இந்தியத் திருநாடும் உங்களால் புகழ்பெற வேண்டும். உங்கள் வாழ்வு வளம் பெறவேண்டும்! என உங்கள் அனைவரையும் என் இதயமார வாழ்த்தி, பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்திடும் அருமையான வாய்ப்பினை எனக்கு நல்கிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன்''. ✶

# புத்துணர்வோடு கொண்டாடுவோம் பொங்கல் விழாவை!



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள்

**த**மிழ்ச் சமுதாயத்தின் தலைசிறந்த பண்பாட்டினை உலகுக்கு உணர்த்தும் வகையில் தைத்திங்கள் முதல்நாள் தமிழர் திருநாள் என ஆண்டுதோறும் கொண்டாடப் படுகிறது.

தமிழ்ச் சமுதாயம் கொண்டாடும் பொங்கல் விழா சாதி, மத, இன வேறுபாடு எதுவுமின்றி உழைப்பையும், உழைப்புக்கு உதவியவர்களையும் எண்ணி நன்றி தெரிவிக்கும் இனிய பண்பாட்டுத் திருவிழாவாக, மனிதநேயம் வளர்க்கும் மகத்தான திருவிழாவாகத் தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் கொண்டாடப் படுகிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என மாந்தர் ஒவ்வொருவரையும் நம் உடன்பிறந்தாராய்க் கருதும் உயரிய சிந்தனையை உலகுக்குத் தந்த தமிழினம் மனித சமுதாயத்திற்கே பொதுவான திருவிழாவாகக் கண்டுள்ள தனிப்பெரும் திருநாள் பொங்கல் திருநாள்!

**பொங்கல் விழாவில் நிறைவுகாண்கிறது தமிழ்க் குலம்**

உழுது பயிரிட்டு விளைந்த நெல்மணிகளை வீடு சேர்த்த உழவன் அதன் பயனை நுகரும்பொழுது, "பகுத்துண்டு பல்லுயிர்ஓம்பும்" தலையாய அறம் நிலைபெற நன்றியுரைத்துக் கொண்டாடும் நல்ல திருநாள் பொங்கல் திருநாள்!

வாழும் இல்லத்தைத் தூய்மைப்படுத்தி, வெள்ளையடித்து, வண்ணம் பூசி, மாக்கோலமிட்டு, புத்தாடையுடுத்தி, வீட்டு வாசலில் பொங்கலிட்டு உழவுத் தொழிலுக்குத் தேவையான வெப்பத்தையும், மழையையும் தந்துதவிய கதிரவனுக்கும், கார்மேகக் கூட்டங்களுக்கும் நன்றி தெரிவித்து வணங்கிப் பொங்கல் புதுநாளைக் கொண்டாடுகிறான்





உழவன் உவகை பொங்கிட! இணை மயிலுடன் இளந்தளிர்களுடன்!

உறவினர் நண்பர்கள் சூழ ஒன்றுகூடி வீர விளையாட்டுகளில் திளைத்து, ஒருவரை ஒருவர் வாழ்த்திப் பாராட்டி, மகிழ்ந்து பொங்கல் விழாவில் நிறைவு காண்கிறது தமிழ்க்குலம்!

இப்படி, உழவுத் தொழிலின் பயன் நுகரும் பொங்கல் விழாவை நன்றி உரைக்கும் நாகரிகத்தை உலகுக்கு நயமாக வெளிப்படுத்தும் உன்னதத் திருவிழாவாகக் கொண்டாடுகிறது தமிழ் நிலம்!

அந்தப் பொங்கல் திருநாள் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் தனிச்சிறப்புடன் கொண்டாடப்பட வேண்டும் என விரும்பி கடந்த ஆண்டு தமிழக அரசு சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று தமிழகத்தின் ஒவ்வொரு நகரிலும், ஊரிலும், குக்கிராமங்களிலும், ஒவ்வொரு வீட்டிலும் பொங்கல் திருவிழா மிகுந்த எழுச்சியோடு கொண்டாடப்பட்டதை இவ்வேளையில் மகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறேன்!

**முந்தைய ஆண்டைவிட மிகுந்த எழுச்சியோடு கொண்டாடுவீர்**

தமிழக அரசு அளித்த வாக்குறுதி களையெல்லாம் தடையின்றி நிறைவேற்றி மக்கள் சமுதாயம் பயன் கண்டு வரும் வேளையில் – வானம் வரையாது வழங்கி – தமிழ்நிலம் முழுதும் விளைச்சல் நிறைந்து உழவன் உள்ளத்தில் உவகை பொங்கிடும் வேளையில் – ஏழைப் பாட்டாளி மக்களின் இதயம் குளிர்ந்திடும் வேளையில் – தொழிலாளர் சமுதாயத் தோழர்களெல்லாம் கோரிக்கைகள் கைகூடிக் களித்திடும் வேளையில் 15.1.2008 அன்று இந்த ஆண்டின் பொங்கல் திருநாளையும் முந்தைய ஆண்டைவிட மிகுந்த மகிழ்ச்சியோடும் எழுச்சியோடும் கொண்டாடிட தமிழக அரசின் சார்பில் என் அருமை தமிழ் மக்களை அன்புடன் வேண்டுகிறேன்.

இந்த ஆண்டின் பொங்கல் விழா சிறப்பாக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலம் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாயை சிறப்பு ஒதுக்கீடாக அனுமதித்து ஆங்காங்கே கலை நிகழ்ச்சிகளும் கலைப் போட்டிகளும் நடத்தி, மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கிச் சமத்துவப் பொங்கல் கொண்டாடிட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதனையும் இவ்வேளையில் மகிழ்ச்சியுடன் நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

இந்த சிறப்போடு இந்த ஆண்டின் பொங்கல் நாளை ஒவ்வொரு வீட்டிலும் வண்ணக் கோலங்களிடுவீர்; மாவிலைத் தோரணங்கள் அழகுற அமைத்திடுவீர்;

**பொதுவிடங்களை அழகுபடுத்தி 'சமத்துவப் பொங்கல்' கொண்டாடுவீர்**

ஊர்ப்பொதுவிடங்களில் தென்னை, வாழை, ஈச்சங் குலைகளும், தோகை விரிந்த கரும்புகளும், இஞ்சி, மஞ்சள் கொத்துகளும் இன்னபிறவும் கொண்டு அலங்கரித்திடுவீர்; பொங்கல் நாளன்று பொதுவிடங்களை அழகுபடுத்தி, அனைவரும் அங்கு கூடி வீடுகள்தோறும் புதுப்பானைகள் வைத்து, 'சமத்துவப் பொங்கல்' கொண்டாடிடுவீர்; மகளிர், இளைஞர் திறம் விளங்கக் கோலப் போட்டிகளையும் வீர விளையாட்டுகளையும் ஆங்காங்கே நடத்திடுவீர்; கிராமப்புற நடனங்களும் இதர கலைநிகழ்ச்சிகளும் ஆங்காங்கே ஆவன செய்திடுவீர்; இருபாலின இளைஞர்களையும், சிறுவர், சிறுமிகளையும் ஊக்கப் படுத்திடும் வகையில் விருதுகளும் பரிசுகளும் வழங்கிடுவீர்; வணிக நிலையங்களை, சாலைகளை, சோலைகளை வண்ண விளக்குகளால் ஒளி உமிழச் செய்திடுவீர்; கிராமப்புறங்களிலும், நகரங்களிலும், வீடுகள் தோறும், அரசுக் கட்டடங்கள் அனைத்திலும் பொங்கல் நாளன்று வண்ண வண்ணமாய்ச் சரவிளக்குகள் அமைத்து எழில் குலுங்கிடச் செய்திடுவீர்; தமிழகம் முழுவதும் தமிழ்ச் சமுதாயத்தின் தனிப்பெரும் பண்பாட்டைத் தரணிக்கு வெளிப்படுத்தும் 'தமிழர் திருவிழா'

மகிழ்ச்சியுடனும், எழுச்சியுடனும் தமிழகம் எங்கும் – ஒவ்வொரு பகுதியிலும் கொண்டாடப்பட ஊக்கமளித்து உதவிடுவீர்; பொங்கல் விழா கொண்டாடும் வேளையில், புதிய உணர்வுகள் நம் உள்ளத்திலே ஊற்றெடுத்திட வேண்டும்! சாதி, மத, இன வேறுபாடுகளை அகற்றிடும் அன்பு உணர்வு தழைத்திட வேண்டும். குறிப்பாக அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு சற்றும் இடம் கொடுத்திடாமல் இந்தப் பொங்கல் விழா இன உணர்வோடு அனைவரையும் இணைக்கும் அருங்கலை விழாவாக மலர வேண்டும்!

### எங்கும் மகிழ்ச்சி எழுந்தது; தமிழர் இதயமெல்லாம் இன்பம் செழித்தது

எனவே, ஒவ்வொரு பகுதியிலும் மகளிர் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், ஆசிரியப் பெருமக்கள், ஆங்காங்கே உள்ள அரசு அமைப்புகளின் பிரதிநிதிகள், சான்றோர்கள், பொதுமக்கள் என யாவரும் ஒருங்கிணைந்து இந்த ஆண்டின் பொங்கல் விழாவிற்கு மேலும் பெருமை சேர்க்க அணிதிரள்வீர்!

பொங்கல் திருநாளைக் கொண்டாடி – தமிழகம்
எங்கும் மகிழ்ச்சி எழுந்தது – தமிழர்
இதயமெல்லாம் இன்பம் செழித்தது!
என்று ஊரும் உலகும் பேச
ஒன்றுபட்டுப் பொங்கல் விழா கொண்டாட – என்
அருமைத் தமிழ் மக்களை
அன்போடு வேண்டுகிறேன்!

---

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:–

*“தைத் திங்கள் முதல் நாள் தமிழர் திருநாள்! பொங்கல் நன்னாள் என தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் எழுச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படுகிறது.*

*உழைத்துப் பயன் விளைக்கும் உழவர் சமுதாயம் அறுவடை செய்த நெல்லை ஆக்கி உண்பதற்கு முன் உடன் உழைத்தவர்க்குப் பகிர்ந்து வழங்கி, விளைச்சலுக்குத் துணைபுரிந்த வான்மழைக்கும் கதிரவனுக்கும் கால்நடைகளுக்கும் நன்றிகூறி மகிழ்ந்து கொண்டாடும் பொன்னாள் பொங்கல் நன்னாள்!*

### *இயற்கையும் பேருதவி புரிந்தது*

*இவ்வாண்டில் தமிழகத்தில் மழைவளம் பெருகி வேளாண் தொழிலுக்குப் பேருதவி புரிந்திடும் காவிரி ஆற்றின் மேட்டூர் அணை **8** முறை நிரம்பி நீர்வளம் செழித்து, விளைச்சல் மிகுந்து விவசாயிகள் மகிழ்ந்திட இயற்கையும் பேருதவி புரிந்துள்ளது.*

*__7,000__ கோடி ரூபாய் அளவுக்கு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தும், கடந்த ஆண்டில் __6__ இலட்சத்து __31__ ஆயிரத்து __283__ விவசாயிகளுக்கு __1,251__ கோடி ரூபாய், இவ்வாண்டில் __1,360__ கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை __4__ இலட்சத்து __21__ ஆயிரத்து __521__ விவசாயிகளுக்கு __881__ கோடியே __40__ இலட்சம் ரூபாய் பயிர்க் கடன்கள் வழங்கியும், கரும்புக்கும், நெல்லுக்கும் கூடுதல் விலைகள் தந்தும், நிலமற்ற ஒரு இலட்சத்து __37__ ஆயிரத்து __995__ ஏழை விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து __60__ ஆயிரத்து __671__ ஏக்கர் இலவச நிலம் வழங்கியும், விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு–நலத் திட்டத்தின்கீழ் __2__ இலட்சத்து __13__ ஆயிரத்து __688__ விவசாயக் குடும்பங்களுக்கு __107__ கோடியே __94__ இலட்சத்து __31__ ஆயிரத்து __949__ ரூபாய் உதவித் தொகைகளாக வழங்கியும், வரலாறு காணாத வகையில் இந்த அரசும் விவசாயிகளை அரவணைத்து வருகிறது.*

*இத்தகைய சூழ்நிலையில் கொண்டாடப்படும் பொங்கல் திருநாளில் “உலகத்தார்க்கு ஆணி” என அய்யன் திருவள்ளுவர் புகழ்ந்து பாடிய உழவர் பெருங்குடி மக்களுக்கும், ஏனைய உழைப்பாளர்கள் உள்ளிட்ட தமிழக மக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து, எல்லோரும் எல்லாமும் பெற இணைந்து பாடுபடுவோம் என இத்திருநாளில் அனைவரும் சூளுரைப்போமாக!”*

★





# தமிழகத்தின் புகழை இந்தியாவின் கீர்த்தியை நிலைநாட்ட ஊக்கப்படுத்துகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது

சென்னை – நேரு உள் விளையாட்டு அரங்கில் தேசிய இளைஞர் விழாவை 12.1.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கி வைத்து ஆற்றிய உரை

---

“**உ**ங்களையெல்லாம் இந்த நல்ல மாலை நேரத்திலே தேசிய இளைஞர் விழா நிகழ்ச்சியில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன். நம்முடைய மத்திய அமைச்சர் மணிசங்கர் அவர்கள் உரையாற்றும் போது, பத்தாண்டுகளுக்கு முன்பு இந்த தேசிய இளைஞர் விழா சென்னை மாநகரத்திலே நடைபெற்றதை நினைவுபடுத்தி, அப்போதும் அவர்தான் அந்த நிகழ்ச்சியின்போது அமைச்சராக இருந்ததையும் நினைவுபடுத்தினார். நான் அவருக்கு நினைவுபடுத்துகிறேன், அப்போதும் நான்தான் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்தேன், இப்போதும் நான்தான் முதலமைச்சராக இருக்கிறேன் என்பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

தேசிய இளைஞர்களுடைய விழா என்றால் இளைஞர்கள் உள்ளத்திலே தேசிய உணர்வு வலுப்பெற வேண்டுமென்பதையும், அவர்கள் இந்திய நாட்டினுடைய தேசிய உணர்வை வளர்ப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற ஊக்கத்தை உருவாக்குகின்ற வகையிலும் அவர்கள் பிறநாடுகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும், அப்படி விளங்குகின்ற நேரத்திலே அவர்களுடைய தாய்நாடான இந்தியத் திருநாட்டை ஒளிமிக்க நாடாக உருவாக்கிக் காட்டவேண்டுமென்ற இத்தனையையும் நினைத்து, இதற்கு மேலும் அவர்கள் வலுவான உடல், உரமான கொள்கை, உறுதி படைத்த நெஞ்சம் இவைகளைக் கொண்டவர்களாக விளங்க வேண்டுமென்பதையும் எடுத்துக் காட்டுகின்ற வகையிலேதான் இந்த இளைஞர்களுடைய விழா நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இது 13ஆவது இளைஞர் விழா. இந்த பதிமூன்றாவது விழா நடைபெறுகின்ற நேரத்தில் நம்முடைய திருநாட்டின் நிலைமை இளைஞர்களைப் பொறுத்தவரையில் எவ்வாறு இருக்கிறது என்பதை – இளைஞர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இளைஞர்களை ஊக்கப்படுத்துகின்ற அரசு மத்தியிலும் இருக்கிறது, இங்கே மாநிலத்திலும் இருக்கிறது. அப்படி இருக்கின்ற காரணத்தினால் தான் இளைஞர்களுடைய முக்கிய பிரச்சினை இன்றைக்கு என்னவாக இருக்கிறது என்பதை எங்களால் யூகிக்க முடிகிறது, யூகித்து அறிந்ததைச் செயல்படுத்தி வெற்றி காணவும் முடிகிறது. இந்த நேரத்திலே நான் இந்த நாளில் இளைஞர்களுக்கெல்லாம் ஒரு வீரத் துறவியின் பெயரை நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை.

இங்கே நான் வந்ததும், மலர் மாரி பொழிந்து மனதார வணக்கம் செய்து, தொழுது நின்றது விவேகானந்தருடைய படத்தின் முன்னால் என்பதை நீங்கள் எல்லாம் கண்டீர்கள். அந்த விவேகானந்தர், அவருடைய வாழ்நாளிலே எழுதிய புத்தகங்கள் ஏறத்தாழ 50க்கு மேல் இருக்கும். ஐம்பதுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதிய விவேகானந்தர், இந்தியத் திருநாடு முழுதும் சுற்றி, பிரசங்கங்களைச் செய்து, மக்களுக்குத் தேவையான நல் விஷயங்களை எடுத்துக் கூறி, தமிழகத்திலே மாத்திரமல்ல, இந்தியாவிலே மாத்திரமல்ல, சிகாகோ நகரம் வரை சென்று வெளிநாடுகளிலும் இந்தியாவின் பெருமையை உணர்த்தி, தன்னுடைய பேச்சாற்றலால், தன்னுடைய அறிவுத் திறனால் இந்து மதம் என்ற ஒரு மதம் இந்தியாவிலே இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டி அந்த மதத்தில் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுகின்ற நிலைமை தனக்கு இல்லாவிட்டாலும் இந்தியர்களை குறிப்பாக அந்த மதநம்பிக்கை உள்ளவர்களை குறைந்தபட்சம் மூடநம்பிக்கைக்கு ஆட்படாதவர்களாக வளர்க்க வேண்டும், அப்படி அவர்கள் வளர வேண்டும் என்பதிலே முதல் மனிதராகத் திகழ்ந்தவர் விவேகானந்தர். விவேகானந்தர் 39 வயது வரை தான் வாழ்ந்தவர். இளைஞராகவே இருந்து நாற்பது வயதிற்குள்ளாக தன்னுடைய வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்.

ஆனால் அந்த நாற்பதாண்டுகளுக்குள் நானிலம் புகழுகின்ற பெருமைக்குரியவராக ஆனார் என்றால், அந்த நாற்பதாண்டுகளுக்குள்ளாக உலகத்திற்கே பல அறிவுரைகளை எடுத்துச் சொல்கிற உத்தமராகத் திகழ்ந்தார் என்றால் விவேகானந்தருடைய பெயர் – அவருடைய குருநாதர், இராமகிருஷ்ண பரமஹம்சரை விட அதிகமாகப் பரவிற்று என்றால், அதற்குக் காரணம் என்ன ? அவரும் இளைஞர்தான், இளைஞர்களால் என்ன சாதிக்க முடியுமென்று இளைஞர்கள் ஒருக்கணம் எண்ணுவார்களேயானால், அவர்கள் விவேகானந்தரை நினைத்துப் பார்த்தால் எதையும் சாதிக்க முடியும், விவேகானந்தர் உலகத்தையே தன்னுடைய கைக்குள் வைத்திருக்கின்ற அளவிற்கு அவ்வளவு அருமையான அறிவுரைகளை வழங்கியவர். எனவே அத்தகைய ஆற்றலை நாமும் பெற முடியும் என்ற நம்பிக்கை நம்முடைய இளைஞர்களுக்கெல்லாம் வருமென்று நான் எண்ணுகிறேன்.

எனவே இந்நாளில் விவேகானந்தரை எண்ணிக்கொள்வோம். அவருடைய வித்தகத்தை நினைத்துக் கொள்வோம். அவருடைய விவேகத்தை எண்ணிக்கொள்வோம். விவேகானந்தருடைய ஆற்றலை, துணிவை அவர் வெளிநாட்டிலே பரப்பிய புகழை எண்ணிக் கொண்டால், இளைஞர்களால் எதுவும் சாதிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விவேகானந்தர் வாழ்ந்தார், மறைந்தார், திகழ்ந்தார் என்ற அந்த உண்மையை நாம் உணர முடியும். அத்தகைய விவேகானந்தர் வழியில் அவரைப் போற்றிப் புகழ்ந்து நாடெங்கும் நடைபெறுகின்ற இந்த நல்ல விழாவிலே நான் இளைஞர்களுக்கு குறிப்பாக நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இளைஞர்களுக்கு இங்கேயுள்ள அரசு என்னென்ன காரியங்களைச் சாதித்திருக்கிறது, இன்னும் சாதிக்கவிருக்கிறது என்பதை நினைவூட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இன்றைக்கு இளைஞர்களின் தேவை வேலைவாய்ப்பு. அவர்கள் படித்துவிட்டு தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற – தன்னைக் காப்பாற்றிக்கொள்ள சமுதாயத்திலே தனக்கொரு பெருமை ஏற்பட – சமுதாயத்தில் மனிதனாக வாழ – அவனுக்குத் தேவை வேலைவாய்ப்பு. ஆனால் இங்கே தமிழகத்திலே வேலைவாய்ப்பற்று இருந்தவர்களை – அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற வகையில் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திலே பலபெரும் சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்ற அரசு தான் உங்களுடைய அரசு, என்னுடைய தலைமையிலே இருக்கின்ற இந்த அரசு என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

13–5–2006 அன்று நாங்கள் ஐந்தாவது முறையாகத் தமிழகத்தை ஆளுகின்ற பொறுப்பை யேற்றுக் கொண்டோம். அதற்குப் பிறகு இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் 2 இலட்சத்து 32 ஆயிரம் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை வழங்கியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே வேலைகளுக்கு, வேலை வாய்ப்புக்குப் பூட்டுப் போட்டிருந்த நிலையை மாற்றி வேலைவாய்ப்பு இளைஞர்களுக்குக் கிடைக்க முடியாமல் சட்டம் இருந்ததை மாற்றி அவர்கள் வேலைவாய்ப்புகளுக்கு உரியவர்கள் என்ற நிலையிலே 2 இலட்சத்து 32 ஆயிரம் இளைஞர்கள் புதிய வேலைவாய்ப்புகளை இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திலே தமிழகத்திலே பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியாத சூழ்நிலையில், அதற்கும் மாற்றாக இந்த அரசின் ஒரு புதிய திட்டமாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு மாதா மாதம் 150 ரூபாய் உதவித் தொகை, பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாய் உதவித் தொகை, இளங்கலைப் பட்டதாரி, முதுகலைப் பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாய் உதவித் தொகை வழங்குகின்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கி, அத்திட்டத்தின்படி இதுவரையில் இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் மூன்று இலட்சத்து 53 ஆயிரத்து 488 இளைஞர்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக ஆகியிருக்கின்ற செலவு 78 கோடியே 99 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்பதையும் நான் பெருமை யோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இளைஞர்கள் உலக அளவில், ஏன் திரளான அளவில் விளையாட்டுப் போட்டிகளிலே வெற்றி பெறுகிற இளைஞர்களை ஊக்குவிப்பதிலும் தமிழக அரசும் சரி, மத்தியிலே இருக்கின்ற இந்தியப் பேரரசும் சரி சளைத்தவர்கள் அல்ல. நான் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே சொல்ல விரும்புகிறேன். இலங்கையிலே நடைபெற்ற பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பதக்கங்களைப் பெற்றுச் சாதனைகள் படைத்துள்ள 28 வீரர்களுக்கும், 11 வீராங்கனைகளுக்கும் மொத்தம் 1 கோடியே 32 இலட்சம் ரூபாயை உதவித் தொகையாக தமிழக அரசு வழங்கியிருக்கின்றது.

அதைப் போல கிரிக்கெட் வீரர், தினேஷ் கார்த்திக்குக்கு ஊக்கப் பரிசு தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது.


உலகச் சாம்பியன் என்று புகழ் பெற்ற – சதுரங்க வீரர் – விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்கு ஊக்கப் பரிசு இந்த அரசின் சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இந்த நாட்டு இளைஞன் எங்கே வெற்றி பெற்றாலும் – அங்கிருந்து அவர் வெற்றி வீரராக இங்கே திரும்பி வந்தாலும், அவரை ஊக்கப்படுத்தி இன்னும் பலநாடுகளுக்குச் செல், அங்கெல்லாம் வெற்றி முழக்கமிடு, அங்கெல்லாம் தமிழகத்தின் புகழை நிலை நாட்டு, இந்தியாவின் கீர்த்தியை நிலைநாட்டு என்று ஊக்கப்படுத்துகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதை நான் பெருமையாக உங்களுக்கெல்லாம் சொல்லிக் கொண்டு இந்த இனிய விழாவில் – உங்களையெல்லாம் சந்திக்கின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காக, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மத்திய அரசின் அமைச்சர் என்னுடைய அருமை நண்பர் மணி சங்கர் அவர்களுக்கும் மற்றும் அரசு அலுவலாளர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்".

இவ்விழாவில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.மணிசங்கர் அவர்களும், மாண்புமிகு சுற்றுச் சூழல் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களும் பங்கேற்றனர். ❖





228770. சென்னை-600 008



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் மழையால் சேதமடைந்த காரனோடை பாலத்தினை பார்வையிட்டு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.ஆ.ராசா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் மற்றும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி ஆகியோர் உடன் இருந்தனர். (22.12.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உடன் இருந்தார். (23.12.2007)





திருச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தினார். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.என்.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர். (25.12.2007)





# சென்னை சங்கமம் நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைஞர்களைச் சந்தித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புகழாரம்

**“செ**ன்னை சங்கமம்” கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான கலைஞர்களை 18.1.2008 அன்று வாழ்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

சங்கமத் திருவிழாவை சீரோடும் சிறப்போடும் நடத்துவதற்கு முன்னின்று முயற்சிகள் எடுத்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாகவும் சிறப்பாகவும் மாநிலங்களவை உறுப்பினரும் கவிஞருமான கனிமொழிக்கு உங்கள் சார்பாக என்னுடைய வாழ்த்துகளை வழங்குகிறேன். அவரோடு துணை நின்று உங்களுடைய திறமைகளை யெல்லாம் சென்னை மாநகரத்தின் பல பகுதிகளிலும் எடுத்துக் காட்டுவதற்கு





காரணமாகவும், இந்த நிகழ்ச்சிகளை எழிலுற தொகுத்தும் மக்களுக்கு எடுத்துக்கூறியும் சீராகவும் சிறப்பாகவும் “சென்னை சங்கமம்” இந்த ஆண்டும் நடைபெற்றது என்ற பெருமைக் குரியதாகவும் ஆக்கிய நண்பர் கஸ்பர் அவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவரோடு இணைந்து நின்ற அவருடைய நண்பர்கள் நாட்டுப்புறக் கலை வளர வேண்டும், பரவிட வேண்டும் என்று எண்ணுகின்ற நம்முடைய பண்பாட்டைப் போற்றுகின்ற பழந்தமிழ் இலக்கியங்கள், கலைகள் வளரவேண்டும் என்று ஆர்வம் படைத்தவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள் பாராட்டுக்கள் நன்றிகள் உரியதாகுக!

நாம் கடந்த ஆண்டே திட்டமிட்டோம்: இந்த ஆண்டு சென்னையில் மாத்திரமல்லாமல் வேறு பல நகரப் பகுதிகளிலும், நகரத்தினுடைய புறநகர்ப் பகுதிகளிலும் இந்த நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும், நடத்துவோம் என்று சொன்னோம். சொன்னதைச் செய்வோம் என்றாலும்கூட, சொன்னதைச் செய்யாமல் – செய்ய முடியாமல் விட்டது இந்த சங்கமம் நிகழ்ச்சி ஒன்றிலேதான். இதை இந்த ஆண்டு நடந்த ஒரு குறையாக நான் ஏற்றுக் கொண்டு, அடுத்த ஆண்டு இந்தக் குறையும் இல்லாமல் சங்கமம் நிகழ்ச்சிகள் தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் நடைபெறுகின்ற அளவிற்கு எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்கள் நம்முடைய புராதன இலக்கியங்களை, புராதனக் கலைகளை, புராதன நாட்டியங்களை அசைபோடுகிற அளவோடு இல்லாமல், இசைபாடி மகிழ்விக்கின்ற வகையிலும், நடனங்கள் மூலமாக, நிகழ்ச்சிகள் மூலமாக விளக்குகின்ற வகையிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை சங்கமம் குழுவினரும், தமிழ் மையத்தினரும் உங்களோடு இணைந்து அரசும் சிறப்புறச் செய்யும் என்ற உறுதியை உங்களுக்கு நான் வழங்கி, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாகவர்கள் எண்ணிக்கையிலே வருகை தந்திருக்கிறீர்கள்.

சென்னையிலே எவ்வளவு உற்சாகமாக இந்த நாட்களைக் கழித்தீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அதைப்பற்றி அடிக்கடி கேள்வியுற்று நீங்கள் அடைந்த மகிழ்ச்சியைவிட நான் அதிகமாக மகிழ்ச்சியடைந்தேன். காரணம், எத்தனையோ சிரமங்களுக்கிடையே வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்ற நீங்கள் இங்கே உல்லாசமாக, உற்சாகமாக பொழுதைப் போக்கினீர்கள் என்பதும், நாங்களும் பொழுது போக்குவதற்கு நீங்கள் உதவினீர்கள் என்பதும், பொழுதுபோக்குவது மாத்திரமல்ல, பொழுது நல்ல பொழுதாக இருந்தது என்ற வகையிலே நீங்கள் அமைத்துத் தந்ததும், இங்கே இரண்டு மூன்று சிறுவர்கள் எவ்வளவு



நேர்த்தியாக இந்தக் கலையைக் கற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தபோது நான் வியந்துபோனேன். அந்த சிறுவர்களை அருகே அழைத்து பெயர் என்ன என்று கேட்டேன். ஒருவருடைய பெயர் தமிழ்வேந்தன், இன்னொருவருடைய பெயர் எழிலரசன். இப்பொழுதே தமிழ் எந்த அளவிற்கு வளர்கிறது, தழைத்திருக்கிறது. அதுவும் எங்கெல்லாம் தழைத்திருக்கிறது என்பதை நான் அறிந்து எதிர்காலத்திலே இன்னும் எப்படியெல்லாம் தழைக்கும் என்ற நல்ல கனவைக் கண்டு கொண்டிருக்கின்றேன்.

அந்தக் கனவு பலிப்பதற்கு இன்றைக்கு இளம் பிள்ளைகளாக இங்கே வந்து ஆடிய அந்தச் சிறுவர்களிலிருந்து பெரியவர்கள் வரையிலே அத்துணை பேரும் பாடுபடவேண்டும்.

ஆனால் ஒன்று – அந்தச் சிறுவர்களை அழைத்து நான் கேட்ட கேள்வி, "படிக்கிறாயா?" என்பதுதான். படிப்பதாகச் சொன்னார்கள். படிப்பதை விட்டுவிட்டு, கல்வியை விட்டுவிட்டு இந்தக் கலையிலே மாத்திரம் நாட்டம் கொண்டு இந்த உற்சாகத்திலே மாத்திரம் தழைக்கக் கூடாது. மற்றவர்களுக்கு உற்சாகம் தருகிற அதேநேரத்தில் அவர்களும் கல்வி கேள்விகளிலே தேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் இங்கே முண்டாசு கட்டிக் கொண்டு – கால்களில் சலங்கை அணிந்து கொண்டு ஆடுகின்ற ஆட்டத்தைப் பார்க்கும்போது ஏற்படுகின்ற உணர்ச்சியைவிட – அவர்கள் கோட்டும் சூட்டுமாக கால்களிலே பூட்சும் தலையிலே ஹேட்டுமாக (Hat) வந்தவர்களேயானால் நான் ஐ.ஏ.எஸ். படிக்கிறேன், ஐ.ஏ.எஸ் தேறிவிட்டேன், நான் கலெக்டராக இருக்கிறேன், நான் இந்தப் பதவியிலே இருக்கிறேன் என்று சொல்வார்களேயானால், இதைத்தான் ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் கண்ட கனவாக, அண்ணா கண்ட கனவாக, நம் நாட்டினுடைய சமுதாயத்திலே அக்கறை கொண்ட






பெரும் தலைவர்கள் கண்ட கனவாக எண்ணுகிறேன். அந்தக் கனவு இப்பொழுது பலிப்பதுடன், அப்படி பலித்த கனவு என் எதிரிலே காட்சி தருவதை கண்டேன். இந்தக் காட்சி நிலையான காட்சியாக எதிர்காலத்திலே உருவாகும் என்ற நம்பிக்கையோடு உங்களை யெல்லாம் வழியனுப்பி வைக்கிறேன்.

நீங்கள் இங்கே ஆடியதையும் பாடியதையும் எங்களோடு அகமகிழ்ந்து உங்களுடைய மன உணர்வுகளைப் பரிமாறிக்கொண்டதையும் மறந்துவிட முடியாது. நீங்கள் எங்கிருந்தோ இங்கே வந்தீர்கள், ஆடினீர்கள் பாடினீர்கள் என்று கருத முடியாது; நம்முடைய குடும்பத்துப் பிள்ளைகள், நம்முடைய குடும்பத்து சிறுவர்கள், பெண்கள் பெரியவர்கள் தமிழகத்திலே நாலாத்திக்கிலும் பரவியிருக்கின்ற நாம் இந்த சங்கமத்திலே சங்கமித்து நம்முடைய சந்தோஷத்தை வெளிப் படுத்தியிருக்கிறோம். வெளிப்படுத்தப்பட்ட சந்தோஷம் நிலைபெறுவதாக என்றென்றும் தமிழகம் வாழ, செழிக்க உங்களுடைய அன்பும் ஆதரவும் என்றென்றும் எங்களுக்கு நீங்கள் தர வேண்டும் நாங்களும் உங்களிடத்திலே எங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறோம். பகிர்ந்து கொண்ட விழாதான் ஐந்து ஆறு நாட்கள் சென்னையில் நடைபெற்ற விழா. இதுகூட சில பேருக்கு பொறுக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். யாருக்கு பொறுத்தாலும், பொறுக்காவிட்டாலும் பரவாயில்லை, நாம் நம்முடைய வேலையை பார்ப்போம் – நம்முடைய மகிழ்ச்சியை கொண்டாடுவோம். பொங்கல் நாள் வந்து போயிருக்கிறது. நம்முடைய மனதிலே இன்பம் பொங்கிக் கொண்டிருக்கிறது. பொங்கல் நாளின் தொடர்ச்சியாக இன்னும் இன்பம் பொங்கக்கூடிய செய்திகள் வர இருக்கின்றன. அவைகளை எதிர்பார்த்து இன்றைக்கே அந்த மகிழ்ச்சிக்கு நம்மை தயார்படுத்திக் கொள்வோம் என்று கூறி விடைபெறுகிறேன். ✶



சென்னை சங்கமத்தின் கடந்த ஆண்டு நிகழ்ச்சிகள் பற்றிய நூலினை
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வெளியிட,
நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திருமதி. கனிமொழி அவர்கள் பெற்றுக் கொண்டார்.
உடன் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. சுரேஷ்ராஜன் அவர்கள் உடன் உள்ளார்.
(9.12.2007)



# விபத்தே இல்லாமல் பேருந்துகளை இயக்கும் ஓட்டுநர் - நடத்துநர்களுக்கு பரிசு வழங்கப்படும்!

சென்னையில் 1,094 புதிய பேருந்துகளை இயக்கி வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் அறிவிப்பு!

“இந்த விழாவிற்கு, தலைமையேற்றிருக்கின்ற தம்பி ஸ்டாலின் அவர்கள் “ஒரு திருவிழா” என்று குறிப்பிட்டார். நான் என்னுடைய இல்லத்திலே இருந்து இந்த இடத்திற்கு வந்து சேருகிற வரையில் வழியெங்கும் நிறுத்தப்பட்டிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகளைப் பார்த்தபோது, திருவிழா அல்ல; தெருவிழாவாகவே இருந்தது. அந்தத் தெரு விழாவை இன்றைக்கு நிகழ்த்திக் காட்டியிருக்கின்ற போக்குவரத்துத் துறை அமைச்சர் தம்பி நேரு அவர்களுக்கும், அந்தத் துறையின் அதிகாரிகளுக்கும் நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் முறையாக நம்முடைய போக்குவரத்துக் கழகத்திற்கு ஆயிரம் பேருந்துகள் வாங்கப்பட்டு அவைகள் எல்லாம் சென்னை நகரத்திலேயிருந்து ஒவ்வொரு பகுதிக்கும் பிரித்துக் கொடுக்கப் படுகின்றன என்ற இந்த நிகழ்ச்சியை விழா என்று தான் சொல்ல வேண்டும். ஒன்றை மாத்திரம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விழா என்பது இன்று நடக்கின்ற நிகழ்ச்சி மாத்திரமல்ல, பேருந்துகளும் “விழாமல்” செல்ல வேண்டும். அந்த வகையில் நம்முடைய ஓட்டுநர்கள், நடத்துனர்கள், பயணிகள் அனைவரும் ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென்று நான் தொடக்கத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

பேருந்துகளுடைய எழிலும், அதிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற வசதிகளையும்






பார்க்குமிடத்து, நான் வருகின்ற வழியிலே பார்த்த பேருந்துகள் ஒன்றுக்கொன்று அழகில், ஒன்றை மிஞ்சக்கூடிய அளவிற்கு வண்ணங்களாயினும், இருக்கைகளாயினும், தோற்றங்களாயினும் இருப்பதை என்னால் காண முடிந்தது.


என் காரிலேயிருந்து இறங்கி, ஒரு பேருந்திலே கொஞ்ச நேரம் அமர்ந்து பயணம் செய்யலாமா என்ற ஆசை கூட எனக்கு ஏற்பட்டது. அந்த ஆசையையும் தம்பி நேரு இன்றில்லாவிட்டாலும் என்றைக்கோ ஒரு நாள் நிறைவேற்றி வைப்பாரென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் நாங்கள் எல்லாம் பேருந்துப் பயணம் செய்து, இந்தப் பேரியக்கத்தை வளர்த்தவர்கள் தான். அதனால் பேருந்திலே செல்வதென்பது ஒன்றும் எங்களுக்கு கௌரவக் குறைவான விஷயமல்ல. அதுவும் பேருந்தை நடத்துகின்றவர்கள், ஓட்டுகின்றவர்கள் எங்களுடைய அன்புக்குரிய தொழிலாளர்கள் அவர்களோடு இணைந்து ஒரு ஊரிலேயிருந்து இன்னொரு ஊருக்கோ ஒரு பகுதியிலே இருந்து இன்னொரு பகுதிக்கோ செல்வதென்பது சாதாரண வாய்ப்பல்ல, அந்த வாய்ப்பை நான் நிச்சயமாக நம்முடைய தொழிலாளத் தோழர்களோடு இணைந்து பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, எல்லா பேருந்துகளையும், இந்தப் பேருந்து தொழிலையும் தேசியமயமாக ஆக்குவதென்ற சட்டத்தைக் கொண்டு வந்து, அதனை நிறைவேற்றி, தமிழகத்திலே எல்லா பேருந்துகளும் தேசியமயம் என்ற ஒரு உன்னதமான நிலையை உருவாக்கியது. அதற்கு முதன் முதலாக வழிகாட்டியவர் என்று எடுத்துக்கொண்டால், காங்கிரஸ் ஆட்சியில் நண்பர் வெங்கட்ராமன் அவர்கள், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது கன்னியாகுமரிக்கும் சென்னைக்கும் மாத்திரம் உள்ள நீண்ட தூரத்தை தேசியமயமாக ஆக்கி, அங்கே ஒரு பஸ் – சென்னை – கன்னியாகுமரி போக்குவரத்து மாத்திரம் சர்க்காருக்குச் சொந்தமான பேருந்து போய்க் கொண்டிருந்தது.

அதற்குப் பிறகுதான் தி.மு.கழக ஆட்சி அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்த பிறகு, அதை விரிவுபடுத்த வேண்டுமென்று நாங்கள் திட்டமிட்டு அதனை நிறைவேற்றினோம். அதை நிறைவேற்றுகின்ற வாய்ப்பு அறிஞர் அண்ணா அவர்களால் எனக்கு அளிக்கப்பட்டது. ஏனென்றால், அப்போது நான் தான் போக்குவரத்துத் துறை அமைச்சர், இன்றைக்கு நேரு இருக்கின்ற இடத்திலே அன்றைக்கு நான் அறிஞர் அண்ணா அவர்களால் அமர்த்தப்பட்டேன்.

### பேருந்துகள் தேசிய மயம்

அந்தப் போக்குவரத்துத் துறை தேசியமயமாக ஆக்கப்பட வேண்டுமென்று எண்ணமிட்டு, அண்ணா அவர்கள் வாழ்ந்துநம்மையெல்லாம் ஆண்டு கொண்டிருந்த அந்த இரண்டாண்டு காலத்தில் அது முழுமையாக நிறைவேறாவிட்டாலுங்கூட, அண்ணாவின் மறைவிற்குப்



பிறகு அந்தப் பொறுப்பை ஏற்கின்ற வாய்ப்பு எனக்கு வந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா போக்குவரத்துக் கழகங்களையும் தேசியமயமாக ஆக்குவதென்ற முடிவு அறிவிக்கப்பட்டது.

அந்த முடிவின்படி டி.வி.எஸ், எஸ்.ஆர்.வி.எஸ், ராமன் அண்ட் ராமன், சக்தி விலாஸ், ஏ.பி.டி. (பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் ஆதிக்கத்திலேயிருந்த அந்தப் பெரிய நிறுவனம்) இப்படி பல பெரிய நிறுவனங்களை நாங்கள் அணுகிய போது, நீங்கள் எல்லாம் தேசிய மயக்கொள்கைக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டபோது, அவர்களும் மனம் கோணாமல், அவர்களே வந்திருந்து தேசியமயக்கொள்கை, தி.மு.கழக ஆட்சி நிறைவேற்றட்டும் என்பதற்கு ஒத்துழைப்புத் தருகின்ற வகையில் நடந்து கொண்டார்கள். அந்த விழாக்களுக்கு அவர்களே வந்திருந்தார்கள்.

அந்தப் பேருந்துகளை தேசியமயமாக ஆக்குவதற்கு திட்டமிட்டு, தேதி குறித்தபோது அந்த விழாவிற்கு அதன் உரிமையாளர்கள் எல்லாம் வந்திருந்தார்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள். அதைப் போலவே எதிர்காலத்தில் சில தொழில்களை அரசுடைமையாக ஆக்குவதாக நேற்றைக்குக் கூட அறிவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெறும்போது, அந்தத் தொழிலதிபர்கள் வந்திருந்து எங்களையும் உங்களையும் வாழ்த்துவார்கள் என்றுநான் நம்புகிறேன். எனவே நேற்றைய அறிவிப்புக்கு இன்றையதினம் மேலும் அதனை நிச்சயப்படுத்துகின்ற வகையில் உங்களிடம் அதையும் கூறியிருக்கிறேன்.

எஸ்.ஆர்.வி.எஸ்., ராமன் அண்ட் ராமன், டி.வி.எஸ்., ஏ.பி.டி., போன்ற இவைகள் எல்லாம் சில மாவட்டங்களில் அவர்களைத் தவிர வேறு எந்தப் பேருந்துகளும் ஓடாது என்ற அளவிற்கு பெரிய பெரிய பேருந்து முதலாளிகளாக இருந்தார்கள், பெரிய பெரிய நிறுவனங்கள், அந்த நிறுவனங்களைப் பரிபாலித்தவர்கள். அவர்களிடம் நாங்கள் ஒன்றும் வம்பு செய்யவில்லை. பலாத்காரமான முறையில் அந்தப் பேருந்துகளையெல்லாம் எடுக்கவில்லை. நீங்கள் எங்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்.

**அமைதிப் புரட்சி**

நாங்கள் ஏன் இவைகளை அரசுடைமைகளாக ஆக்குகிறோம் என்றால், சாதாரண ஏழையெளிய மக்கள், பாட்டாளி மக்கள், பட்டினக்கரைகளிலே மாத்திரமல்லாமல், பட்டிக்காடுகளிலே வாழ்கின்ற மக்கள், வசதியில்லாமல் – போக்குவரத்து வசதி இல்லாமல், கால் நடையாக ஒரு ஊருக்குச் செல்ல வேண்டுமென்ற அந்தத் துன்ப துயரத்திலே சிக்கியிருக்கின்ற மக்கள் – அவர்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதி வேண்டும் என்பதற்கு நீங்கள் எங்களோடு – நாங்கள் ஆற்றுகின்ற இந்தக் காரியத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டபோது அவர்கள் யாரும் அட்டியின்றி அதற்கு ஆதரவு தந்தார்கள். ஆதரவு தந்ததோடு, ஒத்துழைப்பும்



கொடுத்தார்கள். அதனால் தமிழகத்திலே இந்த தேசியமயமாக ஆக்குகின்ற கொள்கை சண்டை சச்சரவின்றி எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இன்றி சுமூகமாக, அமைதியாக – அமைதிப் புரட்சி என்பார்களே, அந்த அமைதிப் புரட்சி போல நிறைவேறியதை அனைவரும் அறிவீர்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்றளவும் தமிழகத்திலே இந்தப் போக்குவரத்துத் தொழிலுக்காக நாம் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகள் படிப்படியாக நிறைவேறுகின்ற வகையில் உங்கள் அனைவரது ஒத்துழைப்பும், குறிப்பாக இந்த நிறுவனத்திலே பணியாற்றுகின்ற என் அருமை பாட்டாளி மக்களுடைய ஒத்துழைப்பும் – ஓட்டுநராக இருந்தாலும், நடத்துனராக இருந்தாலும் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் இன்றைக்கு இந்தப் போக்குவரத்து நிறுவனத்துக்கு இருக்கின்றது. அதற்காக இந்த நல்ல விழாவிலே உங்கள் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**கடமையும் உரிமையும்**

நன்றி மாத்திரம் கூறி – இடைக்காலத்திலே உங்களை வீட்டிற்கு அனுப்பியதைப் போல அனுப்ப நான் தயாராக இல்லை. கடமைகளை ஆற்றுகிறீர்கள், உரிமைகளைப் பெறுங்கள் என்ற அதைத் தான் நான் தொழிலாளர்கள் பிரச்சினையில் கடைப்பிடித்து வருகிறவன். ஆகவே கடமையை ஆற்ற வேண்டும், உரிமைகளையும் பெற வேண்டும். கடமைகளை ஆற்றுகின்றவர்களுக்கு உரிமை அளிக்க முடியாது என்று கூறுகிற ஒரு நிறுவனம் நிச்சயமாக தொடர்ந்து வாழ முடியாது. எனவே அந்த நிறுவனம் வாழ வேண்டுமேயானால், அந்த நிறுவனம் செழிப்பாக இருக்க வேண்டுமேயானால், அது தன்னுடைய ஆற்றலோடு விளங்க வேண்டுமேயானால், அந்த நிறுவனத்தைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள், அந்த நிறுவனத்தை நம்பியிருக்கின்ற தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். அந்த ஒத்துழைப்பைப் பெற அவர்கள் பட்டினி கிடந்து கடமையாற்ற வேண்டுமென்றில்லை. கடமையைச் செய், விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாதே என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் நான் சொல்கிறேன், கடமைகளைச் செய், உரிமைகளைப் பெறு என்பது தான் தொழிலாளர்களுக்காக நான் எடுத்துச் சொல்கின்ற பொன்மொழி. கடமையை மாத்திரம் செய், கடவுள் உன்னைக் காப்பாற்றுவார் என்று வேதாந்தம் பேசி உங்களை ஏமாற்ற விரும்பவில்லை.

மனிதர்கள், மனிதர்கள்தான், இன்றைக்கு தொழிலாளியாகவும், பாட்டாளியாக இருந்து பணியாற்றுபவர்களாகவும் ஒரு நிறுவனத்தை உருவாக்குபவர்களாகவும், அந்த நிறுவனத்தைச் செயல்படுத்துகிறவர்களாவும் இருக்கிறார்கள் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். எனவே அவர்களுடைய நன்மை தீமையில் நமக்குப் பங்கு உண்டு. அந்தக் காரணத்தினாலே தான் இங்கே தம்பி நேரு அவர்கள் இரண்டு பட்டியல் சொன்னார். ஒரு பட்டியல் – பதவி உயர்வு – இன்னொன்று வாரிசுதாரர்களுக்கு வேலை. பணியாற்றியவர் பணிக் காலத்திலே இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திலே உள்ள வழித்தோன்றல்களுக்கு வேலை கொடுப்பது ஒரு உன்னதமான கொள்கை. அது சில பேருக்குப் பிடிக்காது. வாரிசுதாரர்களுக்கு வேலையா என்பார்கள். வாரிசு என்ற வார்த்தையே சிலருக்குப் பிடிக்காது. அவர்களுக்கு பிடித்ததெல்லாம் வாரிசு என்றால் அவர்கள் எண்ணியிருப்பது தாங்கள் பெற்ற பிள்ளைகள் அல்ல, வழித் தோன்றல்கள் அல்ல, சேர்த்துக் கொண்டது தான் வாரிசு என்றிருக்கின்ற அந்த வாரிசுகளை அல்ல நான் சொல்வது, ஒரு குடும்பத்திலே ஒரு தொழிலாளி, ஒரு பாட்டாளி நடத்துநராகவோ, ஓட்டுநராகவோ இருந்து அவர்கள் பணிக் காலத்தில் மறைந்து விட்டால், அப்படி மறைந்து விட்டவரின் பிள்ளைக்கு, வாரிசுதாரருக்கு வேலை கொடுத்து அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதை ஒரு கடமையாக இன்று நேற்றல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற அந்தக் காலத்திலிருந்து இதுவரையிலே ஏற்றுக்கொண்டு அந்தப் பணியை ஒழுங்காக – உண்மையாகச் செய்து வருகின்றது. நான் கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பையேற்ற போது பத்திரிகைகளில் எழுதியிருந்தேன். நிருபர்களிடம் எல்லாம் விளக்கிக் காட்டியிருந்தேன்.

**வாழ்வு அளித்த கரம்**

எத்தனை கோப்புகள் முதலமைச்சரின் கையெழுத்துக்காகப் போய் – கையெழுத்துப் பெறாமல் – திருப்பி அனுப்பப்பட்டன – அதிலும் அவைகள் எப்படிப்பட்ட முக்கியமான கோப்புகள்? ஒரு நிகழ்வில், ஒரு தாசில்தாருடைய உயிர் போய்விடுகிறது, கொல்லப் படுகிறார். அப்படி கொல்லப்படுகிற தாசில்தாருடைய பிள்ளைக்கு அரசில் ஒரு வேலை கொடுக்கலாம் என்று அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். எப்போது? மூன்றாண்டுகளுக்கு முன்பு. அப்போது நாம் ஆட்சியிலே இல்லை. ஆட்சியிலே அப்போது இருந்தவர்கள் யார் என்று உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. உங்களுக்கே தெரியும். அந்தப் பரிந்துரை இரண்டு அல்லது மூன்றாண்டு காலம், அன்றைய முதலமைச்சருடைய அறையிலேயே இருந்து, அந்தக் கோப்பு உயிர் பெறாமல், அந்த வாரிசுதாரருக்கு வேலையே கொடுக்காமல் – கடைசி வரையிலே, அந்த ஆட்சி மாறுகின்ற வரையிலே, அந்தப் பரிந்துரை கவனிக்கப்படாமல், அதுவும் சாதாரண ஒரு பரிந்துரை அல்ல, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை – அதுவும் ஏனோ தானோவென்று ஒருவருக்கல்ல, ஒரு பிரச்சினையிலே சர்க்காரின் கடமையை ஆற்றிக் கொண்டிருந்த நேரத்தில் உயிரிழந்த ஒரு குடும்பத்திற்கு, அவருடைய வாரிசுதாரருக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரே சிபாரிசு செய்த பிரச்சினையிலே அந்தக் கோப்பு, கிடப்பிலேயே போடப்பட்டு எடுத்து அதிலே கையெழுத்துப் போடாமல் கிடந்து – அந்தக் கோப்பு எப்போது கருணாநிதி வருவான் என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து, நான் வந்தபிறகு அந்தக் கோப்பு என் கையை

முத்தமிட்டு, நீயாவது என்னைக் காப்பாற்றமாட்டாயா என்று கேட்டபோது, அந்தக் கோப்பிலே கையெழுத்திட்டு, அந்தக் குடும்பத்திலே அந்த வாரிசுக்கு வாழ்வு அளித்த கரம் தான் இந்தக் கரம்.

அப்படி ஒரு பிள்ளைக்கல்ல அப்படி பல கோப்புகள் தேங்கிக் கிடந்து – தேங்கிக் கிடந்தல்ல – இன்னும் நம்மைக் கவனிக்கவில்லையே என்று ஏங்கிக் கிடந்த அந்தக் கோப்புகளையெல்லாம் வாரியெடுத்து, அவர்களுக்கு வாழ்வளித்த அரசு இன்றைக்கு உங்களால் உருவாக்கப்பட்ட தி.மு.கழக அரசு என்பதை நான் மிகுந்த உருக்கத்தோடு உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

**1,094 புதிய பேருந்துகள்**

அதனால்தான் இங்கே அத்தகைய வாரிசுதாரர்களை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கான அடையாளச் சீட்டுகளை இங்கே அளித்தபோது நான் உள்ளபடியே புளகாங்கிதமடைந்தேன், பூரிப்படைந்தேன். இப்படி ஈகை, இரக்கம் இவைகளோடு இந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை கவனிக்கின்ற ஒரு அமைப்பாகவும் நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் இருந்து வருகின்றது. இங்கே மொத்தப் போக்குவரத்துக் கழகங்கள் ஏழு. அதிலே பணியாற்றுபவர்கள் ஓரிருவர் அல்ல, நூறு பேர் இருநூறு பேரல்ல, இங்கே பணியாற்றுபவர்கள் 1, 11,699 பேர். மொத்த வழித் தடங்கள் 8,903. மொத்தப் பேருந்துகள் 18,707. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த 18 மாதங்களில் இயக்கப்பட்டுள்ள புதிய பேருந்துகள் 4,454 இன்று வழங்கப்படும் பேருந்துகள் 1,094. இதையும் சேர்த்தால் 5,548 பேருந்துகள்.

இவற்றில் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் 500; அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் 50; விழுப்புரத்திலுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் 100; சேலத்திலுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் 142; கோவையிலுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் 112; கும்பகோணத்திலுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் 120; மதுரையிலுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் 70; மொத்தம் புதிய பேருந்துகள் 1,094. இன்றைக்கு இவைகள் எல்லாம் இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பிரித்துத் தரப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**3 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு**

“வேலைவாய்ப்பு என்ன ஆயிற்று? டி.வி கொடுப்பதெல்லாம் பிறகு இருக்கட்டும் – அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை: எங்கள் வீட்டிலே இல்லாத டி.வியா? என்ன அளவில் வேண்டும்–எல்லா டி.வியும் எங்கள் வீட்டில் இருக்கிறது. உங்களை யார் டிவி கேட்டது? வேலை என்ன ஆயிற்று?” என்று சில பேர் இன்றைக்கு நம்மைப் பார்த்துச் சிலிர்க்கிறார்கள். சிரிக்கிறார்கள் அல்ல – சிலிர்க்கிறார்கள். அந்தச் சிலிர்க்கின்ற நண்பர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். வேலை என்னாச்சு? 2006க்குப் பிறகு நாங்கள் பதவியேற்ற பிறகு கடந்த மே திங்கள் 13 ஆம் தேதிக்குப் பிறகு இதுவரையில் இந்தப் போக்குவரத்துத் துறையில் மாத்திரம் ஓட்டுநர்களாக 8,372 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் எண்ணிக்கை இல்லையா? நடத்துனர்களாக மாத்திரம் 5,991 பேர். இரண்டும் சேர்த்து மொத்தமாக 14,363 பேருக்கு இந்த ஒரு நிறுவனத்தில் மாத்திரம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால், தமிழ்நாடு முழுவதும் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் இலட்சக்கணக்கான மக்கள் ஏறத்தாழ மூன்று இலட்சம் பேர் இந்த 18 மாதக்





காலத்தில் வேலைவாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எங்கேயிருந்தார்கள், அவர்களுக்கெல்லாம் வழியிலே குறுக்குச் சட்டம் போட்டு உள்ளே வராதே என்று தடுக்கப்பட்டிருந்தது. எங்கே வருகிறாய் ? வேலை தேடி வருகிறேன். வேலை தேடுவதே குற்றம், வேலை தேடி வருவது அதைவிடப் பெரிய குற்றம், வேலை கொடுத்தால் அதை விடப் பெரிய குற்றம். சட்டமே போட்டிருக்கிறோம். வேலை நியமனத் தடைச் சட்டம் எங்கள் ஆட்சியிலே இருக்கிறது என்று சட்டம் போட்டு வேலை கொடுக்க முடியாது என்று விரட்டியடித்த ஆட்சி – கடந்த காலத்திலே நடைபெற்றது. இன்றைக்கு வேலை தருகிறோம், வேலை தருகிறோம் என்று வேலைவாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் நடைபெறுகின்ற இந்த விழாவிற்குப் பிறகு சில பேர் விமர்சிப்பார்கள். ஆ, என்ன தான் போக்குவரத்துக் கழகம் இருக்கட்டும், ஆனால் முன்பு இருந்த வருமானத்தை இவர்களால் பெற முடியுமா? என்று கேட்பார்கள். இதைக் கேட்டவுடன், கேட்டவர்கள் சாதாரணமானவர் அல்லவே? இப்படியே கேட்டுக் கேட்டுப் பழகி, நம்முடைய ஆட்சிக்கு ஒரு களங்கம் வரவேண்டுமென்று கருதி பிரச்சாரம் செய்கிறவர்கள் அல்லவா? அதனால் அதிலும் உண்மை இருக்குமோ என்று நீங்கள் கருதலாம். நான் உங்களுக்கு கூறுகிறேன்.

**ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் அதிக வசூல்**

தி.மு.க. ஆட்சியில் கிடைக்கின்ற வசூல் தொகை எவ்வளவு? பஸ் கட்டணம் மூலமாக, ஏற்கெனவே இருந்த ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் ஒரு நாள் வசூல் தொகை 10 கோடியே 74 இலட்சம் ரூபாய்.

தி.மு.க. ஆட்சியில் ஒரு காசுகூட கட்டணத்தை உயர்த்தாமல் ஒரு நாள் வசூல் தொகை 11 கோடியே 35 இலட்சம் ரூபாய்.

என்ன பத்துக்கும் பதினொன்றுக்கும் பெரிய வித்தியாசம் என்று நினைக்கலாம். ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் அதிகம் வசூல் என்றால், ஆண்டுக்கு 365 நாளைக்கு 365 கோடி ரூபாய் அதிகமாக வசூல். அதனால் தான் 200 கோடி ரூபாய்க்கு 1,000 பேருந்துகளைப் புதிதாக இன்றைக்கு வாங்கியிருக்கிறோம்.

இந்த ஆயிரம் பேருந்துகள் சென்னையிலே மாத்திரமல்ல, பட்டிதொட்டியெல்லாம், பட்டினக்கரையில் கிராமப்புறங்களில் எல்லாம், குக்கிராமங்களில் எல்லாம், சென்று போக்குவரத்தைச் சீர்செய்து, செம்மையாகச் செய்து, போக்குவரத்தின் காரணமாக மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போவதற்கே ஓட்டுநர்களும், நடத்துநர்களும் உதவி செய்ய வேண்டுமேயல்லாமல், அவர்கள் எங்கேயோ இல்லாத ஓரிடத்திற்கு யாரும் போகக் கூடிய சூழ்நிலையை உருவாக்காமல் காப்பாற்ற வேண்டுமென்று தான் நான் நம்முடைய அருமைத் தொழிலாளத் தோழர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன், வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் காலையிலே எழுந்தால் மாலைக்குள் இன்னும் சொல்லப்போனால் மதியம் உணவு அருந்தும் நேரத்திலே கூட – தொலைக்காட்சியைப் போட்டு விட்டு எதிரே உட்கார்ந்தால் இன்றைக்கு விபத்து– மூன்று பேர் பலி – நம்முடைய அரசாங்கப் பேருந்தும், தனியார் லாரியும் மோதிக் கொண்டு மூன்று பேர் மரணம் – என்று செய்திகள் வருகின்றன. அந்தச் செய்திகள் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். வராமல் ஜாக்கிரதையாகப் பேருந்துகளை நடத்துவதற்கு பழகிக்கொள்ளுங்கள். அந்த நல்ல எண்ணத்தோடு பேருந்துகளை ஓட்டுங்கள், நடத்துங்கள் என்று தொழிலாளர்கள் அத்தனை பேரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த விழாவில் நான் உங்களுக்கெல்லாம் ஒரு செய்தியைச் சொல்கிறேன். நீங்கள் அவ்வாறு விபத்தே இல்லாத அளவிற்கு ஒரு ஓட்டுநர் – ஒரு நடத்துனர் – ஒரு பேருந்தில் எங்களுக்குக் கிடைப்பார்களேயானால் அவர்களுக்கு நாங்கள் தருகின்ற பரிசு என்ன என்பதை இப்போதல்ல – நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே அதனை அறிவிப்போம். விபத்தே இல்லாமல் ஓட்டுவர்களுக்கு – யாருக்கும் காயம் ஏற்படுத்தவில்லை – யாருடைய உயிரும் பலியாகவில்லை – அப்படிப்பட்ட விபத்தே இல்லாத அளவிற்கு நாங்கள் பேருந்துகளை ஓட்டினோம் என்ற சிறப்பைப் பெறுகின்றவர்களை நான் வணங்குவேன், வணங்குவது மாத்திரமல்ல வாழ்த்துவேன், வாழ்த்துவது மாத்திரமல்ல, அவர்களுடைய குடும்பம் ஓங்கி உயர்ந்து வாழ்கின்ற அளவிற்கு என்ன பரிசளிக்க முடியுமோ அந்தப் பரிசை வரவிருக்கின்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிப்பேன் என்பதையும் கூறி, இந்த அளவில் நம்முடைய தம்பி நேரு அவர்களின் பெருமுயற்சியினாலும், இந்தத் துறையின் அதிகாரிகளின் உதவியினாலும் நடைபெறுகின்ற இந்தப் பேருந்துகளை வழங்கக் கூடிய அளவிற்கு ஒரு சிறந்த நிருவாகத்தை நடத்திய அவர்களுடைய செயல்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் வழங்கி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்”.

சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில்
**3.1.2008** அன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் புதிய பேருந்துகளை
இயக்கி வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை.



# தமிழகம் முழுவதும் 70 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்

**போ**லியோ நோயை முற்றிலும் ஒழிப்பதற்காகத் தமிழகம் முழுவதும் பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதனால் அண்மைச் சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் போலியோ நோய் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், கருநாடகம், ஆந்திரம் போன்ற அண்டை மாநிலங்களில் குழந்தைகள் போலியோவினால் பாதிக்கப்பட்டுள்ளதை யடுத்து, அந்த மாநிலங்களிலிருந்து போலியோ நோய்க் கிருமிகள் தமிழகத்திற்குப் பரவும் வாய்ப்பு உள்ளதால், போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாம்களை இந்த ஆண்டிலும் மாநிலம் முழுவதும் நடத்திட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் 6.1.2008 மற்றும் 10.2.2008 ஆகிய இரு நாட்களில் போலியோ சொட்டு மருந்து போடும் சிறப்பு முகாம்கள் தமிழகம் முழுவதும் நடைபெறுகின்றன.

அரசுத் துறைகள், ரோட்டரிச் சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் துணையுடன், போலியோ சொட்டு மருந்து வழங்கும் இத்திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 6.1.2008 அன்று அவரது இல்லத்தில் குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கித் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைச் செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்

# பொங்கல் போனஸ்

## வழங்க ஆணை

**த**மிழக அரசின் பணியாளர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சித்துறை பணியாளர்கள் ஆகியோருக்கு 1999–2000 ஆண்டிற்கான 30 நாட்கள் பொங்கல் போனசும், சிறப்பு போனசாக ரூ.825ம், 2000–2001 இல் வழங்கப்பட்டது. 2000–2001 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட இந்தச் சலுகையினை இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மீண்டும் 2005–2006 ஆம் ஆண்டுக்கான பொங்கல் போனசும், சிறப்பு போனசுமாக 2007 ஆம் ஆண்டு பொங்கலையொட்டி வழங்கியது.


2006–2007 ஆம் ஆண்டிற்கும் இந்தச் சலுகையினைத் தொடர்ந்து வழங்குவது என அரசு முடிவெடுத்து 'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்கள் அனைவருக்கும் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையாக போனஸ் வழங்கிடவும், 'ஏ' மற்றும் 'பி' பிரிவு அலுவலர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட சிறப்பு போனஸ் ரூ.825 என நிர்ணயித்து பத்து ஆண்டுகளாகிவிட்டதாலும், விலைவாசி உயர்வினை கருத்தில் கொண்டும் சிறப்பு போனசை ரூ.1000 என உயர்த்தி வழங்கிடவும், அதேபோல் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட பொங்கல் பரிசான ரூ.150–னை உயர்த்தி ரூ.300 என வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்கள் அனைவருக்கும் மாதச் சம்பளம் 2,500 ரூபாய் என்ற அளவிலேயே கணக்கிடப்பட்டு போனஸ் வழங்கப்படும்.

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் இந்த போனஸ் வழங்கப்படும்.

ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்த சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதிநேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (Anganwadi Workers), வரையறுக்கப்படாத ஊதிய விகிதத்தில் (Non-standard time scale of pay) உள்ள சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (Anganwadi Workers) மற்றும் கிராம உதவியாளர்கள் (Village Assistants), உட்பட்ட ஒப்பந்தப் பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையிலான தற்காலிக உதவியாளர்கள் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள்உள்ளிட்ட நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு மிகை ஊதியமாக ரூ.1,000 வழங்கப்பட்டது.

இந்த ஆணையின் மூலம் அரசுக்கு இந்த ஆண்டில் சுமார் ரூ.267.08 கோடி செலவாகும்.



ஊக்கத் தொகையாக ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 264 பணியாளர்களுக்கு மொத்தம் ஏறத்தாழ ஏழு கோடி ரூபாய் வழங்குவதற்கான ஆணையை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிறப்பித்துள்ளார்கள். இந்தத் தொகை அனைத்துத் தொழிலாளர்களுக்கும் 10.1.2008 அன்று வழங்கப்பட்டது.



இதனால் சுமார் 12.68 இலட்சம் அரசு அலுவலர்களும், 5.38 இலட்சம் ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களும் பயனடைந்துள்ளார்கள்.

## பொங்கல் திருநாளை முன்னிட்டு போக்குவரத்துக் கழக பணியாளர்கள் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேருக்கு ஊக்கத்தொகை

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு ஆகியவற்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் செயல்திறன் ஊக்கத் தொகை, கடந்த கால ஆட்சியில் ஐந்தாண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்ததை மீண்டும் கடந்த ஆண்டு முதல் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்குவதென்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு அறிவித்து அவ்வாறே வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டும் 2007ஆம் ஆண்டில் 91 நாட்கள் முதல் 150 நாட்கள் வரை பணிபுரிந்த பணியாளர்களுக்கு 85 ரூபாய் வீதமும், 151 நாட்கள் முதல் 200 நாட்கள் வரை பணிபுரிந்த பணியாளர்களுக்கு 195 ரூபாய் வீதமும், 200 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த பணியாளர்களுக்கு 625 ரூபாய் வீதமும் செயலாக்க

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் 350 ஊக்கத்தொகை

சென்ற ஆண்டு பொங்கல் விழாவின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு செயலாக்க ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று செயலாக்க ஊக்கத்தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் 'சி' மற்றும் 'டி' பிரிவுப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறுவோர், நேரடி நெல் கொள்முதல் நிலையப் பணியாளர்கள், சுமை தூக்குவோர், தற்செயல் பணியாளர்கள் என, மொத்தம் 16,857 பணியாளர்களுக்கு 2006–2007ஆம் ஆண்டிற்கான செயலாக்க ஊக்கத் தொகையாக பணியாளர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 350 வீதம் மொத்தம் 59 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

### கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு கருணைத்தொகை

கூட்டுறவு நிறுவனங்களில் தீபாவளிப் பண்டிகையின் போது போனஸ் பெற தகுதி பெறாத ரூ.5300–150–300க்கு மேற்பட்ட சம்பள விகிதத்தில் பணிபுரியும் ('A' மற்றும் 'B' பிரிவு) பணியாளர்களுக்கு கடந்த 2007ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ரூ.825 கருணைத் தொகை வழங்கப்பட்டது. இந்த ஆண்டு தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு இக்கருணைத்தொகை ரூ.1000 ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டு வழங்கப்பட்டது.

❀ ❀ ❀



# ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிக விரைவில் நிறைவேற்றப்படும்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு




நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 6ஆவது கட்டமாக இலவச நிலம் வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கிருஷ்ணகிரி ஒன்றியம், ஆலப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 1.1.2008 அன்று நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு 6ஆவது கட்டமாக நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு 2 ஏக்கர் நிலமும், இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்கினார். அதைத் தொடர்ந்து 24 கோடியே 92 இலட்சத்து 40 ஆயிரம் செலவில், 1,213 பணிகளுக்கு புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தார். 61 கோடியே 94 இலட்சத்து 87 ஆயிரம் செலவில் 51 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

விழாவில் பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் 9,389 பயனாளிகளுக்கு 13 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

"இந்த நிகழ்ச்சியின் நோக்கம் பற்றி எனக்கு முன்னால் பேசிய அனைவரும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 6–வது கட்டமாக நிலம் வழங்கும் விழாவும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் விழா என ஒருங்கிணைத்து சிறப்பான விழாவாக நடக்கிறது. இந்த விழாவில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட அனைத்து வாக்குறுதிகளையும் கடந்த தேர்தலின்போது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவராக இருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டார். தேர்தல் அறிக்கைகளை மேடையில் பேசுவதோடு அல்லாமல், பத்திரிகைகளில் அறிக்கை கொடுப்பதோடு நிற்காமல், தமிழக மக்களுக்கு புத்தகமாக அச்சிட்டு வழங்கினோம்.

அந்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட வாக்குறுதிகளில் 95 சதவீதத்தை நிறைவேற்றி விட்டோம். இதை நீங்களே கண்கூடாகப் பார்க்கிறீர்கள். இதில் ஒன்றுதான் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம்.

இந்தத் திட்டம் தந்தை பெரியார் பிறந்த நாளில் 2006ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இன்று 6ஆவது கட்டமாக வழங்கப்படுகிறது.

இதேபோல் கடந்த ஜூலை மாதம் சென்னையில் நடந்த அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 3 இலட்சம் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்.

அதன்படி கடந்த மாதம் வரை 1 இலட்சத்து 92 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மேலும் 2 இலட்சத்து 50 ஆயிரம் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவுள்ளது.

தி.மு.க ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதல் பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்து முதல்வர் விளக்கினார். வறண்ட மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க 616 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை அறிவித்து, அதன் அடிக்கல் நாட்டு விழாவிலும் முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்றார்.

இதேபோல் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் முக்கிய வேண்டுகோள் ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த் திட்டம் என்பதை நான் மறுக்கவில்லை.

இதற்காகத் தேவைப்படும் 1,334 கோடி ரூபாய் நிதியை ஜப்பான் நாட்டு வங்கி அதிகாரிகளும், என்ஜினீயர்களும் நேரடியாக இந்த மாவட்டத்திற்கே வந்து ஆய்வுகளை நடத்தி முடித்துச் சென்றுள்ளனர். தற்போது இந்தப் பணி இறுதி கட்டத்தில் உள்ளது.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற பெரும்பாலான பணிகள் முடிந்துவிட்டது. இந்தத் திட்டத்திற்கான நிதி ஜப்பான் நாட்டில் இருந்து கிடைக்காவிட்டாலும், சட்டமன்றத்தில் முதல்வர் அறிவித்தது போல இதற்கான நிதியை தமிழக அரசே வழங்கி இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா ஜனவரி மாத இறுதியிலோ அல்லது பிப்ரவரி மாதத்திலோ கண்டிப்பாக நடைபெறும். இதில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு திட்டத்தை தொடங்கி வைப்பார். மக்களின் முக்கிய பிரச்சினைகளை தமிழக அரசு ஆராய்ந்து, சிந்தித்து தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. ஜெயலலிதா இலவச கலர் டி.வி.க்களுக்கான டெண்டரில் மீதமான தொகை எங்கே உள்ளது? எனவும், அதில் முறைகேடு நடந்திருப்பதாகவும் குற்றம்சாட்டி உள்ளார்.

இதற்கு இந்த மேடையில் நான் விளக்கம் தருகிறேன். தமிழகத்தில் கலர் டி.வி. வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு முதற்கட்டமாக 30 ஆயிரம் கலர் டி.வி.க்கள் வழங்கப்பட்டன. 2ஆவது கட்டமாக 25 இலட்சம் கலர் டி.வி.க்கள் வாங்கப்பட்டு ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 10 ஆயிரம் கலர் டி.வி. என வழங்கப்பட்டன.

தற்போது 3ஆவது கட்டமாக 30 இலட்சம் பேருக்கு இலவச கலர் டி.வி. வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, இதற்கான டெண்டர் கோரப்பட்டது. இந்த டெண்டரில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த, மாநிலத்தை சேர்ந்த நிறுவனங்கள் கலந்து கொண்டன. இந்த டெண்டரை பிரிப்பதும், தீர்மானிப்பதும், அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் தான்.

3ஆவது கட்டமாக இலவச டி.வி. வழங்க விடப்பட்ட டெண்டரில் கடந்த முறையை விட 162 கோடியே 90 இலட்சம் ரூபாய் மீதமானது. இந்த தொகைதான் முறைகேடு செய்யப்பட்டதாக ஜெயலலிதா அறிக்கை விட்டிருக்கிறார்.

மீதமான அந்த நிதியைக் கொண்டு கூடுதலாக 4 இலட்சத்து 25 ஆயிரம் கலர் டி.வி.க்கள் வாங்கப்பட்டு, 3ஆவது கட்டமாக 34 இலட்சத்து 25 ஆயிரம் கலர் டி.வி.க்கள் வழங்கப்பட உள்ளது. எனவே மீதமான தொகையில் எவ்வித முறைகேடும் நடக்கவில்லை என தெரிவித்து கொள்கிறேன்.

கலர் டி.வி. வழங்கும் திட்டத்தில் முறைகேடு நடக்கக் கூடாது என்பதால் தான் முதல்வர், அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்துள்ளார். யாருக்கு டி.வி. வழங்குவது என்பதைக் கூட இந்த குழுதான் முடிவு செய்கிறது.

அப்பழுக்கற்ற, நேர்மையான, மக்கள் போற்றும் ஆட்சி தமிழகத்தில் நடக்கிறது. இதற்கு நீங்கள் தொடர்ந்து நல்ல ஆதரவு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்''.

இவ்வாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., தலைமை தாங்கினார்.

* * *



# ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி நிருவாக வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

**ஊ**ரக வளர்ச்சி அமைப்புகளான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் மூலம் பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் மற்றும் திட்டம் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் கோருதல் தொடர்பான நிபந்தனைகள் ஆகியவை குறித்து ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு திருத்தம் செய்து புதிய அரசாணை எண். 203, ஊரக வளர்ச்சித்துறை நாள் 20.12.2007 மூலமாக வெளியிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



இந்தப் புதிய விதிமுறைகளில், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளை தமது பொது நிதி மற்றும் மத்திய–மாநில அரசு நிதிகளின் மூலம் செயல்படுத்தும் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிருவாக அனுமதி வழங்குவது குறித்த விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி கிராம ஊராட்சிகளின் பொது நிதிப் பணிகளைப் பொறுத்து ஏற்கெனவே ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான பணிகளுக்கு கிராம ஊராட்சியே நிருவாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த உச்சவரம்பு தற்போது இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல் ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளும் பணிகளைப் பொறுத்து, ஊராட்சி ஒன்றியம் ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த உச்சவரம்பு தற்போது பத்து இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளைப் பொறுத்து, ஊராட்சியே பத்து இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த உச்ச வரம்பு தற்போது இருபது இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் விலைவாசி மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு, ஊரக வளர்ச்சி அமைப்புகளின் தலைவர்களது கோரிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் ஊரக உள்ளாட்சிகள் வளர்ச்சிப் பணிகளை தமது பொது நிதியில் இருந்து மேற்கொள்ளுவதற்கு என உள்ள முந்தைய நடைமுறையை எளிமைப்படுத்தி நிருவாக அனுமதி வழங்குவதற்கான நிதி வரம்பினை உயர்த்தி அதிக அதிகாரம் வழங்கும் வகையிலும் இந்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கருத்திற்கேற்ப ரூ.200க்கு சிமெண்ட் மூட்டை விற்பனை செய்திட ஆலை அதிபர்கள் ஒப்புதல்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தனியார் சிமெண்ட் ஆலை உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளான என். சீனிவாசன் (இந்தியா சிமெண்ட்ஸ்), பி.ஆர்.ராமசுப்பிரமணியராஜா (மெட்ராஸ் சிமெண்ட்ஸ்), வேணுகோபால் (கிராசிம் சிமெண்ட்ஸ், அல்ட்ராடெக் சிமெண்ட்ஸ்), வெங்கடேசன் (டால்மியா சிமெண்ட்ஸ்), எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா (செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன்) மற்றும் அசோசியேட் சிமெண்ட் கம்பெனியின் நிருவாகி ஆகியோர் 9.1.2008 அன்று சந்தித்து சிமெண்ட் விலையினைக் குறைப்பது குறித்த தங்களுடைய ஒப்புதல் கடிதத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளித்தார்கள்.

அதன்படி, தமிழகத்தில் சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தினை மனதிலே கொண்டு, பொருளாதார ரீதியாகப் பின் தங்கிய மக்களுக்கும் மற்றும் நடுத்தர மக்களுக்கும் பயனளிக்கத்தக்க வகையில் மாதம் ஒன்றுக்கு 20 இலட்சம் மூட்டைகள் சிமெண்ட்டை குறைந்த விலையில் மூட்டை ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் விற்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்கள். அரசு அதிகாரிகள் வழங்கும் அனுமதியின் அடிப்படையில் சிமெண்ட் நிறுவனங்கள் பொதுமக்களுக்கு மூட்டை ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் விற்பார்கள்.

மேலும் இந்தக் கடிதத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் தொழில் வளம் மேம்படவும், தமிழக அரசின் சார்பில் அண்மையில் அறிவித்த புதிய தொழில் கொள்கைக்காகவும் தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள். ❖

---

**சி**மெண்ட் ஆலை அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சாதாரண, சாமானிய, நடுத்தர மக்களுக்கும் பயன்படும் வகையில் சிமெண்ட் விலை குறைக்கப் பட்டதை பரவலாக பலரும் வரவேற்றிருக்கிறார்கள். இதில் அரசியலைப் புகுத்தி ஆதாயம் தேடும் வகையில் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த முனைவோருக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விளக்கம் அளித்து அறிக்கை விடுத்துள்ளார்.

அதில் "மாதம் ஒன்றுக்கு 20 இலட்சம் மூட்டை சிமெண்டை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ரூ.200 விலையில் விற்பனை செய்யும்" என்றும் "உண்மையான பயனாளிகள் வட்ட ஆட்சியரிடம் விண்ணப்பித்துப் பெறலாம்" என்றும் "209 வட்டக் கிடங்குகளில் விற்பனை செய்யப்படும்" என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக அரசு; சாதாரண, சாமரனிய, நடுத்தர மக்களுக்கும் தேவைப்படும் சிமெண்ட் விலை உயர்ந்து கொண்டே போவதைத் தடுத்து நிறுத்திட அண்மையில் எடுத்த முயற்சி மற்றும் நடவடிக்கை காரணமாக "சிமெண்ட்" அதிபர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் எடுத்தறிவித்த முடிவுகளைப் பரவலாகப் பலரும் வரவேற்றிருந்த போதிலும் – இதிலும் அரசியலைப் புகுத்தி ஆதாயம் தேடுவோர் சிலர் – தேவையற்ற அய்யப்பாடுகளை எழுப்பி, அறிக்கைகள் விடுத்து மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திட முனைவது குறித்து – அரசு; சிமெண்ட் விநியோகம் குறித்து எடுத்துள்ள முடிவு எப்படி நிறைவேற்றப்பட விருக்கிறது என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்திட விரும்புகிறேன்.

---

## ஏழை மற்றும் நடுத்தரப்பிரிவு குடும்பங்கள் பயனடையும் வகையில் சிமெண்ட் மூட்டை ஒன்று ரூ.200க்கு விற்பனை செய்யப்படும்

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விளக்கம்

1. தமிழ்நாட்டில் உள்ள தனியார் சிமெண்ட் நிறுவனங்கள் மாதம் ஒன்றுக்கு இருபது இலட்சம் மூட்டைகள் சிமெண்டை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (Tamil Nadu Civil Supplies Corporation) மூலம் மூட்டை ஒன்று ரூ.200 விலையில் விற்பனை செய்யும்.
2. ஆயிரம் சதுர அடி வரை வீடு கட்டும் உண்மையான பயனாளிகளான ஏழை மற்றும் நடுத்தரப் பிரிவு குடும்பங்கள்; வட்ட ஆட்சியரிடம் விண்ணப்பித்து சிமெண்ட் ஒதுக்கீட்டிற்கான ஒதுக்கீட்டுக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. வட்டாட்சியர் அளிக்கும் ஒதுக்கீட்டுக் கடிதத்தின் அடிப்படையில் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 209 வட்டக் கிடங்குகளில் விற்பனை செய்யப்படும். ❖



# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III விவர தொகுப்பு நூல் வெளியிட்டு பணி நியமன ஆணைகள் வழங்கினார்



**த**மிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி, உயர்தர பேருந்து நிலையங்கள், பாதாளச் சாக்கடை வசதி, நவீன இறைச்சிக் கூடங்கள் மற்றும் தகன மேடைகள் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுட்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான பல்வேறு திட்டங்களை தமிழக அரசு நகராட்சி நிருவாகத் துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் உலக வங்கியின் கடனுதவியுடன் ரூபாய் 1350 கோடி மதிப்பிலான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான திட்ட அங்கீகாரக் குழு மற்றும் துணைக்குழு ஆகியவற்றின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளின் விவரங்கள், அவற்றின் செயலாக்கம் குறித்த தகவல்கள், இத்திட்டம் தொடர்பான அரசாணைகளின் விவரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தகவல் தொகுப்பு அடங்கிய நூலை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சிட் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.1.2008 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார். அதனை ஆலந்தூர் நகர்மன்றத் தலைவர் திரு.ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நகராட்சி மன்றத் தலைவர்கள் சார்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மேலும் 2007–2008ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகத் துறை மானியக் கோரிக்கையின் போது "நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள மயானங்களில் பணிபுரியும் வெட்டியான் என்றழைக்கப்படும் மயானப் பணியாளர்கள், மயான உதவியாளர்கள் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவர்கள் கால முறை ஊதியம் பெறும் வகையில் ஆணை வெளியிடப்படும்" என்று அரசு அறிவித்தது. இதன்படி, சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மயானங்களில் பணியாற்றி வரும் 173 நபர்களும், மதுரை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மயானங்களில் பணியாற்றி வரும் 40 நபர்களும், மயான உதவியாளர்கள் என காலமுறை ஊதிய விகிதத்தில் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், ஆலந்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள மயனாங்களில் பணியாற்றிவரும் 7 நபர்கள் மயான உதவியாளர் பணியிடங்களில் காலமுறை ஊதியத்தில் தற்போது நியமிக்கப் பட்டுள்ளனர். இந்த நியமன ஆணைகளை சம்பந்தப்பட்ட . பணியாளர்களுக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான, ரூபாய் ஒரு கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா திருமண மண்டபம் கடந்த 16.7.2007 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்தத் திருமண மண்டபத்தின் நிருவாக முறைகளை ஆய்வு செய்த மும்பையில் உள்ள பன்னாட்டு தர நிர்ணய சான்றிதழ் ( ISO) வழங்கும் நிறுவனத்தின் அதிகாரிகளால் இந்த மண்டபட்தின் கட்டுமான சிறப்பு, அழகிய வடிவமைப்பு, வாகன வசதி, சுகாதார வசதி, மேம்பட்ட பராமரிப்பு போன்ற பல்வேறு வசதிகள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வின் அடிப்படையில் இத்திருமண மண்டபத்திற்கு மேற்கண்ட நிறுவனம் ISO/9001-2000 என்ற தரச்சான்றிதழை வழங்கி பெருமைபடுத்தியுள்ளது. இந்த சான்றிதழ் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் தூத்துக்குடி நகர்மன்ற தலைவர் திருமதி. ஆர்.கஸ்தூரி தங்கம் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். ❖

# சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு 16 மருத்துவர்கள், 20 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணைகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்




**செ**ன்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் கடந்த 5 வருடங்களாக காலியாக இருந்த 200க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்ப தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் முதல் கட்டமாக 18 மருத்துவர்கள், 2 கால்நடை மருத்துவர்கள், 8 மருந்தாளுநர்கள், 2 செவிலியர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல்கள் பெறப்பட்டு சென்ற ஆண்டு அக்டோபர்த் திங்களில் பணியமர்த்தப்பட்டார்கள்.

அதேபோன்று மாவட்ட குடும்ப நலத்துறையில் 2004ஆம் ஆண்டில் தொகுப்பூதிய முறையில் பணியமர்த்தப்பட்ட 32 மருத்துவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் பணி நிரந்தரம் செய்யப்பட்டு சென்ற ஆண்டு அக்டோபர்த் திங்களில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. அதே நிகழ்ச்சியில் 10 மருத்துவர்களுக்கு நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக தற்போது மேலும் பொது சுகாதாரத்துறையில் 7 மருத்துவர்கள், 2 செவிலியர்கள், மாவட்ட குடும்ப நலத்துறையில் 9 மருத்துவர்கள், 18 செவிலியர்கள் ஆகியோருக்குப் பணி நியமன ஆணைகள் 8.1.2008 அன்று வழங்கப்பட்டன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு 16 மருத்துவர்கள், 20 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இதன் மூலம் சென்னை மாநகரில் வாழும் அனைத்து மக்களுக்கும் நலவாழ்வு மையங்களில் சுகாதார வசதி அளிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார். ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திருமதி.காகர் உஷா, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி.ஆர்.சத்திய பாமா ஆகியோர் உடன் இருந்தனர். ✶





# தமிழகம் முழுவதும் தலைவர்களின் பெயர்களில் அமைந்த பூங்காக்களில் வரலாற்றுக் கல்வெட்டுக்கள் அமைக்கப்படும்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு

**த**மிழகம் முழுவதும் நகராட்சிகளிலுள்ள பூங்காக்களில் தலைவர்களின் வரலாற்றுக் கல்வெட்டுக்கள் படிப்படியாகத் திறந்துவைக்கப்படுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகரில் மாநகராட்சி கட்டுப்பாட்டில் 245 பூங்காக்கள், 145 சாலைத்தீவு பூங்காக்கள், 399 சாலை ஓரப்பூங்காக்கள் உள்ளன. சென்னை மாநகராட்சி புதிதாகப் பூங்காக்கள் அமைத்திடவும், ஏற்கெனவே உள்ள பூங்காக்களைச் சீரமைக்கவும் ரூபாய் 14.50 கோடியில் 86 பூங்காப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னையில் 36 பூங்காக்கள் தேசிய, திராவிட இயக்கத் தலைவர்களின் பெயர்களில் உள்ளன. திருவள்ளுவர், மகாத்மாகாந்தி, ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், கஸ்தூரிபா காந்தி, அன்னிபெசன்ட், ராஜிவ் காந்தி, சர். பிட்டி. தியாகராயர், டாக்டர். நடேசன், ஆதித்தனார், பனகல், சுப்பிரமணிய பாரதியார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, காமராஜர், கலைஞர், காயிதே மில்லத், திரு.வி.கல்யாண சுந்தரனார், ஜீவா, டாக்டர் விஸ்வேஸ்வரய்யா, பேராசிரியர், என்.எஸ்.கிருஷ்ணன், பாஷ்யம், சத்தியமூர்த்தி, தருமாம்பாள், டாக்டர் முத்துலட்சுமி போன்ற தலைவர்களின் பெயர்களில் உள்ள பூங்காக்களில் அவர்களின் வரலாற்றுக் கல்வெட்டுக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நேரு பூங்காவில் ஜவஹர்லால் நேரு அவர்களின் வரலாற்றுக் கல்வெட்டினையும், எழும்பூரில் ஆதித்தனார் கல்வெட்டினையும் 11.1.2008 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி அவர்கள் முன்னிலை வகித்தார். சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகையில், சென்னை மாநகரில் 36 பூங்காக்களில் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கல்வெட்டுக்கள் இளைய சமுதாயத்தினர் அறியும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் மேலும் தலைவர்களின் பெயர்கள் உள்ள பூங்காக்களில் வரலாற்றுக் கல்வெட்டுக்கள் திறந்து வைக்கப்படும். நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் நகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் எங்கெங்கு தலைவர்களின் பெயர்களில் பூங்காக்கள் உள்ளன என்று கண்டறிந்து அவர்களின் வரலாற்றுக் கல்வெட்டுக்கள் படிப்படியாக வைக்கப்படும், என்றார்.

இந்நிகழ்ச்சியில் ஆணையர் ராஜேஷ் லக்கானி,இ.ஆ.ப., துணை மேயர் திருமதி. ஆர். சத்தியபாமா மற்றும் மாநகராட்சி அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

அதே போன்று தந்தை பெரியார் பூங்காவில் உள்ள கல்வெட்டினை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களும், மகாத்மா காந்தி பூங்காவில் உள்ள கல்வெட்டினை இலக்கியச்செல்வர் குமரிஅனந்தன் அவர்களும், பேரறிஞர் அண்ணா பூங்காவில் உள்ள கல்வெட்டினை அவருடைய வளர்ப்பு மகன் டாக்டர் அண்ணா பரிமளமும், ஜீவா பூங்காவில் உள்ள கல்வெட்டினை அவரது மகன் ஜீவா மணிக்குமாரும், மகள் டாக்டர் ஜெ.உமாதேவியும், பேராசிரியர் பூங்காவில் உள்ள கல்வெட்டினை அவரது பேரன் வெற்றிஅழகனும் திறந்து வைத்தார்கள்.

பிற பூங்காக்களில் உள்ள தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கல்வெட்டுக்களை அந்தந்தப் பகுதி மன்ற உறுப்பினர்களும், மண்டலக் குழுத்தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு திறந்து வைத்தனர். ❖

# கிராம ஊராட்சிகளில் நிதிச்சுமையின்றி வளர்ச்சிப் பணிகள் வேகமாக நடைபெற ஏதுவாக மின்கட்டணங்களைக் குறைத்து அரசு நடவடிக்கை

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை**

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம் ஆகிய அடிப்படைத் தேவைகளை கிராம ஊராட்சிகள் பராமரித்து வருகின்றன. இதற்கான மின் கட்டணமாக முன்பு மின்சார வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ரூபாய் 1.60 வீதம் செலுத்தப்பட்டது. ஆனால், முந்தைய ஆட்சியில் 1.12.2001 முதல் இந்தக் கட்டணம் ரூ.3.40 என உயர்த்தப்பட்டது. இதனால், கிராம ஊராட்சிகளின் நிதிச் சுமை அதிகரித்து வருவாயில் பெருமளவு மின்கட்டணமாகச் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இந்த அரசு மே 2006இல் பொறுப்பேற்றபோது மின்சார வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின்கட்டண நிலுவைத் தொகை 220 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மாவட்ட வாரியான ஆய்வுக் கூட்டங்களின் போதும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வது குறித்து அரசுக்குப் பரிந்துரை வழங்கிட அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர் நிலைக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்ற போதும் மேலும், மண்டல அளவிலான ஊராட்சி மன்றத் தலைவர்கள் கருத்தரங்குகளிலும் மின்கட்டணம் செலுத்துதல், அபராத வரி, புதிய மின் கம்பங்கள் அமைப்பதற்கான கூடுதல் செலவினம் ஆகிய பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஊராட்சி மன்றத் தலைவர்களால் தெரிவிக்கப் பட்டன.

இந்தப் பிரச்சினைகளின் முக்கியத் துவத்தை உணர்ந்து இவற்றிற்கு உரிய தீர்வு காண மாண்புமிகு மின்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர் துறை உயரதிகாரிகளுடன் 13.3.2007 அன்று இப்பொருள் குறித்து ஆய்வு செய்தனர்.



**அபராத வட்டித்தொகை முழுவதுமாக தள்ளுபடி**

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கான மின் கட்டணத்தை ரூ.3.40லிருந்து 3 ரூபாயாகக் குறைத்தும், அபராத வட்டியை 12 சதவிகிதத்திலிருந்து 6ஆக குறைத்தும் கட்டணம் செலுத்துவதற்கான கால அவகாசத்தை 20 நாட்களில் இருந்து 60ஆக உயர்த்தியும், புதிய மின் கம்பங்கள் அமைத்திட நிலையான கட்டணமாக 7,500 ரூபாய் என நிர்ணயித்தும், அரசு உத்தரவிட்டுள்ளது. 12.4.2007 முதல் மின்கட்டணம் குறைக்கப்பட்டதால், ஊராட்சிகளுக்கு 10.58 கோடி ரூபாய் சேமிப்பு கிடைத்தது. நிலுவையில் இருந்த அபராத வட்டித் தொகை 18.46 கோடி ரூபாய் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டது.

**சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு மின் இணைப்பு**

2007-2008ஆம் ஆண்டில் மட்டும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் சாதனை அளவாக 1.50 இலட்சம் புதிய தெருவிளக்குகள் நிறுவப்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் கட்டப்பட்ட 16 ஆயிரம் புதிய வீடுகளுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இதுதவிர, 3 இலட்சத்து 30 ஆயிரம் மின் இணைப்புகளுக்கு மின் அளவு மீட்டர்கள் பொருத்தப்பட்டு புதிய மின்கட்டண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மின் நுகர்வு அளவுடன் கூடிய மின் கட்டணப் பட்டியல்கள் வழங்கப்படுகின்றன. அரசு மேற்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக மே 2006 வரை ஊராட்சிகள் செலுத்த வேண்டியிருந்த 220 கோடி ரூபாய் நிலுவைக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது செப்டம்பர் 2007 வரையிலான மின் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதி 8லிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டதாலும், அதில் ஊரக உள்ளாட்சி களுக்கான 58 சதவீதம் ஒதுக்கீட்டில் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி 47 லிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாலும், கூடுதல் நிதி கிடைப்பதால் கிராம ஊராட்சிகளின் வருவாயிலிருந்து மின் கட்டணத்திற்காக இதுவரை 70 சதவீதம் செலவிட்ட நிலைமாறி இனி 40 சதவீதம் மட்டுமே இவ்வினத்திற்கு செலவாகும். எனவே, இனிவரும் காலங்களில் கிராம ஊராட்சிகள் தமது மின்கட்டணம் குறித்த நிதிச்சுமையின்றி வளர்ச்சிப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள இயலும்.

நீண்ட நெடுங்காலமாக நிலவிய மின் கட்டணம் தொடர்பான இந்தப் பிரச்சினைகள் தற்போது அரசால் தீர்க்கப்பட்டுள்ளன. இது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையும், தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் சாத்தியமாகி உள்ளது என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார். ❖




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் வேப்பம்பட்டு கிராமத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் சார்பில் சமத்துவப் பொங்கல் நிகழ்ச்சியை தொடங்கிவைத்து பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.(13.1.2008)




# சட்டமன்றத்தில் வினாக்களும், விடைகளும்

மா.செல்வராஜ்,
சட்டமன்றப்பேரவைச் செயலாளர்

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டிற்காகவும், அதன் வாயிலாக இந்தியா முழுமைக்காகவும், சட்டமன்றத்தில் அரும்பணியாற்றிட பல்வேறு வழிமுறைகள் மற்றும் மரபுகள், இந்திய அரசமைப்புச் சட்டத்திலும், அச்சட்டத்தின் வரம்பு மீறாத வண்ணம் இதர விதிமுறைகள் மூலமும் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கிணங்க சட்டமன்றத்தில் வினாக்கள்–விடைகள் நேரத்தினை முறையாகப் பயன்படுத்துவதும் மானியக் கோரிக்கைகள் மற்றும் சட்டமுன்வடிவுகள் மீது கருத்துகளைக் கூறி அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதும், சட்டமன்றப்பேரவையின் குழு உறுப்பினராக குழுக் கூட்டங்களில் பணியாற்றுவதன் மூலமாகவும் பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து பெறுகின்ற தகவல்களையும் உள்ளடக்கி சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மூலமாக சிறிய, பெரிய பணிகளை நிறைவேற்றுவதும் சட்டமன்ற உறுப்பினர்களின் தலையாய பணிகளாகக் கருதப்படுகின்றன.



1853 சார்ட்டர் சட்டத்தின்கீழ் சட்டங்களையும், விதிமுறைகளையும் அமைப்பதற்காக முதல் சட்டமன்றக் கவுன்சில் அமைக்கப்பட்டது. இதில் ஓரளவு சுதந்திரமாக உறுப்பினர்கள் அரசு நிருவாகத்தின் மீது வினாக்களைக் கேட்கின்ற நிலை இருந்தது. பின்பு 1861 ஆம் ஆண்டில் இந்திய கவுன்சில் சட்டத்தின் மூலம் சட்டமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வினாக்கள் மூலம் உறுப்பினர்கள் தகவல்களைப் பெற்றனர். 1892, இந்திய கவுன்சில் சட்டத்தின்கீழ், உறுப்பினர்கள் வினாக்களை ஆறுநாட்கள் முன்னறிவிப்புடன் செயலாளருக்கு அனுப்பி வைக்கும் முறை கொண்டுவரப்பட்டது. 1909, இந்திய கவுன்சில் சட்டத்திற்கிணங்க பேரவையில் முதன்முதலாகத் துணைக் கேள்விகளைக் கேட்கின்ற வழிமுறை ஏற்படுத்தப்பட்டது. துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுப்பினரின் துணைக் கேள்விக்குப் பதில் அளிக்க மறுக்கவும் தனியே ஒரு வினா எழுப்பினால் விளக்கம் அளிக்க முடியும் என்று அவர் தெரிவிக்கும் நடைமுறையும் கொண்டுவரப்பட்டது. பின்பு 1919ஆம் ஆண்டில் மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திற்கிணங்க, பொதுநல நோக்கில் கேட்கப்படும் வினாக்கள் தொடர்பாக செயலாளருக்கு



முன்னறிவிப்புக் கொடுக்க கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. 1921, செப்டம்பரில் வினாக்களை, உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்கள் எனப் பிரிக்கின்ற நடைமுறை கொண்டு வரப்பட்டு உடுக்குறியிட்ட வினாக்கள் மட்டும் சட்டமன்றப்பேரவை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டன. 1937ஆம் ஆண்டிலிருந்து 1947 இந்தியா சுதந்திரம் அடையும் வரையிலும், உறுப்பினர்கள் கேட்கும் வினாக்களின் எண்ணிக்கைக்கு வரையறை ஏதும் இல்லாத நிலை, வினா எண்களின் வரிசைக்கிரமமான வகையில் நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பது போன்ற சில மாற்றங்கள் ஏற்பட்டன.

1950 ஜனவரி 26 ஆம் தேதி இந்திய அரசமைப்புச் சட்டம் செயலுக்கு வந்த பின்பு, முதலாவது சட்டமன்றம் 1952 ஆம் ஆண்டில் கூடியது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சட்டமன்றப்பேரவை மற்றும் மேலவையிலும் வினாக்கள்–விடைகள் நேரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமானால் அவர்கள் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சியில் தவறாது கலந்துகொள்வது அவசியமாகிறது. ஏனெனில், உறுப்பினர் ஒருவரின் தொகுதி சம்பந்தமான பிரச்சினை மட்டுமல்ல, மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் எழுகின்ற பிரச்சினைகள், பொதுவான கருத்துகள் ஆகியவை குறித்து சட்டமன்ற உறுப்பினர் தனது வினாக்களை எழுப்பி அமைச்சரின் பதில்களைப் பெறலாம். நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை அதனுடைய எல்லை இந்தியா முழுவதும் பரந்து விரிந்து உள்ளது. சட்டமன்ற நிகழ்ச்சியின், முதல் ஒரு மணி நேரம் வினா–விடைகளுக்கான நேரமாக ஒதுக்கப்பட வேண்டும். இந்த நேரத்தில் இதர பிரச்சினைகளை உறுப்பினர்கள் எழுப்பக்கூடாது. பேரவை நடந்து கொண்டிருக்கும்போது வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமானால் சட்டமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஒப்புக்கொண்டாலன்றி அந்நேரத்தை ஒத்திவைக்க இயலாது. இவற்றிலிருந்து சட்டமன்றத்தில் வினாக்கள்–விடைகள் நேரத்தின் முக்கியத்துவத்தை நாம் அறியலாம்.

சட்டமன்ற உறுப்பினரின் வினாக்கள், உடுக்குறியிட்ட வினா, (Starred), உடுக்குறியிடாத வினா (Unstarred) என இருவகைப்படும். உடுக்குறியிட்ட வினாக்கள் மட்டுமே சட்டமன்றப்பேரவை கூடும் நாட்களில் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு அமைச்சர்களின் வாய்மொழி மூலமாகப் பதிலளிக்கப்படுகின்றன. உடுக்குறியிடாத வினாக்களுக்கான பதில்கள் பேரவைச் செயலகத்தின் மூலம் புத்தக வடிவில் உறுப்பினர்களுக்குப் பேரவையில் வைக்கப்படுகின்றன. இவற்றின் மீது எந்த விவாதமும் துணைக் கேள்விகளும் எழுப்ப இயலாது.

சட்டமன்ற உறுப்பினரின் வினா உடுக்குறியிடாத வினாவாக இருந்தாலும் அதனை உடுக்குறியிட்ட வினாவாகப் பேரவைத் தலைவர் அனுமதித்து வினாப்பட்டியலில் சேர்க்கலாம். சட்டமன்றப்பேரவை நிகழ்ச்சி நிரலில் வினாக்கள் வரிசைக்கிரமமான எண்கள் அடிப்படையில் வினாப்பட்டியலில் சேர்க்கப்பட்டு அவ்வினாக்கள் அவ்வரிசைப்படியே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆனால், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் முன்னிலையில் வினாக்கள் குலுக்கல் முறையில் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் வினாப்பட்டியலில் 20 உடுக்குறியிட்ட வினாக்கள் சேர்க்கப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் பதிலளிக்கப்படுகின்றன. ஏற்கெனவே விடுபட்டுப்போன அல்லது தள்ளிவைக்கப்பட்ட வினாக்களையும் இவற்றோடு கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையும் உள்ளது. இந்தியா முழுவதும் நாடாளுமன்ற ஆளுகை உள்ளதால் அவற்றின் பொருள் அதிக அளவு எண்ணிக்கையிலான துணைக் கேள்விகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. துணைக் கேள்விகளை அனுமதிப்பதும் மறுப்பதும் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

ஒரே பொருளைக் கொண்ட வினாக்களைப் பல்வேறு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற நேர்வில் குலுக்கல் முறையில் சேர்க்கப்பட்ட வினா மட்டுமே அனுமதி பெற்றதாகவும் அதே பொருளை உடைய இதர உறுப்பினர்களின் வினாக்கள் அனுமதி மறுக்கப் பட்டதாகவும் நாடாளுமன்றத்தில் கருதப்படுகின்றன. இத்தகைய நடைமுறை தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் இல்லை என்பதோடு அனைத்து உறுப்பினர்களும் அவ்வினாவிற்கான விவாதத்தில் பங்குபெறும் வாய்ப்பினையும் பெறுகிறார்கள்.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவரின் வினாவானது இந்தி அல்லது ஆங்கில மொழியில் தான் இருக்க முடியுமே தவிர மாநில மொழிகளில் வினாவை அனுப்ப இயலாது. மாநில சட்டமன்றத்தில் அந்தந்த மாநில மொழியும் ஆங்கிலமும் வினாவைப் பொறுத்தவரை முக்கியத்துவம் பெறுகின்றன.

நாடாளுமன்றத்தில் பிரிவு A, B, C, D, E என்று குறிப்பிட்ட சில துறைகளைச் சேர்த்து அதற்கேற்றவாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் வினாக்களுக்குப் பதிலளிக்கிறார்கள். ஆனால் தற்போது தமிழக சட்டமன்றப்பேரவையில் நிகழ்ச்சி நிரலில் இத்தகைய நடைமுறை பின்பற்றப்படாமல் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் உடுக்குறியிட்ட வினாக்களுக்கான பதிலை அளிக்கிறார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஒருவர் உடுக்குறியிட்ட அல்லது உடுக்குறியிடாத வினாவைப் பேரவைச் செயலாளருக்கு அனுப்பினால் அவ்வினா விடையளிக்கப்படும் வரை அல்லது சட்டமன்றப்பேரவைக் காலம் முடியும் வரை செயலில் இருக்கும். நாடாளுமன்றத்தில் வினாக்களுக்கு 5 நாள் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட கூட்டத்தொடர் முடிந்தவுடன் அந்த வினா செயலிழந்து விடுகிறது. நாடாளுமன்றத்தில் ஒரு நாள் நிகழ்ச்சியில் 230 உடுக்குறியிடாத வினாக்களுக்கான பதில்களைத் தாக்கல் செய்யலாம். ஆனால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இத்தகைய வரையறை எதுவும் கிடையாது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ள மேற்கூறிய சில வேறுபாடுகளைத் தவிர நமது நாடாளுமன்றத்தில் பின்பற்றப்படும் விதிமுறைகளே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வினாக்கள்–விடைகள் நேரத்திலும் பின்பற்றப் படுகின்றன.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரே வகையான வினாக்களை எழுப்பினால் அவர்கள் அளித்த வரிசைப்படி அவ்வினாக்களில் அவர்களுடைய பெயர்கள் வினாப்பட்டியலில் சேர்க்கப்படுகின்றன. அவ்வினாவில் ஒவ்வொரு உறுப்பினரும் துணை வினா கேட்பதற்கு பேரவைத்தலைவர் அனுமதி அளிக்கிறார். சட்டமன்றப்பேரவையில் பேரவைத் தலைவர் விரும்பினால் ஒரு கூட்டத் தொடரின் முடிவிலோ அல்லது ஒரு கூட்டத்தின் முடிவிலோ விடையளிக்கப் பெறாமல் நிலுவையிலிருக்கும் உடுக்குறியிட்ட வினாக்களை உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றி அவற்றிற்கான பதில்களைப் புத்தக வடிவில் பேரவையில் வைக்கலாம். இதன்மூலம் உறுப்பினர்கள் தங்களது வினாக்களுக்கான பதில்களை அரசிடமிருந்து பெறுகின்ற நிலைமை ஏற்படுகிறது.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வினாவாக இருப்பின், உறுப்பினர் ஒருவர் முன்னறிவிப்பைச் செயலாளருக்குக் கொடுத்து பேரவைத் தலைவர் அவர்களால் அரை மணி நேரத்திற்கு அது அனுமதிக்கப்படுமாயின் அந்த வினா அரை மணி நேர வினாவாகக் கருதப்படுகிறது. அரை மணி நேர விவாதத்திற்குப் பின்பு எவ்வித தீர்மானமும் வாக்கெடுப்பும் இன்றி விவாதம் தானாகவே முடிந்து விடும். வாரத்தில் மூன்று நாள் கூட்டங்களில் அரை மணி நேர வினாவிற்கு பேரவைத் தலைவர் நேரத்தினை ஒதுக்கலாம். அம்மாதிரி விவாதத்தை எழுப்ப விரும்பும் உறுப்பினர் ஒருவர், எந்த நாளில் அது பற்றி விவாதிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாகச் செயலாளருக்கு முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அதில் எந்தெந்த முக்கியக் கூறுகள் பற்றி விவாதம் எழுப்ப விரும்புகிறார் என்பதையும், விவாதம் கோருவதற்கான காரணங்களையும் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

வினாவின் முக்கியத்துவத்தைக் கருதி பேரவைத் தலைவர், ஒரு வினாவைக் குறுகிய கால வினாவாக அனுமதிக்கலாம். குறுகிய கால வினாவிற்கான முன்னறிவிப்புக் கொடுப்பதற்கு முன் அதற்குரிய படிவத்தில் தகுந்த காரணங்களைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட துறை அமைச்சரின் இசைவினையும் பெற வேண்டும். இவ்வாறு அனுமதிக்கப்பட்ட குறுகிய கால வினாவானது வினாப்பட்டியலில் வரிசைப்படி கூடுதலாகக் கடைசியில் சேர்க்கப்படுகிறது. சட்டமன்றப்பேரவை கூடும்முன் 10 நாட்களுக்குள் குறுகிய கால வினாவிற்கான முன்னறிவிப்புகள் ஏற்றுக்கொள்ளப் படுவதும் ஒரே பொருள் குறித்த உறுப்பினர்களில் நான்கிற்கு மேற்படாத உறுப்பினர்களின் பெயர்கள் அவ்வினாவில் சேர்க்கப்படுகிறது என்பதும் விதியாக உள்ளது. பொதுவாக, சட்டமன்றக் கூட்டத் தொடரில் குறைந்த எண்ணிக்கையிலேயே குறுகிய கால வினாக்கள் அனுமதிக்கப்பட்டு விடையளிக்கப் படுகின்றன.

சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் வினாக்களுக்கான படிவங்களைப் பெற்று உறுப்பினர்கள் தங்களது வினாக்களை வழங்குகிறார்கள். வினாப்பட்டியலில் சேர்க்கப்பட்டு பேரவையில் விடையளிக்கப்படும் வினாக்களுக்கான பொருள் தெளிவாக இருக்க வேண்டுமேயன்றி, வாதங்கள், குற்றச்சாட்டுக்கள், யூகங்கள், கேலிக் கூத்து போன்றவை கொண்டிருக்கக் கூடாது. தனிப்பட்ட ஒருவரின் நடத்தையைப் பற்றியோ, ஒழுக்கத்தைப் பற்றியோ குறிப்பிடும் வகையில் வினாக்கள் அமையக்கூடாது. மேலும், நீதிமன்ற விசாரணையில் இல்லாத பொருளாகவும் வினாக்கள் இருத்தல் வேண்டும். உறுப்பினர் ஒருவர்



வினாக்களை எழுப்பும்போது, மிக நீண்டதாக ஒரு அறிக்கை போன்று இல்லாத வகையில் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் வகையில் சுருக்கமாக இருக்க வேண்டும். அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் பற்றியோ, விடையில் அடங்க முடியாத அளவிற்குப் பரந்த ஒரு கொள்கை விளக்கத்தையோ, ஏற்கெனவே விடையளிக்கப்பட்ட பொருள்கள் பற்றியோ வினாக்கள் கொண்டிருந்தால் அந்த வினாக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அற்பமான பொருள்கள் பற்றியதாகவும் சாதாரண பழைய வரலாறு குறித்த தகவல்களைப் பெறக்கூடியதாகவும், எளிதாகக் கிடைக்கக் கூடிய ஆவணங்கள் மூலம் பெறக்கூடிய தகவல்களைக் கொண்டதாகவும் வினாக்கள் இருப்பின் அத்தகைய வினாக்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இதுதவிர, பொது நலன் கருதி வெளியிட முடியாத அந்தரங்கமான ரகசியமான பொருள் பற்றியும் செய்தித் தாள்கள் மூலம் திரட்டப்பட்ட செய்திகள் பற்றியும் வினாக்கள் அமையுமேயானால் அந்த வினாக்களும் கூட ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அரசு துறைகள் மூலம் செயல்படுத்தக்கூடிய சிறு சிறு பணிகளுக்கு உடுக்குறியிட்ட வினாவில் இடம் பெறும் நிலை ஏற்படுவதில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களின் வினா ஒன்று நீண்ட புள்ளி விவரங்களைக் கோருவதாகவும் அறிக்கை அளிக்கக் கூடிய விவரங்களைக் கொண்டதாகவும் குறைந்த முக்கியத்துவம் உள்ளதாகவும் இருக்குமேயானால் அந்த வினாக்கள் உடுக்குறியிட்ட வினாக்களாக அல்லாமல் உடுக்குறியிடாத வினாக்களாகக் கருதப்படும் நிலை ஏற்படுகிறது.

மேற்கூறியவற்றைக் கருத்திற்கொண்டு, உறுப்பினர் ஒருவர், தாம் அனுப்புகின்ற வினாக்கள் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க வகையில், விதிகளுக்குட்பட்டு அமைந்துள்ளனவா என்பது குறித்து உறுதி செய்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். புதிதாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அளிக்கும் வினாக்களில் இத்தகைய குறைபாடுகள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. எனினும் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அவர்களுக்குச் சட்டமன்றப்பேரவை விதிகள், வழிகாட்டிகள் குறித்த புத்தகங்கள் ஆகியவை வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு வினாக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்கிற விளக்கமும் பயிற்சியும் பேரவைச் செயலகத்தின் மூலம் அளிக்கப்படும் மரபு உள்ளது. எனவே, உறுப்பினர்களுடைய வினா, உடுக்குறியிட்ட வினாவாக அமைவதற்கு பொருளும் எழுதும் முறையும் மிகவும் அவசியமாகிறது.

உறுப்பினரின் வினாவிற்கான முன்னறிவிப்பில் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட முக்கிய பொருள்கள் அடங்கியிருக்குமானால் பொருளின் முக்கியத்துவத்தைக் கருதி அதனைத் தனித் தனி வினாவாக எடுத்துக்கொண்டு பேரவைச் செயலகம் நடவடிக்கை எடுக்கிறது. உறுப்பினர்கள் வினா கேட்பதற்கான விவரங்கள் அனைத்தையும் வெள்ளைத் தாளில் கூட எழுதி செயலகத்திற்கு அளிக்கலாம். எனினும், இதற்கென்று பேரவைச் செயலகத்தில் வழங்கப்படும் படிவத்தைப் பயன்படுத்துவதுதான் சிறந்தது. உறுப்பினர் அளிக்கின்ற வினாக்கள் பேரவைச் செயலகத்தில் ஒப்புதலுக்குப் பின்பு தட்டச்சு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பதில்களுக்காக அனுப்பப்படுகின்றன. வினாவிற்கான விடை பேரவைச் செயலகத்தில் பெறப்பட்ட பின்பு அவ்வினாவிற்கு மாற்று விடை அளிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர் விரும்பினால் பேரவைச் செயலகத்திற்கு முன்னதாகவே அதனை அளிக்க வேண்டும்.

உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட வினாக்கள் பேரவைச் செயலகத்தின் மூலம் பதினைந்து நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் என்றும், துறையிலிருந்து பதில்கள் பெறப்பட்டு 42 நாட்களுக்குள் வினாப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்றும், பேரவை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதிகளவு வினாக்கள் பெறப்படுவதன் காரணமாக எல்லா வினாக்களையும் பேரவை நிகழ்ச்சியில் சேர்க்க இயலாத நிலை ஏற்படுகிறது. சட்டமன்றப்பேரவையில் தற்பொழுது பத்து வினாக்கள் நாள்தோறும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு பத்து வினாக்களுக்கும் மாண்புமிகு அமைச்சர்களால் பதிலளிக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர்கள் மூலம் துணைக் கேள்விகள் அதிகளவு கேட்கப்பட்டு பதில்கள் அளிக்கப்படுவதால் பெரும்பாலான நாட்களில் முதல் ஒரு மணி நேர வினா–விடை நேரம் நீட்டிக்கப்பட்டே வருகிறது. நாடாளுமன்ற மக்களவையில் இருபது உடுக்குறியிட்ட வினாக்கள் நாள்தோறும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட போதிலும் ஐந்து அல்லது ஆறு உடுக்குறியிட்ட வினாக்களுக்கு மட்டுமே கேள்வி நேரத்தில் மாண்புமிகு அமைச்சர்களால் விடையளிக்கப்படுகின்றன. அதிக அளவு துணைக் கேள்விகள் கேட்கப்படுவதே இதற்குக் காரணமாகும். பல்வேறு கால கட்டங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விடுபட்ட வினாக்கள் மறுநாள் வினாப்பட்டியலில் சேர்க்கப்பட்டு விடையளிக்கப் பட்டுள்ளன.

சட்டமன்றப்பேரவையில் பொதுவாக, வினாக்கள்–விடைகள் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரைத் தவிர இதர துறைகளின் அமைச்சர்கள்தான் அதிக நேரம் பதிலளிப்பது வழக்கமாக உள்ளது. எனினும், 1996–2001ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 136 உடுக்குறியிட்ட வினாக்களுக்குப் பேரவையில் பதிலளித்துள்ளார்கள். ஒரே சட்டமன்றப் பேரவை காலத்தில் இத்தகைய நிகழ்வு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இதுவரை ஏற்பட்டதில்லை என்பதோடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். இதேகாலத்தில், 970 உடுக்குறியிடாத வினாக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விடைகளும் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற வினா–விடைகள் நேரத்திற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள் என்பதை இதிலிருந்து நாம் அறியலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடுக்குறியிட்ட வினாக்களுக்கான பதில்களை அளிக்கும்போது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதிக எண்ணிக்கையில் துணைக் கேள்விகளைக் கேட்டு அவ்வுறுப்பினர்களின் தொகுதி சம்பந்தப்பட்ட உறுதிமொழிகளையும் அதிகளவு பெறுகின்ற நிலை கடந்த காலங்களிலும் தற்போது பதின்மூன்றாவது சட்டமன்றப்பேரவையிலும் தொடர்கிறது. குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7.12.2006 அன்று 2 மூலக் கேள்விகளுக்கும், அந்த மூலக்கேள்விகளுக்குக் கேட்கப்பட்ட 15 துணைக் கேள்விகளுக்கும் ஒரே சமயம் பதிலளித்தது மட்டுமின்றி இவற்றின் மூலம் 10 உறுதிமொழி களையும் உறுப்பினர்களுக்கு அளித்து உள்ளார்கள். அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் மட்டும் உரையாற்றிய மொத்த நேரம் 32 நிமிடங்கள் ஆகும். முதலமைச்சர் பதிலளிப்பதில், தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை வரலாற்றிலேயே இத்தகைய நிகழ்வு இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசுத் துறைகளின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து நாள்தோறும் சட்டமன்றத்தில் மூலக்கேள்வி அளித்த உறுப்பினருக்கு இரண்டு துணைக் கேள்விகள் கேட்பதற்கு பேரவைத் தலைவர் அனுமதி அளிக்கிறார்கள். மூலக் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்த பின்பு துணைக் கேள்விகள் கேட்பதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்தைப் பெறும் வகையில் உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு தங்களது ஒரு கையினை உயர்த்த வேண்டும். ஒரே வினாவில் அனைத்து உறுப்பினர்களின் துணைக் கேள்விகளுக்கும் பதிலளிக்க இயலாது என்கின்ற காரணத்தினால் இத்தகைய நடைமுறை பின்பற்றப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சர் ஒருவர், வினாப்பட்டியலில் சேர்க்கப்பட்ட வினாவிற்கு பதிலளிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டால் அவ்வினா மீண்டும் மறுநாள் வினாப்பட்டியலில் சேர்க்கப்பட்டு பதிலளிக்கப்படலாம். சம்பந்தப்பட்ட அமைச்சர் ஒருவரை உறுப்பினர் ஒருவர் தாம் கோரும் தகவல்கள் அனைத்தையும் வழங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த இயலாது. எனினும் நாடாளுமன்றத்திலும் மாநில சட்டமன்றப் பேரவையிலும் உறுப்பினர்கள் கேட்கும் வினாக்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தகுந்த பதில்களை அளிக்கின்ற கடமையுடையவர்கள் ஆவர்.


இதற்கு எடுத்துக்காட்டாக பல்வேறு நேர்வுகள் உள்ளன. உதாரணமாக, 1959 ஆம் ஆண்டில் சீனப் பகுதியிலிருந்து இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகள் நுழைந்ததன் காரணமாக கோகிமாவில் (நாகலாந்து மாநில தலைநகர்) தாக்குதல் ஏற்பட்டது என்று 1959, செப்டம்பர் 1 ஆம் தேதி பத்திரிகையில் வந்த செய்தி அடிப்படையில் மக்களவையில் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அப்போதைய அமைச்சர் இதுகுறித்து எவ்வித தகவலும் தனக்குத் தெரியாது என்று பதில் அளித்தார். இதுகுறித்து மக்களவைத் தலைவர் பின்வருமாறு தீர்ப்பளித்தார். ''நாடாளுமன்றக் கூட்டம் நடக்கும்போது பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையில் உறுப்பினர் விளக்கம் கேட்கின்ற நிலை ஏற்படுகின்றது. சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அந்த பத்திரிகைச் செய்தி கிடைத்து இருக்க வாய்ப்பிருப்பதால் அமைச்சர் தனக்கு விவரம் எதுவும் தெரியாது என்கிற பதிலைச் சொல்லக் கூடாது. அது உண்மையா–இல்லையா என்பது குறித்து ஆய்வு செய்கிறேன் என்பது போன்ற பதிலைச் சொல்லலாம். அவ்வாறு இல்லையாயின் நாடாளுமன்றத்தில் வினாக்களுக்கான வினா நேரமே பயனுள்ளதாக அமையாது.'' எனவே வினா–விடை நேரத்தில் சரியான விடையை அளிக்கும் பொறுப்பு அமைச்சருக்கும் உள்ளது.

ஒரு உறுப்பினர் தாம் எழுப்புகின்ற வினாப் பொருள் தமிழ்நாட்டின் எந்தத் தொகுதியைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம் என்பதால் சிறப்பாகச் செயல்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசின் ஆக்கபூர்வமான பணிகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு துரிதப்படுத்து வதற்கும் மட்டுமின்றி, பத்திரிகைகள், ஊடகங்கள் மூலம் தங்கள் நற்பெயரை, திறமையை வெளிப்படுத்தும் கருவியாகவும் அமைய அவர்களுக்கு வினாக்கள்–விடைகள் நேரம் பயன்படுகிறது.






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், ஈரோடு மாநகராட்சியினைத் தொடங்கிவைத்தார்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் மத்திய, மாநில அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர். (29.12.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், வை மாவட்டத்தில், திருப்பூர் மாநகராட்சியினைத் தொடங்கிவைத்தார்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்கள் மற்றும் லைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர். (29.12.2007)

தமிழரசு
R.N.I: No.21446/70-Regn.No.TN/ARD/
TN/PMC(CCR) WPP-518/06-0








# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039

தை - மாசி பிப்ரவரி 2008

மலர் : 39 இதழ் : 8

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,இ.ஆ.ப.,**

இயக்குநர் மற்றும்

அலுவலால் அரசு இணைச் செயலாளர்

செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிர்வாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**

துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**

உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**

**டி.ஆர். ஜெயஸ்ரீ**

**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**

**இரா.சுரேஷ்**

**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**

**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**

**மாய குமரேசன்**

இதழ்உதவியாளர்கள்

**தி.வயியார் சாக்ரசு**

**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி. இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்,** உதவி ஒளிப்படக்கோர்வையாளர்

**ஆர்.பாலாஜி**

(ஓய்வு பெற்ற தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழைதிருத்துபவர்

**தி.சந்தானம்**

சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.

தொலைபேசி : 25368926/25364906

தொலைநகல் : 25364906

மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in

இணையதளம் : www.tn.gov.in


**சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தி னூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு**

சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர ஆக்கமளிக்கக்கூடிய வழி வேறென்ன இருக்கிறது?

- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


❖ தமிழகம் கண்டுவரும் ஒப்பற்ற வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையச் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளது ........... 2

❖ கடமையை ஆற்றுவோம் மக்கள் தொண்டினைத் தொடர்வோம் .................... 22

❖ சென்னையில் தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற 59ஆவது இந்தியக் குடியரசு தினவிழா .................... 30

❖ திருவள்ளுவர் ஆண்டுக் கணக்குப்படி தை முதல் நாள் என்று தொடங்கினால்தான் ஆண்டுக் கணக்கு சரியாக இருக்கும். தமிழனின் மானம் தங்கும். தமிழ்மொழியின் உரிமை காப்பாற்றப்படும் ..... 34

❖ மத்தியத் திட்டக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை .................... 46

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விடாமுயற்சியால் சென்னையில் 76.32 கோடி ரூபாயில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் மத்திய அமைச்சரவை ஒப்புதல் ......... 56

❖ 4 இலட்சத்து 31 ஆயிரத்து 296 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு. 163 கோடியே 86 இலட்சத்து 31 ஆயிரத்து 551 ரூபாய் உதவித்தொகைகளாக வழங்கப்பட்டுள்ளன ...... 64


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


□ சென்னைக்கு தினந்தோறும் 100 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் ரூ.993.83 கோடி மதிப்பிலான கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ............. 68

□ இந்தியாவிலேயே முதல்முறையாக ஊனமுற்ற மாணவ-மாணவியருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் .................... 70

□ ரூ.9,700 கோடி மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் ரூ.1,340 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கிட ஜப்பான் வங்கி ஒப்புதல் .................... 73

□ தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட தொகுப்பு நூல் .................... 74

□ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊராட்சி ஒன்றியம் வாரியாக தயாரித்துள்ள நீராதாரங்கள் திறன், நிலத்தடி விவரம் குறித்த குறுந்தகடு .................... 76

□ சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு 850 தீயணைப்புச் சாதனங்கள் .... 79


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை* : பதிமூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத்தொடரில் மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் உரையாற்றுகிறார்.(23.1.2008)

*நான்காம் பக்க அட்டை* : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜப்பான், டோக்கியாவில் மெட்ரோ ரயில் பணிமனையை பார்வையிட்டார்கள்.(7.2.2008)



## தமிழகம் கண்டுவரும் ஒப்பற்ற வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையச் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளது

மேதகு தமிழக ஆளுநர் **திரு. சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்
தமிழக சட்டமன்றத்தில் 23.1.2008 அன்று ஆற்றிய உரை

**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.** 2008ஆம் ஆண்டில், பதிமூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாட்டு மக்களின் நலன் காப்பதையே தலையாயக் கடமையாகக் கொண்டு ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு, பதவியேற்று ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளேயே, தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து வருகிறது. ஏழை எளியோர், ஆதரவற்றோர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், ஊனமுற்றோர் போன்ற சமுதாயத்தின் அடித்தளத்தில் உழலுவோரின் முன்னேற்றத்தை முன்னிறுத்தியே இந்த அரசின் அனைத்துக் கொள்கைகளும், திட்டங்களும் வகுக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். சமத்துவத்தையும், சமூக நீதியையும் இரு விழிகளாகக் கொண்டு, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில்






இட்டுச்செல்லும் நோக்கத்தோடு அயராது பாடுபட்டுவரும் இந்த அரசின் செயல்பாடுகள் குறித்துப் பெருமிதம் கொள்கிறேன்.

3. நமது நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு அமைதி தவழும் மாநிலமாக விளங்கி வருகிறது. மாநிலத்தில் தீவிரவாத நடவடிக்கைகள் எவையும் நடைபெறாவண்ணம் இந்த அரசு தொடர்ந்து விழிப்புடன் கண்காணித்து வருகிறது. அண்டை மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்குள் தீவிரவாதம் ஊடுருவதற்கான முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. மேலும், குற்றச் செயல்களில் ஈடுபடும் கூலிப்படையினருக்கு எதிராக இந்த அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏற்றத்தாழ்வற்ற சமுதாய வளர்ச்சி காண்பதும், வறுமையை ஒழிப்பதுமே சாதிப் பூசல்களுக்கும், தீவிரவாதத்திற்கும் நிரந்தரத் தீர்வுகளாகும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது.

4. அறிஞர் அண்ணா வகுத்தளித்த மாநில சுயாட்சிக் கொள்கையின்படி, உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நிலைபெறச் செய்ய இந்த அரசு எப்போதுமே பாடுபட்டு வந்துள்ளது. **1969**ஆம் ஆண்டிலேயே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக முதன்முறையாகப் பொறுப்பேற்றபோது, மத்திய மாநில உறவுகள் பற்றி ஆய்ந்து பரிந்துரைக்க, நீதியரசர் இராஜமன்னார் அவர்கள் தலைமையில், டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் மற்றும் நீதியரசர் சந்திரா ரெட்டி ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, ஒரு குழு அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. தற்போது மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய, நீதியரசர் மதன்மோகன் பூஞ்சி அவர்கள் தலைமையில் மத்திய அரசு புதிய குழு ஒன்றை அமைத்துள்ளது

**"ஏற்றத்தாழ்வற்ற சமுதாய வளர்ச்சி காண்பதும், வறுமையை ஒழிப்பதுமே சாதிப் பூசல்களுக்கும், தீவிரவாதத்திற்கும் நிரந்தரத் தீர்வுகளாகும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது."**



குறித்து இந்த அரசு தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது. நமது நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் அதே வேளையில், உண்மையான கூட்டாட்சி நடைமுறைப்படுத்தப்படத் தேவையான பரிந்துரைகளை இந்தக் குழு அளிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

5. கடந்த ஆண்டுகளில், மத்திய அரசு அமைத்த நிதிக் குழுக்களின் பரிந்துரைகள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கு நிறைவளிப்பதாக அமையவில்லை. தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு தொடர்ந்து குறைக்கப்பட்டு வந்துள்ளது. அண்மையில் அமைக்கப்பட்டுள்ள பதிமூன்றாவது நிதிக் குழு, இந்நிலையை மாற்றி, நமது மாநிலத்தின் சிறந்த செயல்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கான தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சரியான நிதிப் பகிர்வினை அளிக்கும் என நம்புகிறோம்.

6. நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளால் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் பற்றி நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க, நமது நாட்டில் அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான வழிமுறைகள் ஏற்கெனவே உள்ளன. எனவே, மாநிலங்களுக்கிடையே நல்லுறவு செழிக்க, தற்போதுள்ள சட்டங்களின் அடிப்படையில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அதிகாரம் பெற்ற அமைப்புகளின் முடிவுகளை மதித்து அவற்றின்படி அனைத்து மாநிலங்களும் நடக்க வேண்டும் என்றும் இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.

**"நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளால் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க, மாநிலங்களுக்கிடையே நல்லுறவு செழிக்க தற்போதுள்ள சட்டங்களின் அடிப்படையில் அதிகாரம் பெற்ற அமைப்புகளின் முடிவுகளை மதித்து அவற்றின்படி அனைத்து மாநிலங்களும் நடக்கவேண்டும்.''**

### வேளாண்மை மற்றும் குடிநீருக்கு பெருந்திட்டம்

7. நதிநீர்ப் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வான தேசிய நதிகள் இணைப்புத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த வேண்டுமென்றும்; அதன் முதற் கட்டமாக, தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்றும் இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் கூட, மாநிலங்களிடையே ஒருமித்த கருத்து எதுவும்



எட்டப்படாத நிலையே உள்ளது. எனவேதான், மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டத்தையாவது செயல்படுத்திட, மத்திய அரசு பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிதியுதவி வழங்க வேண்டுமென்று தமிழக அரசு கோரியுள்ளது. **தமிழகத்தைப் பொறுத்தவரையில், மேலும் தாமதமின்றி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை இந்த அரசு விரைந்து மேற்கொள்ளும்.** மேலும், பருவ காலங்களில் தமிழக நதிகளின் உபரி நீர் கடலில் கலந்து வீணாவதைத் தடுத்து, வறட்சியான பகுதிகள் வளம்பெறும் வகையில் நிலத்தடியில் சேமித்துப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய, இந்த அரசு ஒரு வல்லுநர் குழுவை அமைக்கும். **நமது மாநிலத்தின் நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில், ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளில் வீணாகும் நீரைத் தடுப்பணைகள் மூலமாகச் சேமித்து, ஆண்டு முழுவதும் வேளாண்மை மற்றும் குடிநீர் வசதிக்குப் பயன்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்று வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.**

**"தமிழக மக்களின் எதிர்காலத்தை ஏற்றமும் வளமும் மிக்க காலமாக மாற்றிடுவதிலிருந்து பின்வாங்காமல் அந்த அரிய ஆக்கபூர்வமான திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று மத்திய அரசினை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.''**

### சேது கால்வாய்த் திட்டம்

8. தமிழக மக்களின் நீண்ட காலக் கனவாக விளங்குவதும் – 1860 ஆம் ஆண்டு முதல் ஆங்கிலேயர் ஆட்சியிலேயே ஆய்வு நடத்திடத் தொடங்கப் பெற்று; - பொறியியல் மேதைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு; சாத்தியக்கூறுகள் கண்டறியப் பட்டு, சான்றோர்கள் ஆன்றோர்களால் வரவேற்கப் பட்டதுமான - உலகத் தொடர்புகள், வணிகத் தொடர்புகள் விரிவாக்கப் பட்டு நம் நாடு மேலும் வளமும் வலிவும் பெறுவதற்குப் பயன்படக் கூடியதுமான சேது கால்வாய்த் 'திட்டத்தை நிறைவேற்றிடத் தொடங்கி;



தற்போது அரசியல் ஆதாயத்திற்காக ஒரு சிலர் முன்னுக்குப்பின் முரணாக எழுப்புகிற வாதங்களுக்குச் செவிசாய்த்து திட்டத்தின் செயலாக்கத்தை நிறுத்தி விடாமல் தமிழக மக்களின் எதிர்காலத்தை ஏற்றமும் வளமும் மிக்க காலமாக மாற்றிடுவதிலிருந்து பின்வாங்காமல் – அந்த அரிய ஆக்கபூர்வமான திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று மத்திய அரசினை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

### வெள்ள நிவாரணம்

9. கடந்த மாதம் பெய்த பெருமழையினாலும், பெருகிய வெள்ளத்தினாலும் நமது மாநிலத்தின் பல பகுதிகளில் உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதோடு, சாலைகள், ஏரிகள், கட்டடங்கள் உள்ளிட்ட பொதுச் சொத்துக்களுக்கும், பயிர்களுக்கும் பரவலாகச் சேதம் ஏற்பட்டு; அந்தச்

**"இத்திட்ட காலத்தில், வேளாண்மைத் துறைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவதோடு, சமூக நீதியை உறுதி செய்யும் வகையில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்".**

சேதம் ரூபாய் 1,510 கோடி அளவிற்கு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை ஆய்வு செய்தார்கள். இப்பகுதிகளில் உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபாய் 200 கோடியை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. வெள்ளச் சேதம் குறித்த விரிவான அறிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டு, நிதியுதவி கோரப் பட்டுள்ளது. இது குறித்து ஆய்வதற்காக மத்திய அரசு அனுப்பிய ஆய்வுக் குழுவினர், பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில் சென்று, ஏற்பட்டுள்ள சேதத்தினைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். அவர்களது அறிக்கையின்படி, பாதிக்கப்பட்ட பகுதிகளை முழுமையாகச் சீரமைக்க தமிழக அரசிற்குத் தேவைப்படும் நிதியுதவியை உடனடியாக வழங்குமாறு மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

10. கடந்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 40,000 கோடியை இரு மடங்குக்கும் மேலாக உயர்த்தி, ரூபாய் 85,344 கோடி அளவில், வரும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் திட்டப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தில், வேளாண்மைத் துறைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவதோடு, சமூக நீதியை உறுதி செய்யும் வகையில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

11. மக்களின் தேவைகளை நிறைவேற்றவும், வளர்ச்சிப் பணிகளை விரைவாகச் செயல்படுத்தவும், மாநிலத்தில் உள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களின் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வழங்க வேண்டியுள்ளது. இது குறித்து ஆய்ந்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை (Action Taken Report), வரும் வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது சட்டமன்றத்தில் அளிக்கப்படும்.

**தமிழை மத்திய ஆட்சி மொழியாக அறிவிக்க தொடர்முயற்சி**

12. இந்த அரசின் இடைவிடாத முயற்சியின் காரணமாக மையஅரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்துப் பெருமைப்படுத்தியது மட்டுமன்றி, மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தையும் சென்னையில் அமைத்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்குவதற்கான சட்டம் இயற்றப்பட்டு, அனைவரும் தமிழ் பயில இவ்வரசு வழிவகுத்துள்ளது. தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்கச் செய்யவும், சென்னை உயர்நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழையும் வழக்கு மொழியாக்கவும், இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

13. அனைத்து மக்களுக்கும் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கப்பட வேண்டும் என்ற இவ்வரசின் குறிக்கோளை செயல்படுத்திடும் வகையில், நமது நாட்டிலேயே வேறு எங்கும் இல்லாத குறைந்த விலையில், 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தமிழகத்தில் இந்த அரசால் வழங்கப்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இதுமட்டுமன்றி, பொதுமக்கள் பயன்படுத்தும் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயராமல் தடுக்கும் பொருட்டு, இந்த அரசு நியாயவிலைக் கடைகள் மூலமாக






பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை கடந்த ஆண்டு முதல் வழங்கி வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலமாக நமது மாநிலத்தில் உணவுப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப் பட்டுள்ளதானது, இந்த அரசின் பெரும் சாதனையாகும்.


**நெல்லுக்கு ஊக்கத்தொகை**

14. வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்கள் மூலமாக, விவசாயிகளின் வருவாயைப் பெருக்க இவ்வரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. வேளாண் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் கால்நடை மற்றும் மீனளம் வாயிலாக கூடுதல் வருவாயை ஈட்டுதல் ஆகியவை மூலமாகவே இது சாத்தியமாகும். உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், பொதுப்பணித் துறை, வேளாண்துறை, கால்நடைத் துறை, மீனளத் துறை போன்ற பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயக் கூட்டுறவுக் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளதன் வாயிலாக, தமிழக விவசாயிகள் மீண்டும் கடன் பெற வழிவகுக்கப் பட்டுள்ளது. தற்போது அதிகரித்துள்ள உற்பத்திச் செலவுகளுக்கு ஏற்ப, விவசாயிகள் சாகுபடி செய்யும் நெல்லுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில், மத்திய அரசு அறிவித்த 100 ரூபாய் ஊக்கத்தொகையோடு சேர்த்து, மாநில அரசின் கூடுதல் ஊக்கத்தொகையாக 50 ரூபாய் வழங்கி, இந்த அரசு சன்னரக நெல்லுக்கான கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 825 ஆக உயர்த்தியுள்ளது.


15. மத்திய அரசு அறிவித்துள்ள தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், இந்த நிதியாண்டில் ரூபாய் 185 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் துல்லியப் பண்ணை முறை விரிவுபடுத்தப்படும். வேளாண் அலுவலர்கள் வட்டார அளவில் விவசாயிகளுக்குச் சிறந்த முறையில் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், வேளாண்மைத் துறை சீரமைக்கப் பட்டுள்ளது. தோட்டக்கலை மற்றும் நுண்ணீர்ப் பாசனம் ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு முனைப்போடு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**இலவச நிலம் – வீட்டுமனைப்பட்டா**

16. தரிசு நிலங்களைப் பண்படுத்தி, அவற்றை நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக




அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 1 இலட்சத்து 38 ஆயிரம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1 இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலத்தை இந்த அரசு இலவசமாக வழங்கியுள்ளது. **மேலும், குடியிருக்க இடமற்ற ஏழை எளியவர்களுக்கு 3 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதன் படியே 3 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசுப் புறம்போக்கு நிலங்களில் பத்து ஆண்டுகளாக வீடுகள் கட்டிக் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தளர்த்தி, வருமான வரம்பையும் விலக்கி, ஐந்தாண்டுகளுக்கு மேலாகக் குடியிருக்கும் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா கிடைத்திட இந்த அரசு வழி வகுத்துள்ளது.**





17. மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சக்தியின் அளவு குறைந்ததால், நமது மாநிலத்தில் மின் விநியோகத்தில் அண்மையில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. பழுப்பு நிலக்கரித் தட்டுப்பாடு காரணமாக, நெய்வேலி மின் உற்பத்தி நிலையம் ஒப்புக்கொண்ட அளவிற்கு மின்சக்தியை அளிக்க இயலவில்லை. இதே போன்று, கல்பாக்கம் மற்றும் கைகா அணுமின் உற்பத்தி நிலையங்களும் எரிபொருள் பற்றாக் குறையால் அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்ப மின் உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, மத்திய மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியை அதிகப் படுத்துமாறு சம்பந்தப்பட்ட துறைகளை தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது. **தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூபாய் 925 கோடி மதிப்பீட்டில் 185 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்கள் (co-generation) நிறுவப்படும். இவை 18 மாதங்களுக்குள் இயங்கத் தொடங்கும்.** இது தவிர, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வடசென்னை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் கூடுதல் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கான ஆயத்தப் பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்டு வருகிறது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, மைய அரசு தமிழ்நாட்டிற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து கூடுதல் மின்சாரத்தை ஒதுக்கீடு செய்து வழங்கி வருகிறது.

**18. நமது மாநிலத்தில் அனைவருக்கும் ஐந்து வருட ஆரம்பக் கல்வி கிடைக்க வேண்டும் என்ற**




**குறிக்கோளை வெற்றிகரமாக எய்தியுள்ள இந்த அரசு, சிறார் ஒவ்வொருவரும் பத்து வருடம் பள்ளிக் கல்வி பயிலும் வகையில் அனைவருக்கும் இடைநிலைக்**






**கல்வி கிடைக்கச் செய்வதை புதிய இலக்காக நிர்ணயிக்கும்.** பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இதற்காக மத்திய அரசு அறிவித்துள்ள புதிய திட்டம் வெற்றி பெற இந்த அரசு பேராதரவு தரும்.


### மாணவ, மாணவியருக்கு ஊக்கப்பரிசாக கணினிகள் அளிக்கும் திட்டம்

19. தமிழ்நாட்டில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில், கடந்த தி.மு.கழக ஆட்சிக் காலத்தின் போதுதான், 1999–2000 ஆம் ஆண்டில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில், மாநிலத்தில் உள்ள 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 1,525 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், எஞ்சியுள்ள 100 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 606 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்படும். **மேலும், பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள், மாநிலத்தில் உள்ள 6,650 அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் அளிக்கப்பட இந்த அரசு ஆவன செய்யும். இதுமட்டுமன்றி, தமிழ்வழிக் கல்வியில் பயின்று 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 1,000 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாக கணினிகள் அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் இந்த அரசு செயல்படுத்தும்.**




### மத்தியப்பல்கலைக்கழகம்


20. கோயம்புத்தூரில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM) ஒன்றையும், மதுரையில் இந்திய தொழில்நுட்பவியல் நிறுவனம் (IIT) ஒன்றையும், திருச்சியில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER) ஒன்றையும் அமைக்குமாறு, மத்திய அரசை தமிழக அரசு கோரியுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது ஒரு மத்தியப்பல்கலைக் கழகம் கூட இல்லாத குறையை நீக்க, மாநிலத்தில் மத்தியப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்குமாறும் மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை




முதலமைச்சர் அவர்கள் இது குறித்து சந்தித்து; பேசியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோள் குறித்து நம்பிக்கையூட்டும் வகையில் மத்திய அமைச்சர் அவர்கள் உறுதியளித்துள்ளார்கள். **இந்த மத்தியப் பல்கலைக்கழகம் திருவாரூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.**

**தரம் உயர்த்தப்பட்ட அரசு மருத்துவமனைகள்**

21. அரசு மருத்துவமனைகளில் மட்டுமே சாமானிய மக்கள் மருத்துவ சிகிச்சை பெற இயலும். இதை மனதில் கொண்டு, அரசு மருத்துவ மனைகளில் தேவையான பணியாளர்களும் அனைத்து வசதிகளும் கிடைக்கச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், அரசு மருத்துவ மனைகளில் காலியாக இருந்த பணியிடங்களில் 2,167 மருத்துவர்கள் மற்றும் 2,341 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதோடு, 468 புதிய மருத்துவப் பணியிடங்களும் 1,059 புதிய செவிலியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப் பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன. கிராமப் புரத்தில் உள்ள மகளிருக்கு 24 மணி நேரமும் மகப்பேறு சிகிச்சைக்கான வசதி கிடைக்கும் வகையில், 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று செவிலியர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.



இதுமட்டுமன்றி, ரூபாய் 597 கோடி மதிப்பீட்டிலான உலக வங்கி உதவியுடன் கூடிய தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள அனைத்து வட்ட மற்றும் மாவட்ட மருத்துவ மனைகளின் அடிப்படைக் கட்ட மைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு நமது மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதற்குச் சான்றாக, தனியார் மருத்துவ மனைகளில் நடைபெறும் பிள்ளைப் பேறுகளின் எண்ணிக்கை குறைந்து, அரசு மருத்துவ மனைகளில் பிள்ளைப் பேறுகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இதுவரை நடத்தப்பட்டுள்ள 4,872 முகாம்களில் 51 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

**புதிய தொழில் கொள்கை**

22. இந்த அரசு பொறுப்பேற்ற பின், மோட்டரோலா, டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், ரெனோ–நிஸ்ஸான் போன்ற பல பெரும் தொழில் நிறுவனங்களுடன் ரூபாய் 15,083 கோடி மதிப்பீட்டிலான 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டு, அவற்றில் நான்கு தொழிற்சாலைகள் செயல்படத் தொடங்கியுள்ளன. இதனால் 1,37,140 பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

23. தொழில் முனைவோர்க்கு ஊக்கம் அளிக்கும் பல சலுகைகளோடு, அண்மையில் இந்த அரசால்



**"தொழில் கொள்கையின் மூலம், வரும் நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் மொத்தம் சுமார் 20 இலட்சம் பேர் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்".**


வெளியிடப்பட்டுள்ள புதிய தொழில் கொள்கை, தொழில் முனைவோரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்தொழில் கொள்கையின் மூலம், வரும் நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் மொத்தம் சுமார் 20 இலட்சம் பேர் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்.

24. ரூபாய் 4,000 கோடி மதிப்பீட்டில், ஹூண்டாய் கார் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 6 இலட்சத்து 30 ஆயிரம் கார்களை உற்பத்தி செய்யும் அளவிற்கு விரிவாக்கப்பட்டு வருகிறது. மேலும், ரூபாய் 1,800 கோடி மதிப்பீட்டில் போர்டு கார் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு கூடுதலாக இரண்டு இலட்சம் கார்களை உற்பத்தி செய்யும் அளவிற்கு விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே அமைந்துள்ள இவ்விரு தொழிற்சாலைகளும், தங்களது பெரும் விரிவாக்கத்தையும் நமது மாநிலத்திலேயே மேற்கொள்வதானது, இந்த அரசின் தொழிற் கொள்கைக்குக் கிடைத்த நற்சான்றிதழாகும்.

**25. கடந்த வரவு – செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்று, சென்னையை அடுத்துள்ள எண்ணூரில் ரூபாய் 3,068 கோடி முதலீட்டில் லார்சன் அண்டு ட்யூப்ரோ நிறுவனம் கப்பல் கட்டும் தளம் ஒன்றினை அமைக்கும்.** இதன் மூலமாக சுமார் பத்தாயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். கடலூர் மாவட்டத்தில், இன்னொரு கப்பல் கட்டும் தளம் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**26. வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறுதொழில் துறையின் முக்கியப் பங்கினை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, சிறு தொழில்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்து ஊக்கப்படுத்த, அதற்கான தனிக் கொள்கையை விரைவில் வெளியிடும். இக் கொள்கையில் வேளாண் சார்ந்த தொழில்களுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும்.** இத்தகைய முயற்சியின் காரணமாக சிறு தொழில்கள் அதிக அளவில் தொடங்கப்பட்டு சுமார் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

27. தி.மு.க தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாதோர் அனைவருக்கும் அவற்றை வழங்கும் திட்டம் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 24,58,411 பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாவது கட்டமாக, 34 இலட்சத்து 25 ஆயிரம்




"இந்தியாவிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து வீடுகளிலும் உள்ள ஒரே மாநிலம் தமிழகம் தான் என்ற சாதனையை விரைவில் எட்டுவோம்".

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்கான ஆணைகள் அளிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ஒப்பந்தப்புள்ளி வாயிலாக சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஒப்புதல் பெற்று, ஒளிவு மறைவற்ற முறையில் கொள்முதல் செய்யப்பட்டு, எவ்விதப் பாகுபாடுமின்றி மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்கள் மூலமாக, ஏழை எளிய குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டு வருவது அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, இந்தியாவிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்துவீடுகளிலும் உள்ள ஒரே மாநிலம் தமிழகம் தான் என்ற சாதனையை விரைவில் எட்டுவோம்.

**சென்னையில் மெட்ரோ ரயில்**


28. சென்னை மாநகரப் பகுதி தொடர்ந்து வேகமாக வளர்ந்து வருகின்றது. இப்பகுதியின் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு உடனடியான மற்றும் நிலையான தீர்வுகள் தேவைப்படுகின்றன. இந்த முக்கியப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, ரூபாய் 9,757 கோடி செலவில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு முனைந்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தால் தயாரிக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.




**அதிவேக வட்டச்சாலை**

29. சென்னைத் துறைமுகத்திற்கான சாலை இணைப்பை மேம்படுத்து வதற்காக, ரூபாய் 1,468 கோடி மதிப்பீட்டில் மதுரவாயலிலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு, உயர்த்தப்பட்ட வேக வழித்தடம் (Elevated Express Way) ஒன்றை அமைக்க மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரத்திற்குள் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் வகையில், வெளிநாடுகளில் பல நகரங்களில் உள்ளது போல மாநகரின் முக்கியச் சாலைகளை இணைக்கும் அதிவேக வட்டச்சாலை (Circular High Speed Transportation Corridor) ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக் கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.





**நகர்புற மேம்பாட்டுத் திட்டங்கள்**

30. நமது நாட்டிலேயே மிக அதிகமாக நகரமயமாக்கப்பட்ட (most urbanised) மாநிலம் தமிழ்நாடாகும். எனவே, நகரங்களில் சாலைகள், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டால் மட்டுமே, மாநிலத்தின் பெரும் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். இந்த நோக்கோடு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ், முன்னர் எப்போதும் இருந்திராத வகையில், சுமார் ரூபாய் 6,700 கோடி அளவில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் முடுக்கி விடப்படும்.

31. குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்கள் மற்றும் நடுத்தர வகுப்பினர் ஆகியோருக்கு, நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுவசதி அளிப்பதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். பல்வேறு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், மாநிலத்தில் உள்ள நகரங்களில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டப்படவுள்ளன. **மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் வீட்டுவசதித் தேவையைக் கருத்தில் கொண்டு, பொதுத்துறை – தனியார்துறை கூட்டு முயற்சியின் வாயிலாக மாநகராட்சிகளுக்கு அருகில் உள்ள பகுதிகளில் வீட்டுவசதித் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இது மட்டுமன்றி, வீட்டுவசதித் திட்டங்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியை குறைந்த வருவாயுடைய மக்களுக்காக ஒதுக்கவேண்டும் என்ற நிபந்தனையின்படி திட்டங்களைச் செயல்படுத்தும் கட்டட அமைப்பாளர்களுக்கு, அதிக தரைப்பரப்புக் குறியீட்டளவிற்கு (FSI) இந்த அரசு அனுமதியளிக்கும்.**

32. நிலத்தடி நீரில் ஃப்ளோரைடு அதிகம் உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமே நிரந்தரத் தீர்வாகும். இந்த அரசின் தீவிர முயற்சியால், இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதி உதவிக்காக மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டம் குறித்து, அந்த வங்கியின் ஆய்வுக் குழு அம்மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டது. விரைவில் நடைபெற உள்ள இறுதிகட்டப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்படும்.

"பல்வேறு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், மாநிலத்தில் உள்ள நகரங்களில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டப்படவுள்ளன".

**"இந்தியாவிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து வீடுகளிலும் உள்ள ஒரே மாநிலம் தமிழகம் தான் என்ற சாதனையை விரைவில் எட்டுவோம்".**

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்கான ஆணைகள் அளிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ஒப்பந்தப்புள்ளி வாயிலாக சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஒப்புதல் பெற்று, ஒளிவு மறைவற்ற முறையில் கொள்முதல் செய்யப்பட்டு, எவ்விதப் பாகுபாடுமின்றி மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்கள் மூலமாக, ஏழை எளிய குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டு வருவது அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, இந்தியாவிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்துவீடுகளிலும் உள்ள ஒரே மாநிலம் தமிழகம் தான் என்ற சாதனையை விரைவில் எட்டுவோம்.

**சென்னையில் மெட்ரோ ரயில்**


28. சென்னை மாநகரப் பகுதி தொடர்ந்து வேகமாக வளர்ந்து வருகின்றது. இப்பகுதியின் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு உடனடியான மற்றும் நிலையான தீர்வுகள் தேவைப்படுகின்றன. இந்த முக்கியப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, ரூபாய் 9,757 கோடி செலவில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு முனைந்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தால் தயாரிக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.




**அதிவேக வட்டச்சாலை**

29. சென்னைத் துறைமுகத்திற்கான சாலை இணைப்பை மேம்படுத்து வதற்காக, ரூபாய் 1,468 கோடி மதிப்பீட்டில் மதுரவாயலிலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு, உயர்த்தப்பட்ட வேக வழித்தடம் (Elevated Express Way) ஒன்றை அமைக்க மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரத்திற்குள் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் வகையில், வெளிநாடுகளில் பல நகரங்களில் உள்ளது போல மாநகரின் முக்கியச் சாலைகளை இணைக்கும் அதிவேக வட்டச்சாலை (Circular High Speed Transportation Corridor) ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக் கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.






**நகர்புற மேம்பாட்டுத் திட்டங்கள்**

30. நமது நாட்டிலேயே மிக அதிகமாக நகரமயமாக்கப்பட்ட (most urbanised) மாநிலம் தமிழ்நாடாகும். எனவே, நகரங்களில் சாலைகள், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டால் மட்டுமே, மாநிலத்தின் பெரும் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். இந்த நோக்கோடு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ், முன்னர் எப்போதும் இருந்திராத வகையில், சுமார் ரூபாய் 6,700 கோடி அளவில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் முடுக்கி விடப்படும்.

31. குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்கள் மற்றும் நடுத்தர வகுப்பினர் ஆகியோருக்கு, நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுவசதி அளிப்பதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். பல்வேறு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், மாநிலத்தில் உள்ள நகரங்களில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டப்படவுள்ளன. **மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் வீட்டுவசதித் தேவையைக் கருத்தில் கொண்டு, பொதுத்துறை – தனியார்துறை கூட்டு முயற்சியின் வாயிலாக மாநகராட்சிகளுக்கு அருகில் உள்ள பகுதிகளில் வீட்டுவசதித் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இது மட்டுமன்றி, வீட்டுவசதித் திட்டங்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியை குறைந்த வருவாயுடைய மக்களுக்காக ஒதுக்கவேண்டும் என்ற நிபந்தனையின்படி திட்டங்களைச் செயல்படுத்தும் கட்டட அமைப்பாளர்களுக்கு, அதிக தரைப்பரப்புக் குறியீட்டளவிற்கு (FSI) இந்த அரசு அனுமதியளிக்கும்.**

**"பல்வேறு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், மாநிலத்தில் உள்ள நகரங்களில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டப்படவுள்ளன".**


32. நிலத்தடி நீரில் ஃப்ளோரைடு அதிகம் உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமே நிரந்தரத் தீர்வாகும். இந்த அரசின் தீவிர முயற்சியால், இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதி உதவிக்காக மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டம் குறித்து, அந்த வங்கியின் ஆய்வுக் குழு அம்மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டது. விரைவில் நடைபெற உள்ள இறுதிகட்டப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்படும்.



### விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து

33. நமது மாநிலத்தில் விமானப் பயணம் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. எனவே, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்களில் தற்போதுள்ள விமான நிலையங்களை விரிவாக்கி மேம்படுத்துவதோடு, வேலூர் மற்றும் சேலத்தில் புதிய விமான நிலையங்களை நிறுவ வேண்டியது மிக்க அவசியமாகிறது. இந்த விமான நிலையங்களுக்கு உயர் முன்னுரிமை வழங்குமாறு மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

34. தென் மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு, சென்னை – மதுரை இரயில் பாதையே மிக முக்கியமான போக்குவரத்து இணைப்பாகும். விழுப்புரம் - திண்டுக்கல் இடையிலான அகலப்பாதையை இரு வழித்தடமாக மாற்றினால் மட்டுமே தென் மாவட்டங்களுக்குக் கூடுதல் இரயில்களை இயக்க முடியும். எனவே, தென்மாவட்ட மக்களின் நலன் கருதியும், இம்மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும் வகையிலும் இந்த இருவழித்தடத் திட்டத்திற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசையும் மத்தியத் திட்டக் குழுவையும் இந்த அரசு வலியுறுத்துகிறது.




### தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

35. மத்திய அரசின் மிகப் பெரும் சாதனைத் திட்டமான தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், தமிழகத்தில் தற்போது 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் இத்திட்டத்தின் செயல்பாட்டை சமூக ஆய்வு வாயிலாக ஆய்ந்துவரும் குழுவினர், தமிழகத்தில் இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப் படுவதாகவும், இத்திட்டத்தின் கீழ் பணிபுரிவோருக்கு நாளொன்றுக்கு எண்பது ரூபாய் ஊதியமாக வழங்கப் பட்டு வருவதாகவும், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் தமிழகத்தில் இத்திட்டத்தின் கீழ் பெண்களே 82 சதவீதம் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளனர். **இத்திட்டத்தை, மத்திய அரசு நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தியுள்ளதையொட்டி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வரும் நிதியாண்டு முதல் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.**




36. ஆறுகள் மற்றும் நீர்நிலைகள் மாசுபடா வண்ணம் தடுக்க, கழிவுநீரை முற்றிலும் மாசற்றதாக சுத்திகரிக்கும் (Zero Discharge) பொது சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க மத்திய அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என்று தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இவற்றுக்கான நிதியுதவியை விரைவில் வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். மாநில அரசும் உரிய நிதி உதவியை இத்திட்டத்திற்கு அளிக்கும்.

**"நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதாரப் பகுதி அமைப்பதற்கு குறுக்கிட்ட தடைகள் நீக்கப்பட்டுள்ள நிலையில், 2,500 ஏக்கர் பரப்பளவில் பல்தொழில் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்று விரைவில் அமைக்கப்படும் ".**

### தென் மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்

37. தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியே அப்பகுதியில் சமுதாயப் பூசல்கள் எழாமல் இருக்க உதவும் என்ற அடிப்படையில், இம்மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கான பல முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதாரப் பகுதி அமைப்பதற்கு குறுக்கிட்ட தடைகள் நீக்கப்பட்டுள்ள நிலையில், 2,500 ஏக்கர் பரப்பளவில் பல்தொழில் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்று விரைவில் அமைக்கப்படும். இதைப் போன்றே, கங்கை கொண்டானில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை ஏற்படுத்தவும் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கவும் எல்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருகிறது. அண்மையில், கங்கைகொண்டான் மற்றும் மதுரையில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்கள் பெருமளவில் வேலைவாய்ப்புப் பெறவும், இப்பகுதிகள் பொருளாதார வளர்ச்சி அடையவும் இந்த நடவடிக்கைகள் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

38. நமது சமுதாயத்தில் பெண்கள் தமது முழு உரிமைகளைப் பெறவும், உரிய பங்கினை ஆற்றவும் இந்த அரசு எப்பொழுதுமே உறுதுணையாக இருந்துள்ளது. பெண்களுக்கு சமச் சொத்துரிமையையும், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீட்டையும் வழங்கி பெண்ணுரிமை காத்தது இந்த அரசுதான் என்பதை அனைவரும் அறிவர். இந்த வகையில், சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வழிவகுக்கும் சட்டத்தை, திருமதி சோனியா காந்தி அவர்களின் சீரிய வழிகாட்டுதலுடன், மாண்புமிகு பிரதமர் திரு. மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் நடைபெறும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விரைவில் நிறைவேற்றிடும் என நம்புகிறோம்.





39. ஏழைத் தாய்மார்கள் கருவுற்றிருக்கும் காலத்தில், வேலைக்குச் செல்ல இயலாததால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யும் வகையிலும், அவர்களுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவு கிடைக்கச் செய்யும் வகையிலும், மகப்பேறு உதவியாக ரூபாய் 6,000 வழங்கும் மகப்பேறு உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி, தமிழகம் நாட்டுக்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருவது குறித்து இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 300 கோடி அளவில் 5 இலட்சம் மகளிர் உதவி பெற்றுள்ளனர். மேலும், குழந்தைகளிடையே நிலவும் சத்துப் பற்றாக்குறையை நீக்கும் நோக்கத்தோடு, 2–லிருந்து 15 வயதிற்கு உட்பட்ட சுமார் 70 இலட்சம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் வாரந்தோறும் 3 முட்டைகள் வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த முன்னோடித் திட்டங்களை மத்திய அரசுத் திட்டங்களாக அறிவித்து, தேசிய அளவில் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்திட வேண்டும் என்று மைய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.



**சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

40. 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் இந்த அரசால் தொடங்கப் பெற்ற சுயஉதவிக் குழுத் திட்டம், இன்று நமது மாநிலத்தில் உள்ள மகளிருக்கு சமூகப் பொருளாதார சுதந்திரம் அளிக்கும் மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. **இதுவரை கிராமப் பகுதிகளில் மட்டுமே அளிக்கப்பட்டு வந்த சுழல் நிதி உதவியை, முதன் முறையாக மாநிலத்தின் நகரப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த அரசு வழங்கத் தொடங்கியுள்ளது.** தற்போது மாநிலத்தில் சுமார் 58 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட மூன்று இலட்சத்து அறுபதாயிரம் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் ரூபாய் 1,639 கோடி சேமித்துள்ளதோடு மட்டுமன்றி, ரூபாய் 2,566 கோடி வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற்றுள்ளன.

**கனரக வாகன ஓட்டுநர் பயிற்சித் திட்டம்**


41. வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 3,53,448 இளைஞர்கள் பயன் பெற்றுள்ளனர். இவர்களுடைய திறனை மேம்படுத்தினால் மட்டுமே இவர்களால் வேலைவாய்ப்புகளைப் பெற இயலும் என்பதை உணர்ந்து, இந்த இளைஞர்களுக்கான பல்வேறு பயிற்சித் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி



வருகிறது. **மேலும், பொது அறிவு, கணினி அறிவு, ஆங்கிலத்தில் நன்றாகப் பேசும் திறன் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் பங்கேற்கும் திறன் ஆகியவற்றை இளைஞர்கள் பெற இந்த அரசு ஆவன செய்யும். பயிற்சி பெற்ற கனரக வாகன ஓட்டுநர்கள் அதிக அளவில் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெருமளவில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்த அரசு செயல்படுத்தும்.**

**முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

42. தி.மு.க தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், 2006-2007ஆம் ஆண்டில் முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைகள் ஆகியோருக்கு அளிக்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ரூபாய் 200-லிருந்து ரூபாய் 400-ஆக இந்த அரசு உயர்த்தியது. தற்போது, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து முதியோருக்கும் ஓய்வூதியம் அளிக்கும் இந்திரா



காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் பிறந்த நாளான 19.11.2007 அன்று இந்தத் திட்டம் நமது மாநிலத்தில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக, ஆண் வாரிசுகளின் ஆதரவுள்ளவர்கள், இல்லாதவர்கள் என்ற பாகுபாடின்றி, 65 வயதுக்கு மேற்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள சுமார் 10 இலட்சம் முதியோர்கள் பயன் அடைவார்கள்.

**ஊனமுற்றோருக்கு சிறப்புக்கல்வி – தொழிற்பயிற்சி**

43. ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200–லிருந்து ரூபாய் 400–ஆகவும், கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200–லிருந்து ரூபாய் 500–ஆகவும் இந்த அரசு கடந்த ஆண்டு உயர்த்தியுள்ளது. தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளக்கூட இயலாத மன வளர்ச்சி குன்றியோருக்கு, முன் எப்போதும் இல்லாத வகையில், வருமான வரம்பு மற்றும் எண்ணிக்கை வரையறையின்றி, மாதாந்திர உதவித் தொகையாக 500 ரூபாய் வழங்க இந்த அரசு ஆணையிட்டது. இதன் அடிப்படையில், இதுவரை 30,000 பேருக்கு இத்தொகை வழங்கப் பட்டுள்ளதோடு, இவர்களுக்கு சிறப்புக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி வசதிகளும் கிடைத்திட இந்த அரசு ஆவன செய்துள்ளது.

**அரவாணிகளுக்கு நலவாரியம்**

44. ஒரு வகையில் ஊனமுற்றோர் என்றே கருதப்பட்டு, சமுதாயத்தின் ஓரத்தில் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள **அரவாணிகளின்** நலனில் எப்பொழுதுமே இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. சமூக அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இவர்கள் எதிர்கொள்வதைக் கருத்தில் கொண்டு, குடும்ப அட்டைகளை வழங்குதல், அரசு மருத்துவமனைகளில் இலவச அறுவை சிகிச்சை அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **இவர்களின் மீது இந்த அரசு கொண்டுள்ள பரிவின் காரணமாக இவர்களுக்கென புதிய நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.**

**“ஒரு வகையில் ஊனமுற்றோர் என்றே கருதப்பட்டு, சமுதாயத்தின் ஓரத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அரவாணிகளின் நலனில் எப்பொழுதுமே இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது.”**

45. நமது மாநிலத்தில், ஏன் நமது நாட்டிலேயே, எங்கும் முன்னர் எப்போதும் வழங்கப்படாத அளவில், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்க்குலத்திற்கு திருமணம் மற்றும் மகப்பேறு உதவிகளை இந்த அரசு வழங்கி வருகிறது. இந்த உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கும்போது, அதில் குறுக்கே புகுந்து ஆதாயம் தேடும் நோக்கத்தோடு, சில இடைத்தரகர்களும் அலுவலர்களும் தவறான செயல்களில் ஈடுபட இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. இத்தகைய கயவர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.

46. அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலனுக்கு இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வந்துள்ளது. 1996–2001 ஆண்டு காலத்தில், இந்த அரசுதான் அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்களை அமைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கியது. இடையில் கலைக்கப்பட்ட இந்த வாரியங்களை இந்த அரசு மீண்டும் அமைத்துள்ளது. இந்த வாரியங்களின் மூலமாக கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில், 2,20,043 அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சுமார் ரூபாய் 56 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத் திட்ட உதவிகளைப் பெற்றுள்ளனர்.



**தமிழகம் முழுவதும் கலைவிழா**

47. நாட்டுப்புறக் கலைஞர்களின் (Folk Artists) சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக தனி நல வாரியம் ஒன்றை இந்த அரசு அமைத்துள்ளது. நமது தொன்மையான கலைகளை வாழவைக்கும் அரும்பணியாக; நாட்டுப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் ஆர்வத்திற்கு ஆதரவு நல்கிடும் வகையிலும், சென்னையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, தமிழ் மையம் – ‘சென்னை சங்கமம்’ கலைவிழா, மாநகர் முழுவதும் வெற்றிகரமாகவும், மக்களின் பேராதரவுடனும் நடைபெற்றதை யொட்டி; வரும் ஆண்டுகளிலும் படிப்படியாக தமிழகம் முழுவதும் இவ்விழாவை நடத்துவதற்கு இந்த அரசு ஒத்துழைப்பு வழங்கும்.

48. தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிவோரின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் வேகமாக உயர்ந்துள்ளது. **இவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான உயர்நிலை ஆலோசனைக் குழு ஒன்றை இந்த அரசு அமைக்கும்.**





49. இலங்கைத் தமிழர்கள் சந்தித்துவரும் இன்னல்கள் தொடர்வதைக் கருத்தில் கொண்டு, பல ஆண்டு களாக நிலவிவரும் இந்தப் பிரச்சினைக்கு விரைவில் சுமூகமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு, மைய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

50. நெசவாளர்களின் நலன் காக்கும் வகையில், அவர்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்தியும், இலவச மின்சாரம் அளித்தும் பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. ரூபாய் 256 கோடி செலவில், மாநிலத்தில் உள்ள 3 கோடியே 28 இலட்சம் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலைகள் அளிக்கும் திட்டம், நெசவாளர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

51. என்றும் மீனவர் நலனுக்கு உயர் முன்னுரிமை அளித்து, அவர்களுக்கென தனி நல வாரியம் அமைத்துள்ளதோடு, கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது காணாமல் போகும் மீனவர்களுடைய குடும்பங்களுக்கு உதவுவதற்கான திட்டம் ஒன்றையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது அவர்களுக்கு ஏற்பட்டுவரும் இன்னல்களைக் களையத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து எடுக்கும்.

52. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மனிதக் கழிவை எடுத்துச் செல்லும் தொழிலில் ஈடுபட்டிருந்தோரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கும். இந்த நோக்குடனேயே, இவர்களின் நலனுக்காக தனி நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள உதவவும் தேவையான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

**அருந்ததியருக்கு தனி உள் ஒதுக்கீடு**

53. அருந்ததியர் வகுப்பினர் சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் இவர்களுக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி, அனைத்துக் கட்சிகளையும்

**“ரூபாய் 256 கோடி செலவில், மாநிலத்தில் உள்ள 3 கோடியே 28 இலட்சம் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலைகள் அளிக்கும் திட்டம், நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்”**


கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது.

54. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் சமூகப் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைவதற்கு, இப்பிரிவுகளைச் சேர்ந்தோர் அனைத்துத் துறைகளிலும் உயர் வேலைவாய்ப்புகளைப் பெறுவது அவசியம் என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனையொட்டி, தற்போது மாநிலத்தில் பெருமளவில் உருவாகிவரும் வேலைவாய்ப்புகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் பெறும் வகையில், 2007–2008 ஆம் ஆண்டிற்கான சிறப்பு மாநில உதவி ரூபாய் 25 கோடி தொகையையும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்கே இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**“கல்வி அறிவிலும், சமுதாய முன்னேற்றத்திலும் சிறுபான்மையினர் பின்தங்கியுள்ள நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இட ஒதுக்கீடு கிடைத்திட இந்த அரசு வழி வகுத்துள்ளது”**

55. கல்வி அறிவிலும், சமுதாய முன்னேற்றத்திலும் சிறுபான்மையினர் பின்தங்கியுள்ள நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இட ஒதுக்கீடு கிடைத்திட இந்த அரசு வழி வகுத்துள்ளது. மேலும், அவர்களது முன்னேற்றத்தில் தனி கவனம் செலுத்துவதற்காக இந்த அரசு ஒரு தனி இயக்குநரகத்தையும் அமைத்துள்ளது.

56. இந்த அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் அனைத்தும் எப்போதும் சமூக நீதி என்ற குறிக்கோளை மையப்படுத்தியே செயல்படுத்தப் பட்டு வந்துள்ளன. நீதிக் கட்சியின் வழிவந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, சமூக நீதியை நிலைநாட்டுவதில் இந்த நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வந்துள்ளதை அனைவரும் அறிவர். இந்த வகையில், மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும் தனியார் துறை வேலைவாய்ப்புகளிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.




**புதிதாக 95 சமத்துவபுரங்கள்**

57. தந்தை பெரியார் சிலை ஒன்றினை 95 அடி உயரத்தில் அமைக்க வேண்டும் என்ற திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், திரு கி.வீரமணி அவர்களின் வேண்டுகோளினை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுள்ள நிலையில்; **ஓரிடத்தில் சிலை அமைப்பதைக் காட்டிலும், பெரியார் பெயரால் மேலும் 95 சமத்துவபுரங்களை அமைத்து; அனைத்து சமூகத்தினரும் சகோதர பாசத்துடன் ஒருமித்து வாழ்கின்ற அந்த ஒவ்வொரு சமத்துவபுர குடியிருப்பு முகப்பிலும் தந்தை பெரியார் அவர்களின் சிலையை அமைப்பதால், அவருடைய தலையாயக் கொள்கையான சமுதாயச் சமத்துவக் கொள்கை பரவுவதற்கு வழி ஏற்படும் என்பதற்காக அந்தப் பணியை இந்த அரசு தொடங்க முடிவு செய்துள்ளது.** ஏற்கெனவே இவ்வரசு அமைத்துள்ள 145 சமத்துவபுரங்களுடன் சேர்த்து, இப்பணி முடிவுற்ற பின் பெரியார் சிலையுடன் கூடிய 240 சமத்துவபுரங்கள் தமிழகத்தில் அமையும்.

**தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு**

58. பெரும்புலவரும், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில், ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள், 1921–ஆம் ஆண்டு சென்னை–பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி, தமிழர்களுக்கென்று ஒரு ‘தனி ஆண்டு’ தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின்பற்றுவதென்றும், அதையே ‘தமிழ் ஆண்டு’ எனக் கொள்வதென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்தக் கருத்தினை, முப்பத்தியேழு ஆண்டுகளுக்கு முன்பே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, 1971–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார். **திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.** எனவே, பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடிவரும் தமிழ்நாட்டு மக்கள்; இனி – தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு, வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட, புத்தாடை புனைந்து தமிழ் மானம், தன்மானம் போற்றிப் பாடியும் ஆடியும், சமத்துவ உணர்வு பரப்பியும், தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர்.

**“தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது ”.**

59. இந்த அரசின் கொள்கைகள், செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றை உங்கள் முன் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். இன்று தமிழகம் கண்டுவரும் ஒப்பற்ற வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையச் செய்யவும், நலிவுற்றோர் நலம் பேணவும், ஜனநாயக ஒளி பரவிடவும், மத நல்லிணக்கம் வலுப்பெறவும், சமூக நீதியை நிலைநாட்டவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இவை யாவும் செவ்வனே நிறைவேற, நீங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பை நல்குவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**

# கடமையை ஆற்றுவோம் மக்கள் தொண்டினைத் தொடர்வோம்

தமிழக சட்டப்பேரவையில் மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 1.2.2008 அன்று ஆற்றிய பதிலுரை வருமாறு:–



"சம்பிரதாயத்திற்காக முதலமைச்சருடைய பதிலுரை என்ற தலைப்பில், உறுப்பினர்கள் இந்த அவையிலே கடந்த ஒரு வாரமாகத் தெரிவித்துள்ள கவர்னர் உரை பற்றிய கருத்துகளுக்கு என்னுடைய விளக்கத்தை, பதிலை அளிக்க விரும்புகின்றேன், மிகச் சுருக்கமாக!

ஏனென்றால் இன்று ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்ற தீர்மானத்தின் மீது இறுதிநாள் விவாதமாகும். நம்முடைய அவைக்கு ஆங்கிலத்திலே சொன்னால் பிசினஸ் அட்வைசரி கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழு, அந்தக் குழு தங்களுடைய அவையிலே கூடி எடுத்த முடிவின்படி எந்தெந்தக் கட்சி எந்தெந்த நாளில் பேசுவது. இறுதியாக எந்தெந்தக் கட்சிகளுக்கு எவ்வளவு நேரம் அளிப்பது என்றெல்லாம் முடிவு செய்யப்பட்டு, அதன்படி நிகழ்ச்சிகள், உரைகள், நிகழ்த்தப்படுவது உண்டு. ஆனால், இந்தத் தடவை, திடீரென்று என்று சொல்லமாட்டேன். திட்டமிட்டு, அந்த முறையை முறியடிக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்கிடையிலே தங்களுடைய, ஆணையின்படி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின் அடிப்படையில் என்னுடைய கருத்துகள் சிலவற்றை இங்கே வைக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும்கூட, தோழமைக் கட்சிகளுடைய அன்பான அரவணைப்போடும், அரசியல் ரீதியான உறவோடும், ஜனநாயக மாண்போடும், பணியாற்றிக் கொண்டிருக்கிறது, தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது



என்பதற்கு எடுத்துக்காட்டாக, இந்த ஒருவார காலத்திலே, எந்தெந்தக் கட்சிக்கு, ஜனநாயக முறைப்படி பேசுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வது நலம் என்று கருதுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 7 பேர் இந்த வாரம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். 7 பேருக்கும் அளிக்கப்பட்ட நேரம் ஒரு மணி 41 நிமிடம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக 5 பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் 2மணி40நிமிடங்கள். பாட்டாளிமக்கள்கட்சியின் சார்பில் 5 பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் ஒரு மணி 52 நிமிடங்கள். இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் சார்பில் 5 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட நேரம் ஒரு மணி 26 நிமிடங்கள். இந்திய கம்யூனிஸ்ட் சார்பிலே நான்கு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்ட மொத்த நேரம் 59 நிமிடங்கள். ம.தி.மு.க. சார்பில் 3 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட நேரம் 48 நிமிடங்கள். விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் 2 பேர் கலந்துகொண்டார்கள், அவர்களுக்கு 21 நிமிடம் மொத்த நேரம், சுயேச்சை ஒருவர் 6 நிமிடம் உரையாற்றியிருக்கிறார். மொத்தம் 42 உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள்.

தி.மு.க.வுக்கு 7 உறுப்பினர்களுக்கு ஒரு மணி 41 நிமிடம், எதிர்க்கட்சி அ.தி.மு.க.வுக்கு 10 உறுப்பினர்களுக்கு 3 மணி நேரம் 30 நிமிடம் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், நமக்கு என்ன பெயர் என்றால் ஜனநாயகத்தை நாம் புறக்கணிக்கிறோம் என்பதுதான் நமக்கு அவர்கள் இடுகின்ற சிறப்புப் பட்டம். இது ஜனநாயகமா, அல்லவா என்று அவர்களை சிந்திக்க நான் சொல்லவில்லை. அவர்கள் சிந்திக்கும் ஆற்றலை வேண்டுமென்றே புறக்கணிப்பவர்கள். அதனால்தான் அவர்களை சிந்திக்கச் சொல்லவில்லை. இதுபற்றி எல்லாம் செய்தி வெளியிடுகின்ற ஏடுகள், இதழாளர்கள், வார இதழ்கள் – இவர்கள் இதைப் பற்றி கருத்தைச் சொன்னால்தான் இந்த அவை ஜனநாயக நெறியிலே தொடர்ந்து நடைபெறவும், இந்த அவையிலே நாட்டிற்குத் தேவையான, மக்களுக்குத் தேவையான பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து அதன்படிச் செயல்படவும் இயலும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக தமிழகத்திலே இருக்கின்ற ஏடுகள் திராவிட முன்னேற்றக் கழக அரசைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகின்றவன் அல்ல. எந்தச் செய்தியானாலும் அந்தச் செய்தியை விமர்சிக்க, சொன்ன கருத்தை மதிப்பிட, மக்களிடத்திலே எடுத்துச் சொல்ல அவர்களுக்கு எல்லாம் உரிமை உண்டு. பத்திரிகை உரிமையை, பத்திரிகா தர்மத்தை மதிக்கின்ற நாங்கள் என்றைக்கும் அதன் குரல்வளையை நெரித்து அடக்கிப் போட வேண்டும் என்று கருதுகின்றவர்கள் அல்ல. ஆனால் பத்திரிகைக்காரர்கள் – தமிழ்நாட்டிலே உள்ள பத்திரிகைக்காரர்கள் இந்தக் காட்சியையெல்லாம் கண்டார்கள். எப்படி நடந்தது ஏறத்தாழ ஒரு வார காலமாக அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அவையில் இன்றைக்குத் திடீரென்று ஒரு புயல் கிளம்ப என்ன காரணம்? இத்தகைய பூசல் எழ என்ன காரணம்? என்பதை அவர்கள் எண்ணிப் பார்த்து அதை மக்களுக்கு அச்சமின்றி விளக்க வேண்டும். அதுதான் பத்திரிகா தர்மமாக இருக்க முடியும் என்று நான் அவர்களுக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

**பாராட்டப்படவேண்டிய திட்டங்கள்**

இந்த கவர்னர் உரை பற்றி தமிழகத்திலே உள்ள பத்திரிகைகள் எல்லாம் என்ன சிறப்புரைகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே

திரும்பத் திரும்ப எடுத்துக்காட்ட விரும்பவில்லை. தமிழ்நாட்டிலே உள்ள முக்கிய ஏடுகள் இந்த ஆளுநர் உரை எவ்வாறு அமைந்துள்ளது, மக்களுக்கு எத்தகைய செய்திகளை, தகவல்களை, நன்மைகளைத் தரவல்லது என்பதை எழுதியிருக் கின்றார்கள். தலையங்கங்களிலே குறிப்பிட்டிருக் கின்றார்கள். இதிலே ஆளுங்கட்சிக்கு அனுசரணையாக உள்ள ஏடுகள் என்ன சொல்லி யிருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட எண்ணவில்லை. ஆளுங்கட்சியை நல்லவை களுக்காக ஆதரித்து, அல்லவைகளுக்காக எதிர்த்துக் கருத்து சொல்கின்ற ஏடுகள், அந்த ஏடுகள் தோழமைக் கட்சிகளுடைய ஏடுகளாக இருந்தாலும் அவர்கள் என்ன சொல்லியி ருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'தினமணி' ஏட்டில் 'இனிக்கிறது ஆளுநர் உரை' என்று தலைப்பிட்டு,

"குற்றம் காண வேண்டும் என்று பார்க்காமல் ஆளுநர் உரைமூலம் அரசு மக்கள்முன் வைத்திருக்கும் திட்டங்களை சற்று உற்று நோக்கினால், அரசின் எண்ண ஓட்டத்திலும், நோக்கத்திலும் நிச்சயமாகப் பழுது காண முடியாது என்பது நமது கருத்து. ஒரு சில திட்டங்கள் அல்லது அரசின் முயற்சிகள் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியவை என்றுகூடக் கூறலாம்.

உள்ளாட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படும் என்றும், இதற்காக அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்திருப்பதை இருகரம் கொட்டி வரவேற்க வேண்டும். அதிகாரப் பகிர்ந்தளிப்பு மூலம் உள்ளாட்சி அமைப்புகள் பலப்படுத்தப்பட்டால் மட்டும்தான் கிராமப்புற வளர்ச்சியும், கிராமங்களின் சுயசார்பும் உறுதி செய்யப்படும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

புதிய தொழில் கொள்கை மூலம் 20 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்கின்ற உயரிய சிந்தனை இந்த அரசிடம் காணப்படுவதற்கு வாழ்த்துகள்.

சுமார் ரூ.15 ஆயிரம் கோடியில் 12 புரிந்துணர்வு MoU ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, நான்கு தொழிற்சாலைகள் செயல்படவும், இப்போதே தொடங்கிவிட்டதாக ஆளுநர் உரையிலே கூறியிருப்பதை அரசுக்குத் தரப்பட்ட நற்சான்றிதழாக ஏற்றுக் கொள்ளலாம்.

சிறுதொழில்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கும் தனிக் கொள்கை என்பதோடு நின்று விடாமல் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கும் சிறப்புச் சலுகைகள் என்பதைக் கேட்கும்போது நிச்சயம் ஒரு சபாஷ் போடத் தோன்றுகிறது"

என்று தினமணியே எழுதியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவதிலே உள்ள ஆச்சரியத்தை நீங்கள் உணர்வீர்கள். உண்மையையும் நீங்கள் உணர்வீர்கள் என்றே கருதுகிறேன்.

**நிறைவேற்றப்படும் வாக்குறுதிகள்**

அடுத்து, தமிழ் ஓசை, பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஆதரவாக இருக்கின்ற ஏடு. இப்போது நமக்கும் அவர்களுக்கும் கொஞ்சம் ஊடல் இருந்தாலும்கூட இல்லையென்கிறார் மணி. ஊடல் இருந்தாலும்கூட என்று சொன்னதை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். அந்தப் பத்திரிகையிலே, தமிழ் ஓசை பத்திரிகையிலே – நல்ல எழுத்தாளர்கள் எல்லாம் அங்கே உண்டு, எனக்குத் தெரியும். அதில் சொல்கிறார்கள்.

"அமைதி நிலவி வரும் தமிழகம் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்ட மாநிலமாக அ.தி.மு.க.வின் பார்வைக்குத் தெரிவதிலிருந்தே, அதன் அரசியல் குரோதம் எடுப்பாக வெளிப்படுகிறது.

தமிழர்களின் உணர்வுகளுக்கு ஈடுசெய்யக்கூடிய சில அறிவிப்புகள் இந்த உரையில் இடம் பெற்றிருப்பதைப் பாராட்டவே வேண்டும். உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு உயர் நிலைக் குழுவின்



அறிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது"

என்று 'தமிழ் ஓசை' குறிப்பிடுகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆதரவு ஏடு 'தீக்கதிர்'. அதில்,

"தி.மு.க. தேர்தலில் கொடுத்த நலத்திட்ட வாக்குறுதிகளை பெருமளவு நிறைவேற்றி வருகிறது. அரிசி கிலோ 2 ரூபாய்க்கு வழங்குவது நன்று, வரவேற்கத் தக்கது. 20 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. அதற்காக 15,083 கோடி ரூபாய் செலவில் 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 1,37,140 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றும், கப்பல் கட்டும் தளம் மூலம் 10 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள் என்றும், சிறுதொழில் மூலம் 10 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள் என்றும் ஆளுநர் உரை தெரிவிக்கிறது. ஏற்கெனவே இருந்த ஆட்சி எதையும் செய்யாத நிலையில் இது பாராட்டத்தக்க ஒன்றாகும்"

என்று 'தீக்கதிர்' குறிப்பிடுகிறது.

அதுமாத்திரம் அல்ல, அவர்களுடைய கோரிக்கையாக இருந்த அருந்ததிய மக்களைப் பற்றியது –

"அருந்ததிய மக்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும் என்று அறிவித்திருப்பதும் வரவேற்கத் தக்கது"

என்று 'தீக்கதிர்' குறிப்பிட்டிருக்கிறது.

**'ஜனசக்தி',**

"மாநிலத்திற்குட்பட்ட நதிகளை இணைத்திடும் திட்டத்தை மேற்கொள்வோம் என்ற அறிவிப்போடு தென்னக நதிகளையாவது நிறைவேற்றும்படி நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளபடியும், உச்ச நீதிமன்றத்தின் தாக்கீது படியும் கோரப்பட்டிருக்கிறது. தேசபக்தி மிக்க, வருங்கால சந்ததியின் வாழ்வுக்குரிய திட்டத்தை இந்தச் சந்ததி நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளது எனக் கூறியிருப்பது வாழும் மனிதருக்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தைத் தமிழ் மக்கள் சார்பில் பிரகடனம் செய்கிறது.

அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 85,344 கோடி ரூபாய் அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றைத் தமிழக மக்கள் வரவேற்பார்கள்.

எந்த அரசினாலும், ஓர் ஆண்டு அறிக்கையில் மக்களை வாட்டிடும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது என்பதை அறிவோம். ஆனால், தீர்க்கும் திக்கு நோக்கி அடி எடுத்து வைக்க முயல வேண்டும். அந்த வகையில், தமிழக அரசு பிரச்சினைகளை அணுகியுள்ளதை இந்த ஆளுநர் உரையைப் பார்த்து அதனைப் பாராட்டுகிறோம்"

என்று 'ஜனசக்தி' தெரிவிக்கிறது.

காலையில் எதிர்க்கட்சியின் சார்பில் எல்லோரும் பேசி, ஒருவர்தான் பேச வேண்டும் ஒரு கட்சியின் சார்பில் என்ற முறை இருந்தாலும், இலக்கணம் அதுவாக, சட்டமன்ற மரபாக இருந்தாலும்கூட, எல்லோருமே பேசி எங்களையெல்லாம், அமைச்சர்களையெல்லாம், ஆளுங்கட்சியிலே உள்ளவர்களையெல்லாம் எந்த அளவுக்கு அர்ச்சனை செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்கு அர்ச்சனை செய்து அவர்களுடைய பிரதான புரோகிதராக எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் வந்திருந்து அவரும் அந்த அர்ச்சனையைத் தெளிவாகச் செய்து விட்டு, நாங்கள் யாரை, எங்களுக்கு மூத்தவராக, அறிஞர் அண்ணாவுக்கு இளையவராக, இந்த அவையிலே எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக யாரை மதித்து நடந்து வருகிறோமோ, அந்த பேராசிரியப் பெருந்தகையை இழிவாக, கேவலமாக, கேலியாக, கிண்டலாகப் பேசவும், அதை நாங்கள் கேட்டுக்கொண்டு பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்குமான நிலை, கேவலம் இந்தப்

பதவியினால் அல்லவா எங்களுக்கு ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இந்தப் பதவிதான் முதலமைச்சர் என்ற பதவி அல்லது அமைச்சர்கள் என்கின்ற பதவி, எங்களை ஆடாமல் அசையாமல் இந்த அவையின் மதிப்பைக் காப்பாற்ற வேண்டும். ஜனநாயகத்தினுடைய மாண்பைக் காப்பாற்ற வேண்டும்; அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்று சூளுரைத்து பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாம் அதை மறந்து விடக்கூடாது என்கின்ற அந்த ஒரே நிலையிலேதான் நாங்கள், "பாஞ்சாலியைத் துகில் உரியும்போது நெட்டை மரங்களாக நின்றார்கள் பஞ்ச பாண்டவர்கள்" என்று வர்ணித்தானே மகாகவி. அந்த பாரதியினுடைய வர்ணனைக்கு ஏற்ப இன்றைக்கு நானும் மற்றவர்களும் இங்கே அமர வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஏனென்றால், திட்டமிட்டு நடைபெற்ற இந்தச் சூழ்நிலை, இன்றைக்கு முதலமைச்சர் பதிலளிக்கிறாரா, எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் பேசி முடிக்கிறார்களா, இந்த ஒரு வார காலம் சுமூகமாக நடைபெற்ற இந்த அவை முடியப் போகிறதே அப்படி முடியவிடலாமா என்ற ஆத்திரத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவு அது.

நான் இந்த விளைவை இன்று நேற்றல்ல, பல நேரங்களிலே இந்த அவையிலே கேட்டிருக்கிறோம். அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால் எதிர்க்கட்சியினுடைய தலைவர் அம்மையார் அவர்கள் கடந்த ஆண்டு கவர்னர் உரையை 'குப்பைத் தொட்டி' என்று விமர்சித்தார்கள். இதுபோன்ற வார்த்தைகள் தான் அவர்களுக்கு வழக்கமாக வரக்கூடிய வார்த்தைகள். தாராளமாகப் பயன்படுத்தக்கூடிய வார்த்தைகள். நாகரிகமாகப் பேச வேண்டிய வார்த்தைகளை மறைத்துவிட்டு, மறுத்துவிட்டு, ஒதுக்கிவிட்டு, புறக்கணித்துவிட்டு, இதுபோன்ற சொற்களைப் பயன்படுத்துவது என்றால் அவர்களுக்கு தனிச் சுவை. போன ஆண்டு குப்பைத் தொட்டி என்றார்கள். இந்த ஆண்டு 'கட்டுக் கதைகளின் கூட்டுத் தொகுப்பு' என்று ஆளுநர் உரையை விமர்சித்து தட்டச்சு செய்த ஒரு துண்டுத் தாளை அனுப்பி வைத்திருக்கிறார்கள். கவர்னர் உரையைப் பற்றி இங்கே பேசாமல், பேச வேண்டிய தேவையில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி அந்த அறிக்கையில் கருத்துரை என்ற பெயரால் இறுதியாக, "எதற்கும் உதவாத கவர்னர் உரை, எதற்கும் உதவாத கட்டுக்கதைகளின் கூட்டுத் தொகுப்பு" என்று விமர்சித்திருக்கிறார்கள். பரவாயில்லை. அவர்கள் சொல்கிறார்கள் செம்மொழி, நேற்றைக்கு எல்லோரும் வாழ்த்துச் சொன்னார்களே, அந்தச் செம்மொழியைப் பற்றிச் சொல்லுகிறார்கள். "செம்மொழி குறித்து ஆளுநர் உரையில் தம்பட்டம் அடித்திருக்கிறார் கருணாநிதி" ஆளுநர் உரையிலே செம்மொழியைப் பற்றி சொல்வதா இது? அந்த அம்மையாருடைய வருணனை இது. "தம்பட்டம் அடித்திருக்கிறார் கருணாநிதி. உண்மை நிலை என்னவென்றால் தமிழ்மொழி செம்மொழி என்று அறிவிக்கப்பட்டும் மத்திய அரசு கொடுப்பதாகச் சொன்ன 65 கோடி ரூபாய் இதுவரை கிடைக்கவில்லை. கனிமொழிக்குத் தருகிற முக்கியத்துவத்தைக்கூட கருணாநிதி செம்மொழிக்குத் தரவில்லை."

செம்மொழிக்கும் கனிமொழிக்கும் என்ன? அவ்வளவு ஆத்திரம், அவ்வளவு எரிச்சல், அவ்வளவு பொறாமை. எனக்கும் என் மனைவிக்கும் வல்லமை இருக்கிறது, கனிமொழி பிறக்கிறது. "கனிமொழிக்குத் தருகின்ற கௌரவத்தைக்கூட, முக்கியத்துவத்தைக் கூட கருணாநிதி செம்மொழிக்குத் தரவில்லை" இப்படி அவர்கள் பேசி, பத்திரிகையிலே வந்தது, அவைக்கும் அந்தக் கருத்துகளை அச்சடித்து அனுப்பியிருக்கிறார்கள், பரவாயில்லை. எனக்கு அதிலே ஒரு மகிழ்ச்சிதான். எதிர்க்கட்சி என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆளுங்கட்சியைப் பார்த்து, "என்ன செய்தாய், ஏன் செய்யவில்லை?" என்று கேட்க வேண்டும். அதை விட்டுவிட்டு, கன்னாபின்னா என்று பேசாமல், முறையாக கருத்துகளை எடுத்து வைத்தால், அவர்களுக்கும் லாபம், நாட்டுக்கும் லாபம், ஆளுங்கட்சிக்கும் லாபம், எதிர்க்கட்சிக்கும் லாபம், எல்லாக் கட்சிகளுக்கும் லாபம்.



**எதிர்க்கட்சிகளின் இலக்கணம் வகுத்த சர் ஏ.டி.பன்னீர்செல்வம்**

நான் முன்பே சொல்லியிருக்கிறேன். சர் ஏ.டி.பன்னீர் செல்வம் என்று ஒருவர் இருந்தார். அறிஞர், நான் அந்த பன்னீர்செல்வத்தைச் சொல்கிறேன். அவர் அறிஞர். தந்தை பெரியார் அவர்களுக்கு வலது கையாக விளங்கியவர். அவர் இந்தியாவினுடைய ஆலோசகராக லண்டனுக்குச் சென்றபோது வழியிலே, விமான விபத்தில் கடலிலே மூழ்கி மறைந்துபோனார். அந்த பன்னீர்செல்வம், இந்தச் சட்டசபையிலே வீற்றிருந்தபோது, அவரைப்பற்றி டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி, அவரை உங்களுக்குத் தெரியும். ராமசாமி முதலியார் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணசாமி, அவர் புத்தகம் எழுதினார். 'Parliamentarian' என்ற ஒரு புத்தகம். அதில் பன்னீர்செல்வத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். "நீங்கள் சட்டசபையிலே இருந்து எதை எடுத்தாலும் எதிர்த்துப் பேசியிருக்கிறீர்களே, காங்கிரஸ் ஆட்சி செய்கின்ற நன்மைகளை எல்லாம்கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் பேசியிருக்கிறீர்களே" என்றபோது, "ஆமாம், எதிர்க்கட்சி என்றால் அப்படித்தான் பேச வேண்டும், எதிர்க்கட்சிக்கு என்று சில இலக்கணங்கள் இருக்கின்றன" என்று இவர் சொன்னார். உடனே அவர் சொன்னார், "சரி, நாளைக்கு ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் ஆளுக்கு ஒரு வீடு கொடுப்பதாக காங்கிரஸ் அரசாங்கம் ஒரு சட்டம் போட்டால் அதை அவையிலே எதிர்ப்பீர்களா, ஆதரிப்பீர்களா?" "ஆதரிப்பேன், ஆதரித்துவிட்டு ஒரு யோசனை சொல்வேன், 'வீடு கொடுத்தால் மாத்திரம் போதாது, ஒவ்வொரு வீட்டுக்கும் மாதம் 200 ரூபாய் கொடுக்க வேண்டும்' என்றும் சொல்வேன், அதுதான் எதிர்க்கட்சிக்காரனுடைய இலக்கணம்" என்று சொன்னார், பன்னீர்செல்வம் சொன்னார். அவர் இந்த மண்ணின் வாகு உள்ளவர், நாகரிகம் தெரிந்தவர், ஆகவே, "நான் இதை எதிர்ப்பேன், வீடே கூடாது என்று சொல்லமாட்டேன், 'வீடும் கொடு அவர்களுக்கு மாதந்தோறும் செலவுக்குப் பணமும் கொடு' என்று சேர்த்துச் சொல்வேன்" என்று சொன்னார். அவர் Parliamentarian, அவர் பாராளுமன்ற வித்தகர், அவர் தந்தை பெரியாருடைய மாணவர், அறிஞர் அண்ணா அவர்களுடைய தோழர், எங்களுக்கெல்லாம் தலைவராக இருந்தவர் பன்னீர்செல்வம்.

**ஜனநாயகத்தை வாழவைக்க வேண்டும்**

அதை எண்ணிப் பார்த்து, செம்மொழிக்காக இன்னும் முதலமைச்சர் கேட்டும்கூட டெல்லியில் இருந்து ஏன் பணம் அனுப்பவில்லை என்று எங்களோடு சேர்ந்து கேட்க வேண்டிய எதிர்க்கட்சி – எதற்காக பணம் கேட்கிறார் – அவருடைய மகள் கனிமொழிக்கு கொடுக்கிற கௌரவத்தைக்கூட செம்மொழிக்கு கருணாநிதி கொடுக்கவில்லை என்று சொல்லி, கனல் கக்க ஒரு தாக்குதலை நடத்திவிட்டு, செம்மொழி இப்போது தேவையா என்று பேசுகின்றவர்களுக்கு இதிலே என்ன அக்கறை இருக்க முடியும்? ஆனால், நான் இதை லாபமாக எடுத்துக்கொண்டேன். எப்படி என்றால், இவர்கள் பேசியிருக்காவிட்டால், 76 கோடி ரூபாய் இந்த மாதம் வந்திருக்குமா நமக்கு? "பாவம், அவர் கேட்டுக் கேட்டு கடிதம் எழுதினார், நாம் அனுப்பவில்லை, எதிர்க்கட்சித் தலைவர்கூட பேச ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே அவர் வருத்தப்படுவார்" என்று அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இன்று காலையிலிருந்து எவ்வளவு ரகளை செய்திருந்தாலும் ஜெயலலிதாவுக்கு இதற்காக நான் நன்றி கூறுகிறேன். தமிழ் மொழியின் சார்பாக, தமிழ் மொழி செம்மொழியாக வளர, வாழ வழிவகுத்துக் கொடுத்த அம்மை யாருக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடிக்கடி இதேபோல் செய்து கொண்டிருங்கள், உங்களுடைய புகழும், பெருமையும், உங்களுடைய நாகரிகமும் உலகத்தில் கொடிகட்டிப் பறக்கின்ற அளவுக்கு இதைச் செய்து கொண்டிருங்கள், எங்களுக்கு அதனால் கவலை கிடையாது. அதனால் நாங்கள் ஒன்றும் பயந்துவிடமாட்டோம்.

நாங்களெல்லாம் அப்படிப்பட்ட இனத்திலேயிருந்து வந்தவர்கள்தான். பெரியார் அவர்கள் சொல்வார்கள் அடிக்கடி, "நாங்களெல்லாம் பாஷாணத்திலே புழுத்த புழுக்கள்" என்று. பாஷாணத்திலே புழுத்த புழுக்களைப் பாஷாணம் என்ன செய்துவிடும்? ஆகவே, அந்தத் துணிவோடு, அந்தத் தெளிவோடு ஆரம்ப காலத்திலே சுயமரியாதை இயக்கத்திலேயிருந்து வந்தவர்கள், சுய மரியாதையை ஓரளவுக்கு அடக்கிக் கொண்டு இங்கே அமர்ந்திருக்கிறோம் என்றால், அதற்கு ஒரேயொரு காரணம், ஜனநாயகத்தை வாழவைக்க வேண்டும், ஜனநாயகத்தை வளர்க்க வேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தால்தான்.

**மக்கள் தொண்டினை ஆற்றுவோம்**

நமக்கென்று ஒரு பண்பாடு இருக்கிறது, நமக் கென்று ஒரு கலாச்சாரம் இருக்கிறது, நமக்கென்று ஒரு நாகரிகம் இருக்கிறது. அந்த நாகரிகத்தை, அந்தக் கலாச்சாரத்தை, அந்தப் பண்பாட்டைப் பழுதுபடாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிற காரணத்தினால்தான் கோழை என்று சொன்னாலும் பரவாயில்லை, நாங்கள் பண்பாட்டைக் காப்பாற்று வோம், நாங்கள் எங்களுடைய நாகரிகத்தைக் காப்பாற்றுவோம், பழுதடைய விடமாட்டோம் என்கின்ற அந்த உறுதியோடுதான் இன்று காலை நிகழ்ச்சிகளிலே நானும் சரி, பேராசிரியரும் சரி மற்றும் நம்முடைய அன்புக்குரிய அமைச்சர் பெருமக்களும் சரி, ஆளும் கட்சி உறுப்பினர்களும் சரி, அத்தனை பேரும் அமைதியாக இருந்தார்கள். அவர்கள் தாங்க முடியாமல் சில நேரங்களிலே தங்களுடைய கருத்துகளை வெளியிட்டாலும்கூட, இங்கே அமைச்சர்களின் சார்பிலே எழுப்பப்பட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியவில்லை.

சுப்ரீம் கோர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள், நான் தவறாகச் சொல்லிவிட்டேன் என்று. தம்பி துரைமுருகன் அதைப்பற்றி எடுத்துக்காட்டி, "தவறு செய்தது கலைஞர் அல்ல, தவறு செய்து பேசியது நீங்கள்தான்" என்பதை இங்கே நிரூபித்துக் காட்டியிருக்கின்றார். அதையும் நீங்கள் ஞாபகத்திலே வைத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எது எதையோ பேசியிருக்க வேண்டும். திசை திருப்பப்பட்டிருக்கிறது. இருந்தாலும், திசை திருப்பப்பட்டாலும்கூட, அது எங்கேயோ போய் ஒரு நல்ல கரையிலேதான் சேரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. திசை திருப்பப்பட்ட பல கப்பல்கள் உலகத்திலே பல நாடுகளையே அதிலிருந்த மாலுமிகளுக்குக் காட்டியிருக்கிறது என்பதை வரலாறுகளிலே எல்லாம் படித்திருக்கிறோம். அதைப்போல, திசை திருப்பப்பட்டாலும்கூட நாம் அடைய வேண்டிய திக்கு எது என்பதும், நாம் எதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம் என்பதும் உங்கள் எல்லோருக்கும் தெரியும் என்ற காரணத்தால், காலையிலிருந்து நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நம்முடைய கடமையை ஆற்றுவோம், மக்கள் தொண்டினை ஆற்றுவோம். இந்த கவர்னர் உரையிலே வந்திருக்கிற இந்தக் கருத்துக்களுக்கெல்லாம் வலிமை ஏற்றுவோம் என்று கூறி என்னுடைய உரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன். மன்னிக்க வேண்டும். இரண்டு அறிவிப்புகள் உள்ளன.

அத்தியாவசியப் பொருட்கள் விலை சீராக இருக்க வேண்டும். இப்பொழுது உயர்ந்திருக்கின்ற அளவிற்கு மேலும் உயரக் கூடாது, கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் ரேஷன் கடைகளில் பொது விநியோகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று கடந்த நான்கு ஐந்து மாத காலமாக அறிவித்து இதுவரை அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனுடைய காலகட்டம் ஜூனுடன் முடிவடைகிறது. இருந்தாலும்கூட வெளிச்சந்தை விலையை ஓரளவு கட்டுப்படுத்த ஏழை, எளிய மக்கள் நியாய விலைக் கடை மூலமாக இந்த அத்தியாவசியப் பொருட்களை தொடர்ந்து பெறுவதற்கு இன்னும் 6 மாத காலத்திற்கு இந்த பொதுவிநியோகத் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



நேற்றைக்கே அறிவித்த ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, அம்மாணவர்கள் பிளஸ் 2 தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருந்தால் மட்டுமே வழங்கப்படும் என்ற மத்திய அரசின் நெறிமுறையால், பல மாணவ – மாணவியர்கள் கல்வி உதவித்தொகை பெற இயலாத நிலை குறித்து உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியர் தொழிற்பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு பிளஸ் 2 தேர்வில் தேர்வு பெற்றிருந்தாலே போதும் என்ற நிலையில், இந்த புதிய நிபந்தனையால் பல மாணவர்கள் உதவித்தொகை பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே, கல்வி உதவித்தொகைத் திட்டத்தை (Post Matric Scholarship Scheme) தற்போதுள்ள விதிமுறைகளின்படியே தொடர்ந்து செயல்படுத்துமாறு மத்திய சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுக்கு 9.1.2008 அன்று கடிதம் எழுதியுள்ளேன்.

**மத்திய அரசின் விதிமுறை மாறாத பட்சத்தில், செலவுத் தொகையை மாநில அரசே ஏற்கும்**

மத்திய அரசின் முடிவினை எதிர்நோக்கி, மாணவர்களின் படிப்பு தடைபடாமல் தொடரும் வகையில் பிளஸ் 2 தேர்வில் தேர்வு பெற்று தொழிற்படிப்புகளில் பயின்று வரும் அனைத்து ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர் களுக்கும் தொடர்ந்து கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்பதையும், மத்திய அரசின் விதிமுறைகள் ஒருவேளை மாற்றப்படாத பட்சத்தில் இதற்கான செலவை நமது மாநில அரசே தனது நிதியிலிருந்து ஏற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சிமெண்ட் விற்பனையைப் பற்றியது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக குறைந்த விலையில் சிமெண்ட் விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை, 20,000 மெட்ரிக் டன் சிமெண்ட் கிடங்குகளில் பெறப்பட்டு, 30.1.2008 வரை 1,540 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக பயனாளிகள் அனைவரும் எளிதில் சிமெண்ட் பெறும் வகையில், இத்திட்டத்தின் வழிமுறைகள் எளிமையாக்கப்பட வேண்டும் என்றும், வீடு கட்டும் நடுத்தர குடும்பங் களுக்கு 100 மூட்டைகளுக்கு மேலாகவும் அதிக அளவில் சிமெண்ட் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டும், சிமெண்டின் விற்பனை அளவு உயர்த்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து, இத்திட்டத்தின் பலன்களை அனைவரும் எளிதாகவும் போதிய அளவிலும் பெறும் வகையில், கட்டட வரைபடம் உள்ள பயனாளிகள் தனித் துணை வட்டாட்சியரை அணுகி ஒதுக்கீட்டுக் கடிதம் பெறாமல், நேரடியாகவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிட்டங்கிகளில் கட்டட வரைபடத்தைச் சமர்ப்பித்து அதன் அடிப்படையில் சிமெண்ட் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படும் என்றும், தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விற்பனை அளவான ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 100 மூட்டைகள் என்பது இனி 200 மூட்டைகளாக உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மணி அவர்களும் மற்றவர்களும் ஒகேனக்கல் குடிநீர்ப் பிரச்சினை பற்றி, அதில் தீர்வுகாண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். பல நேரங்களில் வலியுறுத்தி இருக்கிறார்கள். அதுபற்றி ஒரு அறிவிப்பு.

பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இத்திட்டம் குறித்து ஜப்பான் நாட்டில் டோக்கியோ நகரத்தில் நடைபெறும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்காக மத்திய அரசின் அதிகாரிகளும் தமிழக அரசின் அதிகாரிகளும் செல்ல இருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தைகளில் முடிந்தால் அங்கு ஜப்பானுக்கு செல்ல இருக்கின்ற நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்வார்கள். நல்ல முடிவு ஏற்பட்டு ஒகேனக்கல் திட்டம் விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்." ✳

# சென்னையில்
# தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற
# 59ஆவது இந்தியக் குடியரசு
# தினவிழா



இந்தியாவின் 59ஆவது குடியரசு தின நிகழ்ச்சிகள் சென்னை காமராசர் சாலையில் உள்ள காந்தி சிலை அருகில் 26.1.2008 அன்று நடைபெற்றன. காலை 8 மணியளவில் வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், அதையடுத்து வந்த மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும் கடற்கரை சாலையில் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த மக்களுக்கு தங்களது அன்பான குடியரசு தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., அவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்று விழா மேடைக்கு அழைத்துச் சென்றார்.

அதையடுத்து மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்று விழா மேடைக்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் முப்படைகளின் தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுக்கு தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து கடலோரக் காவல்படை ஹெலிகாப்டர் வானிலிருந்து மலர்களைத் தூவ



மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து வீரவணக்கம் செலுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வீரதீரச் செயல்கள் புரிந்தவர்களுக்கு அண்ணா பதக்கங்கள், ஜீவன் ரக்ஷா விருதுகள், கோட்டை அமீர் விருதுகள், மத நல்லிணக்கப் பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

வீரதீரச்செயல் புரிந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் சார்பில், பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. அதன்படி இவ்வாண்டு நாகை மாவட்டம், கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராகப் பணிபுரியும் திரு.எம்.எஸ்.ரவிக்குமாருக்கும், நாகை மாவட்டம், கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் நடத்துனராகப் பணிபுரியும் திரு.எம்.நாகராஜிக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் வழங்கல் அலுவலரும், தற்போது நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராகப் புணிபுரியும் திரு.எஸ்.நடராஜனுக்கும், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த மறைந்த திரு.இரா.பண்டாரத்திற்கும் (விருதினை அவரது துணைவியார் பெற்றுக்கொண்டார்), கோவையைச் சேர்ந்த திரு. ஜே.ஜோசப் சுதாகருக்கும் அண்ணா பதக்கங்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

ஜீவன் ரக்ஷா விருதுகளை தஞ்சாவூர் மாவட்டம், மேடயக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த செல்வி சோனியாவிற்கும், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், அச்சமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியை திருமதி.ம.காஞ்சனாவிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கங்களை தேனி மாவட்டத்தில் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற சு.தில்லை நடராசன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.


காவல்துறையில் கள்ளச் சாராயத்தைத் தடுப்பதற்கு ஆற்றிய சீரிய பணிக்காக ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தியடிகள் காவலர் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு திருநெல்வேலி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்சேம் மாணிக்க ராவுக்கும், வேலூர் மாவட்ட துணை கண்காணிப்பாளர் திரு.கோ.நாராயண மூர்த்திக்கும், வேலூர் மாவட்டம் ஆற்காடு காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணிபுரியும் திரு.சு.கார்த்திகேயனுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல்துறை சார்பு ஆய்வாளராகப் பணிபுரியும் கணபதி சௌந்திரராசனுக்கும் காந்தியடிகள் காவலர் பதக்கங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து பள்ளி, கல்லூரி மாணவிகள் பங்கேற்ற கண்கவர் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின.

இராயபுரம் புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கிராமிய





நடனமும், சென்னை அசோக்நகர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் பங்கேற்ற கரகாட்டமும், சென்னை நுங்கம்பாக்கம், பெண்கள் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கிராமிய நடனமும், புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற பரத நாட்டியம், கிராமிய நடனம் மற்றும் மேற்கத்திய இசையும், சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகள் பங்கேற்ற ராலி நடனமும், பாரதி (பெண்கள்) மகளிர் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற கிராமிய நடனமும், குமார ராணி மீனா முத்தையா பெண்கள் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற கிளாசிக் நடனமும் நடைபெற்றது.

பின்னர் தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையம் சார்பில் ஹார்ன்பில்ஸ் (நாகாலாந்து) நடனம், அஸ்ஸாம் மாநில பிஹு நடனம் மற்றும் ஒரிசா மாநில சம்பல்புரி நடனமும், செய்தித் துறை சார்பில் தப்பாட்டமும் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அணிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகளுக்கு மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் அன்று மாலை பரிசு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் பல்வேறு துறைகளின் சாதனைகளை விளக்கிடும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் நாயன இசையுடன் செய்தித் துறை ஆற்றிவரும் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்தியும்,

அதனைத் தொடர்ந்து அள்ள அள்ளக் குறையாத இயற்கைச் செல்வங்களை சிந்தாமல் சிதறாமல் மென்மேலும் மெருகூட்டி பூமிக்கே குளிரூட்டும் அற்புதத் துறையாம் வனத்துறையின் அலங்கார ஊர்தியும்,

மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு சமூக நலத்துறையின் மூலம் தாய்மார்களுக்கு ஆற்றி வரும் சீரிய பணிகளை–திருமண உதவித் தொகை ரூ.10,000லிருந்து 15 ஆயிரமாக உயர்வு, எரிவாயு அடுப்புடன் இணைப்பு என சாதனைகளை விளக்கிடும் சமூக நலத்துறையின் அலங்கார ஊர்தியும்,

மீனவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மீனவர்களுக்கு அரசு ஆற்றிவரும் அரும்பெரும் சாதனைகளை விளக்கிடும் மீன் வளத்துறையின் அலங்கார ஊர்தியும்,

"வளம் கொழிக்க மேகங்கள் போல் கூடுவோம், மேன்மை பெற கூட்டுறவை நாடுவோம்" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தாரக மந்திரத்தோடு இயங்கும் கூட்டுறவுத் துறையின் அலங்கார ஊர்தியும்,

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று "உள்ளாட்சியில் நல்லாட்சி" கண்டிட ஊரக வளர்ச்சித் துறை மூலம் கிராமங்கள் முன்னேற்றம்; மகளிர் சுய உதவிக்குழு மூலம் கிராம அபிவிருத்தித் திட்டம், அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் ஆற்றிவரும் சாதனைகளை விளக்கிடும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் அலங்கார ஊர்தியும்,

நவீன யுக்தி மூலம் தயாரிக்கப்படும் பட்டு ரகங்களின் உன்னதத்தை விளக்கிடும் கோ–ஆப்டெக்சின் அலங்கார ஊர்தியும்,

மக்கள் சேவையே மகத்தான சேவை எனும் உயரிய நோக்குடன் செயலாற்றி வரும் அஞ்சல் துறையின் சாதனைகளை விளக்கும் அஞ்சல் துறையின் அலங்கார ஊர்தியும்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கால்நடைகளின் மீதும் மிகுந்த அக்கறை கொண்டு கால்நடை பாதுகாப்புத் திட்டம் எனும் உன்னத திட்டம் மூலம் கால்நடைகளின் மூலம் நாம் அடையும் நன்மைகளை விளக்கிடும் கால்நடை பராமரிப்புத் துறையின் அலங்கார ஊர்தியும்,

வேளாண் வளர்ச்சியில் நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி வளம் கொழிக்கும் வகையில் வேளாண் துறையில் புதுமைகளைப் புகுத்தி, தொழில்நுட்பங்களைப்





பயன்படுத்தி பசுமைப் புரட்சிக்கு வித்திடும் வேளாண் துறை அலங்கார ஊர்தியும்,

மக்கள் நலம் பேணும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அலங்கார ஊர்தியும்,

சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்துள்ள மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றி வரும் சீரிய பணிகளின் சாதனைகளை விளக்கிடும் அலங்கார ஊர்தியும்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் அன்னிய முதலீடுகளை ஈர்க்கும் மாநிலமாக தமிழகம் முதலிடம் வகிக்கிறது. பெருகிவரும் தொழிற்சாலைகளின் மூலம் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, மிகப் பெரிய தொழிற்சாலைகளின் அணிவகுப்பு என சாதனைக்கு மேல் சாதனை நிகழ்த்தி வரும் தொழிற்துறையின் அலங்கார ஊர்தியும்,

ஆதிதிராவிட மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல், விமானப் பணிப்பெண் பயிற்சி, செவிலியர் பயிற்சி, இலவச நிலப்பட்டா என எண்ணற்ற சாதனைகள் வழங்கியுள்ளதை விளக்கிடும் ஆதிதிராவிட நலத்துறையின் அலங்கார ஊர்தியும்,

மின்சார துறையின் சார்பில் வளர்ச்சிப் பணிகள் குறித்த அலங்கார ஊர்தியும்,

தேசிய ஒருமைப்பாட்டையும் பன்னாட்டு நட்புறவையும் வளர்க்கின்ற நமது பண்பாட்டை விளக்குகின்ற சுற்றுலாத்துறையின் கலைநயம் மிகுந்த அலங்கார ஊர்தியும்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்கிறது என்பதை விளக்கிடும் வண்ணம் காவல்துறை ஆற்றிவரும் பணிகள் – நற்பண்புகளை விளக்கிடும் அலங்கார ஊர்தியும்,

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழும் தொழிலாளர்களின் நலன் பேணும் தொழிலாளர் நலத்துறையின் சாதனைகளை விளக்கிடும் அலங்கார ஊர்தியும்,

தோட்டக் கலைத்துறையின் மூலம் பயிர்களும், பழங்களும் விளைகின்ற தோட்டக்கலையின் அலங்கார ஊர்தியும்,

தீயணைப்புத் துறையின் தீரமிகு பணிகளை விளக்கிடும் அலங்கார ஊர்தியும் ஒன்றன்பின் ஒன்றாக அணி வகுத்து வந்து பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன.

இந்த அணி வகுப்பில் பங்கேற்ற அரசுத் துறைகளின் அலங்கார ஊர்திகளின் முதல் மூன்று இடங்களைப் பிடித்த துறைகளின் அலங்கார ஊர்திகளுக்கு மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அன்று மாலை பரிசுகள் வழங்கினார். பின்னர் இந்திய விமானப்படையின் வானூர்திகளின் அணி வகுப்பும் நடைபெற்றது. அணிவகுப்புகளின் சிறப்பு குறித்து மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுக்கு தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

நிகழ்ச்சியில் முப்படைகளின் தென்னக இராணுவ தலைமை அதிகாரிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள்–முன்னாள் உறுப்பினர்கள், தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், அரசுத் துறை அலுவலர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பெருமளவில் கலந்துகொண்டனர். நாட்டுப்பண் ஒலிக்க விழா இனிதே நிறைவடைந்தது.

# திருவள்ளுவர் ஆண்டுக் கணக்குப்படி தை முதல் நாள் என்று தொடங்கினால்தான் ஆண்டுக் கணக்கு சரியாக இருக்கும். தமிழனின் மானம் தங்கும். தமிழ்மொழியின் உரிமை காப்பாற்றப்படும்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் உரை**



**தை** முதல் நாளை, தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்தமைக்காக சங்கத் தமிழ்ப் பேரவை சார்பில், **9.2.2008** அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

இன்று நடைபெறுகின்ற இந்த விழாவில் நான் கலந்து கொள்ள இயலுமா என்ற கேள்விக்குறி நேற்றிரவு எழுந்து அந்தக் கேள்விக் குறி காலையிலே பேருரு எடுத்து, அதன் பின்னர் கலந்து கொண்டுதான் ஆக வேண்டும் என்ற என்னுடைய மன உறுதியின் காரணமாகவும், பிடிவாதத்தின் காரணமாகவும் இந்த விழாவினை முன் நின்று ஏற்பாடு செய்த தம்பி துரைமுருகன், தம்பி ஜெகத்ரட்சகன் ஆகிய இருவருடைய முகங்களைப் பார்க்கின்ற நேரத்திலும் நிச்சயமாக கலந்து கொள்வேன் என்று உறுதியளித்து, இந்த விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றேன்.

இன்று காலை நிகழ்ச்சியிலும், மாலை நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வதாக நான் இருந்தாலும்கூட கடந்த இரண்டு நாட்களாக இந்த நிகழ்ச்சிக்காக நடைபெறுகின்ற சிறப்புக்களை, ஏற்பாடுகளை கண்டுகளிக்கின்ற அந்த வாய்ப்பை நான் வள்ளுவர் கோட்டப் பகுதியிலே பெற்றிருந்தேன். அந்த வாய்ப்பைப் பெற்றிருந்த காரணத்தினால்தான் அந்தச் சிறப்போடு நடைபெறுகின்ற இந்த விழாவில் இன்று கலந்து கொள்ள முடியாமல் மருத்துவர்கள் தடை போட்டு விடுவார்களோ என்ற அச்சத்தோடு இருந்தேன். ஆனால் இந்த மருத்துவர் தடை போடாமல் என்னை இங்கே அழைத்தே வந்து, இந்த விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு உதவி புரிந்ததற்காக உங்கள் சார்பாக அவருக்கும், கொஞ்சம் என்னை விட்டு விலகியிருக்கின்ற அந்த உடல் நோய்க்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.



கடந்த **23-1-2008** அன்று தமிழகச் சட்டப்பேரவையில் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் ஆற்றிய உரையில் தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு நாள் எனக் கொண்டாடப்படும் என்று அரசின் சார்பில் அறிவித்தார். அதை நன்றியோடு பாராட்டி விழா எடுக்கின்ற அந்தப் பணியை இந்தச் சங்கம் ஏற்றுக் கொண்டு, இந்த அமைப்பின் தலைவராக விளங்குகின்ற தம்பி துரைமுருகனும், தம்பி ஜெகத்ரட்சகனும் பெரும்பணியாற்றி, தமிழகத்திலே எங்கெங்கே சிறப்பான அம்சங்கள், தமிழ் தொடர்புடைய நிலைமைகள் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் சேகரித்துஇந்த வள்ளுவர் கோட்டத்தில் நிரப்பி எங்களையெல்லாம், ஏன் ? உங்களையும் சேர்த்து மகிழ்வித்திருக்கிறார்கள்.

வள்ளுவர் கோட்டத்தின் திறப்பு விழா நடைபெற்ற போது கூட இல்லாத சிறப்பு இன்றைக்கு இந்த வள்ளுவர் கோட்டத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்காக நான் இந்த இரண்டு தம்பிமார்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அமைப்பு ஆன்மீக முறையினாலும் சரி, அறிவியல்ரீதியில் ஆனாலும் சரி, தமிழை வளர்ப்பது என்ற ஒரு மூல நோக்கத்தைக் கொண்டு இயங்குகின்ற அமைப்பு என்பதை நான் நன்றாக அறிவேன். அதிலும் குறிப்பாக நம்முடைய ஜெகத்ரட்சகன் இங்கே பேசும்போது அவர் இங்கே எடுத்தாண்ட ஆழ்வார் பாசுரங்கள், ராமாயண மேற்கோள்கள் இவைகளை யெல்லாம் நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஆகவே ஆன்மீகமும், நம்முடைய சார்பில் துரைமுருகனும் பங்கேற்றிருப்பதால் அறிவியக்கமும் கலந்த ஒரு கலவை இந்த அமைப்பு என்பதை நான் அறிந்த காரணத்தினாலே தான் இந்தப் பொதுவான அமைப்பு தமிழ்ப் புத்தாண்டு உருவாகிறது என்பதை வரவேற்கிற காரணத்தால் இந்த அமைப்பின் வழி எல்லா தமிழர்கள் நடை போடுவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த விழாவிற்கு வருகை தர நானும் ஒத்துக் கொண்டேன், உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பையும் இன்றைக்குப் பெற்றிருக்கின்றேன்.

## தமிழால் பிழைத்த குயக்கொண்டான்

நம்முடைய ஆண்டுகள், தமிழ் ஆண்டுகள் என்பதை இங்கே உரையாற்றிய நம்முடைய அவ்வை நடராசன் அவர்களும், நம்முடைய பேராசிரியர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற பழைமைவாதிகள், பெரியவர்கள் நான் அவர்கள் எல்லாம் அறியாதவர்கள் என்று சொல்ல மாட்டேன் – அறிகின்ற அளவிற்கு வாய்ப்பு பெறாதவர்கள் –. அந்த வாய்ப்பு தடுக்கப்பட்டவர்கள் – எங்களுடைய கிராமத்திலேயிருந்து சென்னை வரையிலே உள்ள பெரியவர்களானாலும் சரி, மூத்த தாய்மார்களானாலும் சரி, அனைவருமே இன்றைக்கு எண்ணிக் கொண்டிருப்பது வேறு ஆண்டுகளைத்தான். சமஸ்கிருத ஆண்டுகளைத்தான். ஆரியம் உயர்ந்ததா? தமிழ் உயர்ந்ததா என்ற கேள்வி எழுந்த போது குயக்கொண்டான் என்ற ஒரு தமிழ்ப் புலவர் "ஆரியமே உயர்ந்தது, தமிழ் உயர்ந்தது அல்ல" என்று தீர்ப்பு கூறினார் என்று பழம் பாடல்களிலே நாம் காணுகிறோம். அதுவும் அவர் அந்தக் கருத்தை நக்கீரனுக்கு முன்னால் சொன்னார் என்பது நாம் கேட்டறிந்த வரலாறாகும். அதிலே ஆத்திரம் கொண்ட நக்கீரன் "தமிழை தீது என்றும், ஆரியத்தை நன்று என்றும் சொன்ன நீ சாகக் கடவாய்" என்றும் அன்றைக்கே சாபமிட்டாரென்றும், அந்தச் சாபம் உடனடியாகப் பலித்ததென்றும், அவனை எழுப்பித் தர வேண்டுமென்று நக்கீரனை எல்லோரும் வேண்ட, நக்கீரன் மீண்டும் தமிழிலே ஒரு பாட்டைப் பாடி, அந்தக் குயக்கொண்டானை எழுப்பினார் என்றும் – ஆக அவரைக் கொல்வதற்கும் தமிழ் பயன்பட்டது, கொல்லப்பட்டவனை எழுப்புவதற்கும் தமிழ் பயன்பட்டது. எனவே தமிழை நீ இகழ்ந்தது தவறு என்று குயக்கொண்டானுக்கு சுட்டிக் காட்டிய வரலாறு தமிழகத்திலே நீண்ட காலமாகச் சொல்லப்படுகின்ற வரலாறாகும்.

## நம்முடைய தாயை நாம் போற்ற வேண்டும்

அப்படிப்பட்ட வரலாற்றுக்குரிய நாம், இன்றைக்கு நம்முடைய மொழியில், நம்முடைய ஆண்டு குறிக்கப்பட வேண்டும், நம்முடைய ஆண்டுக் கணக்கு இருந்திட வேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்கு இந்த அறிவிப்பை – அரசின் மூலமே செய்து, நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவையின் கூட்டத்திலேயே அதை மசோதாவாக அறிமுகப்படுத்தி, வழக்கம் போல, அந்தச் சட்ட முன் வடிவை பெரும்பான்மையாக சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிந்து, அவர்கள் வாக்களித்து ஒரே மனதாக தமிழ் ஆண்டு தை முதல் நாள் தொடங்குகிறது என்ற கருத்து இன்றைக்கு சட்டமாக ஆகியிருக்கிறது என்பதை நான் பெருமையோடும், பெருமிதத்தோடும், மகிழ்ச்சியோடும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அதற்கு முன்பிருந்து ஆண்டுகள் என்ன தவறு செய்தன, ஏன் அவைகளையெல்லாம் விலக்க வேண்டுமென்று எழுதுகிறார்கள் ? பேசுகிறார்கள் ? மேடைகளிலே முழங்குகிறார்கள் ? எனக்குத் தெரியும். ஆனால் நமக்கு அந்த ஆண்டுகளின் மீது எந்தவிதமான கோபமும் கிடையாது. எந்தவிதமான பொறாமையும் கிடையாது, வெறுப்பும் கிடையாது. அந்த ஆண்டுகளை விலக்கித்தான் தீரவேண்டுமென்ற எண்ணமும், அப்படிப்பட்ட சூளுரையும் நாம் மேற்கொண்டு இந்தக் காரியத்திலே ஈடுபடவில்லை. நம்முடைய தாயை, நாம் போற்ற வேண்டும். நம்முடைய தாய்க்கு நாம் இடமளிக்க வேண்டும், பெருமை சேர்க்க வேண்டும். அந்தத் தாய், தமிழ்த் தாய், அந்தத் தமிழ்த்தாய்க்கு துரோகம்

செய்கிறவன் தமிழனாக இருக்க முடியாது என்ற காரணத்தினால்தான், தமிழ் ஆண்டு எது? எப்போது தொடங்குகிறது என்பதை ஆய்ந்திட பெரும் புலவர், தமிழர் தலைவராக ஒரு காலத்தில் நம்முடைய தமிழ் மக்களால் போற்றப்பட்ட பெரியார் அவர்களால் ஆதரிக்கப்பட்ட, அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மறைமலை அடிகள், மற்றும் 500 புலவர்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் கூட்டிய கூட்டத்திலே விவாதித்து எடுத்த முடிவு தான் தை முதல் நாள் தமிழர்களின் ஆண்டுக் கணக்கு தொடங்குகின்ற நாள் என்று அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கப்பட்டு, பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஏறத்தாழ இன்று கணக்கிட்டால் முப்பது அல்லது முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு – அப்போதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் – நான் முதலமைச்சராக இருந்த போது, மறைமலை அடிகள் கூட்டத்திலே அறிவிக்கப்பட்ட அந்தக் கருத்தையேற்று நம்முடைய அரசின் எல்லாவிதமான அறிக்கைகளிலும், புத்தகங்களிலும் தமிழ்ப் புத்தாண்டு, திருவள்ளுவர் ஆண்டு என்பதைக் குறித்தே வந்தோம். இப்போது அந்த திருவள்ளுவர் ஆண்டை, தமிழ்ப் புத்தாண்டு என்று, அந்தத் தைத் திங்களை முதல் மாதம் என்றும், தைத் திங்கள் முதல் நாள் உழவர்கள் உவகை அடைய, குழந்தைகள் குதூகலம் பெற்றிட, மங்கையர் மகிழ்ச்சி அடைந்திட, உலகமெல்லாம் ஏன் தமிழ்ச் சமுதாயத்து மக்கள் அத்தனை பேரும் தங்களுடைய இன்பத்தை இதயப்பூர்வமாக வெளியிடுகின்ற அந்த நாளை, தமிழர் நாளாக, தமிழர்களின் ஆண்டுத் தொடக்க நாளாகக் கொண்டாடுவோம் என்று முடிவெடுத்தோம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார் – "மார்கழி உச்சியில் மலர்ந்தது பொங்கல்" என்று. மார்கழி உச்சியில் மலர்ந்தது பொங்கல் என்ற அந்தக் கவிதை வரியின் தாத்பர்யமே, மார்கழியில் உச்சியில் வருவது தை முதல் நாள். அதிலே மலர்வது பொங்கல் நாள். அந்தப் பொங்கல் நாள் தான் தமிழ் ஆண்டின் முதல் நாள் என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மாத்திரமல்ல, அவரைத் தொடர்ந்து பல புலவர்களும் அதே கருத்தை எடுத்துரைத்தி ருக்கிறார்கள். அந்தக் கருத்து சரிதான் என்று ஏற்றுக் கொள்ள நானும், நம்முடைய பேராசிரியர் அவர்களும், நம்முடைய அமைச்சர்களும் கூடிப் பேசி, அமைச்சரவையிலே முடிவெடுத்து, எடுத்த முடிவு சரிதானா அல்லவா என்பதை எங்களை வாழ்த்துவதின் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு தெரிவியுங்கள் என்று கேட்டுக் கொள்ளத்தான் இங்கே அமர்ந்திருக்கின்ற அறிஞர் பெருமக்களை, புலவர் பெருமக்களையெல்லாம் அழைத்தோம். அவர்கள் எங்களுக்கு அந்த அங்கீகாரத்தை தந்திருக்கிறார்கள். இனி நம்முடைய வேலை, ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் வரும்போது புதுப் பானை வைத்தோம் என்பதோடு நிறுத்தாமல், பொங்கலை இப்போது கொண்டாடுகின்ற தீபாவளியைப் போலவே நாம் கொண்டாட வேண்டும். தீபாவளியிலே என்னென்ன காரியங்கள் நடைபெறுகிறதோ அந்தக் காரியங்கள் எல்லாம் பொங்கல் திருநாளில் தமிழர்களுடைய இல்லங்களிலே நடைபெற வேண்டும். திருவிளக்குகள் ஏற்றப்பட வேண்டும், புதுக் கோலங்கள் போடப்பட வேண்டும், புத்தாடைகள் புனையப்பட வேண்டும், புனலாட வேண்டும், அப்படிப்பட்ட மகிழ்ச்சிகரமான நாளாக பொங்கலைக் கொண்டாடி, இது தமிழர்களுடைய புத்தாண்டு நாள் என்றும் மகிழ்ந்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கு இதற்கு முன்பிருந்த ஆண்டுகளால் நான் முதலிலே சொன்னதைப் போல, ஏன் நம்மைக் கவர முடியவில்லை. அது கணக்கிலே வரவில்லை. கணக்குக்கு ஒத்து வரவில்லை. என்னென்ன ஆண்டுகள் வட மொழிகளாக நமக்கு இருந்தன. பேராசிரியர் சொன்னார் – சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி என்று பெயர்களைச் சொன்னார். ஓரளவிற்கு அவற்றைப் பார்க்கும்போது ஒன்றிரண்டு வடமொழிச் சொல்லாக இருந்தாலுங்கூட பொதுவாக மேலெழுந்தவாரியாக தமிழ்ச் சொற்களாகவே நமக்கு தென்படுகின்றன. அது நம்முடைய அடி பீடத்தை அசைக்கக் கூடிய அளவிற்கு வல்லமை பெற்றதாக இருக்காது என்ற அந்த நம்பிக்கையிலே தான் அடி பீடத்தையே அடிக்கக் கூடிய அளவிற்கு ஆண்டுக் கணக்கு இருப்பதைப் பார்க்கிறோம். கணக்கு என்று எடுத்துக் கொண்டால் கூட, என்னைப் பார்த்து உனக்கு என்ன வயது என்று கேட்டால், இப்போது 84 என்கிறேன், பேராசிரியரை கேட்டால் 85 என்கிறார். எந்த வருடம் பிறந்தீர்கள் என்று என்னைக் கேட்டால், நான் இந்தத் தொடர் ஆண்டைச் சொல்ல முடியாது. தொடர் ஆண்டைச் சொல்லாமல் சமஸ்கிருத ஆண்டைத் தான் சொல்ல வேண்டுமென்றால், என்னைப் பொறுத்தவரையில் நான் ரக்தாட்சி ஆண்டு பிறந்தேன் என்று சொல்ல வேண்டும். ரக்தாட்சி ஆண்டிலிருந்து கணக்கிட்டால், ரக்தாட்சி, குரோதன, அட்சய என்ற இந்த மூன்று ஆண்டுகள் போக, பிரபவ, விபவ, சுக்ல என்று ஆரம்பிக்கின்ற வடமொழி ஆண்டுகளைக் கணக்கிட்டால் இப்போதுள்ள ஆண்டு 30ஆவது ஆண்டாக, அல்லது 31ஆவது ஆண்டாக இருக்கும். நான் நம்முடைய பழைய வருஷக் கணக்குப்படி என்னுடைய வயது 30 அல்லது 31 என்று தான் சொல்லவேண்டும். வயது கணக்கு தவறும். வயது கணக்கு தடுமாறும். எனவே தான் தொடர் கணக்காக இருக்கவேண்டுமென்று தான் திருவள்ளுவர் ஆண்டு தொடர் ஆண்டாகவும், திருவள்ளுவர் ஆண்டின் தை முதல் நாள் அந்த ஆண்டின் தொடக்க நாளாகவும் இருக்க வேண்டும், தமிழ்ப் பெயரில் இருக்க வேண்டுமென்று



......தொடர்ச்சி 45ஆம் பக்கத்தில்



அண்ணல் காந்தியடிகளின் 61ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த புகைப்படத்திற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர்த் தூவி மரியாதை செலுத்தினார்கள். (30-1-2008)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம், தலைமைச் செயலகத்தில் சுமார் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில், சென்னை-மாமல்லபுரம் அருகே நெமிலியில், கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலாளர் திரு. கே. தீனபந்து, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் வாரிய நிருவாக இயக்குநர் திரு. சிவதாஸ் மீனா ஆகியோர் உள்ளனர். (22-1-2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னையில் நடைபெற்ற விழாவில் விவசாயப் பெருமக்களின் வேளாண் பணிகளுக்காக புதிதாக வாங்கப்பட்ட 50 உழுவை இயந்திரங்கள் மற்றும் 25 அறுவடை இயந்திரங்களின் சாவிகளை மாவட்ட வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர்களுக்கு வழங்கினார்கள். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ். ஆறுமுகம், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர். (31-1-2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில். தலைமைச் செயலகத்தில் தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகச் செயல்படுவோர் மீது நடவடிக்கை எடுக்க புதிய சட்டம் இயற்றுவது சம்பந்தமாக ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன். தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, அரசு தலைமைவழக்கறிஞர் திரு.ஜி.மாசிலாமணி, உள்துறைச் செயலாளர் திருமதி.எஸ். மாலதி, பொதுத்துறைச் செயலாளர் திரு.தேவ. ஜோதி ஜெகராஜன். காவல்துறை இயக்குநர் திரு.பி.ராஜேந்திரன், தமிழ்நாடு உளவுத்துறை கூடுதல் டி.ஜி.பி. திரு.ஆர்.சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர். (30-1-2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில், தேசதந்தை மகாத்மா காந்தியடிகள் நினைவு நாளையொட்டி, தீண்டாமைஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தலைமைச் செயலக ஊழியர்கள் உள்ளனர். (30-1-2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2,500 கிராம நிருவாக அலுவலர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கித் தொடங்கிவைத்தார். உடன் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, வருவாய்த்துறைச் செயலாளர் திரு.அம்புஜ் சர்மா, நில நிருவாகத்துறை கூடுதல் ஆணையர் திரு.பி.எம்.பஷீர் அகமது, வருவாய் நிருவாகத்துறை இணை ஆணையர் திரு.டி.ராஜேந்திரன், திருவள்ளுவர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் ராஜேந்திரகுமார் ஆகியோர் உள்ளனர். (21-1-2008)



முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்தநாளையொட்டி,
சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் உள்ள
அவரது உருவச்சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் (17-1-2008)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவ[ர்கள்]
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊராட்சி ஒன்றியம் வாரியாக தயாரித்துள்ள நீராதாரங்கள் திறன்
நிலத்தடி நீராதார விவரம் குறித்த குறுந்தகட்டில் உள்ள விவரங்கள் அடங்கிய புத்தகத்தினை வெளியிட
மாநிலத் திட்டக்குழுத் துணைத்தலைவர் முனைவர் மு.நாகநாதன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.
உடன் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்ச் செயலர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன், நகராட்சி நிருவாகம்
குடிநீர் வழங்கல் துறையின் அரசுச் செயலர் திரு.க.தீனபந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய
மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங் மற்றும்
திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.சத்யபிரதா சாகு ஆகியோர் உள்ளனர். (19-1-2008)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
சென்னைப் புறநகர் பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கிவைத்தார்கள். உடன்
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உள்ளார். (19-1-2008)



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 112ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின்
சென்னையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த
புகைப்படத்திற்கு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர்
திரு.பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
திரு.வெள்ளக்கோவில் சாமிநாதன் மற்றும்
முக்கியப் பிரமுகர்கள் மலர்த் தூவி மரியாதை செலுத்தினார்கள். (23-1-2008)



தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமான அறிஞர் அண்ணா திருமண மண்டபத்திற்கு வழங்கப்பட்ட ISO/9001-2000 என்ற தரச்சான்றிதழை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி நகர்மன்றத்தலைவர் திருமதி.ஆர்.கஸ்தூரி தங்கம் அவர்களிடம் வழங்கினார்கள்.
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி.பி. கீதா ஜீவன்.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசுச் செயலர் திரு.க.தீனபந்து.
நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி ஆகியோர் உடன் உள்ளனர். (18-1-2008)



வடசென்னையில் மாநகராட்சிப் பள்ளிக்கட்டடத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்து மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு தலா ரூ.15 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.9 இலட்சம் நிதியுதவி வழங்கினார்.
அருகில் மேயர் திரு.மா.சுப்ரமணியன், துணை மேயர் திருமதி ஆர்.சத்தியபாமா, ஆணையர் திரு.ராஜேஷ் லகானி, துறைமுகப் பொறுப்புக்கழக உறுப்பினர் திரு.எல்.பலராமன் மற்றும் மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். (21-1-2008)






சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள். ஊரக வளர்ச்சித்துறையில் 245 சாலை ஆய்வாளர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள் (26-1-2008)



சென்னை தமிழரசு அச்சகத்தில் காலியாக இருந்த இரண்டு பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் வழங்கினார்கள்.தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.கோ.சந்தானம் மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ் ஆகியோர் உடன் உள்ளனர். (23-1-2008)



மாண்புமிகு மத்திய இரயில்வேதுறை இணை அமைச்சர் திரு.வேலு அவர்களும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களும், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் முதல் சுதந்திரப்போராட்டத்தின் 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட இரயில் கண்காட்சியினைப் பார்வையிட்டார்கள்.(17-1-2008)



சென்னையில் நடைபெற்ற முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெஸ்கோ) தினவிழாவில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி அவர்கள் தலைமையேற்று கழகத்தில் பணிபுரியும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு ஊக்கத்தொகையையும், அவர்களது 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற குழந்தைகளுக்கு கல்வி ஊக்கத்தொகையையும் வழங்கினார்கள். உடன் பொதுத்துறைச் செயலாளர் திரு.தேவ.ஜோதி ஜெகராஜன், மேலாண்மை இயக்குநர், டெஸ்கோ மற்றும் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை முனைவர் ஆ.சி.மோகன்தாஸ் ஆகியோர் உள்ளனர்.(1-2-2008)



36ஆம் பக்க தொடர்ச்சி

இன்றைக்கு அமைத்திருக்கிறோம். இல்லாவிட்டால் நமக்கென்று வரையறுத்துக் கொடுக்கப்பட்ட ஆண்டுகள் வடமொழியில் அறுபதாண்டுகள். அதுவும் சாதாரணமாக வந்த ஆண்டுகள் அல்ல. நாரதருக்கு திடீரென்று ஒரு ஆசை ஏற்பட்டு, மகாவிஷ்ணுவைப் பார்த்து பெண் உருவமெடுத்து நான் உனக்கு குழந்தைகளைப் பெறவேண்டுமென்று விஷ்ணுவைப் பார்த்துக் கேட்டு, விஷ்ணுவும் நாரதர் வேண்டுகோளை புறக்கணிக்க விரும்பாமல் – எப்படி புறக்கணிப்பார், புறக்கணிக்க விரும்பாமல், நாரதர், நாரதியாகி விஷ்ணு அவளுடைய கணவராகி இருவருக்கும் பிறந்த குழந்தைகள் அறுபது. அந்த அறுபது குழந்தைகளும் தான் அறுபது ஆண்டுகள். அந்த ஆண்டுகள் தான்,

**தமிழனுடைய மானம் காப்பாற்றப்படும்**

பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோதிபத்தி, ஆங்கிரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்ரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, ஸர்வஜித்து, சர்வதாரி, விரோதி, விக்ருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துர்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, ராக்ஷஸ, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, ரௌத்திரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரக்தாக்ஷி, குரோதன , அக்ஷய

என்று இப்படி அறுபதாண்டுகள். சொல்லும்போது வாயிலே நுழைவதில்லை. சொன்ன பிறகு காதிலும் நுழைவதில்லை. கருத்திலும் பதிவதில்லை. கருத்திலே பதிகின்ற ஒன்று, இவைகள் எல்லாம் புராணக் கணக்கு. உண்மையான வயதுக் கணக்கைக் காட்டக் கூடியவைகள் அல்ல, வருடங்கள் அல்ல. அதனால் தான் தொடர் ஆண்டுக் கணக்கு வேண்டுமென்று யோசித்தோம். அந்த தொடர் ஆண்டுக் கணக்கு, திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு என்று தொடங்கினால் தான், தை முதல் நாள் அந்த ஆண்டின் முதல் நாள் என்று குறிக்கப்பட்டால் தான் சரியான கணக்கும் கிடைக்கும், தமிழனுடைய மானமும் தங்கும். தமிழ் மொழியின் உரிமையும் காப்பாற்றப்படும்.

தமிழ் மொழியின் உரிமையைக் காப்பாற்ற ஒரு பெரும் போராட்டக் களத்திலே நிற்கின்ற இயக்கம் தான் திராவிட இயக்கம். அந்தத் திராவிட இயக்கத்தினுடைய இந்தச் செயல்களிலே ஒன்று தான் தமிழுக்கு ஆட்சி அந்தஸ்து, தமிழுக்கு ஆண்டுப் பெருமை, தமிழுக்கு எல்லா மொழிகளுக்கும் உள்ளதைப் போன்ற செம்மொழித் தன்மையை இன்றைக்குத் திரட்டிக் கொடுத்திருக்கின்றது. அதைப் பாராட்ட, வாழ்த்த ஒரு விழாவை நம்முடைய தம்பிமார்கள் ஜெகத்ரட்சகனும், துரைமுருகனும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு, இப்படிப்பட்ட ஏற்பாடுகள் புதிதல்ல. பழைய நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்திக் காட்டி வெற்றி கண்டவர்கள்.

அந்த வெற்றியின் அடையாளமாக இந்த விழாவையும் அவர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஜெகத்ரட்சகன் இதை மாநாடு என்றே அறிவித்தார். அந்த அளவிற்கு மாபெரும் விழாவும் அல்ல. அதே நேரத்தில் சின்னக் கூட்டம் என்று சொல்கின்ற அளவிற்கு சிறிய நிகழ்ச்சியும் அல்ல. இது அவர்களுடைய இதயத்திலே எழுந்த எழுச்சி. அந்த எழுச்சியின் அடையாளம் தான் இன்றைக்கு வள்ளுவர் கோட்டத்தில் இவ்வளவு பெரிய மகத்தான எழுச்சியை, தமிழ் மொழியின் புரட்சியை நாம் கண்டுகளிக்கிறோம்.

**அனைத்திலும் தமிழ் மனம் கமழ வேண்டும்**

இதைப் பார்த்து சிலபேருக்கு எரிச்சல் ஏற்படலாம். அந்த எரிச்சலுக்காக நாம் கவலைப்படத் தேவையில்லை. அங்கே எரிய எரிய இங்கே ஒளி கிடைக்கும். எங்கேயாவது எரிந்தால் தான் அந்த எரிச்சல் நம்முடைய வீட்டிற்கு ஒளியாக இருக்கும் என்பதைப் போல், அந்த ஒளியையும் நாம் பெறுவோம். நம்முடைய வீடு, நம்முடைய ஊர், நம்முடைய நாடு அனைத்திலும் தமிழ் மணம் கமழ வேண்டும். அந்தத் தமிழ் மணம் கமழ்வதற்கு இது போன்ற நிகழ்ச்சிகள் என்றென்றும் உதவக் கூடிய, பயன் படக்கூடிய நிகழ்ச்சிகள் என்பதை நான் எடுத்துச் சொல்லி, இந்தப் பயன் விளைக்கும் நிகழ்ச்சியை, பண்பார்ந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த என்னுடைய அருமைத் தம்பிகள் துரைமுருகனுக்கும் ஜெகத்ரட்சனுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து, எங்களையெல்லாம் அங்கீகரித்த புலவர்கள் இங்கே பேசினார்கள். வந்து விட்ட காரணத்தால் நாங்கள் அழைத்த காரணத்தால், வரவேண்டிய கடமையை ஆற்றிய புலவர் பெருமக்கள் வ.அய். சுப்பிரமணியம் போன்றவர்கள், குழந்தைசாமியைப் போன்றவர்கள் மற்றும் இங்கே வீற்றிருக்கின்ற பெரும் புலவர்கள், தமிழறிஞர்கள், இலங்கையிலிருந்து வந்த நண்பர் ஜெயராஜ் போன்றவர்கள் எல்லாம் வாழ்த்தினார்கள், பாராட்டினார்கள் என்றால், அது அவர்களுக்குக் கடமையாக ஆகி விட்டது. இங்கே வந்து தமிழுக்காக ஒரு தொண்டு செய்தவனைப் பாராட்டாமல் இருக்க முடியாது, இருந்தாலுங்கூட அது என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய உயரத்திற்கு அப்பாற்பட்டது, என்னுடைய அளவிற்கு மீறியது. அதை நான் அடக்க உணர்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, அந்த வாழ்த்துகளையும், அவர்களுடைய பாராட்டுக்களையும் நான் தொடர்ந்து செய்யவிருக்கின்ற தமிழ்த் தொண்டுக்கு உரமாக ஆக்கிக் கொள்வேன், எருவாக ஆக்கிக் கொள்வேன் என்று கூறி இந்த அளவில் விடைபெறுகிறேன். ★

# மத்தியத் திட்டக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை



மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் 11.2.2008 அன்று புதுடெல்லியில் 2008–2009ஆம் ஆண்டு தமிழக திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டினை முடிவு செய்வது தொடர்பாக மத்தியத் திட்டக் குழு துணைத் தலைவர் முனைவர் மான்டேக் சிங் அலுவாலியா அவர்களைச் சந்தித்துப் பேசினார். தலைமைச் செயலாளர் எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., சட்ட மற்றும் வளர்ச்சித் துறைச் செயலாளர் நாகராஜன், இ.ஆ.ப., மாநில திட்டக் குழு உறுப்பினர்–செயலர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., மற்றும் திட்டக் குழு உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் க.அன்பழகன் பேராசிரியர் அவர்கள் புதுடில்லி, மத்தியத் திட்டக் குழுவில் 11.02.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:–

மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கான, 2008–2009ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை முடிவு செய்வதற்காக இங்கே வந்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

மத்திய மற்றும் மாநில அரசின் பதினோராவது திட்ட ஒதுக்கீடுகளை ஒப்பளிப்பு செய்த பின்னர் இந்த ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு முடிவு செய்யப்பட இருப்பதால் இந்தக் கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

பதினோராவது திட்டம் ரூ.85,344 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது பத்தாவது திட்ட ஒதுக்கீடான ரூ.40,000 கோடியைவிட இரண்டு மடங்கிற்கும் அதிகமாகும். சமூகநீதியுடன் கூடிய ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார வளர்ச்சியை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு முன்னேறி வருகிறது.



**கூடுதல் செலவுகள் – மானியமாக அளிக்கப்பட வேண்டும்**

தற்போதுள்ள நிதி ஆதாரங்களைக் கணக்கில்கொண்டு, 2008–2009ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அளவினை ரூ15,500 கோடி என முன்மொழிந்துள்ளோம். பதினோராவது திட்டத்தினைச் செயல்படுத்துவதை விரைவு படுத்துவதற்கு இந்த ஒதுக்கீட்டின் அளவினை மேலும் உயர்த்த வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். தமிழ்நாடு, ஒரு பெரிய திட்ட ஒதுக்கீட்டினைப் பெறுவதற்கு ஏதுவாக கூடுதல் மத்திய உதவியினை வழங்குமாறு மத்திய திட்டக் குழுவினை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இது சீரான வளர்ச்சிக்குத் திறவுகோலாக அமைவதோடல்லாமல், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடவும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிடவும் வழிவகுக்கும்.

2008–2009ஆம் ஆண்டுத் திட்டத்தில் இத்துறைக்குப் போதுமான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் ஆகிய திட்டங்களை அறிவித்த மத்தியத் திட்டக் குழுவினைப் பாராட்டும் அதேவேளையில், இத்திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விழைகின்றேன். வரையறுக்கப்பட்ட செலவீனத்திற்கும் கூடுதலாக மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படும் செலவுகள் மானியமாக அளிக்கப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

சிறப்பான நீர்ப்பாசன மேலாண்மை, வேளாண் உற்பத்தி மற்றும் வேளாண் வருவாயில் முன்னேற்றம் ஆகியவற்றை அடைய தமிழ் நாடு நீர்வள நிலவளத் திட்டத்தினை (IAMWARM) எங்கள் மாநிலத்தில் 63 துணை வடிநீர் பகுதிகளில் செயல்படுத்தி வருகிறோம். தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தின் மாதிரியை பின்பற்றி மற்ற துணை வடிநீர் பகுதிகளில் செயல்படுத்த நாங்கள் கருதியுள்ளோம்.

மாநிலத்தில் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, குறிப்பாக ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்காக, நாங்கள் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறோம். மேலும், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைத் தடுப்பதற்காக, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் போன்றவற்றை நாங்கள் நியாயவிலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்து வருகிறோம். இம்முயற்சி மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வழி வகுத்துள்ளது. இத்திட்டங்களை நாடு முழுவதும் மத்திய அரசு நடைமுறைப்படுத்தலாம் என்று கருதுகிறேன்.

**நீர்ப்பாசன பயனளிக்கும் திட்டத்தின் கீழ் நிதி வழங்கிட வேண்டும்**

கடந்தமுறை நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், முதல் கட்டமாக தீபகற்ப ஆறுகளை இணைப்பதற்கு ஏதுவாக 11ஆவது திட்டத்திலேயே இத்திட்டத்தினைச் சேர்த்து அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறியிருந்தேன். ஆறுகளின் இணைப்புத் திட்டங்களை "தேசிய சொத்துக்கள்" என அறிவித்தும், 90 சதவீதம் மத்திய அரசின் நிதியுதவியுடன் அத்தகைய 14 திட்டங்களைச் செயல்படுத்தவும் மத்திய அரசு அறிவித்துள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைப்பதற்கும் அதிக அளவு நிதி தேவைப்படுகிறது. எனவே, தேசிய வளர்ச்சிக் குழுவின் 53ஆவது கூட்டத்தில் ஏற்கெனவே முடிவு செய்துள்ளபடி மாநிலத்தில் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களுக்கு விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசன பயனளிக்கும் திட்டத்தின்கீழ் (AIBP) மத்திய அரசு நிதி வழங்கிட வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

தமிழக அரசு பொறுப்பேற்றவுடன், உடனடியாக அனைத்து வேளாண் கூட்டுறவுக் கடன்களையும் ரத்து செய்யும் ஒரு துணிச்சலான முடிவினை எடுத்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சிகளாலும், வெள்ளச் சேதங்களாலும் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத விவசாயிகளுக்கு இந்த முடிவு உடனடி நிவாரணத்தை அளித்து, அவர்கள் மீண்டும் வங்கிக் கடன் பெற வழிவகுத்துள்ளது. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்த செலவின் ஒரு பகுதியை, நாட்டில் குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட தொகுப்புச் சலுகைகளைப் போலக் கருதி, மத்திய அரசு ஏற்க வேண்டுமென நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

சமையலுக்கு விறகுகளை எரிபொருளாகப் பயன்படுத்தி துன்பங்களுக்கு ஆளாகும் ஏழைப்

பெண்களின் சிரமங்களைக் குறைப்பதற்காக எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகளை இலவசமாக வழங்கும் ஒரு திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இது பெண்களுக்கு பெரிய அளவில் பயனளிக்கும் திட்டம் என்பதோடல்லாமல் சுற்றுச் சூழலுக்கும் நன்மையளிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, இத்திட்டம் மத்திய நிதியுதவி பெற உகந்ததாகும்.

**மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி – சலுகைகள் வழங்கப்பட வேண்டும்**

தமிழக கிராமங்கள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களுக்கு ஏழைக் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்திற்கு 'பாரத் நிர்மாண்' திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, உயர்ந்த தரமான நகர்ப்பகுதி உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தமிழக அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

சென்னை நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு புகழ்பெற்ற மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்தும் அறிவிப்பினை வெளியிட்டோம். இத் திட்டத்திற்கு முழு நிதியுதவி வழங்குவதற்கு மத்தியத் திட்டக் குழுவைக் கேட்டுக் கொள்ளும் அதே நேரத்தில், டெல்லி மெட்ரோ இரயில் திட்டத்திற்கு வழங்கப்பட்ட அதே சலுகைகள் இத்திட்டத்திற்கும் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

விழுப்புரம்–திண்டுக்கல் இரயில்பாதை தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களை இணைக்கும் முக்கிய இரயில் பாதையாகும். எனவே, தென் மாவட்டங்களுக்கு கூடுதல் இரயில்களை இயக்குவதற்கு ஏதுவாக இந்தப் பாதையை இருவழிப்பாதையாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கும்படி மத்திய அரசை நான் வலியுறுத்துகிறேன்.

**வட்டார மாதிரிப் பள்ளிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும்**

இந்தியாவின் ஏற்றுமதிக்கும் பெரிய அளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், தமிழகத்தில் உள்ள தோல் மற்றும் நூற்பாலைகள் பெரிதும் பங்களித்து வருகின்றன. அவை மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்புடையவையாக இருந்தாலும் கூட, உலக அளவில் போட்டியிடத் தகுதி உடையனவாக இருக்க வேண்டும். எனவே, இந்தத் தொழிற்சாலைகளுக்குக் கழிவு நீரை முற்றிலும் மாசற்றதாகச் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்க நிதியுதவி வழங்க வேண்டுமென்று மைய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை அறிவித்ததற்கு மத்திய அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 'வட்டார மாதிரிப் பள்ளி' சமச்சீரான வளர்ச்சி என்ற குறிக்கோளை எய்துவதற்கு பெரிதும் துணைபுரியும். மாநில பாடத்திட்டத்தைப் பின்பற்றி வட்டார மாதிரிப் பள்ளிகளை அமைக்க மாநிலங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய நோய்களுக்கு, ஏழைமக்கள் தனியார் மருத்துவ வசதியை நாட இயலாது. எனவே, அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவனைகளைத் தரம் உயர்த்துவதன் மூலமாக இதுபோன்ற பெரிய நோய்களுக்கு இலவச மருத்துவ வசதியை அரசு தொடர்ந்து வழங்க வேண்டும். தரமான மருத்துவ வசதி வழங்க, திட்டக்குழு மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்றினைத் தயாரித்து மாநில அரசிற்கு உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பான்மையான மத்திய திட்டங்கள் யாவும் அனைத்துவகையிலும் பின்தங்கிய மாநிலங்களை மனதில் கொண்டே உருவாக்கப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது மாநிலங்களுக்கிடையே சமவளர்ச்சி ஏற்படுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதை ஒத்துக்கொள்ளும் அதே வேளையில், மற்ற மாநிலங்களின் வளர்ச்சி விகிதம் தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டும் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தேவைக்கேற்ப மாற்றியமைக்கத்தக்க நடைமுறைகள் இருக்க வேண்டும். இது, மைய அரசின் உதவியினை மேலும் அர்த்தமுள்ளதாக மாற்றும். பதினோராவது திட்டத்திலேயே இத்தகைய மாற்றத்தினை அறிமுகப்படுத்தும்படி திட்டக் குழுவினை நான் கேட்டுக் கொள்கிறேன்.



# 2008 - 2009 ஆம் ஆண்டுக்கான தமிழக திட்ட ஒதுக்கீடு ரூ.16 ஆயிரம் கோடி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கை ஏற்பு



பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தமிழ்நாட்டின் மொத்த ஒதுக்கீடு ரூ.85,344 கோடி என தேசிய வளர்ச்சிக் குழுவால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டு, 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடாகிய ரூ.14,000 கோடியை உயர்த்தி, 2008–2009 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டை ரூ.15,500 கோடி அளவில் முன்மொழியப் பட்டது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை எய்தும் வகையில், திட்ட ஒதுக்கீட்டை மேலும் உயர்த்துவதற்கு கூடுதல் மத்திய உதவியினை வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பில் கோரப்பட்டது.

மேலும் விழுப்புரம் – திண்டுக்கல் அகல ரயில் பாதையை இரு வழித் தடமாக மாற்றுவதற்கு மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி வழங்க வேண்டும் என்றும், மாநிலத்திற்கு உள்ளே பாயும் நதிகளை இணைக்கும் திட்டப் பணிகளுக்கு விரைவுப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன பயன் திட்டத்தின் கீழ் (AIBP) நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்றும், மாநிலத்திலுள்ள தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட மத்திய அரசு உதவி அளிக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

**தமிழ்நாடு அரசு திட்டப் பணிகளுக்கு திட்டக்குழு துணைத் தலைவர் பாராட்டு**


தமிழ்நாடு அரசு திட்டப் பணிகளை மிக சிறப்பாக செயல்படுத்தி வருவது குறித்து மத்திய திட்டக்குழு வின் துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா அவர்கள் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். மகளிர் மற்றும் குழந்தைகளின் நலன் பேணும் பல புதிய சமூக நலத் திட்டங்களை செயல் படுத்தி, தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ்வதையும் தொழில்துறையில் பெரும் முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னணி மாநிலமாக விளங்குவதையும் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

**கடந்த ஆண்டைவிட ரூ.2000 கோடி உயர்வு**

2006 – 2007ஆம் ஆண்டில் ரூ.12,500 கோடியாகவும், 2007 – 2008ஆம் ஆண்டில் ரூ.14,000 கோடியாகவும் நிர்ணயிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி உயர்த்தப்பட்டு 2008 – 2009ஆம் ஆண்டில் ரூ.16,000 கோடியளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் தமிழக அரசின் சார்பில் கோரப்பட்ட முக்கியத் திட்டங்களுக்கு மத்திய திட்டக் குழு ஆதரவளிக்கும் எனவும் மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் அவர்கள் உறுதியளித்தார். ★

# தொல்காப்பியர்-திருவள்ளுவர்-ஔவையார் - இளங்கோவடிகள் - கம்பர் - ஒன்றாக வரக்கூடிய காலம் கலைஞர் காலம்

– மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்**



**தை** முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை பாராட்டி **9.2.2008** அன்று நடந்த விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை :

இந்த இனிய விழாவில் கலைஞரை வாழ்த்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை, இந்த நிகழ்ச்சியிலே தலைமை வகிப்பதற்கான ஒரு சிறப்பான வாய்ப்பை எனக்கு வழங்கியதற்காக அன்புக்குரிய துரைமுருகன் அவர்களுக்கும் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் அவர்களின் தனிப்பட்ட சிறப்பு, பல்வேறு துறைகளில் அவர் பெற்றிருக்கிற புகழ், பெருமை, அவருடைய சீரிய பணிகள் இவைகளெல்லாம் ஒருபக்கம் இருந்தாலும் தமிழ்நாட்டை மாற்றி அமைக்கிற, தமிழ்நாட்டை புதுவாழ்வு பெறச்செய்கிற ஒரு அரும் பணியை கலைஞர் அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள். அப்படிப்பட்ட பணியிலே மிகச் சிறந்த ஒரு பணிதான்; தை முதல் நாள் தமிழ் ஆண்டின் தொடக்க நாள் என்று கலைஞர் அவர்கள் அறிவித்து, அப்படி அறிவித்ததற்காக இன்றைய தினம் அவரைப் பாராட்டி போற்றிக் கொண்டிருக்கிறோம்.

தமிழனுக்கு ஒரு ஆண்டு கூட கிடையாது என்று பேசக்கூடிய நிலை நீண்ட காலமாக தமிழகத்திலே இருந்தது. சித்திரையிலே பிறக்கிற ஆண்டு தமிழன் ஆண்டு அல்ல. பிரபவ, விபவ, சுக்கில என்று தொடங்குகிற அறுபது ஆண்டுகளும், தமிழனுக்குரிய ஆண்டுகளல்ல. தமிழர்களிடத்திலே அது வழக்காற்றிலே பஞ்சாங்கத்தின் மூலம் இடம்பெற்று, பஞ்சாங்கமும் பஞ்சாங்கத்தைப் பயன்படுத்துகிறவர்களும் பெற்ற செல்வாக்கு காரணமாக, சித்திரைதான் தமிழனுக்கு முதல் ஆண்டு என்ற எண்ணம் மிக ஆழமாக ஊன்றிப் போய்விட்டது. அப்படி ஊன்றிப்போன காரணத்தால், தமிழர்களுக்கு தங்களுக்கென்று ஒரு ஆண்டு நினைவிலே வைக்கக்கூட வாய்ப்பில்லை. நல்ல வேளையாக அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழ் அறிஞர்களெல்லாம் கூடி, வள்ளுவப் பெருந்தகையின் பெயரால் ஆண்டு கணக்கிட வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஆண்டு கணக்கிடுவதற்கு அது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

**நம்முடைய மொழி என்ற உணர்வு நமக்கில்லை**

விக்ரமாதித்ய சகாப்தம் என்றோ, சாலி வாகன சகாப்தம் என்றோ சொல்கிறபோது, அந்த



சகாப்தங்களுக்கும் தமிழனுக்கும் தொடர்பு இல்லை. தமிழ்நாட்டிலே நீங்கள் பார்த்தால், தமிழர்கள் எல்லா வருஷப் பிறப்பையும் கொண்டாடுவார்கள். ஜனவரி முதல் தேதியையும் கொண்டாடுவார்கள். சித்திரை முதல் தேதியையும் கொண்டாடுவார்கள். தெலுங்கு வருடப் பிறப்பும் கொண்டாடுவார்கள். திருவோணம் விழாவும் கொண்டாடுவார்கள். தமிழனுக்கு விதிவிலக்கே கிடையாது. ஏனென்றால் அவனுக்கென்று எதுவும் இல்லை. அவனுக்கென்று ஒன்று இல்லாத காரணத்தால், எல்லாமே அவனுக்கு உடன்பாடாக மாறுபாடு அற்றதாக ஆகிவிட்டது. எனவே அந்த அடிப்படையிலே தமிழன் அடையாளத்தை இழந்தான். தமிழன், தமிழையே இழந்திருக்கக்கூடிய காலமும் இருந்தது. நல்லவேளை பரிதிமாற்கலைஞர் தோன்றிய காரணத்தால் தப்பியது.

மறைமலை அடிகள் தனித் தமிழ் இயக்கம் தொடங்கிய காரணத்தால், ஊரன் அடிகள் பேசியது போல, வடலூர் வள்ளலாரே தமிழர்களுக்கு அந்தத் தமிழுணர்வைத் தந்த காரணத்தால், வடலூர் வள்ளலார் தந்த அருட்பா ஆறாயிரம் பாடல்களும் தமிழைக் காப்பாற்றியது. தமிழைக் காப்பாற்றுவதற்கு அந்தப் பாடல்கள் போதும். அவ்வளவு சொற்கள். அவ்வளவு வளமான எண்ணங்கள். அவற்றையெல்லாம் குறிப்பிடுவதற்காகுக் காரணம்; அவை இருந்தும் கூட, தமிழ்மொழி இருந்தும் கூட, தமிழ் நம்முடைய மொழி என்ற உணர்வு நமக்கில்லை. தமிழ் இருந்தது. தமிழைப் பேசினான். பிழைப்புக்காகப் பேசினான். தமிழைப் பாடினான். பிழைப்புக்காக! தமிழ் என் தாய்மொழி என்ற எண்ணத்தோடு அந்த உணர்வோடு தமிழ்நாட்டு மக்கள் அதைக் கருதவில்லை. அது காரணமாகத்தான் தமிழர்கள் பல்வேறு வகைகளில் பரந்த நோக்கத்திற்கு அடையாளமான எண்ணங்களைக் கொண்டவர்களாக இருந்தாலும்கூட, தமிழர்கள் தங்களுடைய இனத்தைக் காப்பாற்றுகிற ஆற்றலை இழந்தார்கள்.

**எல்லோரும் கொண்டாட வேண்டும்**

தமிழ்நாட்டிலே தமிழன், நீச ஜாதியைச் சேர்ந்தவன் என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்தது. தமிழனை நீசஜாதி என்று சொன்ன காரணத்தால்தான், அவனுடைய மொழி நீசமொழி ஆயிற்று. நீசமொழி என்று தனிப்பெயரல்ல. இந்த இனம் நீச இனம். இந்த இனம் பேசுகிற மொழி நீசமொழி. தமிழன் தாழ்ந்தான். தமிழும் தாழ்ந்தது. அதிலிருந்து மீட்பதற்கான உணர்வு இருந்தாலும்கூட, செயல்படுத்தக்கூடிய அந்த அளவிற்கு தமிழ்மக்கள் தங்களைத் தமிழர்கள் என்று கருதவில்லை. அந்த உணர்வை ஏற்படுத்த, தமிழனுக்கும் சில அடையாளர்கள், அவனை நினைவூட்ட, அவனுடைய இனத்தை நினைவூட்ட, அவனுடைய மொழியை நினைவூட்ட, அவனுடைய பண்பாட்டை நினைவூட்ட இப்படிப்பட்ட அடையாள நிகழ்ச்சிகள் கட்டாயம் தேவைப்படுகின்றன. அதிலே ஒன்றுதான்; தமிழன், தமிழ் ஆண்டு என்று தை முதல் நாளைக் கொண்டாடுகின்ற ஒரு மனநிலையைப் பெறவேண்டும் என்று விரும்பி, ஒரு ஆர்வம் கொள்ள வேண்டும் என்று விரும்பி தமிழக அரசு இதை அறிவித்திருக்கிறது. ஏறத்தாழ அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலேயேகூட, தைத் திருநாளை, பொங்கல் திருநாளை தமிழ் திருநாள் என்று கொண்டாடுகிற உணர்வு வந்தபோது, அந்த எண்ணம் இருந்தது. ஆனால் செல்வாக்குள்ள தலைமை; ஒரு முதலமைச்சர் அறிவிக்கக்கூடிய வாய்ப்பு – ஒரு ஆட்சி நடத்தக்கூடிய வாய்ப்பு அன்றைக்கு யாருக்கும் இல்லை. ஆகவே இன்றைக்கு ஒரு அரசு மூலமாக, முதலமைச்சர் வாயிலாக, தை முதல் நாள் தமிழருடைய புத்தாண்டு நாள் என்று அறிவிக்கக்கூடிய அந்த வாய்ப்பு நமக்குக் கிடைத்தது.

நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; கலைஞருக்கு நன்றி தெரிவிப்பது என்பது, பாராட்டுவது என்பது அவர் ஆற்றியிருக்கிற பல பணிகளில் ஒரு பணி என்ற முறையில் இதற்காக நாம் பாராட்டுகிறோம். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தை முதல் நாளைத்தான் தமிழ் ஆண்டினுடைய தொடக்க நாள் என்று எல்லோரும் கொண்டாட வேண்டும். வேறு நாளையெல்லாம் ஆண்டுத் துவக்கமாகக் கொண்டாடுகிற அந்தப் பழக்கத்திலிருந்து விடுபடவேண்டும்.

"கண்மூடிப் பழக்கமெல்லாம்
மண்மூடிப் போகவேண்டும்''

என்று வள்ளலார் சொன்னதைப் போல, அந்தத் தவறான எண்ணங்கள் தமிழுணர்வுக்கு மாறான எண்ணங்கள், வடமொழிக்கு செல்வாக்குத் தருகின்ற எண்ணங்கள் நம்மை விட்டு விலகவேண்டும்.

தனித்தமிழ் இயக்கம் பிறந்தபோது, எதற்காகப் பிறந்ததோ, தமிழிசை இயக்கம் பிறந்தபோது எதற்காகப் பிறந்ததோ, சுயமரியாதை இயக்கம் பிறந்தபோது எதற்காகப் பிறந்ததோ, 'திராவிடர்' என்ற சொல் வழக்குக்கு வந்தபோது, எதற்காகக் கொண்டு வரப்பட்டதோ, வள்ளுவனுடைய புகழை நாம் பாடியபொழுது எதற்காகப் பாடினோமோ அந்த அடிப்படையில் இந்தத் திருநாளை எல்லோரும் கொண்டாட வேண்டும் என்று நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இதையும் கொண்டாடவேண்டும். தவறாகக் கொண்டாடுகிற

கொண்டாட்டங்களையும் கைவிட வேண்டும். தவறான கொண்டாட்டங்கள் உண்மையான கொண்டாட்டத்தை மறைத்துவிடும். அப்படி மறைத்துத்தான் தமிழனுடைய பெருமை மறைக்கப்பட்டது.

**மூத்த மொழி மட்டுமல்ல, முதல்மொழி**

திருக்குறளினுடைய பெருமை – வைதீகக்கருத்து – "தீக்குறளைச் சென்றோதோம்'' என்று ஆண்டாள் பாடுகிற அளவுக்கு, திருக்குறள் தீக்குறள் ஆயிற்றே! அப்படி தமிழ் மறைக்கப்பட்டது. தமிழ் வீழ்த்தப்பட்டது.

உலகத்திலே உள்ள எல்லா மொழிகளிலேயும் தமிழினுடைய வேர் இருக்கிறது. உலக மொழிகள் அனைத்திலும் தமிழினுடைய வேர் இருக்கிறது. காரணம், முதல்மொழி! மூத்த மொழி மட்டுமல்ல, முதல்மொழி! மனித இனத்தை மாண்புறச் செய்வதற்கு பிறந்த மொழி, முதல் மொழி! இன்றைக்கு நான் ஒரு அடையாளத்துக்காகச் சொல்கிறேன்.

நம்முடைய காலக் கணிப்பில் வாரத்தினுடைய கிழமைகளின் பெயர்களை எல்லாம் சொல்கிறோம். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று! உலகத்திலே உள்ளவைகளில் எனக்குத் தெரிந்தவரையில், நான் கேட்டு அறிந்த வரையில், எந்த மொழியிலே ஆனாலும், உலகத்திலே இந்த ஏழு பெயர்கள்தான்!

ஞாயிறு – Sunday

திங்கள் – Monday

செவ்வாய் – Tuesday

புதன் – Wednesday

வியாழன் – Thursday

வெள்ளி – Friday

சனி – Saturday


இதைத்தவிர உலகத்தில் வேறு கிழமைப் பெயர்களே கிடையாது. No other name. வேறு எந்தப் பொருளையும் குறிக்கிற பெயராக அந்தக் கிழமைப்பெயர்கள் இல்லை. இது அடிப்படை.

காலத்தை கணிக்கத் தொடங்குகிறபோது, அடிப்படையில் பிறக்கிற சிந்தனை, கண்ணுக்குத் தெரிகிற கோள்களினுடைய பெயர்களை கிழமைக்குச் சூட்டிய அந்த முறை – ஏழு நாட்களுக்கும் ஏழு பெயர்கள் – உலகமெல்லாம் பரவியிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பெருமை தமிழுக்கு உண்டு. தமிழ் இனத்துக்கு உண்டு. தமிழ் மரபுக்கு உண்டு.

இந்த சிறப்பான விழாவில், ஒரு பக்கம் தொல்காப்பியர் வந்தார், இன்னொரு பக்கம் ஔவையார் வந்தார், இளங்கோவடிகள் வந்தார், கம்பரும் வந்தார், திருவள்ளுவரும் வந்தார். இந்த ஐந்து பேரும் ஒன்றாக வரக்கூடிய ஒரு காலம் உண்டென்றால், அது கலைஞருடைய காலம்தான்.

வாழ்க கலைஞர்! என்று வாழ்த்துகிறேன். வணக்கம்!

# புத்தாண்டையே பரிசாகக் கொடுத்த புதுமைத் தலைவர்



– மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்**

**நா**ன் தலைவரிடத்தில் அதிகம் பேசவில்லை. இந்த விழாவை நாங்கள் ஏன் எடுக்கிறோம் தெரியுமா? தலைவர் அவர்களே! பொதுவாக எல்லோரும் புத்தாண்டில்தான் பரிசு கொடுப்பார்கள். ஆனால் நீயோ, பரிசாக ஒரு புத்தாண்டையே கொடுத்த புதுமைத்தலைவன் என்பதால், நாங்கள் இந்த விழா எடுக்கிறோம்.

தலைவர் அவர்களே! தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள், என் தலைவா! உன்னால் 'தை'க்கு அல்லவா வழி பிறந்திருக்கிறது! ஆகையினாலே நாங்கள் இந்த விழா எடுக்கிறோம்.

என் தலைவரே! நீர் எழுதுகோல் எடுத்தால் கவிஞன்! மந்திரக்கோல் எடுத்தால் கலைஞன்! நெம்புகோல் எடுத்தால் அறிஞன்! செங்கோல் எடுத்தால் முதல்வன்! நீங்கள் எழுதுகோல், மந்திரக்கோல், செங்கோல்,



நெம்புகோல் எடுப்பாய். ஆனால் உன்னை அளக்கத்தான் யாரும் அளவுகோல் எடுக்க முடியாது என்பதால் இந்த விழாவை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

தான் படைத்த அதிகாரத்தில் தமிழைப் பாடினான் வள்ளுவன்! ஆனால், தனக்குக் கிடைத்த அதிகாரத்தில் வள்ளுவனையே பாடிய தமிழ் நீங்கள் என்பதால் இந்த விழாவை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

இன்னொன்று, இந்த மண்டபத்தில் ஏன் எடுக்கிறோம் தெரியுமா?

இது நுங்கம்பாக்கம் – வள்ளுவர்கோட்டம்! இங்கிருந்தால் இலக்கியம் ஆளுவாய்! வலப்புறம் திரும்பினால் கோடம்பாக்கம்! திரையுலகை ஆளுவாய்!

இடதுபக்கம் திரும்பினால், சேப்பாக்கம் – கோட்டையை ஆளுவாய்!

எதிர்ப்புறம் சென்றால் மீனம்பாக்கம் – டெல்லியையும் ஆளுவாய்!

இப்படி நீ, நுங்கம்பாக்கம் தொடங்கி கோடம்பாக்கம், சேப்பாக்கம், மீனம்பாக்கம் போகிறாய்! ஏதேதோ பிதற்றுபவர்கள் கீழ்ப்பாக்கம் போகிறார்கள், அவ்வளவுதான்!

இன்னொன்று; நீ குவளையில் பிறந்தபோது நீர்! சூரியனாக மாறியபோது நெருப்பு! தமிழகத்தைத் தாங்க வந்தபோது நிலம்! அனைத்தையும் பார்க்கும் ஆகாயம் நீ!

இன்று புரண்டு கிடந்த வரலாற்றை சரியாகப் புரட்டிப் போட்ட புயற்காற்று! எங்களின் ஐம்பெரும் சக்தி நீ! ஆகையினால்தான் நாங்கள் விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நாட்டில் நாள்தோறும் பேசுகிற சிலர், நாளேடுகளோடு முடிந்துவிடுகிறார்கள். செயல்படுகிற நீதான் செப்பேடு வரையிலே செல்கிறாய்! ஆகையினாலே நாங்கள் விழா எடுக்கிறோம்.

**தமிழர்களின் பாடத் திட்டம்**

தலைவர் அவர்களே, நீங்கள் எங்களுக்கு இலக்கியத்தைக் காட்டிய தமிழ்! பகுத்தறிவைக் காட்டிய அறிவியல்! திசையைக் காட்டிய பூகோளம்! அரசியல் சூத்திரங்களைக் காட்டிய கணிதம்! இன்று வருடத்தைக் காட்டிய வரலாறு! மொத்தத்தில் நீ தமிழர்களின் பாடத்திட்டம்! ஆகையினால்தான் இன்றைக்கு விழா எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**தமிழுலகம் வரவேற்றிருக்கிறது**

தைத் திங்களை தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாளாக அறிவித்திருக்கிறார். அதை தமிழுலகம் வரவேற்றிருக்கிறது. தமிழறிஞர்கள் வரவேற்றி ருக்கிறார்கள். தமிழ் மக்கள் எங்களுடைய தலைவரை வாழ்த்த வந்திருக்கிறார்கள். நான் குறுக்கே நிற்கவில்லை.

ஒன்று மட்டும் உறுதி! தமிழுள்ளளவும் இந்த மாநிலத்திற்கு எத்தனையோ தமிழ்க் காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள், தமிழினத் தலைவர் அவர்கள்! தமிழைச் செம்மொழியாக்கிக் காட்டியவர். இந்த நகரை 'சென்னை' ஆக்கிக் காட்டியவர். தமிழைப் படிக்காமல் எவனும் தமிழ்நாட்டிலே இருக்கமுடியாது என்ற சட்டத்தைப் போட்டவர். தமிழனுக்கென்று பாடல் பாடுவதற்கும் கூட, ஒரு வாழ்த்துப்பா – தமிழிசை பாடுவதற்கும்கூட, தமிழை வாழ்த்துவதற்குக் கூட ஒரு பாடல் இல்லாமல் இருந்தது. அத்தனை முகவரியையும் தமிழன்னை தொலைத்து விட்டிருந்தாள்.

**தமிழன்னைக்கு மீட்டுத்தந்த தலைவர்**

அவளுக்கென்று, "நீராரும் கடலுடுத்த'' என்ற பாடலை, இதுதான் எனது தமிழன்னையை வாழ்த்த வேண்டிய பாடல் என்று காட்டிய பெருமை உங்களைச் சேரும்.

ஆக, தமிழ்த்தாய் இன்றைக்குப் பூண்டிருக்கிற ஆபரணங்கள், அணிமணிகள் அத்தனையும் ஒரு காலத்தில் தமிழ்த்தாய் இழந்துவிட்டிருந்தாள். இழந்து விட்டவைகளை மீட்டுக் கொடுக்கின்ற தலைமகன் வாழ்க! வாழ்க!

# திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத்திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப்புத்தாண்டு தொடக்கம்

**- தமிழ்நாடு அரசின் முடிவுக்கு வரவேற்பு**

## ஊனோடும் உயிரோடும் கலந்தது

– தவத்திரு
**குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்**



**தை**த் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என ஆளுநர் உரை வாயிலாக அரசு அறிவித்துள்ளது. மகிழ்ச்சிக்கும், வரவேற்புக்கும், பாராட்டுக்கும் உரியது.

தொன்மைக் காலம் தொட்டே சமயம் சார்ந்தும், இயற்கை வாழ்வு சார்ந்தும், மண்ணும் மனிதர்களும் சார்ந்தும், விவசாய வாழ்வு சார்ந்தும், தைத் திங்கள் முதல் திருநாளே தமிழர் வாழ்வு சார்ந்த எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற திருநாளாகும்!

இல்லத்தின் அழுக்குகள் போக்கி, இதயத்தின் உணர்வுகளைப் புதுக்கி, இல்லத்திற்கு புதுவண்ணம் பூசி, வண்ணக்கோலமிட்டு, புத்தரசி, புதுப் பானை, புதுவெல்லம், புதுக்கரும்பு முதலிய பொருள்களோடு வாழைமரம் நாட்டி வகை வகையாய் வண்ணத் தோரணம் கட்டி இதயத்து மகிழ்ச்சியால் தைத் திங்கள் முதல் திருநாளே வாழ்த்தி வரவேற்பது தமிழர் வாழ்வில் ஊனோடும், உயிரோடும் கலந்துவிட்ட ஒன்றாகும்.

மறைமலை அடிகளார் போன்ற மூத்த தனிப்பெரும் தமிழ் அறிஞர்கள் தைத் திங்கள் முதல் நாளைத் தொடக்கமாய்க் கொண்டு ஐயன் திருவள்ளுவர் பெயரில் தமிழ்ப்புத்தாண்டாய் அறிவித்ததை நடைமுறைப்படுத்த உள்ள முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி! பாராட்டுக்கள்!

தைத் திங்கள் முதல் திருநாளை எழுச்சியும், மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற இன்பத் திருநாளாய் தமிழ்ப் புத்தாண்டாய் வாழ்த்தி வரவேற்போம்!





# சரித்திரத்தைச் சரிசெய்யும் சரித்திரம்

– கவிப்பேரரசு **வைரமுத்து**

**த**மிழ் விழுமியங்களை மீட்டுத்தரும் முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களைத் தமிழுலகம் நன்றியோடு பாராட்டுகிறது.


தைத் திங்கள் முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்று ஆளுநர் உரையில் கலைஞர் அரசு அறிவித்திருப்பது கண்டு உணர்வுமிக்க தமிழர்கள் கொண்டாடிக் கூத்தாடுகிறார்கள்.

இனவரலாற்றில் இது ஒரு மைல்கல் அல்லது ஒரு பண்பாட்டுப் பாய்ச்சல்.

எல்லா தேசிய இனங்களுக்கும் அழிக்க முடியாத சில அடையாளங்கள் உண்டு. தமிழர்களுக்கு நில அடையாளம் இருக்கிறது; இன அடையாளம் இருக்கிறது. ஆனால், கால அடையாளம் மட்டும் குழப்பத்தில் இருந்தது. அந்தக் குழப்ப இருள் உடைந்து விடிந்து இன்று வெளிச்சம் வந்திருக்கிறது.

அய்யன் திருவள்ளுவரைக் கருத்துலகத்தின் அளவுகோலாய்க் காட்டியது திராவிட இயக்கம். இன்று காலத்தின் அளவுகோலாகவும் திருவள்ளுவரைக் கருதச் செய்திருக்கிறது கலைஞர் அரசு. இது சரித்திரத்தைச் சரிசெய்யும் சரித்திரமாகும்.

தமிழர்களின் நூற்றாண்டுக் கனவுகளை நிறைவேற்றக் காலம் தந்த கொடைதான் கலைஞர் அவர்கள். செம்மொழி, சேதுசமுத்திரம், தமிழ் ஆண்டு என்ற கருதுகோள்களையும், கனவுகளையும் நிறைவேற்றித் தரும் கலைஞர் அவர்களைக் கருத்துலகமும் காலமும் மறக்காது.



தமிழ் இலக்கியங்களைப் புதுப்பித்துக் காகிதத்தில் தன் பெயர் பொறித்தார் கலைஞர். வள்ளுவர்கோட்டம், வள்ளுவர் சிலை அமைத்துக் கல்வெட்டில் பெயர் பொறித்தார் கலைஞர். தைத் திங்களில் தமிழ்ப் புத்தாண்டு கண்டு இன்று காலத்தின் மீதும் தன் பெயர் துலங்கச் செய்து விட்டார் கலைஞர்.

பொருளாதாரம் கலாச்சாரம் என்ற இரண்டு சிறகுகளால் பறக்கிறது ஒரு சமூகப் பறவை. தமிழகத்தைத் தொழில் மயமாக்குவதன் மூலம் பொருளாதாரச் சிறகு கட்டிவிடும் கலைஞர் தமிழினத்தைத் தமிழ் மயப்படுத்துவதன் மூலம் கலாச்சாரச் சிறகும் கட்டிவிடுகிறார்.

மழைக்காலத்து ஏரி மட்டம் போல் ஏறிக் கொண்டேயிருக்கும் அவரது புகழைக் கூறிக் கொண்டே நடக்கிறது காலம். தமிழ்க் கவிதை உலகின் சார்பில் கலைஞர் அவர்களுக்குப் பெருமிதத்தோடு நன்றி சொல்கிறோம். ✶


"ஒவ்வொரு மொழி பேசும் மக்களுக்கும் தனித்தனியாக ஓர் ஆண்டு என்றிருக்கும்போது – தமிழர்களுக்கென்று தனி ஆண்டு இல்லாத குறைதான் பல ஆண்டுகாலமாக நீடித்து வந்தது. இந்தக் குறையைப் போக்கிட 1921ஆம் ஆண்டு தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த மறைமலை அடிகளார் தலைமையில் புலவர் பெருமக்கள் எல்லாம் கூடி முடிவெடுத்து தமிழ் ஆண்டு என்று அறிவித்த பின்னரும், அந்த அறிவிப்பு நடைமுறைக்கு வராமலேயே இருந்தது. இந்த நிலையை மாற்றிடும் வண்ணம், தைத் திங்கள் முதல் நாள்தான் திருவள்ளுவர் ஆண்டு என்ற பெயரில் வழங்கும் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்று அரசு ரீதியாக ஆளுநர் உரை மூலம் அறிவிக்கை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தி.மு. கழகச் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது"

– என தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என ஆளுநர் உரையில் அறிவிக்கை செய்த தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களுக்கு நன்றி – பாராட்டு தெரிவித்து தி.மு.கழகச் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விடாமுயற்சியால் சென்னையில் 76.32 கோடி ரூபாயில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம்

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர்.மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் சென்னையில் 76.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17 ஏக்கர் பரப்பளவில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்தை நிறுவ மத்திய அமைச்சரவை 30.1.2008 அன்று ஒப்புதல் அளித்துள்ளது.



இந்த மையத்தின் தலைவராக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பு வகிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியால் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. அதேபோல் செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்தை சென்னையில் நிறுவ வேண்டும் என்று அவர் விடுத்த கோரிக்கையையும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

செம்மொழித் தகுதி பெற, தொன்மை, தனித் தன்மை, பொதுமைப் பண்பு, நடுவு நிலைமை, தாய்மைத் தன்மை, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமில்லாத தனித் தன்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, கலை–இலக்கிய தனித்தன்மை வெளிப்பாடு–பங்களிப்பு, மொழிக்கோட்பாடு ஆகிய 11 தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

இந்த அனைத்துத் தகுதிகளையும் பெற்ற தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்க 1885ஆம் ஆண்டு தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் குரல் கொடுத்தார்.

பரிதிமாற் கலைஞரைத் தொடர்ந்து தமிழ்ச் சங்கங்கள், தமிழறிஞர்கள், புலவர் பெருமக்கள், தலைவர்கள் என்று பல்வேறு தரப்பினரும் போராடி வந்தனர்.

100 ஆண்டுகளுக்கும் மேலான போராட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால்தான் முழுமை பெற்றுள்ளது.

2004ஆம் ஆண்டு மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவி ஏற்றதும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழியை செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கைக்கு 2004ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் உரையிலேயே பலன் கிடைத்தது. குடியரசுத் தலைவர் உரையில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்படும் என்ற செய்தி தமிழ்ப் பெருமக்களுக்கெல்லாம் தேனினும் இனிய செய்தியாகக் கிடைத்தது.



அதனையொட்டி 2004ஆம் ஆண்டு, செப்டம்பர் 17ஆம் நாள் தமிழ் செம்மொழிக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டது.

100 ஆண்டுகளுக்கும் மேலான, தமிழ் செம்மொழி ஆக வேண்டும் என்ற கனவு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் நிறைவு பெற்றதைப் போல், தமிழ் செம்மொழிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதுடன் தனது பணி முடிந்து விடவில்லை என்று எண்ணிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழனின் பெருமையை உலகறியச் செய்திட செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் தமிழகத்தில், குறிப்பாக சென்னையில் அமைந்திட வேண்டும் என்று திருமதி.சோனியா காந்தி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர்.மன்மோகன் சிங் மற்றும் மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.அர்ஜுன்சிங் ஆகியோரை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

குறிப்பாக 28.11.2006 அன்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அர்ஜுன் சிங் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எழுதிய கடிதத்தில், “உலகெங்கும் வாழும் தமிழர்களின், தமிழறிஞர்களின் உணர்வார்ந்த வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்தது. எனினும் செம்மொழித் தமிழின் வளர்ச்சி, தமிழ் மொழியில் ஆய்வு மேற்கொள்ளல் முதலிய பணிகள் மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்தின் நோக்கங்கள் செம்மொழி என்னும் கண்ணோட்டத்தில் அமைந்ததல்ல. இந்தியாவின் அனைத்து மொழிகளின் மூலமும் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஒருமைப்பாடு உணர்வு ஆகியவற்றை வளர்த்திடும் நோக்கத்துடன் அந்நிறுவனம் செயல்படுகிறது. எனவே, தமிழ் மொழியின் சிறப்புகளை மேம்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு “மத்திய அரசின் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமைக்கப்பட வேண்டும்” என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதினார். அதுமட்டுமின்றி, டெல்லி செல்லும் பொழுதெல்லாம் இது குறித்து விரைவில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்தை சென்னையில் அமைத்திட ஆய்வு செய்திட வேண்டும் என்று மாண்புமிகு மத்திய மனிதவளத்துறை அமைச்சர், மாண்புமிகு பிரதமர், திருமதி.சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்து வலியுறுத்தி வந்தார்.

தமிழனுக்காக, தமிழகத்திற்காக, தமிழ் மொழிக்காகவே குரல் கொடுத்து அவற்றின் முன்னேற்றத்திற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப 30.1.2008 அன்று மாலை மாண்புமிகு பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமைய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் தலைமையில் டெல்லியில் 30.1.2008 அன்று அமைச்சரவைக் கூட்டம் கூடியது.

கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் மாண்புமிகு மத்திய செய்தி மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிரிய ரஞ்சன் தாஸ் முன்ஷி கூறுகையில்,

“தமிழகத்திற்கு ஒரு நல்ல செய்தி. 76 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்தை நிறுவுவது என்றும் அதன் தலைவராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பு வகிப்பார்” என்றும் கூறினார்.

17 ஏக்கர் பரப்பளவில் அமையும் செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்திற்கான இடத்தை, தமிழக அரசு இலவசமாக வழங்க இருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்திற்கான அனைத்துச் செலவுகளையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்றும் தெரிவித்ததுடன், பாரம்பரியமிக்க செம்மொழித் தமிழைப் பாதுகாக்கவும், அதனை வளர்க்கவும் இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விடா முயற்சியின் காரணமாக செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமையவிருப்பது, தமிழர்களுக்கெல்லாம் பெருமை சேர்க்கும் நாளாக இந்நாள் அமைகிறது என்பது திண்ணம். ✱

# தமிழ்நாடு அரசு வெளிப்படையானதாகவும் விரைந்து முடிவு எடுப்பதாகவும் இருப்பதால் தமிழ்நாடு முதலீட்டுக்கு விரும்பித் தேர்வு செய்யப்படுகிறது




**டைகான் சென்னை–2008**

நிகழ்வில் தொழில் முனைவோருக்கு விருதுகள் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் சிறப்புரை

**செ**ன்னையில் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (சி.ஐ.ஐ) மற்றும் 'இண்டஸ் தொழில் முனைவோர்' அமைப்பு (டை) ஆகியவை இணைந்து 'டைகான் சென்னை–2008' என்ற தொழில்முனைவோர் கலந்தாய்வுக் கூட்டத்தை 18.1.2008 அன்று ஏற்பாடு செய்திருந்தன. இந்தக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தும் சிறந்த தொழில் முனைவோருக்கு விருதுகள் வழங்கியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

இந்தியத் தொழில் கூட்டமைப்பு மற்றும் இண்டஸ் தொழில்முனைவோர் அமைப்பு ஆகியவற்றிக்கு டைகான் சென்னை–2008 என்ற இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'கண்டுபிடிப்புகள் மூலமாக வெற்றி பெறுதல்' என்பது இன்றைய விவாதத்தின் பொருளாகும். இது மிகவும் வரவேற்கத்தக்கது. இன்று உலகம் புதிய எண்ணங்களை வரவேற்கிறது. பெரும்பாலான நிறுவனங்கள் தங்களது வளர்ச்சியைத் தொடர மாற்றங்களை அறிமுகப்படுத்த விரும்புகின்றன.






**அறிவியல் ரீதியான மருத்துவ முறையை வழங்கிய சித்தர்கள்**

விருது பெற்றவர்களை நான் வாழ்த்துகிறேன். அவர்களுடைய வெற்றி மற்றவர்களை ஊக்குவிக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். கண்டுபிடித்தல் துறைகளில் இந்தியாவிற்கு அடிப்படையான வலிமை உள்ளது என்று நம்புகிறேன். நாம் உலகிற்கு பல புதிய கருத்துகளையும், எண்ணங்களையும் வழங்கியுள்ளோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது சித்தர்கள் அறிவியல் ரீதியான மருத்துவ முறையை வழங்கியுள்ளனர். சொல்லப்போனால், அந்த மூலிகை மருந்துகளில் சில இன்றும் புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கு தொடக்கமாக அமைந்துள்ளன.

உலகம் அறிவால் உந்தப்படுகிறது. 21 ஆம் நூற்றாண்டு ஆசியாவிற்குச் சொந்தமானது என்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டில், இந்தியா உலகில் மிக முக்கியமான நாடுகளில் ஒன்று என்ற இடத்தைப் பெறும். இந்தியர்களாகிய நாம் அறிவை மதிக்கிறோம் என்பதால் இவ்வாறு கூறுகிறேன். மேலும் நமக்கு புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் திறமை உள்ளது. 'நானோ கார்' உதாரணத்தை நான் சுட்டிக் காட்டுகிறேன். இந்தச் சிறிய கார் புதிய எண்ணத்தில் மிகப்பெரிய முன்னேற்றமாகும். இந்த கார் இதர பலவற்றை புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்குவிக்கும். ஒரு பொருள் மலிவானால் அதன் மூலம் பெரும் எண்ணிக்கையிலானோர் பயனடைவர். அதே நேரத்தில் நிறுவனமும் ஆதாயம் பெறும்.

**பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகம்**

தமிழ்நாடு அரசு எப்போதுமே மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இதற்கு பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகம் மற்றும் டைடல் பூங்கா அமைக்கப்பட்டது ஆகியவை உதாரணங்களாகும். இந்தத் திட்டங்கள் எங்களது அரசால் பத்து ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகப்படுத்தப்பட்டன. இன்று அதன் மூலம் ஆதாயம் அடைய நாங்கள் தயாராக உள்ளோம். அதுபோலவே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி விநியோகத்திற்கு உயர்ந்த குறிக்கோள் உண்டு. அது பொழுது போக்குக்காக மட்டுமல்ல, அதுபோலவே கல்வி கற்பிப்பதற்காக மட்டுமல்ல, இளம் தலைமுறையினர் அவர்களுடைய குடிசைகள்–கிராமங்கள்–சிறுநகரங்களுக்கு அப்பால் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வெளி உலகைக் காண்பதற்கு அவர்களுக்கு காரணமாக அமையும். அவர்களுடைய படைப்பாற்றல் திறனை திறந்துவிட விரும்புகிறேன். தமிழக இளைஞர்கள் பெரிய அளவில் சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவர்களுடைய கனவை நனவாக்க எங்களது அரசு அவர்களோடு பணியாற்றும்.

தமிழ்நாட்டில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து எடுத்துக் கூற இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். கடந்த 20 மாதங்களில் உலக அளவில் தெரிந்த பதினோரு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த பதினோரு திட்டங்களும் சுமார் 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய்




முதலீடுகளைக் கொண்டுவரும் சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு வேலைகள் கிடைக்கும். இந்த நிறுவனங்களுள் மோடோரோலா, டெல்கம்ப்யூட்டர்ஸ், சாம்சங் இந்தியா, நிஸ்ஸான் மற்றும் ரெனால்ட் ஆகியவை அடங்கும். வரும் மாதங்களில் மேலும் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு அரசு வெளிப் படையானதாகவும், விரைந்து முடிவு எடுப்பதாகவும் இருப்பதால் தமிழ்நாடு முதலீட்டுக்கு விரும்பித் தேர்வு செய்யப்படுகிறது. நாங்கள் நல்ல பல ஊக்கச் சலுகைகளையும் வழங்குகிறோம். இந்தியாவிலுள்ள இதர பல இடங்களைவிட தமிழ்நாட்டில் நல்ல கட்டமைப்பு வசதிகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டில் முதலீடு செய்வதில் உள்ள சாதகங்களைப் பற்றி முதலீடு செய்யக் கூடியவர்களிடம் நீங்கள் எடுத்துக் கூற வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

**புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் ஏற்றுமதியை இரட்டிப்பு ஆக்குவதும் புதிய தொழிற் கொள்கையின் நோக்கம்**

சமீபத்தில் தமிழக அரசு புதிய தொழிற் கொள்கை ஒன்றை அறிவித்துள்ளது. 2011ஆம் ஆண்டு வாக்கில் 20 இலட்சம் புதிய வேலைகளை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் ஏற்றுமதிகளை ஒரு இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இரட்டிப்பு ஆக்குவதும் நோக்கமாகும். இந்தக் கொள்கையின் ஒரு பகுதியாக சில்லு மற்றும் எலக்ட்ரானிக் வன்பொருள் டிசைன்கள், தோல் உற்பத்திப் பொருள் மற்றும் மோட்டார் தொழில் டிசைன்கள் ஆகிய துறைகளில் உலகத் தரத்திலான விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்பங்களை வளர்த்தெடுக்கும் 'சிறப்புத் தகுதி மற்றும் கண்டுபிடிப்பு மையங்களை' உருவாக்க மாநில அரசு ஆதரவு அளிக்கும்.

மேலும், தொழில் துறையில் பயன்படுத்தக் கூடிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பாளர்கள் அல்லது தனிப்பட்ட ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் போன்றவர்களுக்கு உதவி அளிக்கவும் திட்ட மிட்டுள்ளோம்.


**பாரம்பரியத் தொழில்களுக்கும் தேவையான ஊக்கம் அளிக்கப்படும்**

தமிழக அரசு தொழில் பூங்காக்களை வளர்த் தெடுக்கும். சென்னை – பெங்களூரு, மதுரை – தூத்துக்குடி, கோவை–சேலம் போன்ற தொழில் முற்றங்களை அமைக்கும். மேலும் நானோ தொழில்நுட்பப் பூங்காக்கள், உயிரி–தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள், ஆகியவற்றையும் அமைக்கும். இவற்றுடன் ஜவுளி, துணிகள், தோல் பொருள்கள் போன்ற பாரம்பரியத் தொழில்களுக்கும் தேவையான ஊக்கம் அளிக்கப்படும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு அப்பால் தொழில்களை அமைப்பதை ஊக்குவிக்க விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளுடன் தமிழ்நாடு தொழில்துறை வளர்ச்சியில் தொடர்ந்து முன்னணி வகிக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

இந்தியர்களுக்கு வெளிநாடுகளிலுள்ள பெருமையைப் பற்றி நாங்கள் பெருமிதமடைகிறோம். இதை அடைவதற்கு நீங்கள் அனைவரும் கடுமையாக உழைத்துள்ளீர்கள் என்று அறிவோம். உங்கள் அனைவருக்கும் நன்றி கூற இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்கிறேன். கண்டுபிடிப்புகளின் நோக்கம் பொதுமக்களுக்காக இருக்கவேண்டும். பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தால் உங்களது நிறுவனங்களின் அடித்தளம் தானாகவே உயரும். ★



# இலக்கை விஞ்சி சாதனை!



## 3 இலட்சத்து ஒன்றாவது இலவச வீட்டுமனைப் பட்டாவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும் காலங்களில் எல்லாம் வீடில்லாத ஏழை எளியவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தி வரலாறு படைத்து வந்துள்ளது.

2006ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப் பேற்றபின், 2006–2007 ஆம் ஆண்டில் 76,622 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1.4.2007 முதல் 30.7.2007 வரை 58,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டிருந்த நிலையில், 31.7.2007 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நடப்பு 2007–2008ஆம் ஆண்டில் 3 இலட்சம் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2 இலட்சத்து 42 ஆயிரம் வீடில்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, இந்த ஆண்டில் 3 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்ற இலக்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே இலக்கினை விஞ்சி சாதனை நிகழ்த்தப் பட்டுள்ளதன் அடையாளமாக, மூன்று இலட்சத்து ஒன்றாவது இலவச வீட்டுமனைப் பட்டாவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21.1.2008 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி மகிழ்ந்தார்.

**2,500 கிராம நிருவாக அலுவலர்களுக்குப் பணி நியமன ஆணைகள்!**

முந்தைய அதிமுக ஆட்சிக் காலத்தில் வேலை நியமனத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, அரசுத் துறைகளில் புதிய பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவது நிறுத்தப்பட்டதால் அரசுத் திட்டங்களின் பல்வேறு பணிகள் முடங்கிக் கிடந்ததைச் சுட்டிக்காட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றால் அரசுப் பணிகளில் காலியாக உள்ள இடங்களில் மூன்று இலட்சம் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கேற்ப, இதுவரை 2 இலட்சத்து 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அரசுப் பணிகளில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் கிராமப்புறங்களில் பொதுமக்களின் உடனடித் தேவைகளை உடனுக்குடன் கவனித்து நிறைவேற்றுவதில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருந்ததால், 30.6.2006 வரை காலியாக இருந்த 2,500 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு, உரிய விதிமுறைகளின்படி 2,500 கிராம நிருவாக அலுவலர்கள் வெற்றிகரமாகத் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு உரிய பணி நியமன ஆணைகள் வழங்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21.1.2008 அன்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி,இ.ஆ.ப., மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். ★

**ரூபாய் 137.90 கோடி மதிப்பீட்டில் புதிய பாலங்கள்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் ஆணை

நெடுஞ்சாலைத் துறையின் மானியக் கோரிக்கையின்போது பின்வரும் 4 முக்கிய பாலங்கள் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் 121 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படுமென அரசு அறிவித்திருந்தது.

- கடலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முட்டம் கிராமம் மணல்மேடு கிராமம் இணைக்கும் வகையில் உயர்மட்ட பாலம் கட்டுதல்.
- தஞ்சாவூர்–பெரம்பலூர் மாவட்டத்திற்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நீலத்தநல்லூர்–மதனத்தூர் பகுதிகளை இணைக்கும் வகையில் உயர்மட்டப் பாலம் கட்டுதல்.
- நாமக்கல்–கரூர் மாவட்டங்களை இணைக்கும் மோகனூர்–வாங்கல் பகுதிகளுக்கிடையே பாலம் கட்டுதல்.
- இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.

அதன் அடிப்படையில் நபார்டு வங்கியின் ஒப்புதலுக்காக தக்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு அவ்வங்கியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் வகையில் நபார்டு வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி, இந்நான்கு பணிகளையும் 121கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் இப்பாலங்களுக்கான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக கலந்தாலோசகர்கள் (Consultants) நியமனம் செய்து அவற்றை துரிதமாகப் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய பின் பாலப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், திருநெல்வேலி மாநகரின் முக்கியப் பகுதியில் முன்னாள் பேரவைத் தலைவர் திரு. செல்லபாண்டியன் அவர்களின் சிலை அமைந்துள்ள புறவழிச்சாலைப் பகுதியில் (Byepass) மேம்பாலம் கட்டுமானம், பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த முறை திருநெல்வேலி சென்றிருந்தபோது புதிய மேம்பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்தார்கள். அதன்பேரில் அப்பகுதியில் 16 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாநில அரசு நிதியின் மூலம் புதிய மேம்பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணியினை கலந்தாலோசகர்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

அதன்பின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேம்பாலப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் நெடுஞ்சாலைத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ★



# கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 93 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது

## சட்டமன்றத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகவல்

இந்தியாவிலேயே முதன்முதலில் தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுத்தது கழக ஆட்சிதான் என்றும், கழக ஆட்சியின் கடந்த ஒன்றரை ஆண்டில் 93 நிறுவனங்களுக்கு 3 கோடியே 42 இலட்சத்து 70 ஆயிரம் சதுர அடிக்கு தகவல் தொழில்நுட்பக் கட்டடங்களுக்கு "மறுப்பின்மைச் சான்றிதழ்" வழங்கப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் 24.1.2008 அன்று கேள்விக்கு பதிலளித்தபோது குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:– தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்திட கூடுதல் தரைதள அட்டவணைக்கு (Relaxation in Additional Floor Space Index) மறுப்பின்மைச் சான்றிதழ் எல்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இச்சான்றிதழ் வழங்க, கட்டுமான நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பம் பெற்றவுடன் 10–15 தினங்களுக்குள் எல்காட் நிறுவனத்தால் மறுப்பின்மைச் சான்றிதழ்கள் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற கடந்த ஒன்றரை ஆண்டுகளில் உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கு அளிக்கின்ற விளக்கமாக – 93 கம்பெனிகளுக்கு – தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்களுக்கு 3 கோடியே 42 இலட்சத்து 70 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்ட அளவுக்கு ''மறுப்பின்மைச் சான்றிதழ்'' வழங்கியுள்ளது.

ஆனால் அவர்கள் குறிப்பிட்ட, கடந்த ஆட்சியில் மூன்றரை ஆண்டு காலத்தில் 107 தடையின்மைச் சான்றுகள் 2 கோடியே 66 இலட்சத்து 40 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்திற்கு மட்டுமே மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த ஆட்சியில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல 3 கோடியே 42 இலட்சத்து 70 ஆயிரம் சதுர அடிக்கு மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் (தி.மு.க. ஆட்சிக்காலத்தில்) தகவல் தொழில்நுட்பத்திற்கென்று தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறையே உருவாக்கப்பட்டது.

முதலமைச்சரின் தலைமையில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு பணி முனைப்புக் குழு (ஐ.டி. டாஸ்க் போர்ஸ்) ஒன்று உருவாக்கப்பட்டது.

அரசுத் துறைகளை கம்ப்யூட்டர் மயமாக்கவும், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில்நுட்பத்தை இணைக்கவும் தமிழ் மென்பொருளை உருவாக்கவும் டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் குழு ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்தியாவிலேயே முதன் முதலில் தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுத்து அறிவிக்கப்பட்டது.

340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்டதாக சென்னை தரமணியில் முதல் டைடல் பூங்கா உருவாக்கப்பட்டு, திறப்பு விழா நடைபெற்றது.

சிறுசேரியில் 1,000 ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய வன்பொருள் மற்றும் மென்பொருள் வளர்ச்சிக்கு பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டது.

பூமிக்கடியில் ஆப்டிக் பைபர் கேபிள் பதித்திட தனிக் கொள்கை வகுத்து செயல்படுத்திய முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் – தி.மு.கழக ஆட்சியிலே தான்.

தமிழ்நெட் 1999 என்ற உலகத் தமிழ் இணைய கருத்தரங்கு மாநாட்டினை மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களின் பெரு முயற்சியோடு சென்னையிலே நடத்தி – அந்த மாநாட்டில் ஒரு மனதாக மேற்கொண்ட முடிவின்படி தமிழ் விசைப்பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டன.

உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம், திரு.வா.செ. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது.


தமிழ்நாடு முழுவதும் உள்ள 1,200 மேல் நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப்பாடமாக வழங்கும் திட்டம் 188 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது.

❖ ❖ ❖

# 4 இலட்சத்து 31 ஆயிரத்து 296 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு, 163 கோடியே 86 இலட்சத்து 31 ஆயிரத்து 551 ரூபாய் உதவித்தொகைகளாக வழங்கப்பட்டுள்ளன.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விளக்கம்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்று, அதற்கு முதலமைச்சர் என்ற முறையில் நான் பதிலளிக்கும் நாளன்று எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஜெயலலிதா அன்று ஒரு நாள் மட்டும் பேரவைக்கு வருகை தந்து, விவாதத்தில் தங்கள் கட்சியின் சார்பிலே பேசுவதாகத் தெரிவித்து, அப்போது தேவையில்லாமல் அவை முன்னவர் பேராசிரியர் அவர்களையும், பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகனையும், தலைமைச் செயலாளரையும் தரக்குறைவான முறையில் விமர்சித்து, அதையொட்டி அவையிலே கலவரத்தை ஏற்படுத்துகின்ற வகையிலே பேசிட, அதற்கு என்ன பதில் வருகிறது என்பதைக்கூட கேட்கத் தயாராக இல்லாமல், தானே பேசி விட்டு, எந்தவிதமான காரணமும் இல்லாமல் தானே வெளிநடப்புச் செய்வதாகக் கூறிவிட்டு அவரும், அவரது கட்சியினரும் வெளிநடப்புச் செய்தார்கள்.



இந்தப் பிரச்சினை காரணமாக அவையின் நேரம் மிகுதியாக எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டதால், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு மற்றவர் பேசியதற்கெல்லாம் முதலமைச்சர் என்ற முறையில் என்னால் பதிலளிக்க நேரமில்லாமல் போய்விட்டது. எனவே அந்த விவாதத்திலே கலந்துகொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், தோழமைக் கட்சி நண்பர்களும் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளுக்கும் நான் பதில் கூறுவதற்காக குறித்து வைத்திருந்த கருத்துக்களை கடிதங்கள் வாயிலாக அளித்து வருகின்றேன்.

குறிப்பாக அண்மையில் நமது மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் ரூபாய் 1,510 கோடி அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், மாநில அரசு ரூபாய் 200 கோடியை மட்டுமே வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கியுள்ளதாக அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் அவையில் நடந்த விவாதத்தின் போது குறிப்பிட்டார். அதற்கு அரசு சார்பில் என்ன பதில் அளிக்கப்படுகிறது என்பதைக் கூடத் தெரிந்துகொள்ள அக்கறையின்றி, அவர் தலைவியின்



கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வெளிநடப்புச் செய்து விட்டார். எனினும் அவர் எழுப்பிய கேள்விக்கு அரசு சார்பில் நான் அளிக்கும் விளக்கம் இதோ :–

வெள்ளச் சேதங்களை சரி செய்வதற்கான பணிகள் இருவகைப்படும். ஒன்று – ஏற்பட்டுள்ள சேதங்களை தற்காலிகமாக சீரமைத்தல் மற்றும் வெள்ள நிவாரணம் வழங்குதல் ஆகிய உடனடிப் பணிகள். மற்றொன்று – பாதிக்கப்பட்ட இடங்களை நிரந்தரமாக சீரமைப்பதற்கான பணிகள்.

இவற்றில், நிரந்தர சீரமைப்புப் பணிகள் மாநில அரசின் திட்டப்பணிகள் மூலமாக அரசின் சொந்த நிதியிலிருந்து படிப்படியாக மேற்கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடிப்பணிகளை மேற்கொள்ளவும், நிவாரணம் அளிக்கவும், பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (CRF) செலவுகள் மேற்கொள்ளப்படும்.

இதிலிருந்து பெறப்படும் நிதியானது, உடனடிப் பணிகளுக்கும், நிவாரணத்திற்கும் போதாதிருப்பின், மாநில அரசின் கோரிக்கையின் அடிப்படையில் தேசியப் பேரிடர் அவசர உதவி நிதியிலிருந்து (NCCF) மத்திய அரசு மேலும் நிதி உதவி அளிக்கும்.

2007–2008ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டின் மாநில இயற்கைப் பேரிடர் நிவாரண நிதிக்கான ஒதுக்கீடு ரூபாய் 231 கோடியாகும். இதிலிருந்து உடனடிப் பணிகளுக்காக ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனடி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுபோக, தேசிய பேரிடர் அவசர உதவி நிதியிலிருந்து மத்திய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும் என்று மாநில அரசு கோரியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் 2002, 2003, 2004 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சிக்காகவும், 2004, 2005 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்காகவும், 2005ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவிற்காகவும், கடந்த அரசும் மேற்கூறியவாறே மாநில இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து செலவழித்தது போக கூடுதல் நிதியை மத்திய அரசிடம் கோரி, தேசிய பேரிடர் அவசர உதவி நிதியிலிருந்து உதவி பெற்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறிருக்க, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்பிற்கு மாநில அரசு தேவையான நிதியை ஒதுக்க வில்லை என்றும் மாநில அரசின் மற்ற திட்டங்களுக்கான நிதியை இப்பணிகளுக்கு பயன்படுத்தினால் மட்டுமே இப்பணிகளை மேற்கொள்ள இயலும் என்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானதாகும்.

2007 டிசம்பர் மாதம் இறுதியில் பெய்த கனமழையின் காரணமாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டது. மைய அரசின் உதவிக்காக காத்திராமல் உடனடி நிவாரணப் பணிகளுக்காக 200 கோடி ரூபாய் 24.12.2007 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஊராட்சி மன்றத் தலைவர், உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர் மற்றும் கிராம நிருவாக அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று கிராம வாரியாக அமைக்கப்பட்டு பயிர்கள் சேதம் மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த மதிப்பீட்டின்படி, 1,40,617 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பாசன வசதியுள்ள பயிர்கள் மற்றும் 17,546 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த மானாவாரிப் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் விரைவில் நிவாரணம் வழங்கி முடித்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

1,510 கோடி ரூபாய் பாதிப்பு என்று கூறிவிட்டு, 200 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்களே என்று பேரவையில் சிலர் கேட்டார்கள். முதற்கட்ட நிதி உதவி தான்; அதுவும் உடனடி செலவிற்காக வழங்கப்பட்டது. எந்த ஆட்சிக் காலத்திலும் இப்படித்தான்.

2004ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் சுனாமி பேரழிவிற்காக 9, 800 கோடி ரூபாய் என்று மதிப்பிட்டு மாநில அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கோரியது. ஆனால் மாநில அரசு மொத்தமாகச் செலவழித்த தொகை 1,046 கோடி ரூபாய் தான்.

2005ஆம் ஆண்டு அதே அ.தி.மு.க. ஆட்சியிலே இதுபோன்ற வெள்ளம் ஏற்பட்ட போது மாநில அரசு மத்திய அரசிடம் 13,684 கோடி ரூபாய் நிதி உதவி கோரியது. அப்போது மாநில அரசு செலவழித்தது 1,523 கோடி ரூபாய்தான். இந்த அளவிற்குக் கூட அப்போது அதிகமாக செலவழிக்கக் காரணம் அது தேர்தல் ஆண்டு என்பதுதான்.

தமிழக அரசின் சார்பில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் பல்வேறு நலவாரியங்கள் குறித்தெல்லாம் பேரவையில் பல உறுப்பினர்கள் தெரிவித்து, அவற்றின் பணிகளைப் பற்றி பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள். குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இதுவரை எந்த அளவிற்கு அந்த நலவாரியங்களின் சார்பில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கேட்டிருந்தார்கள். தமிழகத்தில் உள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் நோக்கில் ஒவ்வொருவகைத் தொழிலுக்கும் ஒரு நலவாரியம் தொடங்கப்பட்டு அந்த நலவாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வாரியத்தின் சார்பில் அதன் உறுப்பினர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள உதவிகளின் விவரம் வருமாறு:—

**விவசாயத் தொழிலாளர்கள் — விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியம்.**

தொடங்கப்பட்டது 7.8.2006.

அடையாள அட்டை வழங்கப்பட்ட குடும்பங்கள் – 72 இலட்சத்து 18 ஆயிரத்து 49.

31.12.2007 வரை மொத்தம் 2 இலட்சத்து 13 ஆயிரத்து 688 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிதி – 107 கோடியே 94 இலட்சத்து 31 ஆயிரத்து 949 ரூபாய்.

**உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 4 இலட்சத்து 88 ஆயிரத்து 239.

77,720 பணியாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உதவி நிதி – 17 கோடியே 59 இலட்சத்து 31 ஆயிரத்து 750 ரூபாய்.

**ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியம்.**

பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் – 29, 977 பேர்.

வழங்கப்பட்ட உதவித் தொகை – 2,155 குடும்பங்களுக்கு 39 இலட்சத்து 71 ஆயிரத்து 56 ரூபாய்.

**சலவைத் தொழிலாளர் நலவாரியம்.**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 18,936.

வழங்கப்பட்ட நிதி உதவி – 1,989 குடும்பங்களுக்கு 39 இலட்சத்து 97 ஆயிரத்து 30 ரூபாய்.

**முடிதிருத்துவோர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 11, 679 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 2004 குடும்பங்களுக்கு 34 இலட்சத்து 90 ஆயிரத்து 845 ரூபாய்.

**தையல் தொழிலாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 1 இலட்சத்து 83 ஆயிரத்து 427 பேர்.

வழங்கப்பட்ட உதவி நிதி – 35,380 குடும்பங்களுக்கு, 7 கோடியே 30 இலட்சத்து 14 ஆயிரத்து 667 ரூபாய்.

**கைவினைத் தொழிலாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 27, 945 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 1,387 குடும்பங்களுக்கு 26 இலட்சத்து 90 ஆயிரத்து 300 ரூபாய்.

**பனைமரத் தொழிலாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 17,468 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 499 குடும்பங்களுக்கு, 9 இலட்சத்து 6 ஆயிரத்து 975 ரூபாய்.

**கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம்.**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 93,683 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 17,722 குடும்பங்களுக்கு, 3 கோடியே 42 இலட்சத்து 38 ஆயிரத்து 497 ரூபாய்.

**காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 4,283 பேர். வழங்கப்பட்ட நிதி உதவி – 381 குடும்பங்களுக்கு, 6 இலட்சத்து 75 ஆயிரத்து 938 ரூபாய் .

**ஓவியர் நல வாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 1,790.

வழங்கப்பட்ட நிதி உதவி – 93 குடும்பங்களுக்கு, 1 இலட்சத்து 71 ஆயிரத்து 775 ரூபாய்.

**பொற்கொல்லர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 7,506 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 376 குடும்பங்களுக்கு, 6 இலட்சத்து 33 ஆயிரத்து 224 ரூபாய்.



“குறிப்பாக அண்மையில் தொடங்கப்பட்ட மீனவர் நலவாரியத்திற்கு மட்டும் முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. உறுப்பினர்கள் சேர்க்கும் பணியும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது”.

**மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 6,465 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 312 குடும்பங்களுக்கு, 7 இலட்சத்து ஓராயிரத்து 537 ரூபாய்.

**வீட்டு பணியாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 55,706 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 2 ,470 குடும்பங்களுக்கு, 46 இலட்சத்து 5 ஆயிரத்து 770 ரூபாய்.

**கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம்**

பதிவு செய்து கொண்ட உறுப்பினர்கள் – 5 இலட்சத்து 71 ஆயிரத்து 688 பேர்.

வழங்கப்பட்ட நிதி உதவி – 75 ஆயிரத்து 160 குடும்பங்களுக்கு, 25 கோடியே 41 இலட்சத்து 70 ஆயிரத்து 238 ரூபாய்.

இவை தவிர, மீனவர் நலவாரியம், பழங்குடியினர் நலவாரியம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சீர்மரபினர் நலவாரியம், ஊனமுற்றோர் நலவாரியம், கிராமக் கோவில் பூசாரிகள் நலவாரியம், தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம் ஆகிய வாரியங்களும் புதிதாக அமைக்கப்பட்டு, உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெறுகின்றன.

இந்தியாவிலேயே முதன் முதலாக தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையிலே தான் 2006ஆம் ஆண்டு “அனைத்துச் சமுதாயத்தினராலும் ஒதுக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ள அரவாணிகளின் நலன்களைப் பாதுகாக்கத்தக்க வகையில் அவர்களின் பல்வேறு கோரிக்கைகளை முறைப்படி பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்வோம்” என்று அறிவித்திருந்தோம். அதனையொட்டி, அவர்களது அடிப்படை கோரிக்கையான குடும்பக் கார்டுகள் வழங்க வேண்டும் என்பதையேற்று அவர்களுக்கு குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ச்சியாக தற்போது ஆளுநர் உரையில் “அரவாணிகளின் மீது இந்த அரசு கொண்டுள்ள பரிவின் காரணமாக இவர்களுக்கென புதிய நலவாரியம் ஒன்று அமைக்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் தமிழக அரசு உதவிகளை வழங்க தனித்தனியே நிதி ஒதுக்கீடு செய்கிறது.

குறிப்பாக அண்மையில் தொடங்கப்பட்ட மீனவர் நலவாரியத்திற்கு மட்டும் முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. உறுப்பினர்கள் சேர்க்கும் பணியும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்ப நன்மைகளைக் கருதி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திவரும் தமிழக அரசு விவசாயத் தொழிலாளர் நலவாரியம், உடல் உழைப்புத் தொழிலாளர் நலவாரியம் முதலான 13 அமைப்பு சாராத் தொழிலாளர் நலவாரியங்கள், கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம் ஆகிய அனைத்து வாரியங்கள் மூலமும்

“13.5.2006இல் இந்த அரசு அமைந்த பிறகு; 6.1.2008 வரை 19 மாதங்களில் 1 கோடியே 80 இலட்சத்து 83 ஆயிரத்து 329 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்”.

13.5.2006இல் இந்த அரசு அமைந்த பிறகு; 6.1.2008 வரை 19 மாதங்களில் 1 கோடியே 80 இலட்சத்து 83 ஆயிரத்து 329 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் 4 இலட்சத்து 31 ஆயிரத்து 296 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மொத்தம் 163 கோடியே 86 இலட்சத்து 31 ஆயிரத்து 551 ரூபாய் பல்வேறு இனங்களின்கீழ் உதவித்தொகைகளாக வழங்கப்பட்டுள்ளன.

எனவே மலையளவு குறைபாடுகளைக் குவித்தாலும் — அதைக் கூட்டிப் பெருக்கிக் கழித்தால் பார்க்கும்போது அவை துளியளவு தான் இறுதியாகத் தேறும் என்பதை இந்த விபரப்பட்டியல் தெரிவித்திடத் தயங்காது என்பதை குறிப்பிடுவதற்கே இந்தக் கடிதம்! ✶



# சென்னைக்கு தினந்தோறும் 100 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் ரூ.993.83 கோடி மதிப்பிலான கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்

ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் மாநில அளவிலான வழிகாட்டும் ஒருங்கிணைந்த மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஐந்தாவது கூட்டம் 22.1.2008 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நகர்ப்புற ஏழைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு வசதி ஆகியவற்றை மேம்படுத்துதல், ஏழைமக்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதி, அடிப்படை வசதிகள் மற்றும் குடிசை வசதிகளை புதியதாக ஏற்படுத்துவதற்கான திட்டங்களைச் செயற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் செயற்படுத்த முன்மொழியப்படும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க மாநில அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டினைத் தீர்ப்பதற்காக சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம்,



திருப்போரூர் ஒன்றியம், நெமிலியில் ரூபாய் 993.83 கோடியில் சவ்வூடு பரவல் முறையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் அமைப்பதற்கு இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தினசரி 100 மில்லியன் லிட்டர் குடிநீர் கடல்நீரில் இருந்து தயாரித்துச் சென்னைக்கு வழங்கப்பட உள்ளது.

ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வீட்டுவசதி, குடிநீர், துப்புரவுவசதி ஆகியவைகளை மேம்படுத்துதல், ஏழை மக்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதி மற்றும் அடிப்படை வசதிகள் மற்றும் குடிசை வசதிகளை ஏற்படுத்துவதற்காக சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாநகராட்சி களிலும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை,



நாமக்கல், கரூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய நகராட்சிகளில் ரூபாய் 114.15 கோடியில் செயல்படுத்துவதற்கு இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு. சுப.தங்கவேலன், நிதித்துறைச் செயலர் ஞானதேசிகன்,இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் கே.தீனபந்து, இ.ஆ.ப., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைச் செயலர் நாகராஜன்,இ.ஆ.ப., டுபிட்கோ நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.கௌரி சங்கர், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் துறை இயக்குநர் டாக்டர் கோபால், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் செயலர் இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., த.கு.வ.வாரிய மேலாண்மை இயக்குநர் சுவரண்சிங், இ.ஆ.ப, சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் எஸ்.தங்கசுவாமி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.கே.இராமச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் திட்ட அறிக்கை அளிப்பு

சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் சென்னைக்கு வடக்கே மீஞ்சூருக்கு அருகில் நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இது தவிர. மத்திய அரசின் நிதியுதவியுடன் செயலாக்கப்பட வுள்ள, நாள் ஒன்றுக்கு கடல்நீரிலிருந்து 100 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறும் மேலும் ஒரு நிலையம் (Desalination Plant) அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.993.83 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிறுவனமான மீகான் லிமிடெட் நிறுவனம் (Mecon Ltd.,) மற்றும் சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த அடிக்கோ டெக்னாலஜிஸ் (Addeco Technologies) நிறுவனம் ஆகியோரால் இணைந்து தயாரிக்கப்பட்டது.

இந்தத் திட்ட அறிக்கை மாநில அளவிலான வழிகாட்டும் மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 22.1.2008 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது. இந்தப் புதிய நிலையம் மாமல்லபுரம் அருகிலுள்ள நெமிலி கிராமத்தில் கடற்கரையை ஒட்டியுள்ள 40 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்படவுள்ளது.

இந்த நிலையம் நவீன தொழில்நுட்பத்துடன் அமையவுள்ளது. இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் திருவான்மியூர், பள்ளிப்பட்டு, வேளச்சேரி குடிநீர் பகிர்மான நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சென்னை நகர மக்களுக்கு விநியோகம் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதியுதவி மைய அரசிடமிருந்து பெறப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

## மத்திய நிதியமைச்சர் பாராட்டு

சென்னை அருகே நெமிலி கிராமத்தில் அமைக்கப்படவிருக்கும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்களிடம் 27.1.2008 அன்று வழங்கினார். இத்திட்டம் உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு மத்திய நிதிஅமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் – மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை 27.1.2008 அன்று அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அப்போது, நெமிலி கிராமத்தில் 993 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட இருக்கும் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மத்திய நிதிஅமைச்சர் அவர்களிடம் அளித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் "எண்ணூருக்கு அருகில் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டத்திற்குக் கடந்த முறை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். அதனை ஏற்று ஆளுநர் உரையில் அறிவித்திருப்பதற்கு மகிழ்ச்சியும் பாராட்டும் – நன்றியும் தெரிவித்தேன்" என்று கூறினார்.



# இந்தியாவிலேயே முதல் முறையாக ஊனமுற்ற மாணவ - மாணவியருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள்

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் ஊனமுற்ற மாணவ–மாணவியருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள், நவீன செயற்கை அவயங்களை வழங்கும் திட்டங்கள், மனவளர்ச்சிக் குன்றியவர்களைப் பராமரிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவிகள் ஆகியவற்றை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

2001ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 16 இலட்சத்து 42 ஆயிரத்து 497 ஊனமுற்ற நபர்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மாண்புமிகு
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்**
அவர்கள் வழங்கினார்

தொகுப்பு : **ச.செல்வராஜ்**
மக்கள் தொடர்பு அலுவலர்
சென்னை மாநகராட்சி





**ஊனமுற்றோருக்கான பொதுவான மறுவாழ்வுத் திட்டங்கள்**

★ ஊனத்தினை, குறிப்பாக செவித்திறன் குறைவுத் தன்மை, மனவளர்ச்சி குன்றிய தன்மை ஆகியவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிவது;

★ ஆரம்பத்திலேயே கண்டறிந்த ஊனத்தின் கடுமையை குறைக்க மருத்துவச் சிகிச்சை, சிறப்புப் பயிற்சி அளித்தல்;

★ பள்ளி செல்லும் பருவத்திற்கு தயார் செய்யவென ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்கு முன்பருவக் கல்வி வழங்குதல்;

★ அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் சிறப்புக் கல்வி அளித்தல்;

★ ஊனமுற்ற நபர்களுக்கு தொழில் பயிற்சிகள் வழங்குதல்

★ கல்வி தொடர்பான உதவிகள் வழங்குதல்;

★ அரசு, அரசு சார்பு நிறுவனங்களிலும், தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு பெற்றுத் தருதல் ;

★ ஊனமுற்றோருக்கான தேவையான உதவி உபகரணங்கள் வழங்குதல் ;

★ ஊனமுற்றோரைத் திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கு திருமண ஊக்கத்தொகை வழங்குதல் ;

★ கடும் ஊனமுற்ற நபர்களுக்கும், மன வளர்ச்சி குன்றிய நபர்களுக்கும் பாரமரிப்பு உதவித்தொகை வழங்குதல் ;

★ ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை புரிந்தோருக்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசு விருதுகள் வழங்குதல் ;

★ ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்புக் கல்வி கற்பிக்கும் சிறப்பு ஆசிரியர்களுக்கு இலவசமாக பட்டயப் பயிற்சி வழங்குதல்;

★ பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்குதல்;

★ அனைத்து ஊனமுற்றோருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்குதல்;

★ ஊனமுற்றோருக்கு அரசு பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை வழங்குதல்;

★ ஊனமுற்றோருக்கென பணியாற்றும் தொண்டு நிறுவனங்களை முறைப்படுத்துதல்;

★ ஊனமுற்றோருக்கென பணியாற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்தல்

ஊனமுற்றோருக்கு கல்வி தொடர்பான உதவிகள், தொழிற் பயிற்சிகள், ஊனத்தின் கடுமையைக் குறைக்க

மருத்துவச் சிகிச்சை அளித்தல், உதவி உபகரணங்கள் வழங்குதல், உதவித்தொகைகள் வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளுக்காக நடப்பு ஆண்டிற்கு தமிழக அரசு ரூ.73 கோடி ஒதுக்கீடு இந்த ஆண்டில் செய்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஊனமுற்றோரின் வாழ்க்கை மேன்மையடைய பல உன்னதமான மறுவாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளார்கள்.

**மனவளர்ச்சிக் குன்றியோர் மறுவாழ்விற்காக ரூ.25 கோடி சிறப்பு ஒதுக்கீடு**

ஊனமுற்றோர் பற்றி சரியான புள்ளி விவரங்களை சேகரிப்பதற்காக சிறப்பு நிதியும், செவித்திறன் குறையுடைய குழந்தைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து பயிற்சி அளிப்பதற்கும் மாவட்டங்களில் ஆரம்பப் பயிற்சி மையங்களை நிறுவியுள்ளார்கள். மனவளர்ச்சிக் குன்றியவருக்கு மறுவாழ்விற்காக ரூ.25 கோடியை சிறப்பு ஒதுக்கீடாக வழங்கியுள்ளார்கள். கால் ஊனமுற்றோர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சுலபமாகச் சென்றடைய ரூ.35 ஆயிரம் மதிப்புடைய மோட்டார் பொருத்தப்பட்ட வண்டிகள் மாணவர்களுக்கு இலவசமாகவும், பணிக்குச் செல்வோருக்கு ரூ.10 ஆயிரம் மானியமாகவும் வழங்கப்படுகிறது. ஊனமுற்றோரை திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமண ஊக்க உதவித்தொகை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப் பட்டுள்ளது.

**நலத்திட்ட உதவிகள்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.1.2008 அன்று சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 231 உடல் ஊனமுற்ற பயனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டிகள், மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிக்கான மானியம், நவீன செயற்கை அவயம், மூன்று சக்கர வண்டிகள், காதொலி கருவிகள் மற்றும் சூரிய ஒளியினால் சக்தி பெரும் மின்கலங்கள், கறுப்பு கண்ணாடிகள் மற்றும் மடக்குக் குச்சிகள், மனவளர்ச்சிக் குன்றியோருக்குக்கான பராமரிப்பு உதவித் தொகைகள், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கும் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கான ஊதிய மானியம் என ரூ.17.27 இலட்சம் மதிப்பீட்டில் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கினார். அரிமா சங்கம் மூலம் உடல் ஊனமுற்றோர் சிறுதொழில் தொடங்க 50 பேருக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2.50 இலட்சமும் வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் சென்ற ஆண்டு வழங்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த நலத்திட்ட உதவிகள் இவ்விழாவில் வழங்கப்பட்டன.

**புதிய திட்டங்கள் தொடக்கம்**

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ/மாணவியருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 60 நபர்களுக்கு ரூபாய் 21 இலட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

பணிகளுக்குச் செல்லும் ஊனமுற்ற நபர்களுக்கு மானிய விலையில் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகள் 290 நபர்களுக்கு ரூபாய் 29 இலட்சத்தில் வழங்கப்படுகிறது.

ஊனமுற்ற மாணவ / மாணவியருக்கு நவீன செயற்கை அவயங்கள் இலவசமாக 93 நபர்களுக்கு ரூபாய் 25 இலட்சத்தில் வழங்கப்படுகிறது.

மனவளர்ச்சிக் குன்றிய நபர்களுக்கான தனியார் தொண்டு நிறுவனங்களில் பணியாற்றும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த நான்கு புதிய திட்டங்களையும் தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் முன்னிலை வகித்தார். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் ஆணையாளர் ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப, ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் திரு.வி.கு.ஜெயக்கொடி, இ.ஆ.ப., டாக்டர். ஆர். ஆனந்தகுமார், துணை மேயர் திருமதி ஆர்.சத்தியபாமா, மன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மற்றும் ஊனமுற்றோருக்கான நலத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ★



# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று ரூ. 9,700 கோடி மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டம், ரூ.1,340 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிதிஉதவி வழங்கிட ஜப்பான் வங்கி ஒப்புதல்


தமிழக அரசு சென்னை மாநகரில் 9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது.

அத்திட்டத்திற்குரிய நிதி உதவி கோருவதற்காகவும், தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்காகவும், தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தேவையான நிதியுதவிக்காகவும், தமிழக அரசின் சார்பில் ஜப்பான் சென்றிருந்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் (Japan Bank for International Co-operation(JBIC) முதுநிலை செயல் இயக்குநர் திரு. டிசியோகுசி அவர்களை டோக்கியோவில் 6.2.2008 அன்று சந்தித்தார்.



அப்பொழுது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திரு. டிசியோகுசி அவர்களிடம் சென்னை மெட்ரோ ரயில் திட்டம் பற்றி விரிவாக விளக்கியதுடன் இத்திட்டத்திற்குத் தேவையான நிதி உதவியையும், தொழில்நுட்ப உதவியையும் தமிழக அரசுக்கு வழங்குமாறும், மேலும், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கையான, அம்மாவட்டங்களில் புளோரைடினால் பாதிக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற குடியிருப்புகளுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கக் கூடிய 1,340 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் உடனடியாக நிதியுதவி வழங்குமாறும், திருச்சிராப்பள்ளி மாநகருக்குக் குடிநீர் வழங்கும் விரிவாக்கத் திட்டம் மற்றும் 6 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கும் நிதியுதவி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் முதுநிலை செயல் இயக்குநர் திரு. டிசியோகுசி அவர்கள் இத்திட்டங்களுக்குத் தேவையான நிதியுதவிகளை ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி வழங்குமெனவும் 2008 மார்ச் மாதத்தில் மத்திய அரசுக்கும் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கிக்கும் இடையில் இத்திட்டத்திற்கான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் தெரிவித்தார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத் தலைவர் திரு. சையத்முனிர்ஹோடா, இ.ஆ.ப., திட்ட மேலாண்மை இயக்குநர் திரு. டி.வி. சோமநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு. க. தீனபந்து, இ.ஆ.ப., ஆகியோர் இந்த சந்திப்பின்போது உடன் இருந்தனர்.



# தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட தொகுப்பு நூல்

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்**

## பணிநியமன ஆணைகள் மற்றும் தரச் சான்றிதழ் வழங்கினார்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி, உயர்தர பேருந்து நிலையங்கள், பாதாளச் சாக்கடை வசதி, நவீன இறைச்சிக் கூடங்கள் மற்றும் தகன மேடைகள் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பல்வேறு திட்டங்களை தமிழக அரசு நகராட்சி நிருவாகத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் உலக வங்கியின் கடனுதவியுடன் ரூபாய் 1,350 கோடி மதிப்பிலான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III இல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான திட்ட அங்கீகாரக் குழு மற்றும் துணைக் குழு ஆகியவற்றின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளின் விவரங்கள் அவற்றின் செயலாக்கம் குறித்த தகவல்கள் இத்திட்டம் தொடர்பான அரசாணைகளின் விவரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தகவல் தொகுப்பு அடங்கிய நூலை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.1.2008 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

அதனை ஆலந்தூர் நகர்மன்றத் தலைவர் ஆலந்தூர் திரு.ஆர்.எஸ். பாரதி, நகராட்சி மன்றத் தலைவர்கள் சார்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மேலும் 2007–2008ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகத்துறை மானியக் கோரிக்கையின்போது "நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள மயானங்களில் பணிபுரியும், 'வெட்டியான்' என்றழைக்கப்படும் மயானப் பணியாளர்கள், 'மயான உதவியாளர்கள்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவர்கள் காலமுறை ஊதியம் பெறும் வகையில் ஆணை வெளியிடப்படும்" என்று அரசு அறிவித்தது.

இதன்படி, சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மயானங்களில் பணியாற்றி வரும் 173 நபர்களும், மதுரை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மயானங்களில் பணியாற்றி வரும் 40 நபர்களும், மயான உதவியாளர்கள் என காலமுறை ஊதிய விகிதத்தில் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், ஆலந்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள மயானங்களில் பணியாற்றி வரும் 7 நபர்கள் மயான உதவியாளர் பணியிடங்களில் காலமுறை ஊதியத்தில் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பணி நியமன ஆணைகளை சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமான, ரூபாய் ஒரு கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா திருமண மண்டபம் கடந்த 16.7.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த திருமண மண்டபத்தின் நிருவாக முறைகளை ஆய்வு செய்த மும்பையில் உள்ள பன்னாட்டுத் தர நிர்ணயச் சான்றிதழ் (ISO) வழங்கும் நிறுவனத்தின் அதிகாரிகளால் இந்த மண்டபத்தின் கட்டுமான சிறப்பு, அழகிய வடிவமைப்பு, வாகன வசதி, சுகாதார வசதி, மேம்பட்ட பராமரிப்பு போன்ற பல்வேறு வசதிகள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வின் அடிப்படையில் இத்திருமண மண்டபத்திற்கு மேற்கண்ட நிறுவனம் ISO / 9001-2000 என்ற தரச் சான்றிதழை வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது.

இந்தச் சான்றிதழ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால், தூத்துக்குடி நகர்மன்றத் தலைவர் திருமதி. ஆர்.கஸ்தூரி தங்கத்திடம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திருமதி.பி. கீதாஜீவன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசுச் செயலர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி,இ.ஆ.ப., மற்றும் நகராட்சி நிருவாகத்துறை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

❖ ❖ ❖

## ஆதிதிராவிட மாணவர்களுக்கு தமிழக அரசு வழங்கும் கல்வி உதவித் தொகை எந்த நிலையில் வழங்கப்படுகிறதோ, அப்படியே வழங்கப்படும்

– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** உறுதி

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 31.1.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றியபோது குறிப்பிட்டதாவது:–

"பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாணவர்கள் ஒரு முக்கியமான கோரிக்கையை முன் வைத்து கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக, மத்திய அரசு 60 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றால் தான் தாழ்த்தப்பட்ட, அதாவது ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்படப் போவதாக ஒரு செய்தி வந்து, அப்படி ஆணை பிறப்பிக்கக்கூடாது என்றும், பிறப்பித்திருந்தால் அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியும் மாணவர்கள், குறிப்பாக ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய அரசைப் பொறுத்த வரையில், இந்தத் தகவலை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அப்படி ஒரு கருத்து இருந்தால் அதை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று கடிதம் மூலமாக வலியுறுத்தியுள்ளது என்பதை நான் அந்த மாணவர்களுக்குக் கூறிக்கொள்வதோடு, ஒரு வேளை மத்திய அரசு வேறு ஏதாவது காரணங்களைச் சொல்லி 60 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றால்தான் ஆதி திராவிட மாணவர்களுக்கு கல்வியிலே உதவித் தொகை அளிக்க முடியும் என்று கூறுகின்ற சூழல் இருக்குமேயானால், இப்பொழுது தமிழக அரசு வழக்கம் போல் வழங்கி வருகின்ற அந்தக் கல்வி உதவித்தொகை இப்பொழுது எந்த நிலையிலே வழங்கப்படுகிறதோ அப்படியே வழங்கப்படும் என்ற உறுதியையும் அந்த மாணவர்களுக்கு இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.''

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊராட்சி ஒன்றியம் வாரியாக தயாரித்துள்ள நீராதாரங்கள் திறன், நிலத்தடி விவரம் குறித்த குறுந்தகடு

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்**

தமிழ்நாட்டில் உள்ள 30 ஊரக மாவட்டங்களிலும் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றில் உள்ள நீராதாரங்களின் தன்மை மற்றும் நீர் வழங்கும் திறன், நில மேற்பரப்பின் அமைப்பு, நிலத்தடி நீர்வளம் மற்றும் நீராதாரத்தை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் திட்டங்களைத் தயாரித்து, தேவையான கட்டமைப்புகளை அமைக்க ஏற்ற பகுதிகள் போன்ற தகவல்களை உள்ளடக்கிய வரைப்படங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது.

மாநிலத் திட்டக் குழுவின் கீழ் இயங்கி வருகின்ற தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தின் மூலம் இப்பணிக்கென ரூபாய் 11 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்டு, இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள நீர் வளங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், ஒன்றிய அளவிலான வரைபடங்களை தற்போதுள்ள நிலவரத்தின் அடிப்படையில் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வரைபடங்கள் குறுந்தகடு வடிவத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இக்குறுந்தகட்டில் ஊராட்சி ஒன்றிய வாரியாக அதிக அளவில் நீரினைப் பயன்படுத்தும் ஒன்றியங்கள் கடின வகைப் பகுதிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டங்களில் நீராதார மேம்பாட்டுப் பணிகளான தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள், நீர் உறிஞ்சி குழிகள் ஆகியவற்றை அமைப்பதற்கு ஏற்ற பகுதிகள் வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.



ஒன்றியந்தோறும் பல்வேறு திட்டங்களின் கீழ் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் புதிய நீராதார அமைப்புப் பணிகள் மற்றும் நிலத்தடி நீராதாரம், நில நீர் வளத்தின் நீடித்த நிலைத்த தன்மையை மேம்படுத்த அமைக்கப்பட வேண்டிய நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகளை அமைக்க வேண்டிய பகுதிகளை நிர்ணயித்திட இக்குறுந்தகடு மிகவும் பயன்படும். மேலும், நிலத்தடி நீர் மதிப்பீட்டுக் குழுமத்தின் ஆய்வின்படி நீர்ப் பயன்பாட்டுப் விகிதாச்சாரம் ஒன்றிய வாரியாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்கள் மற்றும் வரைபடங்களை உள்ளடக்கிய ஊராட்சி ஒன்றிய வாரியான குறுந்தகடுகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.1.2008 அன்று மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர்.மு.நாகநாதன் அவர்களின் முன்னிலையில் வெளியிட்டார். இதனை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.சத்யபிரதாசாகு,இ.ஆ.ப., பெற்றுக் கொண்டார்.

இக்குறுந்தகடு வெளியீட்டு விழாவில் மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசுச் செயலர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ❖



# 66 ஆயிரம் கிராம ஊராட்சிப் பணியாளர்களுக்கு தலா 300 ரூபாய் கருணைத் தொகை

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை**

பொங்கல் திருநாளையொட்டி, தமிழக அரசின் "சி" மற்றும் "டி" பிரிவு பணியாளர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சித் துறை பணியாளர்கள் ஆகியோருக்கு 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையாக அதிகபட்சமாக 2,500 ரூபாய் போனஸ் வழங்கியும் "ஏ" மற்றும் "பி" பிரிவு அலுவலர்கள், சில்லரைச் செலவினத்தின் கீழ் 2006–2007ஆம் ஆண்டில் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெற்றுள்ள முழுநேர மற்றும் பகுதிநேரப் பணியாளர்கள் உட்பட அனைவருக்கும் சிறப்பு போனசாக 1,000 ரூபாயும், ஓய்வூதியதாரர்களுக்கு 300 ரூபாய் பொங்கல் பரிசாக வழங்கி ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டன.

அவற்றைத் தொடர்ந்து, தற்போது கிராம ஊராட்சிகளில் 2006–2007ஆம் ஆண்டில் 240 நாட்களும் அதற்கு மேலும் பணிபுரிந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், விசைப்பம்பு இயக்குபவர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோருக்குக் கருணைத் தொகையாக 300 ரூபாய் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 24.1.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

இதன் காரணமாக 1 கோடியே 98 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில், 25,236 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விசைப்பம்பு இயக்குபவர்களும், 13,100 மக்கள் நலப் பணியாளர்களும், 27,759 துப்புரவுப் பணியாளர்களும் ஆக மொத்தம் 66,095 பணியாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

# இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட் மூட்டை விலை ரூ.160க்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்திடம் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்

**அரசு அறிவிப்பு**

தமிழக அரசின் நிறுவனமான டான்செம் (TANCEM) வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளது. சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்கள் வரை இறக்குமதி செய்யப்பட்ட ஓ.பி.சி., 43– கிரேடு சிமெண்டின் தோராயமான விலை மூட்டை ஒன்றுக்கு ரூ.160 ஆகும். (C.I.F. Price on high seas)

கட்டுமானப் பணிகளை ஏற்று நடத்தும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டடம் கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், பொதுமக்கள், தமது சிமெண்ட் தேவைகளை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்திடம் பதிவு செய்து கொள்ளலாம். குறைந்தபட்சம் ஒரு கன்டெய்னர் (24 டன்கள்) (480 மூட்டைகள்) பதிவு செய்து கொள்ள வேண்டும். துறைமுகத்தில் கையாளும் செலவு மற்றும் போக்குவரத்துச் செலவு, தர ஆய்வுச் சோதனை செலவு ஆகியவை வாங்குவோர்களைச் சார்ந்தது ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட் வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**பொது மேலாளர் (விற்பனை)**
**தமிழ்நாடு சிமெண்ட் கழகம் (டான்செம்)**
**எல்.எல்.ஏ., பில்டிங், இரண்டாவது தளம்**
**735, அண்ணா சாலை, சென்னை–2.**
**தொலைபேசி எண்:044–28525477**



# “தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்” மூலமாக பல்வேறு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 20.4.2007 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கென தனியே ஒரு நல வாரியம் அமைக்கப்படும் என பேரவை விதி 110ன் கீழ் அறிவிப்பு செய்தார்கள். அதன்படி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், “தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்” அமைக்கப்பட்டது. வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கலைகளை தொழிலாகக் கொண்டு 18 வயது நிரம்பப்பெற்று 60 வயது நிரம்பாதவர்கள் உறுப்பினர் ஆகலாம். வாரியத்தின் உறுப்பினர் கட்டணம் ரூ.100. 60 வயது எய்தியவர்களுக்கு மாதந்தோறும் ரூ.300 ஓய்வூதியமாக, மரணமடைந்த கலைஞர்களின் இறுதிச் சடங்கிற்காக ரூ.2,000 மற்றும் அவரது வாரிசுதாரருக்கு ரூ.15,000 உதவித் தொகையாகவும் வழங்கப்படும். மேலும் பதிவு பெற்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் 10ஆம் வகுப்பு முதல் தொழிற் பட்ட மேல்படிப்பு வரை பயில ரூ.1,000 முதல் ரூ.6,000 வரை நிதி உதவியும், உறுப்பினர்களின் இரு வாரிசுகளுக்கு திருமண உதவித் தொகையாக தலா ரூ.2,000மும், பெண் உறுப்பினர்களின் மகப்பேறு உதவித் தொகையாக ரூ.3,000 முதல் ரூ.6,000 வரையிலும், கண் கண்ணாடி வாங்க உறுப்பினர்களுக்கு ரூ.500 உதவித் தொகையும் வழங்கப்படும்.

## தமிழகத்தில் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான அடிப்படை ஊதியம் 12 சதவீதம் உயர்வு

**ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாய் வரை கிடைக்கும்**

தமிழகத்தில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு, ஓய்வூதியம் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து, சென்னை தரமணியில் 6.2.2008 அன்று மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் தொழிற்சங்க தலைவர்களுடன் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தையில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் திரு.செ.குப்புசாமி, அண்ணா தொழிற் சங்கத்தின் சார்பில் திரு.ஜக்கையன், ஐ.என்.டி.யு.சி.சார்பில் திரு. விஷ்ணுபிரசாத், சி.ஐ.டி.யு சார்பில் திரு. சவுந்தரராஜன் மற்றும் அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இந்தப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி அறிவித்த அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 12 சதவிகிதம் உயர்வு அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதன்மூலம் அரசுக்கு 195 கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும் என்று தெரிவித்த அமைச்சர், அகவிலைப்படி 1,163 ரூபாயில் இருந்து 1,720 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். இந்த ஊதிய உயர்வுக்கு அனைத்து தொழிற்சங்கங்களும் வரவேற்பு தெரிவித்துள்ளன.

அடிப்படை ஊதியம் உயர்த்தப் பட்டதையடுத்து தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடி மகிழ்ந்தனர்.



## சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு 850 தீயணைப்புச் சாதனங்கள்



**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் ஆகியவற்றை ஆரம்ப நிலையில் கண்டறியும் கருவி சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக அறிமுகப்படுப்படுத்தப்பட்டது. இத்திட்டம் சென்னை மாநகராட்சியில் உள்ள 10 மண்டலங்களிலும் செயல்படுத்தப்பட்டது. பெண்களின் இறப்பு விகிதம் அதிகரிப்பதற்கு, கருப்பை வாய் பகுதியில் ஏற்படும் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் ஆகியவை முக்கியமான காரணங்களாகும். கருப்பை வாய் புற்றுநோயின் ஆரம்ப நிலையிலிருந்தே ஊடுருவும் நிலையில் அடைய 10 முதல் 15 வருடங்களாகும். மேக்னா விஷன் எனப்படும் கருவியின் உதவியால் இந்த நோயின் அறிகுறியை எளிதில் கண்டுபிடிக்கலாம். இப்புற்றுநோய் ஊடுருவுவதை முன்கூட்டியே கண்டறிந்து, உரிய சிகிச்சை முறையைப் பின்பற்றினால் முழுவதுமாக குணப்படுத்தலாம்.

முதன் முதலாக இத்திட்டம், சென்னை மாநகராட்சியில் மிகப்பெரிய அளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 30 முதல் 45 வயதிற்குட்பட்ட, குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 29,091 பெண்கள் பரிசோதனைக்குட்பட்டுள்ளார்கள், அவர்களுள் 12 பெண்களுக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டு மேல் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 1,507 பெண்களுக்கு இந்நோயின் அறிகுறி இருப்பது கண்டறியப்பட்டு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியில் 93 நகர நலவாழ்வு நிலையங்கள் உள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கெனவே சென்னை மாநகராட்சியில் உள்ள 20 நகர நல வாழ்வு நிலையங்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் கருவிகள் வழங்கியுள்ளார். இத்திட்டத்தை விரிவுபடுத்தி பொது மக்கள் பயன் அடையும் வகையில்,

மேலும் 63 நகர நலவாழ்வு மையங்களுக்கு கருவிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.2.2008 அன்று சிந்தாதிரிப் பேட்டையில் நடைபெற்ற விழாவில் 63 கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் கருவிகளை 4 இலட்சத்து 16 ஆயிரத்து 745 ரூபாய் மதிப்பீட்டில் வழங்கினார்.

இதே விழாவில் 313 மாநகராட்சி பள்ளிகளுக்கு தீயணைப்பு சாதனங்கள் 27 இலட்சத்து 83 ஆயிரத்து 750 ரூபாய் மதிப்பீட்டில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மேயர் திரு.மா.சுப்பிரமணியன், ஆணையர் ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில், 12–2–2008 அன்று மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணி ஆய்வுக் கூட்டம் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.கோ.சந்தானம்,இ.ஆ.ப., செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ்,இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

228170
சென்னை-600 008

TNSC BANK

# 100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

## TNSC வங்கி

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்


வெளியீட்டு ஆணை எண்.1364/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007
இணையதளம் : www.tnscbank.com





# கோ–ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள். உன்னத தரம். நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- ரெகமம் சேலை
- சிறுமுகை சேலை



கோ ஆப்டெக்ஸ்

**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

செ.ம.தொ.இ/219/வரைகலை/2008

தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/[illegible]
TN/PMG(CCR) WPP-518/06

